www.onlineuthayan.com

பக்கங்கள்: 38

# உதயன்

சுடர் 27
கதிர் 126

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 18 சனிக்கிழமை (31/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


### கொழும்பு பல்கலை ஆசியாவில் 8ஆம் இடத்தில்

ஆசியத் தரப்படுத்தலின்படி கொழும்பு பல்கலைக்கழகம் 8ஆவது இடத்தைப் பிடித்துள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார். தனியார் பல்கலைக்கழகம் குறித்து மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க கடந்த சபை அமர்வில் நிகழ்த்திய உரைக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதேபோல பேராதனை, ருஹுணு, களனி, ஜயவர்த்தனபுர மற்றும் நாவல ஆகிய பல்கலைக்கழகங்கள் கடந்த 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2012ஆம் ஆண்டு முன்னேற்றத்தைக் கண்டுள்ளன என்றும் அமைச்சர் கூறினார்.

### முன்னாள் போராளிகளுக்கு தொழில் வாய்ப்பு

புனர்வாழ்வு பெற்று வெளியேறும் முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சுடன் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ. திஸாநாயக்க தெரிவித்தார்.

### பணிப்பெண்களைப் பாதுகாக்க ஒப்பந்தம்

குவைத்தில் பணிபுரிகின்ற இலங்கைப் பணிப்பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான விசேட உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா, இந்த உடன்படிக்கை தொடர்பில் குவைத் அரச தரப்பைச் சந்திக்கவுள்ளார். அரச தகவல்களின்படி, குவைத்தில் 2 லட்சத்து 60 ஆயிரம் இலங்கையர்கள் தொழில்புரிந்து வருகின்றனர்.

### இலங்கைக்குக் கடன் நாணய நிதியம் கூடி ஆராயும்

இலங்கைக்கு அடுத்தக் கட்ட கடன் தொகையை வழங்குவது தொடர்பில், சர்வதேச நாணய நிதியம் அடுத்தவாரம் கூடவுள்ளது. 2.5 பில்லியன் டொலர்கள் கடனுதவி திட்டத்தின் கீழ், ஏழாவது கட்டமாக இந்த முறை 800 மில்லியன் டொலர்கள் வழங்கப்படும் எனக் கூறப்படுகிறது. இந்த கடன்தொகையை வழங்குவதா இல்லையா என்பதை தீர்மானிக்கும் பொருட்டு, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி கூடவுள்ளனர்.

# ஜெனிவாவின் முடிவுக்கு இலங்கை கட்டுப்படாது

## அரசின் நிலைப்பாட்டை நாடாளுமன்றில் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தார் பீரிஸ்



கொழும்பு, மார்ச் 31

ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு உடன்படாது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மீண்டும் தெரிவித்துள்ளார். அந்தத் தீர்மானத்துக்குத் தமது அரசு ஒருபோதும் கட்டுப்படாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டு நாள்களுக்கு முன்னர் கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலும் இதே கருத்தை அமைச்சர் பீரிஸ் வலியுறுத்தி இருந்தார். ஆனால் அது அவரது "தனிப்பட்ட கருத்தே தவிர அரசின் கருத்து அல்ல" என்று அமைச்சரவைப் பதில் பேச்சாளரும் ஊடகத்துறை பதில் அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்திருந்தார்.

அமைச்சர் யாப்பாவின் கருத்து வெளியாகி ஒருநாள் கடப்பதற்கிடையில், ஜெனிவா தீர்மா

04

### தீர்மானம் தொடர்பில் அடுத்த வாரம் விவாதம்

கொழும்பு,மார்ச் 31

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அடுத்தவாரம் விவாதம் நடத்தப்படவுள்ளது.

இந்தத் தகவலை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

அடுத்த செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் இந்த விவாதம் நடத்தப்படும் என அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துமாறு எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக விடுத்த கோரிக்கைகளை அடுத்தே இதனை விவாதிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவருகிறது. (த)

## ஜி.எல்.பீரிஸ் யார்? அவரது பதவி என்ன?

### சபையில் தயாசிறி கேள்வி

கொழும்பு, மார்ச் 31

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளியிடும் கருத்துகள் அரசின் கருத்துக்கள் அல்ல என்று அமைச்சரவைப் பேச்சாளரான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன கூறுகின்றார். அப்படியானால் இந்த ஜி.எல்.பீரிஸ் என்ற மனிதர் யார்? அவருடைய பதவியின் கௌரவம் என்ன? என்பதைஅரசுதெளிவுபடுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

தயாசிறி தொடர்ந்து பேசும் போது மேலும் கூறியதாவது:-

அமைச்சர் பீரிஸ் ஜெனிவா தீர்மானம் தொடர்பாகப் பல கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஆனால் இது அரசின் கருத்துகள் இல்லை என்றால் இந்தப் பீரிஸ் என்பவருக்கு உரிய அமைச்சுப் பதவியின் கௌரவம் என்ன? யாருடைய கூற்றை அரசின் கூற்று

04

## அமைதியை ஏற்படுத்துமாறு இலங்கைக்கு கடும் சமிக்ஞை

### சர்வதேசத்துடன் இணைந்து அமெரிக்கா விடுத்தது

வொஷிங்டன்,மார்ச் 31

நிலையான அமைதியை எட்டுவதற்கு இலங்கை அரசுக்கு கடுமையான சமிக்ஞை ஒன்றை சர்வதேச சமூகத்துடன் இணைந்து அனுப்பியுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத்தொடர் பற்றி அமெரிக்க இரா

04

### லலித், குகன் வழக்கு யாழ். நீதிமன்றுக்கு

கொழும்பு,மார்ச் 31

மக்கள் போராட்ட இயக்கத்தின் இரண்டு உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனதாகக் கூறப்படும் சம்பவத்தின் சாட்சி விசாரணைகளை, யாழ். நீதவான்

04

## பொய்ப் பிரசாரங்களில் மேற்குலக ஊடகங்கள்

### ஜனாதிபதி மஹிந்த காட்டம்



கொழும்பு, மார்ச் 31

மேற்குலக ஊடகங்கள் இலங்கையைத் தொடர்ந்து துன்புறுத்தி வருகின்றன. உண்மைக்குப் புறம்பான-திரிபுபடுத்தப்பட்ட தகவல்களை வெளியிடுவதன் மூலம் எமது நாட்டுக்கு அவை அபகீர்த்தியை உண்டுபண்ண முயற்சிக்கின்றன என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் குற்றம்சாட்டினார். இப்படியான போக்குகள் தவிர்க்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்

ஊடகவியலாளர்களின் செயற்

04

## சுஷ்மா சுவராஜ் தலைமையில் இந்தியக் குழு ஏப்ரலில் வரும்



புதுடில்லி,மார்ச் 31

இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் பா.ஜ.கட்சியின் சிரேஷ்ட தலைவருமான சுஷ்மா சுவராஜ் தலைமையிலான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஏப்ரலில் இலங்கைக்கு வரவுள்ளது.

இந்த அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு

04


உங்கள் வியாபார நிலையங்களிலும், வீடுகளிலும் இடையூறுறின்றி தொடர்ச்சியான மின்சாரத்தைப் பெற்றிட

SINGER POWER ஜெனரேட்டர்கள்

இன்றே விரையுங்கள்.




Power 900
சக்தி : 900 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

Power 2000
சக்தி : 2000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 6.5/3600RPM

Power 3000D
சக்தி : 3000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி. 0774635771
சங்கானை 077 2208232
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
சுன்னாகம். 021 224 0555
மானிப்பாய். 021 225 5343
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
நெல்லியடி. 021 226 4937
சாவகச்சேரி 021 227 0197

சிங்கர் - யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

# பரிந்துரைகளை செயற்படுத்துங்கள்

## சர்வதேசத் தலையீட்டைத் தவிர்க்க இதுதான் ஒரே வழி
## இடதுசாரி அமைச்சர்கள் கூட்டாகக் கோரிக்கை





கொழும்பு,மார்ச் 31

*நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ள முன்மொழிவுகளை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு, ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகளின் அமைச்சர்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதே இலங்கையில் சர்வதேசத் தலையீடுகளைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி எனவும் அவர்கள் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.*

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மூன்று இடதுசாரி அமைச்சர்களும் கூட்டாக இணைந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

அமைச்சர்களான டியு.குணசேகர, வாசுதேவ நாணயக்கார மற்றும் திஸ்ஸ விதாரண ஆகியோர் நேற்றுமுன்தினம் இது தொடர்பில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தனர்.

அங்கு கருத்து வெளியிட்ட அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காத காரணத்தினால் ஜெனிவாவில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

சர்வதேசத் தலையீடுகளைத் தடுக்க வேண்டுமாயின், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆணைக்குழு முன்மொழிவுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு அரசை வலியுறுத்தும் நோக்கில் நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும்.

ஜனாதிபதியினால் இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டது என்ற காரணத்தினால் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் கிடையாது என்றனர். (த)

## பரிந்துரை நடைமுறை குறித்து அரசு ஆராய்கின்றது என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 31

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளில் நடைமுறைப்படுத்தக் கூடியவை எவை, நடைமுறைப்படுத்த முடியாதவை எவை என்பதை அரசு தற்போது ஆராய்ந்துவருகிறது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் நடைபெற்றபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

ஜெனிவா மாநாடு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சிபாரிசுகளின் நடைமுறை குறித்து இங்கு விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது. இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

## வடமாகாணத் தேர்தல் ஓரிரு மாதங்களுள் இல்லை

கொழும்பு, மார்ச் 31

வடமாகாணசபைத் தேர்தல் எதிர்வரும் இரண்டு, மூன்று மாதங்களுக்குள் நடத்தப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லையென்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், இந்திய அரசினால் இலங்கை அரசுக்கு உடனடியாக வடமாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் சாத்தியக் கூறு தொடர்பில் தேர்தல் திணைக்கள உயர் அதிகாரி ஒருவரைத் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமாகாணசபைத் தேர்தல் எதிர்வரும் இரண்டு, மூன்று மாதங்களுக்குள் நடத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. ஏனெனில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பிலான வழக்கு நீதிமன்றில் உள்ளது.

அந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்ட பின்னரே வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும். அதனையும் மீறி வடமாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டால், பிரதேச சபைத் தேர்தலை மீளக்குடியமர்வு இடம்பெறவில்லை எனக்கூறி வழக்குத் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டது போன்று இந்தத் தேர்தலையும் ஒத்திவைக்குமாறு வழக்குத் தாக்கல் செய்யக்கூடும். என்றார். (த-5)

## பரிந்துரைகளைச் செயற்படுத்தாவிடின்
# ஆதரவளித்த நாடுகளும் அடுத்த முறை கைவிடும்

**பொருளாதாரத்தில் நாடு இன்று படுகுழியில் விழுந்துள்ளது. அதில் இருந்து மீண்டுவர முயற்சிக்க வேண்டும்.**

கொழும்பு, மார்ச். 31

நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்மொழிவுகளை இலங்கை அரசு சரியான முறையில் நடைமுறைப்படுத்தும் என்று நம்புகின்றோம். இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாம் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கின்றோம் என்று கூறியே 11 நாடுகள் நமக்கு வாக்களித்தன.

இந்த நம்பிக்கை இழக்கப்பட்டால் அடுத்த முறை இந்த 11 நாடுகளும் நமக்கு எதிராகவே திரும்பிவிடும் என எச்சரிக்கை ஒன்றை விடுத்தார் ஐ.தே.க. உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல.

நேற்று நாடாளுமன்றில் ஐந்து நீதி சட்ட வரைவுகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் சரத் அமுனுகம நீதி மற்றும் ஏற்றுமதி தொடர்பான திருத்தச் சட்ட வரைவுகளை சமர்ப்பித்தார். வெளிநாட்டு ஏற்றுமதியை அதிகரிப்பதே பிரதான நோக்கம் என்றும் கூறினார்.

நாம் நமது தேசிய உற்பத்தியில் 65 வீதமான பொருள்களை அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமே ஏற்றுமதி செய்கின்றோம்.

இப்படியான நிலையில் அரசு ஐரோப்பிய நாடுகளில் உள்ள எமது தூதரகங்களை மூடிவிடுவதாகக் கூறுகின்றது. இதனால் ஏற்படும் விபரீத பின் விளைவுகளை சிந்திக்கத் தவறிவிட்டது.

பொருளாதாரத்தில் நாடு இன்று படுகுழியில் விழுந்துள்ளது. அதில் இருந்து மீண்டுவர முயற்சிக்க வேண்டும்.

ஆனால் அரசு அந்தக் குழியை மேலும் ஆழமாகத் தோண்டிதலையில்மண்ணைப் போட்டுக் கொள்கின்றது.

எதையும் யதார்த்தமாக சிந்திக்க வேண்டும். நமக்கு ஆதரவாக 15 நாடுகள் வாக்களித்தன. அதில் 11 நாடுகள் என்ன கூறின என்று அவதானிக்க வேண்டும்.

நல்லிணக்கஆணைக்குழுவின் சிபார்சுகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தும் என்ற நம்பிக்கையுடன் தான் ஆதரவாக வாக்களிக்கின்றோம் என்று தெளிவாகக் கூறி உள்ளன. இங்கிருந்து வீரம் பேசினால் எமக்கு ஆதரவளித்த 11 நாடுகளும் கூட எதிராக வாக்களிக்கும். - என்றார். (த-2)

## 5 பொலிஸார் கைது

கொழும்பு, மார்ச் 31

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த 11 உத்தியோகஸ்தர்களை தாக்கிய குற்றச்சாட்டில் ரங்கல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 5 பொலிஸ் உத்தியோகஸ்தர்களை ஏப்ரல் 2 ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இரு ஜீப் வாகனங்களில் பயணம் செய்தபோது இந்தப் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இடையூறு விளைவித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தப் பொலிஸார் இரவு நேர ரோந்தில் ஈடுபட்டிருந்தனர். சிவில் உடையில் காணப்பட்ட அந்தப் பொலிஸார் மதுபோதையில் இருந்தமை பின்னர் அறியப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



முன்னாள் போராளிகள் 384 பேரை விடுவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் முன்னாள் பெண் போராளிகள் நடத்திய 'பஷன் ஷோ' இது.

# உள்நாட்டுப் பொறிமுறை தொடர்பில் சட்டநிபுணர்களுடன் அரசு ஆராய்வு

## சர்வதேச இராஜதந்திரப் பிரச்சினைகள் குறித்தும் பலகோணங்களில் அலசல்

கொழும்பு, மார்ச் 31

ஜெனிவாத் தீர்மானத்துக்கமைய கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் இலங்கைக்கு எதிர்காலத்தில் உள்நாடு மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்படும் இராஜதந்திரப் பிரச்சினைகள், சட்டச்சிக்கல்கள் குறித்து நீதித்துறையைச் சார்ந்த உயர்மட்ட நிபுணர்களின் உதவியுடன் அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது எனத் தெரியவருகிறது.

ஓய்வுபெற்ற நீதித்துறையின் முக்கிய பிரமுகர்களை உள்ளடக்கிய குழுவொன்றே இதுவிடயம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து வருகின்றது என்றும் அறியமுடிகின்றது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தின் முன்மொழிவுகளுக்கமைய நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தும் பொறிமுறையொன்றை உள்நாட்டில் நிறுவினால் அதனால் எதிர்காலத்தில் நாட்டுக்கு ஏற்படும் பாதக, சாதக நிலைமைகள் குறித்து இந்தக் குழு விசேடமாக ஆராய்ந்து வருகின்றது.

இந்த நிபுணர்குழுவின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டே ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் தனது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை இலங்கை அரசு அறிவிக்கும். நாடாளுமன்றத்தின் ஊடாகவே அரசு இந்த உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுக்கும் என மூத்த அமைச்சரொருவர் நேற்று 'உதய'னிடம் தெரிவித்தார்.

வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில்

# உரும்பிராய் சிறுமி சீரழிப்பு வழக்கு: கோட்டக் கல்வி அதிகாரிக்குப் பிணை

யாழ்ப்பாணம், மார்ச் 31

**உரும்பிராய் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த 13 வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இரு வாரங்களாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த அந்த இல்லத்தின் பொறுப்பதிகாரியும் கோட்டக் கல்விப் பணிப்பாளருமான அப்பாத்துரை ஈஸ்வரநாதன் (வயது-58) யாழ்.நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.**

வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

சட்ட மா அதிபர் திணைக்கள உத்தரவுக்கமைய யாழ். மேல் நீதிமன்ற அரச சட்டவாதி வி.திருக்குமரன் பாதிக்கப்பட்ட சிறுமி சார்பில் வாதிட்டார். சமூகத்துக்கே எதிரான குற்றம் எனத் தெரிவித்த அவர் சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்க ஆட்சேபனை தெரிவித்தார்.

சந்தேகநபர் சார்பில் வாதாடிய சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா சந்தேக நபரைப் பிணையில் விடுவிக்கும் படி கோரினார்.

''வழக்குத் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணை முடித்து இறுதி அறிக்கையை மன்றில் சமர்ப்பித்துள்ளனர். இந்த நிலையில் சட்ட மா அதிபர் இந்த வழக்கில் தலையிட முடியாது. எனவே சந்தேகநபரைப் பிணையில் விட வேண்டும்'' என்றார் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா.

அதனை மறுத்த அரச சட்டவாதி வி.திருக்குமரன், சட்டத்தின் கீழ் சட்ட மா அதிபர் சார்பில் அரச சட்டவாதி குற்றவியல் வழக்கொன்றின் எந்தக் கட்டத்திலும் முன்னிலையாக முடியுமெனத் தெரிவித்தார்.

இரு தரப்பினரும் நீண்ட நேரமாகத் தமது வாதங்களை முன்வைத்தனர். இப்படியான குற்றவியல் வழக்கொன்றில் பொலிஸ் விசாரணை முடிவடைந்து அந்த அறிக்கை சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பியுள்ள நிலையில் சட்ட மா அதிபர் வழக்கில் முன்னிலையாக முடியுமா என்பது பற்றிய தீர்ப்பை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் நீதிவான்.

கடந்த புதன்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பிணை தொடர்பான தீர்ப்பை வெள்ளிக்கிழமை வழங்குவதாக நீதிமன்று தெரிவித்திருந்தது. அதன்படியே சந்தேக நபருக்கு நேற்றுப் பிணை வழங்கப்பட்டது.

விளக்க மறியல் என்பது சந்தேகநபருக்குத் தண்டனையாக இருக்க முடியாது, பொலிஸ் விசாரணை முடிந்த பின்னரும் சந்தேகநபர் ஒருவரை விளக்க மறியலில் வைக்க வேண்டுமானால் அதற்குத் தகுந்த காரணங்கள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பிணை வழங்கப்பட்டது. சந்தேக நபர் இதய நோயாளி என்பதைக் கவனத்தில் கொண்டும் பிணை ஏற்கப்பட்டது.

50 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும், தலா மூன்று லட்சம் பெறுமதியான மூன்று ஆள் பிணையிலும் சந்தேகநபர் வெளிநாடு செல்ல முடியாதென்ற நிபந்தனையுடன் பிணை வழங்கப்பட்டது. கடவுச் சீட்டை யாழ்.நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டும் என்றும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மு.ப. 9 தொடக்கம் மதியம் 12 மணிக்கு இடையில் நீதிமன்றில் கையொப்பம் இட வேண்டும் என்றும் சாட்சிகளுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்றும் உத்தரவிடப்பட்டது. வழக்கு மே மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி சார்பில் அரச சட்ட வாதியுடன் சட்டத்தரணிகளான கே.சுகாஸ் மற்றும் வி.மணிவண்ணன் ஆகியோரும் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணிகளான மு.றெமீடியஸ் மற்றும் சாமினி விக்னேஸ்வரனின் அனுசரணையுடன் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவும் முன்னிலையாகினர்.

சந்தேகநபரின் பிணை மனுவை எதிர்த்து கடந்த புதன்கிழமை வாதாடிய சட்டத்தரணி கே.சுகாஸ், பொதுவாக எந்த வழக்கு சம்பந்தமானதாக இருந்தாலும் அதுபற்றி விசாரணைகளை 14 நாள்களுக்குள் முடிக்காத பொலிஸார் இந்த வழக்கில் மட்டும் எப்படி வழக்கு விசாரணையை இவ்வளவு விரைவாக முடித்தனர் என்று கேள்வி எழுப்பினார்.

சந்தேகநபர் தான் தன்னை வன்புணர்வு செய்தார் என்று பாதிக்கப்பட்ட சிறுமி விசாரணையில் தெரிவித்துள்ளார். ஆனால் வேறு யாரோ தான் வன்புணர்வு செய்தார்கள் என்று பொலிஸார் கூறுகின்றனர் நன்னடத்தை அதிகாரிகளும், சட்ட வைத்திய அதிகாரியும் தேவையற்ற விதத்தில் பிறரால் அழுத்தத்துக்கு உள்ளாகிறார்கள் - என்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## கஞ்சா வைத்திருந்த இருவருக்கு அபராதம்

**வாகனத்தில் கஞ்சா கடத்தி இருவரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப் படுத்தி உள்ளனர்.**

யாழ்ப்பாணம், மார்ச் 31

256 கிராம் கஞ்சாவை கொண்டு சென்ற பண்ணாகத்தைச் சேர்ந்த இருவருக்கு ஊர்காவற்துறை நீதிமன்றம் தலா 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

பண்ணாகம் பனிப்புலத்தைச் சேர்ந்த வேம்படி பற்குணராசா, கிருஷ்ண பிள்ளை கிருபாகரன் ஆகியோருக்கு இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் கஞ்சா கொண்டு சென்ற 'ஹன்ரர் படி' வாகனம் நீதிமன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை மண்கும்பான் ஊடாக குறித்த வாகனத்தில் கஞ்சா கொண்டு சென்ற இருவரையும் பொலிஸார் கைது செய்து ஊர்காவற்துறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ் மகேந்திரராஜா முன்னிலையில் முற்படுத்தினர்.

விசாரணையின் போது இருவரும் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதனையடுத்து தலா 25 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

இதற்கு முன்னரும் இருவரும் பல தடவைகள் இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுவதாக பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்த நிலையில் இருவரும் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் முதலில் அபராதம் செலுத்தவில்லை. இதனால் 3 மாதசிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் இருவரதும் நண்பர்கள் இவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தியதனால் விடுவிக்கப்பட்டனர். (ம-4)

## நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரை

தென்மராட்சி, மார்ச் 31

சாவகச்சேரி பிரதேச சபைக்குஉட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்படும் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள் நாளைமறுதினம் தொடக்கம் நடைபெறவுள்ளன.

ஏப்ரல் 2, 3 ஆம் திகதிகளில் கொடிகாமம் பிரதேச சபை அலுவலகத்திலும் ஏப்ரல் 9,10 ஆம் திகதிகளில் கைதடி உப அலுவலகத்திலும் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்ட அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணியின் போது உபகரணங்களுக்கு முத்திரையிடாதவர்கள் கொடிகாமம் கைதடி பகுதியில் தமது உபகரணங்களுக்கு முத்திரையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-9)

## காரைநகரில் திருடர் தொல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 31

காரைநகர் பகுதியில் அண்மைக் காலமாகத் திருடர்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் இரவு நேரங்களில் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இப்பகுதிகளில் உள்ள ஆலயங்களிலும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் வனுப்போடை ஞானவைரவர் ஆலயத்திலும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஆலயத்தில் இருந்த ஒலிபெருக்கி சாதனங்கள் மற்றும் உண்டியலில் இருந்த ஒரு தொகைப் பணம் என்பவை திருட்டுப் போயுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு இடம்பெறும் திருட்டுக்களை முறியடிப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைநகரில் பொலிஸ் நிலையம் எதுவும் இன்மையால் ஊர்காவற்றுறைக்கு சென்றே இவ்வாறான முறைப்பாடுகளைச் செய்ய வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-17)

## நெடுந்தீவு சிறுமி கொலை: சந்தேகநபரின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 31

நெடுந்தீவில் 13 வயதுச் சிறுமியான ஜேசுதாசன் லக்சினி பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கைதான சந்தேகநபருக்கு விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நான்காவது சாட்சியின் சாட்சியம் எதிர்வரும் 9 ஆம் திகதிபதிவுசெய்யப்படவுள்ளது.

வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொலை செய்யப்பட்ட சிறுமியின் பெற்றோரும் மன்றுக்குச் சமுகமளித்தனர். கொலைச் சந்தேகநபரான அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி ஜெகதீஸ்வரனும் (வயது-31) நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

சம்பவம் தொடர்பான நான்காவது சாட்சியின் சாட்சியம் பதிவு செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் சாட்சியிடமிருந்து சாட்சிய அறிக்கையைப் பொலிஸார் இன்னும் பதிவு செய்யவில்லை என்பதனால், அதனைப் பதிவு செய்து பின்னர் நீதிமன்றில் சாட்சியமளிக்க உத்தரவிட்டு எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்தார். (10-4)

## போசாக்கு உணவு வழங்கும் திட்டம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட 16 முன்பள்ளிகளைச் சேர்ந்த சிறார்களுக்குப் போசாக்கு உணவு (இலைக்கஞ்சி) வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் மீசாலை பொது நூலக மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மன்றத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வேல்ட் விஷன் நிறுவனத் திட்டப் பணிப்பாளர் றொனசறோ கலந்துகொண்டனர்.

இந்தத் திட்டம் சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் ஆகிய பொது நூலகங்களின் எல் லைப் பரப்பில் உள்ள நலன் விரும்பிகளின் அனுசரணை யுடனும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவ லக உத்தியோகத்தர்களின் வழிகாட்டுதலில் வாரத்தில் இரண்டு நாள்கள் முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவு வழங்கப்படவுள்ளது. (ம-9)

## நிகழ்வுகள் இன்று

### தந்தை செல்வாவின் ஜனனதினம்

மூதறிஞர் தந்தை செல்வாவின் 114 ஆவது ஜனன தின நிகழ்வு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தலைமையில் பிற்பகல் 3 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சோ.சேனாதிராசா, சுரேஷ் பிறேமச்சந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் த.சித்தார்த்தன், எம்.கே.சிவாஜிலிங்கம் உட்படக் கட்சித்தலைவர்கள் பலர் கலந்துகொள்வர்.

### மகளிர் தினம்

கொக்குவில் வடகிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தின விழா பிற்பகல் 2 மணிக்கு வளர்மதி சனசமூக நிலைய வேலாயுதபிள்ளை அரங்கில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் திருமதி கோமதி ரவிதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்வார். (ம-14)

### இசை நாடகம்

யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தினர் வழங்கும் கலை மாலை இசை நடன நிகழ்வு மாலை 4 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரி அ.இராஜமாணிக்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (ம-14)

### மருத்துவக் கண்காட்சி

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் 'தாய் சேய் நலம்' எனும் மருத்துவக் கண்காட்சி காலை 9 மணிக்கு கச்சாய் பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் வைத்தியர் திருமதி ரஜித்தா கனகசுந்தரம் கருத்துரைகளை வழங்கவுள்ளார். (ம-9)

### பொதுக்கூட்டம்

பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய பருத்தித்துறைப் பிரதேச சங்கத்தின் இரண்டாவது பொதுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இளைப்பாறிய நீதிபதி பா.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் கலந்து கொள்வார். (ம-8-253)

### நிர்வாகத் தெரிவு

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சங்கத் தலைவர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் கலந்துகொள்வார். (ம-288)

### கூட்டம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் நுணாவில் பொது நூலகஅபிவிருத்திஆலோசனை சபை மற்றும் வாசகர் வட்டம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் முற்பகல் 10 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### வெளியீடும் விருதும்

யாழ்.இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் வே.வரதராசனின் 'என் கடன்' கவிதை நூல் வெளியீட்டு விழாவும் சிறந்த கவிதைகளுக்கான கவிஞர் வே.ஞாயத்துரை ஞாபகார்த்த விருது வழங்கும் நிகழ்வும் இன்று யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ம-7)

### வலுவூட்டல் நிகழ்வு

கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் சொண்ட் நிறுவனம் வழங்கும் நூலகங்களை வலுவூட்டல் நிகழ்வின் ஆறாவது நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி கருணாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ்.சந்திராதேவி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக ஓய்வு நூலகர் திருமதி ரோகினி பரராஜசிங்கம், கருணாலய இல்லத் தலைவர் ஞானச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்வார்.

# பீரிஸ் கூறுவது அரசின் கருத்தல்ல எனின் அவரைத் தூக்கி எறிய வேண்டியதுதானே

## பச்சோந்தி அரசு என சாடுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, மார்ச் 31

அரசின் பச்சோந்தித்தனமான அரசியல் கொள்கைகளால் எமது நாடு இன்று சர்வதேச சமூகத்துக்கு மத்தியில் நகைச்சுவை நாடாகத் திகழ்கின்றது என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரொருவர் வெளியிடும் கருத்துகளுக்கு அரசு பொறுப்புக்கூறியே ஆகவேண்டும். மாறாக போலித்தனமான காரணிகளைக் கட்டவிழ்த்துவிட்டு நழுவக்கூடாது என்றும் ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ள கருத்துகள் அரசின் உத்தியோகபூர்வ கருத்தல்ல. அவை அமைச்சர் பீரிஸின் தனிப்பட்ட கருத்துகளாகும் என்று அமைச்சரவைப் பதில் பேச்சாளரும், ஊடகத்துறை பதில் அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் லக்ஷ்மன் யாப்பாவின் இந்த அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடும்போதே ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் 'உதயனி'டம் கூறியவை வருமாறு:-

சர்வதேசவிவகாரம் தொடர்பில் அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி வெளிவிவகார அமைச்சரொருவர் கருத்து வெளியிடலாம். அப்படியிருக்கையில் பீரிஸ் அவரின்தனிப்பட்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தால் அவரைப் பதவியிலிருந்து தூக்கலாம்தானே?

தற்போதைய அரசிடம் தெளிவானதொரு கொள்கையோ அல்லது நிலைப்பாடோ இல்லை. காலத்துக்குக்காலம் பல்வேறு கதைகளைக் கட்டவிழ்த்துவிடுகின்றது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றை நன்கு ஆராய்ந்து பார்த்தபின்னரே அது குறித்து கருத்து வெளியிடவேண்டும். ஆனால், எமது நாட்டு அரசு அவ்வாறு இல்லை. சந்தர்ப்பத்திற்கேற்ப தனது கொள்கை, நிலைப்பாடு ஆகியவற்றைத் தளர்த்திக்கொள்கின்றது. இது பச்சோந்தித்தனமான அரசியல் கொள்கையாகும். எனக் குறிப்பிட்டார் ரில்வின் சில்வா.

# அமைதியை ஏற்படுத்துமாறு இலங்கைக்கு கடும் சமிக்ஞை

01 ஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் நேற்று முன்தினம் வாஷிங்டனில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் இலங்கை, ஈரான், யேமன், லிபியா, சிரியா, பர்மா உள்ளிட்ட நாடுகள் தொடர்பான கருத்துகளை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் இலங்கை தொடர்பாகக் கூறப்பட்டுள்ளதாவது:-

உண்மையான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலின் மூலமே நிலையான அமைதியை எட்டமுடியும் என்ற கடுமையான சமிக்ஞை ஒன்றை இலங்கை அரசுக்கு அனைத்துலக சமூகத்துடன் இணைந்து அமெரிக்கா அனுப்பியுள்ளது.

அதற்கு உதவச் சர்வதேச சமூகம் தயாராகவே உள்ளது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் ஆக்கபூர்வமான பரந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், பொறுப்புக்கூறலுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், புதிய தீர்மானத்தின் மூலம் ஐ.நா. மனித உரிமைகள் சபை ஊக்குவிப்பை வழங்கியுள்ளது. இந்த இலக்கை அடைவதற்கு இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்றுவதற்கு அமெரிக்கா கடமைப்பட்டுள்ளது- என்றுள்ளது. (த)

# கடந்த வருடத்தில் மாத்திரம் 100 அரசியல்வாதிகள் கைது

கொழும்பு, மார்ச் 31

மனிதப் படுகொலைகள், கொள்ளை, சூறையாடல், கடத்தல்கள் போன்ற சமூகத்தைச் சீரழிக்கும் அராஜக செயல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளில் சுமார் நூறு அரசியல் பிரமுகர்கள் கடந்த வருடத்தில் கைது செய்யப்பட்டுள்ளனரெனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான குற்றச்சாட்டுகளில் கைதுசெய்யப்பட்டமாகாணசபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நகரசபைத் தலைவர், உறுப்பினர்கள், பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் போன்ற அரசியல் பிரமுகர்களே மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களின் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் கள்ளச்சாராய உற்பத்தி, போதைப்பொருள் போன்ற குற்றச்சாட்டுகளில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுஷ்மா சுவராஜ் தலைமையில் இந்தியக் குழு ஏப்ரலில் வரும்

01 கடந்த வருடம் இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தபோதிலும், இந்தியாவின் ஐந்து மாநிலங்களுக்கான தேர்தலையடுத்து இந்தப் பயணம் கைவிடப்பட்டது.

கடந்த 2009ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நடுநிலையான விசாரணையை மேற்கொள்ளுமாறு இலங்கையை வலியுறுத்தி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா உட்பட 24 நாடுகள் வாக்களித்திருந்தன. இந்த நிலையிலேயே இந்திய அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளது.

இலங்கை செல்லவுள்ள அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கு தான் தலைமை தாங்கிச் செல்லவுள்ளதாகவும் ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி இலங்கை வரும் குழு 21ஆம் திகதி நாடு திரும்பவுள்ளதாகவும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் பா.ஜ.கட்சியின் சிரேஷ்ட தலைவருமான சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் நிவாரணப் பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிடவுள்ளதுடன், தமிழர்களின் வாழ்வாதாரத்தையும் நேரில் பார்வையிடவுள்ளதாகவும் அவர் கூறினார். (த)

# ஜெனிவா தீர்மானத்துக்கு இலங்கை கட்டுப்படாது

01 னத்தை அரசு ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று வெளியுறவுத்துறை அமைச்சர் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நிதிச் சட்டமூலங்கள் தொடர்பான விவாத்திற்குப் பதிலளித்துப் பேசிய போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். ஜெனிவாத் தீர்மானம் தொடர்பாக ஏப்ரல் 3,4ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படும் என்றும் பீரிஸ் தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமைகள் சபை கள்வர்களின் குகை என்றும் அரசியல் நயவஞ்சகம் நிறைந்த ஒருதலைப்பட்சமான சபை என்றும் அங்கு நியாயம் கிடைக்காது என்றும் அமெரிக்கா மற்றும் ரஷ்ய ஆகியன ஏற்கனவே இந்தச் சபை பற்றித் தெரிவித்து இருக்கின்றன என்றும் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினார் பீரிஸ்.

"தீர்மானத்தில் ஏதாவது மாற்றங்கள் செய்தால் இணைந்து செயற்பட முன்வருவீர்களா என்று இந்தியாவும் அமெரிக்காவும் எம்மிடம் கேட்டன. ஆனால் இந்தத் தீர்மானத்துக்கு ஆரம்பம் முதலே நாம் கடும் எதிர்ப்பைக் காட்டி வந்த நிலையில் அதற்கு உடன்பட மறுத்துவிட்டோம். எந்த மாற்றத்தைச் செய்தாலும் உடன்பட மாட்டோம் எனத் தெரிவித்துவிட்டோம். அப்படி உடன்படுவது நாட்டுக்குச் செய்யும் துரோகம். அப்படிப்பட்ட எந்த அச்சுறுத்தலுக்கும் நாம் அடிபணிய மாட்டோம்" என்றார் அமைச்சர் பீரிஸ்.

ஜெனிவாத் தீர்மானத்தை அரசு ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். "ஏற்கனவே திட்டமிடப்பட்ட எமது நிகழ்ச்சி நிரலின்படி வேலைத் திட்டங்கள் தொடரும். இங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசு உள்ளது. எமது நிர்வாகத்தை ஜெனிவாவிடம் ஒப்படைக்க முடியாது" என்றும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவாத் தீர்மானத்தால் இலங்கைக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாது என்று தெரிவித்த பீரிஸ், அதைப் பற்றி அரசு அலட்டிக் கொள்ளவில்லை என்றும் கூறினார். "அந்நியத் தலையீட்டுக்கு இடமளிக்க முடியாது; அடிபணியவும் முடியாது" என்று அவர் மீண்டும் ஆணித்தரமாக வலியுறுத்தினார். (உ-02)

### லலித், குகன் வழக்கு யாழ். நீதிமன்றுக்கு

01 நீதிமன்றத்தில் நடத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இருவரும் காணாமல் போனமை தொடர்பில் அவர்களின் உறவினர்களால் தாக்கல்செய்யப்பட்டிருந்த இரண்டு மனுக்கள் நேற்றைய தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த இரண்டு இளைஞர்களும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்படவோ அல்லது தடுத்து வைக்கப்படவோ இல்லை என இதன்போது பிரதிவாதிகள் சார்பாக ஆஜரான அரசதரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்தில் அறிவித்தார்.

அவர்கள் கைதுசெய்யப்படவில்லை எனில் சம்பந்தப்பட்ட பிரதேச நீதிமன்றத்தில் சாட்சி விசாரணையை ஆரம்பிப்பதற்கான உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என இதன்போது மனுதாரர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோரிக்கைவிடுத்தார்.

எவ்வாறாயினும் இந்த வழக்கின் பிரதிவாதிகளான பொலிஸ் மா அதிபர் மற்றும் அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் இதுவரையில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்காத காரணத்தினால், அந்தத் தீர்மானத்தை சாட்சியமளித்ததன் பின்னர் எடுக்க வேண்டும் என பிரதிவாதி தரப்பில் ஆஜரானசட்டத்தரணி குறிப்பிட்டார்.

காரணங்களை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழு, குறித்த சாட்சி விசாரணைகளை யாழ் நீதவான் நீதிமன்றத்தில் நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதன் பதிவாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

அடுத்த மாதம் 27 ஆம் திகதி மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானித்த நீதிபதிகள் குழு, குறித்த தினம் பிரதிவாதிகளின் எதிர்ப்புகளை முன்வைக்க முடியுமெனக் குறிப்பிட்டார்.

குகன் முருகானந்தன் மற்றும் லலித் குமார ஆகிய மக்கள் போராட்ட இயக்கத்தின் உறுப்பினர்கள் இருவரும் கடந்த டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி யாழ்பாணத்தில் காணாமற்போனமை குறிப்பிடத்தக்கது. (த)

# ஜி.எல்.பீரிஸ் யார்? அவரது பதவி என்ன?

01 என்று ஏற்றுக் கொள்வது. இலங்கைக்கு எதிராக 24 நாடுகள் வாக்களித்தன. ஆதரவாக 15 நாடுகள் செயல்பட்டன. ஆனால் நடுநிலை வகித்த எட்டு நாடுகளும் நமக்கு ஆதரவானவை இதன்படி ஒரு வாக்கு வித்தியாசத்திலேயே பிரேரணை வெற்றி பெற்றது என்று பெருமையடிக்கின்றார் பீரிஸ்.

அதேவேளை நடுநிலை வகித்த எட்டு நாடுகளும் எமக்கு ஆதரவானவை என்று ஒபாமா கூறினால் நமக்கு எதிராக 32 நாடுகள் உள்ளன என்று ஆகிவிடாதா? வெறுமனே கணக்குக்காட்டி மக்களை ஏமாற்றக் கூடாது.

இதைப் போன்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன மூன்று பேர் கொண்ட குடும்பம் 7,500 ரூபாவுடன் ஒருமாதம் நன்றாக வாழமுடியும் என்று கணக்கு போடுகின்றார்.

நான் முன்பு இவரிடம் கல்விகற்ற மாணவன் என்று பெருமைப்பட்டேன். ஆனால் இப்போது இப்படியான ஒரு முட்டாளிடம் தானா கல்வி கற்றேன் என்று நினைத்து வெட்கப்படுகிறேன்.

கிறீஸ் நாட்டில் ஒருவர் நிர்வாணக் கோலத்தில் பீப்பாய் ஒன்றில் இருந்து கொண்டு சாப்பிடக் கூடாத ஒன்றைச் சாப்பிட்டுக் கொண்டு இருந்தாராம்.

இதேபோன்று தான் கல்வி அமைச்சரும் பீப்பாவுக்குள் இருந்து கொண்டு இப்படி முட்டாள் தனமான கருத்துகளைக் கூறுகின்றார் - என்றார். (த-2)

# பொய்ப் பிரசாரங்களில் மேற்குலக ஊடகங்கள்

01 பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் 374 மில்லியன்ரூபா செலவில் அரச தகவல் திணைக்களத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஊடக அபிவிருத்தி மத்திய நிலையத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் திறந்துவைத்து உரையாற்றியபோதே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தவறுகள்- குறைபாடுகளை மட்டும் சுட்டிக்காட்டுவதுதான் ஊடகங்களின் பணியல்ல. நாட்டில் நடக்கும் நல்ல விடயங்கள் பற்றியும் உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவது ஊடகங்களின் பொறுப்பாகும்.

கொலை- கற்பழிப்பு மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான செய்திகளுக்கு முன்னுரிமை வழங்கும் ஊடகங்கள் நாட்டில் நடைபெறும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் இனங்களுக்கிடையேயான நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாகச் செய்தி வெளியிடுவதில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை.

இதன் காரணமாகவே நாட்டில் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன.

இறுதி யுத்தத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் ஊடகங்கள் அரசிடம் சரணடைந்த ஆயிரக்கணக்கான புலி உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்படும் செய்திகளை வெளியிடுவதில்லை.

அன்று கொழும்பு நகரில் குப்பைகள் கொட்டப்பட்டு வீதிகள் நாற்றமெடுத்த செய்திகளை முக்கிய செய்தியாக வெளியிட்ட ஊடகங்கள் இன்று கொழும்பு நகரின் எழில் தோற்றம் பற்றி எதுவுமே எழுதுவதில்லை.

விபத்துக்கள்- மோசடிகள் - குற்றச் செயல்கள்- மற்றும் கலாசாரச் சீரழிவுகளை மட்டும் ஊடகங்கள் வெளிப்படுத்தாமல் நல்ல நிகழ்வுகளையும் நாட்டின் முன்னேற்றங்களையும் வெளிக்கொணரவேண்டும்.

முதலில் நாம் எமது நாட்டை நேசிக்கவேண்டும். எமது இளஞ்சிறார்கள் மத்தியிலும் தேசப்பற்றை வளர்க்க வேண்டும்.

ஜனநாயகத்தின் காவல் நாய் என வர்ணிக்கப்படும் ஊடகவியலாளர்கள் அநீதிக்கு எதிராக குரல் எழுப்புவது போலவே நாட்டின் எதிர்காலச் சந்ததியினரின் நன்மைக்காகவும் செயற்படவேண்டும்-என்றார். (த)

# இலங்கை மீது பொருளாதார தடை விதிக்கப்படும் அபாயம்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 31

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கப்படக்கூடிய அபாயம் காணப்படுகிறது என சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கு எதிராக தடைகளை விதிக்கக் கூடும். பொருளாதாரத் தடைகளை விதிக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஊடாக இலங்கைக்கு எதிராக தடைகளை விதிக்க முடியாது. எனினும், தனிப்பட்ட ரீதியில் மேற்குலக நாடுகள் இலங்கை மீது பொருளாதார தடைகளை விதிக்கக் கூடும்.

எமது நாட்டின் 60 வீதமான ஏற்றுமதிகளை அமெரிக்காவும், ஐரோப்பாவும் இறக்குமதி செய்கின்றன. ஏதேனும் தடைகள் விதிக்கப்பட்டால் அது பெரும் நெருக்கடி நிலைமைகளை ஏற்படுத்தும்.

சில தரப்பினர் அமெரிக்க பொருள்களை நிராகரிக்குமாறு கோருகின்றனர். உண்மையில் இவ்வாறான நடவடிக்கைகளினால் அமெரிக்காவின் நோக்கமே நிறைவேறும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியவர் செலுத்தினார் அபராதம்

யாழ்ப்பாணம் மார்ச் 31

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்றவருக்கு யாழ். நீதிமன்றம் 50 ஆயிரம் ருபா அபராதம் விதித்துள்ளது.

உரும்பிராயைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் யாழ். பிறவுண் வீதியூடாக இவ்வாறு ஏற்றிச் சென்ற போதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டார். சந்தேக நபர் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இந்த அபராதத் தொகை விதிக்கப்பட்டது. (4)

## அடிமாடாக விற்ற காளை கோயில் மாடாக மாறும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

இறைச்சிக்காக வெட்டப்பட இருந்த காளை மாட்டை நகுலேஸ்வர கோயிலில் ஒப்படைக்கவும். இந்த மாட்டுக்குரிய பெறுமதியை யாழ். வணிகர் கழகம் வழங்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் யாழ். நீதிமன்றுக்கு அறிக்கை சமர்பித்துள்ளார்.

இறைச்சிக்காக வழங்கிய மாட்டை வெட்ட விடாமல் தடுத்தார் என்று அரச அதிபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

திருநெல்வேலி கால்நடை பண்ணையில் இருந்து ஏலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்த காளையை வாங்கியவர் அதனை வெட்டுவதற்கு முன்னர் விளம்பரப்படுத்தி பெரும் ஆராவாரம் செய்ததால் இந்துக்கள் விசனம் அடைந்தனர். இதனை அடுத்து அந்த மாட்டை வெட்ட அரச அதிபர் தடை விதித்தார். மாட்டை வாங்கியவர் இதனை எதிர்த்து நீதிமன்றத்தை நாடினார்.

வழக்கை விசாரணைக்கு எடுத்த நீதிமன்றம், அரச அதிபரை விளக்கமளிக்கப் பணித்திருந்தது. (உ-4)

## தமிழாராய்ச்சி மாநாட்டுத் தூபி பாதிப்பில்லாது பாதுகாக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக செல்லும் கே.கே.எஸ். வீதியின் அகலிப்பின் போது தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்ட பத்து தமிழ் மக்களின் நினைவுத் தூபிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

அதற்கு ஏற்ற வகையில் புனர்நிர்மாணப் பணிகள் இடம்பெறும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வீதி அகலிப்பின் போது நினைவு ஸ்தூபிக்கு எவ்வித பாதிப்பும் இன்றி வீதி முன்பக்கத்தை அகட்டி புனர்நிர்மாணம் செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

நினைவுத் தூபிக்கு முன்பாகவுள்ள பெயர் வளைவும் அகற்றப்படமாட்டாது. அகலிப்பு பணியின் போது இந்த நினைவு சின்னத்துக்கு எந்த விதத்திலும் பங்கம் ஏற்படாது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு உள்ளூர் ஆலோசகர் குழு

## யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஏற்பாடு

**உள்ளூராட்சியின் நடவடிக்கைகளில் பங்களிக்கக் கூடிய சிரேஷ்ட பிரஜைகள், விடய அறிஞர்கள், வட்டார அங்கத்தவர்கள் பிரதேசத்தில் இருக்கக் கூடிய தகைமையாளர்கள் ஆகியோரைக் கொண்டதாக ஆலோசனைக் குழு அமைக்கப்படவுள்ளது.**

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உள்ளூர் பிரமுகர்களை உள்ளடக்கிய ஆலோசனைக் குழுக்கள் தெரிவு செய்யப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் மேற்கொண்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் வதியும் உள்ளூராட்சியின் நடவடிக்கைகளில் பங்களிக்கக் கூடிய சிரேஷ்ட பிரஜைகள், விடய அறிஞர்கள், வட்டார அங்கத்தவர்கள் பிரதேசத்தில் இருக்கக் கூடிய தகைமையாளர்கள் ஆகியோரைக் கொண்டதாக ஆலோசனைக் குழு அமைக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் அமைக்கப்படும் இந்தக் குழு பொதுமக்களுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்குமிடையில் ஒரு இணைப்புப் பாலமாக விளங்க வேண்டும். இந்தக் குழு எந்தவொரு அரசியல் சார்பற்றதாக திகழவேண்டும்.

குழு மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு அபிவிருத்திக் கொள்கைகளை தீர்மானிப்பதற்கும் வளங்களைப் பங்கீடு செய்வதற்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உதவவேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கும் பொது மக்களுக்குமிடையில் தகவல் பரிமாற்ற ஊடக சாதனமாக இந்தக் குழு தொழிற்பட வேண்டும். உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்த வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொள்ளும் தீர்மானங்களிலும் நீதியைக் கையாளும் முறைகளிலும் மக்கள் பங்களிப்பை அதிகரிக்க வைப்பது இந்தக் குழுக்கள் அமைப்பதன் நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## வெயிலில் காயும் வாகனங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். மின்சார நிலைய வீதியில் உள்ள யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான இடத்தில் நடத்தப்பட்டு வரும் பாதுகாப்பு நிலையத்தில் கொட்டகைகள் எவையும் அமைக்கப்படாமையால் அங்கு பாதுகாப்புக்காக விடப்படும் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் வெயிலில் காயும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால் ரியூப்புகள் உருகி காற்றுப் போகும் நிலைமை ஏற்படுவதுடன் மோட்டார் சைக்கிள்களில் பெற்றோல் மட்டம் குறைவடைவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் வெயில் அதிகரித்துக் காணப் படுவதால் வைத்தியசாலைக்கு நண்பகல் வேளைகளில் செல்லும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அது மட்டுமன்றி தூர இடங்களுக்குச் செல்வோர் இங்கு தமது சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை விட்டுச் செல்வது வழமை. இந்த நிலையில் அவர்கள் பெரும் அவதியடைய வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை இப்பகுதியில் கொட்டகைகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை தாமதப்படுத்துவது குறித்தும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வாகனங்களை தரிப்பிடத்தில் நிறுத்துவதற்குப் பதிலாக சிலர் போக்குவரத்துக்கு இடையூறான வகையில் வீதிகளின் ஒரங்களில், நிழல் உள்ள இடங்களில் நிறுத்தி வைப்பதையும் நகரப் பகுதியில அவதானிக்க முடிகிறது.

இது குறித்த விவரங்களைப் பெறுவதற்கு மாநகர சபை முதல்வருடன் தொடர்பு கொள்ள முயன்றபோதும் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை. (ம)

## கிளிநொச்சி வைத்தியசாலையின் அம்புலன்ஸ் விபத்துக்குள்ளானது



யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி சென்று கொண்டிருந்த அம்புலன்ஸ் வாகனம் மீசாலையில் பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 9.30 மணியளவில் ஏ-9 வீதியில், மீசாலை சந்திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சொந்தமான அம்புலன்ஸ் யாழ்ப்பாணத்துக்கு சுத்திகரிப்பிற்காக வந்து திரும்பிக் கொண்டிருந்த வேளையில் விபத்துக்கு உள்ளாகியது.

சம்பவத்தில் அம்புலன்ஸ் சாரதி மயிரிழையில் உயிர் தப்பிக்கொண்டார். அம்புலன்ஸ் முன்பக்கமும் பின்பக்கமும் கடும் சேதத்துக்கு உள்ளானது. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (10)

# வடக்கு வைத்தியர்களுக்கு போதிய வசதிகள் இல்லை

## டாக்டர் நலின் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 31

வடமாகாணத்தில் சேவையாற்றும் வைத்தியர்களுக்கு போதியளவு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உபசெயலாளர் டாக்டர் நலின் பெரேரா தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

யுத்தத்தின் பின்னர் குறித்த பிரதேச வைத்தியசாலைகளில் காணப்படும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் என எதிர்பார்த்தேன்.

அத்துடன் அதிகளவில் வைத்தியர்களை சேவையில் இணைத்து சிறந்த வைத்தியவசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என கருதினேன்.

குறிப்பாக கிளிநொச்சி போன்ற வைத்தியசாலைகளில் இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கும் விடயம்.

ஆனால் துரதிஷ்டவசமாக பெரும்பாலான வைத்தியசாலைகளில் அவ்வாறு நடைபெறாமை பெரிய பிரச்சினையாகும்.

தற்போது 468 வைத்தியர்கள் மாத்திரமே கடமையாற்றுகின்ற போதிலும் உத்தியோகபூர்வ குடியிருப்பு, குடிதண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்காமல் அங்கு சேவையாற்றுவது மிகவும் கடினமானது - என்றார்.

# சோனியாவை உறைய வைத்த பாலச்சந்திரனின் ஒளிப்படம்

## அதுவே இந்தியாவின் முடிவை மாற்றியதாம்

கொழும்பு, மார்ச் 31

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியே இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கூறினார் எனவும், அவர் அவ்வாறு கூறியதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் கொல்லப்பட்டுக் கிடந்த ஒளிப்படமே காரணம் என்றும் 'ரைம்ஸ் ஒவ்' இந்தியா தகவல் வெளியிட்டுள்ளது.

வாக்கெடுப்புக்கு சில நாள்கள் முன்னதாக சனல்-4 வெளியிட்ட விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் கொல்லப்பட்டது உள்ளிட்ட தமிழர்களின் அவலங்கள் பற்றிய காட்சிகள் சோனியா காந்திக்கு கணிசமான பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன என தம்மை அடையாளம்காட்ட விரும்பாத காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

தமிழ் ஊடகங்களில் வெளியான இந்தப் படங்கள் ஒரு புயலையே தோற்றுவித்தன.

வாக்கெடுப்புக்கு இரண்டு நாட்கள் முன்னதாக, மார்ச் 22 ஆம் திகதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனனும், நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் காங்கிரஸ் உறுப்பினர்களிடம் தனியொரு நாட்டுக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்க முடியாது என்று கூறியிருந்தனர்.

இதனால் அதிருப்தியடைந்த சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சோனியா காந்தியை அணுகி அவரிடம் முறையிட்டனர்.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்ட படங்களை அவர்கள் சோனியா காந்தியிடம் காண்பித்து நியாயம் கேட்டனர்.

குறிப்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் மார்பில் சுடப்பட்டுக் கிடக்கும் காட்சி அவரை உறைய வைத்தது.

இதையடுத்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தான் நடவடிக்கை எடுப்பதாக சோனியாகாந்தி உறுதி வழங்கினார்.

உடனடியாகவே, அவர் பிரதமர் மன்மோகன்சிங்கிடம், ராஜபக்ஷ அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கக் கூடாது என்று கூறினார்.

ஒரு குழந்தையின் மரணம் இந்திய - இலங்கை உறவையே மாற்றி விட்டது என்று 'ரைம்ஸ் ஒவ்' இந்தியா மேலும் கூறியுள்ளது.

# மழை குறுக்கிட தென்னாபிரிக்கா வெற்றி

தென்னாபிரிக்க அணியின் இமாலய இலக்கை இந்திய அணி அதிரடியாக விரட்ட ஆரம்பித்த போதும் இடையில் மழை வந்து குறுக்கீடு செய்தமையால் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி தென்னாபிரிக்க அணி 11 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்காவுக்குச் சென்றுள்ள இந்திய அணி அங்கு ஒரே ஒரு 'ரி-20' நட்பு ஆட்டத்தில் நேற்று பங்கேற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் டோனி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

தென்னாபிரிக்காவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக லெவி, கலிஸ் களமிறங்கினர். பிரவீன் குமார் பந்து வீசத் தொடங்கியதுமே தென்னாபிரிக்காவின் அதிரடி தொடங்கியது. முதலாவது பந்திலேயே மூன்று ஓட்டங்கள் எடுத்து லெவி ஆட்டத்தை தொடக்கி வைத்தார். தொடர்ந்து நான்கு ஓட்டங்களாக தொடர்ந்து விளாசிய லெவி இரண்டாவது பந்து பரிமாற்றத்தில் ஸ்லிப் திசையில் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து நுழைந்த இங்கிராம், கலிஸுடன் இணைந்து இந்தியாவுக்கு எதிரான அதிரடியைத் தொடங்கினார். டோனி இவர்களின் அதிரடியைப் பொறுக்காமல் அடிக்கடி பந்து வீச்சாளர்களை மாற்றிய போதும் தென்னாபிரிக்காவின் அதிரடி மாத்திரம் அடங்கவில்லை.

முதல் ஆறு பந்து பரிமாற்றங்களின் நிறைவில் ஒரு இலக்கினை மாத்திரம் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றிருந்த தென்னாபிரிக்க அணி பின்னர் சிறிது தளம்பலுடன் பயணித்தது. இங்கிராம் 38 பந்துகளில் தனது முதலாவது அரைச்சதத்தை கடந்தார். அடுத்த பந்திலேயே கலிஸும் 36 பந்துகளில் தனது 5 ஆவது அரைச்சதத்தை கடந்தார்.

அதன் பின்னர் மீண்டும் தென்னாபிரிக்காவின் அதிரடி உச்சமானது. 80 பந்துகளில் 119 ஓட்டங்கள் கலிஸ், இங்கிராமிடையே பகிரப்பட்ட நிலையில் கலிஸ், அஸ்வினின் பந்தை டீப் மிட்விக்கெட் திசையில் அடிக்க எல்லையில் வைத்து ரோகித் பிடியெடுத்தார். இருப்பினும் தொடர்ந்து வந்த பெஹாடீன் அதிரடியைத் தொடர்ந்தார். கலிஸ் ஆட்டமிழந்து சிறிது நேரத்திலேயே இங்கிராமும் ஆட்டமிழந்தார்.

டோனி தென்னாபிரிக்காவின் தொடர்ச்சியான அதிரடியை ஈடுகொடுக்க பகுதிநேரப் பந்து வீச்சாளர்களை பயன்படுத்தினார். அவர்களது பந்து வீச்சுக்களும் எல்லைக்கு வெளியே அனுப்பப்பட்டன. ஒன்ரொங் அதிரடியாக நான்கு ஓட்டங்கள், ஆறு ஓட்டங்கள் என்று அடுத்தடுத்து விளாச தென்னாபிரிக்கா 200 ஓட்டங்களைத் தாண்டியது. இறுதிப் பந்து பரிமாற்றத்தை ரெய்னா வீச முதலாவது பந்தில் நான்கு ஓட்டமும், அடுத்த பந்தில் ஆறு ஓட்டமும் பெறப்பட்டது. மூன்றாவது பந்தில் ஒன்ரொங் ஆட்டமிழந்தார். இருப்பினும் அடுத்து நுழைந்த அல்பின் மோர்கல் முதலாவது பந்தில் ஆறு ஓட்டமும் அடுத்த பந்தில் நான்கு ஓட்டமும் இறுதிப் பந்தில் ஆறு ஓட்டமும் விளாச இறுதிப் பந்து பரிமாற்றத்தில் மட்டும் 26 ஓட்டங்கள் பெறப்பட்டது.

20 பந்து பரிமாற்றங்களில் தென்னாபிரிக்க அணி 4 இலக்குகளை இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது.

பிரம்மாண்டமான இலக்கை விரட்டத் தொடங்கிய இந்திய அணிக்கு ரொபின் உத்தப்பா, கம்பீர் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது. தென்னாபிரிக்காவுக்கு சற்றும் சளைத்தவர்கள் என்றில்லாமல் இந்திய அணியும் அபாரமாக விளையாடியது. உத்தப்பா நிதானமாக ஆட, கம்பீர் வெளுத்து வாங்கினார். முதல் ஆறு பந்து பரிமாற்றங்களின் நிறைவில் இந்திய அணி இலக்கு நஷ்டமின்றி 51 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

7.5 பந்து பரிமாற்றங்களில் இந்திய அணி இலக்கு இழப்பின்றி 71 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழை குறுக்கீடு செய்தது. வெற்றிக்கு 12.1 பந்துகளில் 149 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தது. இதே நேரம் 7.5 பந்து வீச்சுக்களில் தென்னாபிரிக்க அணி 82 ஓட்டங்களினை ஒரு இலக்கினை மாத்திரம் இழந்து பெற்றிருந்தது. தொடர்ந்து மழை பெய்ததன் காரணமாக தென்னாபிரிக்க அணி 11 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்காவின் இங்கிராம் தெரிவுசெய்யப்பட்டார். (5)


*உங்களின் 2012ஆம் ஆண்டுக்கான வீத வரியை*

*இலங்கை வங்கிக் கிளைகளில் செலுத்தல்*

## யாழ்ப்பாணம் மாநகர சபை

**இலகுவாகவும், விரைவாகவும் ஆதனவரிகளைச் செலுத்துவதை மேம்படுத்தும் நோக்கத்துடன், இலங்கை வங்கியின் பின்வரும் கிளைகளில் ஆதனவரியை செலுத்துவதற்குரிய நடவடிக்கைகளை, யாழ்ப்பாணம் மாநகர சபை மேற்கொண்டுள்ளது.**

- வைத்தியசாலை வீதியிலுள்ள பிரதான கிளை.
- ஸ்ரான்லி வீதியிலுள்ள 2ஆவது கிளை, திருநெல்வேலிக் கிளை மற்றும்
- யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலுள்ள இலங்கை வங்கியின் விரிவாக்கல் அலுவலகம்
- பிரதான வீதியிலுள்ள இலங்கை வங்கியின் விரிவாக்கல் அலுவலகம்
- யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள இலங்கை வங்கியின் விரிவாக்கல் அலுவலகம்
- நல்லூரிலுள்ள யாழ்ப்பாணம் மாநகரசபையின் அலுவலக வளவில் காணப்படுகின்ற இலங்கை வங்கியின் விரிவாக்கல் அலுவலகம்.

**இலங்கை வங்கிக் கிளைகளில் வீதவரியைச் செலுத்துவதற்காக என்ன செய்யவேண்டும்?**

- ஏற்கனவே உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள வீதவரி அறிவித்தல்களை (K படிவம்) எடுத்துக் கெண்டு இலங்கை வங்கிக் கிளைக்குச் சென்று, அக்கிளைகளில் வைக்கப்பட்டுள்ள உரிய கொடுப்பனவுச் சிட்டைகளை நிரப்பிய பின்னர் உங்களின் ஆதனவரியைச் செலுத்துங்கள்.
- இலங்கை வங்கிக் கிளைகளில் கொடுப்பனவுகளைச் செலுத்திய பின்னர் வழங்கப்படுகின்ற இயந்திரப் பதிவுடனான கொடுப்பனவுச் சிட்டையை, ஆதனவரி செலுத்தியமைக்கான இறுதியானதும் மற்றும் உத்தியோகபூர்வமான கொடுப்பனவுச் சிட்டையாக யாழ்ப்பாணம் மாநகர சபை கருதும்.
- ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்குமென, வங்கி 15/- ரூபாவைச் செயற்பாட்டுக் கட்டணமாக அறவிடும்.
- உங்களின் 2012ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை, 2012 ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தும் போது குறித்த ஆதன வரியில் 5% ஆன கழிவை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்.
- உரிய ஆதனவரிக் கொடுப்பனவுகளை குறித்த நேரத்துக்குள் நீங்கள் செலுத்தத் தவறும் பட்சத்தில், செலுத்த வேண்டியுள்ள மொத்த வீத வரியில் 15% ஆன தண்டக் கட்டணமும் சேர்க்கப்படும்.
- மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 0774766111 எனும் ஆதனவரிக்கான பிரத்தியேகமான தொலைபேசி இலக்கத்துடன் அல்லது jaffnamc.lk, jmcarmr@yahoo.com எனும் மின்னஞ்சல் முகவரியுடன் தயவுசெய்து தொடர்பு கொள்ள வும்.

**உங்களின் ஆதனவரிக் கொடுப்பனவுகளை உரிய நேரத்துக்குள் செலுத்தி யாழ்ப்பாணம் மாநகரத்தின் அபிவிருத்திப் பங்களிப்புச் செய்யுங்கள்.**

நன்றி

*திருமதி யோ. பற்குணராசா,*
*மாநகர முதல்வர்.*

*திரு. மு.செ. சரவணபவ,*
*மாநகர ஆணையாளர்.*


# மரண அறிவித்தல்கள்

திருமதி

## ரேவதியம்மா குலசேகரம்பிள்ளை



பிராமணன் தரை, பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரேவதியம்மா குலசேகரம்பிள்ளை நேற்று (30.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி-குட்டிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற மந்துவில் முத்தையா குலசேகரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பரராசசிங்கம் மற்றும் ராசமணி (கனடா), இராஜேஸ்வரி, தம்பிநாதர், சிவயோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மனோரஞ்சிதம், மனோகரன் (கனடா), சறோஜினிதேவி (கனடா), அம்பிகாவதனி, பராசக்தி (கனடா), பிறைசூடி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்கா பத்தமேனி முள்ளிவிராய் தீர்த்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வைரவர் கோயிலடி,**
**பத்தமேனி, அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## நாகலிங்கம் ஜெகதீஸ்வரன் (ஜெகன்)



சங்கானை, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஜெகதீஸ்வரன் (ஜெகன்) நேற்றுமுன்தினம் (29.03.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் மனோரஞ்சிதம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமு மற்றும் ரோசம்மா தம்பதியரின் மருமகனும், சாந்தியின் அன்புக் கணவரும், றெபேக்கா, சங்கீதா, தர்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் மகேந்திரம் (லண்டன்), நகுலேஸ்வரி, பரமேஸ்வரன் (லண்டன்), நந்தராணி, செல்வராணி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரி, சறோஜினிதேவி (லண்டன்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் சறோஜினி (கொழும்பு), பத்மநாதன் (பொன்னுக்குட்டி), சிவபாலன் (நோர்வே) ஆகியோரின் மைத்துனரு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவு டல் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோயிலடி,**
**சங்கானை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வருமுன் காக்க முனைவதே நாட்டுக்கு நல்லது...

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும்- ஜனவரி தொடக்கம் மார்ச் மாத இறுதி வரை - முப்பத்தைந்து பொதுமக்கள் காணாமற் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. "சுதந்திரத்துக்கான களம்" என்ற மனித உரிமைக்குழு வெளியிட்ட பிந்திய அறிக்கையில் இந்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் போரில் அரசு வென்றதன் பின்னரும், ஆள்கள் காணாமற் போகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்றும் சுதந்திரத்துக்கான களம் அமைப்பின் பேச்சாளர் பிரிட்டோ பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

காணாமற் போனோர் தொடர்பாக, அவர்களை மீட்பதில் அரசாங்கம் அக்கறை எடுத்துச் செயற்படுவதில்லை. அரசுக்கு எதிரானவர்கள், அவ்வாறு சந்தேகிக்கப்படுபவர்கள் காணாமற் போகச் செய்யப்படுவதனால், அரசாங்கமே அதன் பின்னணியில் நின்று இயங்குவதாகச் சந்தேகம் கொள்ள வேண்டி உள்ளது.- என்றும் பிரிட்டோ கருத்து வெளியிட்டுள்ளார்.

இறுதிப் போரின்போது வன்னியில் கொல்லப்பட்ட, காணாமற் போனோரின் விவரங்களை வெளியிட வேண்டிய முழுப்பொறுப்பும் அரசாங்கத்தையே சார்ந்தது. ஆனால், அதனை நாடி போதிய அக்கறை காட்டியதாக இல்லை.

ஏன், யாழ்ப்பாண மாவட்டத்தில் போரின் போதும் அதற்குப் பின்னரும் காணாமற் போனவர்களின் சரியான, முழுமையான விவரங்கள் பதிவு செய்யப்படவில்லை. வெளிநாடுகளிலிருந்து வரும் மனித உரிமை ஆர்வலர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட பூரணமான தகவல்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகவில்லை. மக்கள் காணாமற் போவது - காணாமற் போகச் செய்யப்படுவது - மனித உரிமை மீறல்களில் முக்கிய இடத்தைப் பிடிக்கிறது.

ஜெனிவாவில் கடந்த வாரம் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச நாடுகளால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைச் செயலாக்குவதற்கு, இலங்கை அரசு எதிர்ப்புத் தெரிவித்து வருவது உலகநாடுகளில் மட்டுமன்றி, தமிழ்மக்கள் மத்தியிலும் பெரும் மனக்கசப்பைத் தோற்றுவித்துள்ளது.

தானே நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் மனித உரிமைகள் சார்ந்த பரிந்துரைகளை பழுதில்லாமல் நடைமுறைப்படுத்துவதற்குப் பின்னடித்து, அதனை நாடி பிரசாரம் செய்துவரும் அரசாங்கம் கூறும் காரணங்களை சர்வதேசம் ஏற்றுக்கொள்ள மாட்டாது.

அது ஒருபுறமிருக்க, அரசின் அமைச்சர்கள் ஆளுக்கு ஆள் முரண்பட்ட கூற்றுகளை, கருத்துகளை வெளியிட்டு வருவது, சர்வதேச மட்டத்தில் மட்டற்ற அதிருப்தியையும் சந்தேகத்தையும் உண்டாக்கி வருகிறது.

இத்தனைக்கும் மேலாக, நல்லிணக்க ஆணைக்குழு தனக்கு வழங்கப்பட்ட ஆணையை மீறிச் செயற்பட்டு சிபார்சுகளைத் தெரிவித்திருப்பதாக பொறுப்புள்ள சிலர் அதன் மீது குற்றம் சுமத்துகின்றனர். ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில், நடவடிக்கை எடுக்காமல் தவிர்த்துக்கொள்வதற்கு, தப்பிக்கொள்வதற்கான தந்திரமான உத்தி என்றே இதனைக் கருதலாம். மனம் இருந்தால் இடம் உண்டு என்பது அனுபவபூர்வமான அர்த்தமுள்ள முதுமொழி.

இலங்கை அரசு, இந்நாட்டில் ஜனநாயக மறுசீரமைப்புகளை ஏற்படுத்தும் வகையில், செயற்பட வேண்டும், அதற்கேற்றவாறு, திருந்திக்கொள்வதற்கு மனம் வைக்க வேண்டும்.

அரசாங்கத்தின் ராஜதந்திரிகளில் ஒருவரான தயான் ஜெயதிலக்க தெரிவித்திருக்கும் இந்தக் கருத்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

இலங்கையில் ஜனநாயக மறுசீரமைப்புகளை உண்டாக்கும் விடயத்தில், மியன்மார் அரசிடமிருந்து எமது நாட்டின் அரசு அனுபவப் பாடத்தைக் கற்றுக்கொள்ள முடியும். மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, தன்மீதான (2009 ஆம் ஆண்டின்) ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, அந்த நாடு உள்வாங்கிக்கொண்டு, தனது தவறுகளை உணர்ந்துகொண்டு, அவற்றைத் திருத்தி, வெற்றி கண்டுள்ளது.

தனது அண்டை நாடுகளுடன், தென்கிழக்கு நாடுகளுடன் இணைந்து, ஜனநாயக மறுசீரமைப்புகளை மியான்மார் மேற்கொண்டது. அதனூடு மனித உரிமைகள் நிலைமைகளை மேம்படுத்தியது.

ஜனநாயக ரீதியில் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டதற்காக, தான், நீண்ட காலமாக வீட்டுக்காவலில் அடைத்து வைத்த, தேசிய முன்னணிக் கட்சியின் தலைவியான ஆங் சாங் சூகியை விடுதலை செய்தது. அதனால் உலகநாடுகளின் நல்லெண்ணத்தையும் மதிப்பையும் மீளப்பெற்றுள்ளது.

மியன்மாரை முன்னுதாரணமாகக் கொண்டேனும், ஜெனிவாத் தீர்மானத்தை நிறைவேற்ற இலங்கை அரசு முன்வர வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே, தீர்மானத்தைக் கொண்டுவந்த நாடுகள் எதிர்காலத்தில் வேறு வகையான அழுத்தங்களைக் கொண்டுவராமல், திணிக்காமல் தடுக்க முடியும் என்றும் தயான் ஜெயதிலக்க ஆலோசனை தெரிவித்திருக்கிறார்.

அவர் தெரிவிக்கும் கருத்துகளைத் தனது காதில் போட்டுக் கொள்ள அரசு முன்வருமா? அல்லது அவற்றைத் துடைத்துக் கீழே நிலத்தில் போடுவதற்கு முடிவு செய்யுமா? இது குறித்து எதனையும் எவரும் அனுமானிக்க முடியாத நிலையே இப்போது காணப்படுகிறது.

ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தினால், அதற்கு ஆதரவளித்த நாடுகளின் நல்லெண்ணத்தையும், நாட்டின் வளர்ச்சிக்கான பல வகை உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் பெறமுடியும். அத்தகு ஆக்கபூர்வமான சிந்தனையும் தூரநோக்கும் இலங்கை அரசாங்கத்திடம், அதன் தலைவர்களிடம் தோன்றாவிடில், அதனால் உண்டாகக்கூடிய பாதகமான விளைவுகளுக்கு மக்களே முகம் கொடுக்க நேரிடும்.

போருக்குப் பின்னரான சர்வதேச மட்ட விசாரணையை, தனது சொந்த நல்லிணக்க ஆணைக்குழு என்ற தடுப்புக்கட்டையைப் போட்டு, தன்னைச் சுதாகரித்துக்கொண்டது அரசு.

ஆயினும் தனது சொந்த "உற்பத்தி"யான நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்த பரிந்துரைகளைச் செயற்படுத்துவதனை நிலத்துக்குள் அமுக்கிப் புதைக்கலாமென்று நினைக்குமாயின், அதனை முன்வைத்துச் செயற்படுமாயின், சர்வதேசத்தின் பல வகையான, கண்ணுக்குப் புலப்படாத அழுத்தங்களையும் நெருக்கீடுகளையும் அனுபவித்து உத்தரிக்க நேரிடலாம். அனைத்துலக உறவு நிலைகளில் காலத்துக்கு ஏற்றவாறு புதிது புதிதாக மாற்றங்கள் வளர்ந்து வருகின்றன. அவற்றை மனதிற் கொள்ளவும், இயைந்து செயற்படவும், பின்னடிப்பதால் வேண்டாத வினைகளை அனுபவிக்கும் ஆபத்துத் தேடி வரும்.

வருமுன் காக்க முயல்வதே புத்திசாலித்தனம்; வந்தபின் பார்ப்போம் என்பது மடமைத்தனம். இதனைக் கருத்தில் எடுத்துச் செயற்பட முயலுமா அரசு?

# மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மத்திய வங்கி ரூ. 6.5 பில்லியன் கடன்

### கடந்த வருடம் வழங்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,மார்ச் 31

வடமாகாணத்தில், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் 6.5 பில்லியனுக்கு மேல் இலகு கடன்கள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்டுள்ளதாக அதன் முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தக் கடன் உதவிகள் ஏனைய வங்கிகளினூடாகவே வடமாகாணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

இந்த இலகு கடன் வழங்கல் நடவடிக்கைகளை வங்கிகளினூடாக இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

அத்துடன் வடமாகாணத்தில் பொருளாதாரத்தை முன்னேற்றும் முகமாக சிறிய நடுத்தர கைத்தொழில்கள் மற்றும் பெறுமதி சேர் உற்பத்தி நிறுவனங்களை ஆரம்பிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை இலங்கை மத்திய வங்கி மேற்கொண்டு வருகின்றது.

இதற்காக தொடர்புடைய முதலீட்டாளர்கள், அரச திணைக்களங்கள் மற்றும் வங்கிகளுடன் இணைந்து செயற்படுகின்றனர்.

இவ்வாறான தொழில் நடவடிக்கைகளுக்கு கடன்களை வழங்குவதில் சில வங்கிகளும் வங்கியாளர்களும் தயக்கம் காட்டுகின்றமை இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக வடமாகாணத்தில் பொது மக்களும் வங்கியாளர்களும் பெருமளவில் விவசாய மற்றும் வியாபாரக் கடன்களோடு மட்டுமே பரீட்சயமானவர்களாக உள்ளார்கள்.

இந்த நிலையில் உற்பத்தி மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளுக்கான கடன்களை வழங்குவதற்கு வங்கிகளும் வங்கியாளர்களும் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். முதலீட்டாளர்களும் வங்கிகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி வங்கிக் கடன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.- என்றார். (ம-5)

## வடக்கில் முதல் முறையாக உலக குடிதண்ணீர் தினம்

சாவகச்சேரி, மார்ச் 31

உலக குடிதண்ணீர் தினம் நேற்று சாவகச்சேரி நகர சபைக் கேட்போர் கூடத்தில் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

உலக குடிதண்ணீர் தினமாக 1993 ஆம் ஆண்டு பிரகடனப் படுத்தபட்ட போதிலும் இந்த நாள் இதுவரை கொழும்பிலேயே நடத்தப்பட்டு வந்தது.

வடக்கு மாகாணத்தில் முதன் முறையாக சாவகச்சேரி நகராட்சி மன்றத்தால் உலக குடிதண்ணீர் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்கான இரணைமடு குடிதண்ணீர் விநியோகத் திட்டப் பணிப்பாளர் தி.பாரதிதாசன், வேலணை பிரதேச சபை செயலாளர் செ.ரமேஸ், கெயார் நிறுவனத் திட்டப் பணிப்பாளர் திருமதி ஜோய் சத்தியநாதன், வேல்ட் விஷன் நிறுவன திட்டப் பணிப்பாளர் றோணசரோ, சூழல் பாதுகாப்பு அலுவலர் ரி.யசிதரன், சாவகச்சேரி நகர்ப் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் ரி.டி.தவநிரோஜன் உட்படப் பலர் உரையாற்றினர். (ம-9)

### அதிபர் இடமாற்றங்கள் அனைத்தும்

## வலயங்களுக்கு வெளியே மாகாணங்களுக்கு உள்ளே

### இலங்கை ஆசிரியர் சங்கம் முன்மொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 31

அதிபர் இடமாற்றங்கள் அனைத்தும் கல்வி வலயங்களுக்கு வெளியேயும் அதே நேரம் மாகாணத்துக்கு உள்ளேயும் இடம்பெற வேண்டும் என்ற முன்மொழிவை இலங்கை ஆசிரியர் சங்கம் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பித்துள்ளது.

அதிபர் இடமாற்றத்தின் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தமது முன்மொழிவுகளை அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தார்.

அதன் பிரகாரமே இலங்கை ஆசிரியர் சங்கம் இந்த முன்மொழிவைச் சமர்ப்பித்துள்ளது.

சங்கம் அனுப்பி வைத்துள்ள முன்மொழிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை அதிபர் சேவை நாடளாவிய சேவை. மத்திய அரசால் மாகாண அரசுக்கு அதிபர்கள் வழங் கப்படுகின்றனர். மாகாண அரசு தான் கல்வி வலயங்களுக்கு அதிபர் களை நியமிக்கிறது. அதிபர் இடமாற் றங்கள் வலயத்துக்குள்ளே இடம்பெறக் கூடாது. வலயத்துக்கு வெளியே மாகாணத்துக்கு உள்ளே இடம் பெறவேண்டும்.

ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்யும் அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டும்.

57 வயதுக்கு உட்பட்ட அதிபர்களுக்கே இடமாற்றங்கள் வழங்கப்பட வேண்டும்.

பாடசாலைகளில் உப அதிபர், பிரதி அதிபர் பதவிகளில் உள்ளவர்களில் கணிசமானவர்களுக்கு முறையான நியமனக் கடிதங்கள் இல்லை. இவர்களுக்குப் பதிலாக அதிபர் சேவைத் தரம் கொண்டவர்களை நியமிக்க வேண்டும்.

அதிபர் இடமாற்றங்கள் வடமாகாணத்தில் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும். அதிபர் இடமாற்ற சபைகளில் பதிவு செய்த தொழில் சங்கங்களின் பிரதி நிதிகளே பங்குபற்ற முடியும்.- என்றுள்ளது. (ம-3)

# ஆவரங்கால் பாடசாலையின் அதிபர் நியமனத்தில் அதிருப்தி

யாழ்ப்பாணம்,மார்ச் 31

ஆவரங்கால் நடராஜ ராமலிங்கம் வித்தியாலயத்தின் அதிபர் நியமனத்தில் அதிருப்தி நிலவுவதாக யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட அதிபர்கள் சிலர் வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

ஏற்கனவே அதிபராகக் கடமையாற்றியவர் பதவி உயர்வு பெற்று வேறு ஒரு பாடசாலைக்கு அதிபராகச் சென்று விட்ட நிலையில் அண்மையில் புதிதாக அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்டவர் அதிபர் தரம் II, இரண்டைச் சேர்ந்தவர். பகிரங்கமாக நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்படாமல் இந்த அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று யாழ்.கல்வி வலயத்திலுள்ள ஏனைய அதிபர்கள் வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாக அதன் உறுப்பினர் இரா. செல்வவடிவேல் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் யாழ்.கல்வி வலய அதிபர் நியமனத்தின் போது பின்பற்றப்பட்டுள்ள நடைமுறை சுற்றறிக்கைக்கு முறை கேடாகவுள்ளதாக அதிபர்கள் சிலர் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதிபர் தரம் இரண்டு ஒன்றில் உள்ள அதிபர்கள் பலர் இருக்க அதிபர் தரம் இரண்டு இரண்டில் உள்ளவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது; "நெடுந்தீவு சைவப்பிரகாசம் வித்தியாலயத்தில் நீண்ட காலமாக அதிபராக கடமையாற்றியவர் இடமாற்றம் பெற்று ஆவரங்கால் நடராஜ ராமலிங்கம் வித்தியாலயத்துக்கு வந்துள்ளார். கஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றிய அதிபரை யாழ்.கல்வி வலயத்திலுள்ள பாடசாலையில் அதிபராக நியமிப்பதில் எந்தத் தவறும் இல்லை.

"நாம் அதிபர் பதவிக்கான விண்ணப்பத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தியிருந்தாலும் எத்தனை பேர் விண்ணப்பிப்பார்கள்? நான் நினைக்கிறேன் யாரும் விண்ணப்பிக்க மாட்டார்கள். கடந்த காலங்களில் இப்படி விண்ணப்பத்தை பகிரங்கப்படுத்தியும் யாரும் விண்ணப்பிக்காத சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

தீவுப் பகுதியில் அதிபர் பதவிக்கு வெற்றிடம் உள்ளது. அதிபர்கள் விண்ணப்பிக்கட்டும். எத்தனைபேர் விண்ணப்பிக்கிறார்கள் பார்ப்போம் என்றார்.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவை தொடர்பு கொண்டு கேட்டபோது;

நேர்முகப் பரீட்சை நடத்தியிருந்தால் கூட நியமிக்கப்பட்டுள்ள அதிபரே தெரிவு செய்யப்பட்டிருப்பார். அவரிடம் அதற்கான தகுதி இருக்கிறது.

கஷ்டப் பிரதேசமான தீவகத்தில் நீண்டகாலம் அதிபராகக் கடமையாற்றியவர் அவர். குற்றம் சாட்டுகிற அதிபர்கள் விரும்பினால் நேர்முகப் பரீட்சையை நடத்துகிறோம், யார் தெரிவு செய்யப்படுகிறார்கள் என்று பார்க்கலாம்.- என்றார். (ஓ-3)

# காணியின்றி 1,050 குடும்பங்கள்

## கண்டாவளை மக்கள் அவலம்

கிளிநொச்சி,மார்ச் 31

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் சுமார் ஆயிரத்து 50 குடும்பங்கள் சொந்தக் காணியில்லாததால் பல்வேறு வகையான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் தற்போது 7 ஆயிரத்து 429 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 978 பேர் மீளக்குடியமர்ந்துள்ளனர். இதில் சுமார் ஆயிரத்து 50 குடும்பங்கள் சொந்தக் காணியின்றி அல்லது காணி ஆவணங்கள் இன்றி உள்ளன.

**கண்டாவளைப் பிரதேசத்தில் காணப்படும் மத்திய வகுப்புத் திட்டக் காணிகளில் அதிகளவு மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களுள் ஆயிரத்து 50 குடும்பங்கள் காணிகளோ அல்லது காணிகளுக்குரிய ஆவணங்களோ இல்லாது வசித்து வருகின்றன.**

அதாவது கண்டாவளைப் பிரதேசத்தில் காணப்படும் மத்திய வகுப்புத் திட்டக் காணிகளில் அதிகளவு மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களுள் ஆயிரத்து 50 குடும்பங்கள் காணிகளோ அல்லது காணிகளுக்குரிய ஆவணங்களோ இல்லாது வசித்து வருகின்றன.

இதனால் இவர்களுக்கான நிரந்தர வீடுகள் மற்றும் நிலைத்து நிற்கக் கூடிய வாழ்வாதார உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை. அத்துடன் குறிப்பிட்ட சில பகுதிகளில் இந்தக் காணியில்லாத காரணத்தைக் காட்டிப் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய தற்காலிக வீட்டுத் திட்டங்கள் கூட வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# பரமன்கிராய் கிராமத்தை கவனிப்பார்களா?

கிளிநொச்சி, மார்ச் 31

கிளிநொச்சி பூநகரி பரமன்கிராய் மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பரமன்கிராய் கிராமத்தில் 1993 காலப் பகுதியில் இடம்பெயர்ந்த 145 வரையான குடும்பங்களே மேற்படி பகுதியில் மீளக்குடியமர்ந்து வசித்து வருகின்றன.

**1993 காலப் பகுதியில் இடம்பெயர்ந்த 145 வரையான குடும்பங்களே மேற்படி பகுதியில் மீளக்குடியமர்ந்து வசித்து வருகின்றன.**

இந்த நிலையில் தமக்கான குடிதண்ணீர் பவுசர் மூலம் விநியோகிக் கப்பட்டு வருகின்ற போதும், போதியளவு கிடைப்பதில்லை என தெரிவிக்கின்றனர். மேலும் போக்குவரத்து வசதிகள் சீராக இல்லாததால் நோயாளர்கள், பாடசாலை செல்லும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் வாழ்வாதார வசதிகள் இன்மையால் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதாகவும் அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்தப் பகுதி மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைக் கவனத்தில் எடுத்து ஆவன செய்யுமாறு இவர்கள் கேட்டுள்ளனர். (க-எ-6)

# 22,010 வெடிப்பொருள்கள் கிளிநொச்சியில் அகற்றல்

கிளிநொச்சி, மார்ச் 31

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் இருந்து 22 ஆயிரத்து 10 வெடிபொருள்கள் கண்ணிவெடி அகற்றும் பிரிவால் அகற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, ஆனையிறவு மற்றும் பிரமந்தனாறு ஆகிய பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்ட டாஸ் நிறுவனம் அந்தப் பகுதிகளில் இருந்து 243 மிதி வெடிகளும், வெடிக்கும் அபாய நிலையில் காணப்பட்ட 157 வெடிபொருள்கள், 21 ஆயிரத்து 610 பலதரப்பட்ட துப்பாக்கி ரவைகள் என 22 ஆயிரத்து 10 வெடிபொருள்களை மீட்டு பாதுகாப்பான முறையில் அழித்துள்ளன. அதாவது ஆனையிறவு உப்பு உற்பத்தி நிலையங்கள், விவசாய நிலங்கள், வயல் வெளிகள், நீர்விநியோக வாய்க்கால்கள், தொழிற்சாலைப் பகுதி, மக்கள் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் இருந்தே வெடிபொருள்கள் அகற்றி அழிக்கப்பட்டுள்ளன.

இதற்கென ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் நிதியுதவியுடன் டாஸ் நிறுவனத்தால் ஆண், பெண் தொழிலாளர்களைக் கொண்டு இவ் வெடிபொருள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வெடிபொருள் அகற்றும் பணி தற்போது கண்டாவளைப் பிரதேசத்தின் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-எ-6)

# பெண்களுக்கான தொழிற்சாலை அமைத்துத் தரும்படி கோரிக்கை

அக்கராயன், மார்ச் 31

கிளிநொச்சி அக்கராயனை மையப்படுத்தி பெண்களுக்கானதொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தொழிற்சாலையை உருவாக்கும்படி பெண்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த காலப் போரின் காரணமாகப் பல பெண்கள் தமது கணவன்மாரை இழந்த நிலையில் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் தொழில் வாய்ப்பின்றி வறுமையில் வாடும் நிலையில் உள்ளன.

ஆகவே பெண்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கும் படி அரச அதிபரிடம் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-18)

# மின்சார இணைப்பை வழங்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு,மார்ச் 31

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் பல குடும்பங்களுக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளிலும் கடந்த 2010 ஆம் ஆண்டு மக்கள் மீளக் குடியமர்வு செய்யப்பட்டனர். இதில் பிரதான வீதிகளை அண்டிய கிராமங்களுக்கான மின்விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள சிராட்டிக்குளம், மூன்றுமுறிப்பு, பணங்காமம், நட்டாங்கண்டல், கொம்புவைத்தகுளம், பாலைப்பாணி, கரும்புள்ளியான், விநாயகபுரம், உள்ளிட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கான மின் விநியோகம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கிராமங்களில் வாழும் மக்கள் தமக்குரிய மின் இணைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கென பல முயற்சிகள் செய்த போதிலும் இதுவரை தமக்குரிய மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை எனக் கவலை தெரிவித்துள்ளனர். (க-எ-06)



வவுனியா நகரத்தில் இருந்து குருமண்காடு செல்லும் வீதியில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தர் சிலை வர்ணம் பூசப்பட்டுப் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது. (421)

# எவரும் பயணிக்க முடியாத கனகபுரம், உருத்திரபுரம் வீதிகள்

கிளிநொச்சி,மார்ச் 31

கிளிநொச்சி கனகபுரம் இரத்தினப்பண்ணை வீதி மற்றும் உருத்திரபுரம் 05ஆம் குறுக்கு வீதி என்பன சீரான வகையில் புனரமைக்கப்படாததால் கடந்த ஆண்டு பெய்த மழையினால் சேதமடைந்து இன்று எவரும் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றன.

கிளிநொச்சி கனகபுரம் இரத்தினப்பண்ணை வீதி மற்றும் அதிலிருந்து உருத்திரபுரம் செல்லும் 05ஆம் குறுக்கு வீதி மற்றும் உருத்திரபுரம் 03ஆம் குறுக்கு வீதியென்பன யூ.என்.டி.பி நிறுவனத்தின் உதவியுடன் கடந்த ஆண்டு கிரவல் போடப்பட்டுப் புனரமைக்கப்பட்டன. நாவலடிப் பகுதியில் உள்ள வாய்க்கால் மற்றும் பொச்சுமட்டைப் பாலம் ஆகியவற்றுக்கு, பல மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டு புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆனால் வேலைகள் சீராக இடம் பெறாததால் கடந்த ஆண்டு பெய்த மழை வெள்ளப்பெருக்குக் காரணமாக இவையாவும் மிகமோசமாகச் சேதமடைந்துள்ளதுடன் எவரும் பயணிக்க முடியாத நிலையும் காணப்படுகின்றது.

இவ்வாறு திட்டமிடப்படாத புனரமைப்புக் காரணமாக அதிகளவு நிதி செலவிடப்படுகிறதே தவிர எதுவித பயனும் இல்லையென்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-6)

# சாராயம் விற்றவர்களுக்கு தண்டம்

கிளிநொச்சி, மார்ச் 31

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த இருவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி முழங்காவில் நாச்சிக்குடாப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சாராயத்தை பொலிஸ் அதிகாரிக்கு விற்பனை செய்தமை மற்றும் சாராயத்தை விற்பனை செய்யும் நோக்கில் தனது உடைமையுடன் வைத்திருந்தமை ஆகிய இரு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கைது செய்த ஒருவரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர். குறித்த குற்றவாளிக்கு எதிரான இரு குற்றச்சாட்டுக்களுக்கும் தலா 5 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது.

அதேவேளை முழுங்காவில் ஜெயபுரம் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த ஒருவருக்கும் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (க-6)

### வவுனியா ஆலயங்களில் சொற்பொழிவுகள்

வவுனியாவிலுள்ள இந்து ஆலயங்களில் மாதந்தோறும் ஆன்மிகச் சொற்பொழிவுகள் இடம் பெற்று வருகின்றன. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் தலைமையில் வவுனியாவில் உள்ள இந்து ஆலயங்களில், மாதம் தோறும் ஆன்மிக சொற்பொழிவுகள் இடம் பெற்று வருகின்றன. முதற்கட்டமாக செட்டிகுளம், புளியங்குளம், பெரியதம்பனை பகுதியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலயங்களில் நிகழ்த்தப்படும் ஆன்மிக சொற்பொழிவுகள் நிறைவடைந்த பின்னர், பாடசாலைகள், அறநெறி நிலையங்கள் என்பனவற்றிலும் இவை இடம் பெறவுள்ளதாக வவுனியா மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் செல்வி கலையமுதா கிருஸ்ணபிள்ளை தெரிவித்தார். (க-402)

# 585 மில். ரூபா நிதி மூலம் வவுனிக்குளம் புனரமைப்பு

முல்லைத்தீவு,மார்ச் 31

முல்லைத்தீவு, வவுனிக்குளம் மற்றும் அதன் கீழ் உள்ள பிரதான நீர்விநியோக வாய்க்கால்கள், கழிவு நீர் வாய்க்கால்கள் என்பன 585 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த பல ஆண்டுகளாக புனரமைப்புக்கள் எவையும் இன்றி வவுனிக்குளம் காணப்பட்டது. கடந்த ஆண்டு முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் 585 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன் புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 240 மில்லியன் ரூபா செலவில் குளத்தின் உள்ளகப் புனரமைப்புப் பணிகள் கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**இந்தக் குளத்தின் கீழ் உள்ள சுமார் 6897 ஏக்கர் செய்கை நிலப் பரப்புக்களில் தற்போது 4500 ஏக்கர் வரையான பகுதிகளிலேயே செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.**

இந்தக் குளத்தின் கீழ் உள்ள இடது கரை மற்றும் வலதுகரை வாய்க்கால்களின் புனரமைப்புக்கள் ஏனைய சிறு வாய்க்கால்களின் புனரமைப்புக்கள் என்பன தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நிலையில் இந்தக் குளத்தின் கீழ் உள்ள சுமார் 6897 ஏக்கர் செய்கை நிலப் பரப்புக்களில் தற்போது 4500 ஏக்கர் வரையான பகுதிகளிலேயே செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எதிர்காலத்தில் இந்தக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் நிறைவடையும் போது மேற்படி 6897 ஏக்கர் நிலப்பரப்புகளிலும் செய்கைகள் மேற்கொள்ள முடியும் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-06)

# குடாநாட்டில் நன்னீர் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை

## குடிதண்ணீர் விநியோகத் திட்டப் பணிப்பாளர் பாரதிதாசன் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். குடாநாடு தட்டையான பிரதேசமாகவும் பல்வேறு வகையான மண் அமைப்பைக் கொண்டதாகவும் இருப்பதால் இங்கு நன்னீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என்று யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டப் பணிப்பாளர் தி.பாரதிதாசன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபை கேட்போர் கூடத்தில் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் உலக குடிதண்ணீர் தின நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது காலத்துக்கு முற்பட்டோர் சூத்திரம், துலா, கம்பி போன்றவற்றின் உதவியுடன் தண்ணீரைப் பெற்று வந்தனர்.

இன்றைய காலத்தில் மோட்டர், நீரிறைக்கும் இயந்திரங்கள் போன்றவற்றின் பாவனை பெருமளவில் அதிகரித்துக் காணப்படுகிறது. இவற்றின் அதிகரித்த பாவனையால் குடாநாட்டின் பல இடங்களில் நன்னீர் நிலைகள் பல உவர் நீராக மாறும் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

நல்ல ஊற்றுள்ள கிணறாக இருந்தாலும் அதன் பாவனையில் ஒழுங்கமைப்பு இருக்க வேண்டும். விவசாயத்துக்கு நான்கு அல்லது ஐந்து குடும்பங்களுக்கு பங்காக இருந்த பல நன்னீர்க் கிணறுகள் இன்று எவரும் பாவிக்க முடியாத அளவுக்கு உவராக மாறியுள்ளன.

நீரிறைக்கும் இயந்திரங்கள் மற்றும் மின் மோட்டர்களின் அதிகரித்த பாவனையே இதற்குக் காரணம்.

இது தொடர்பான விழிப்புணர்வு எமது மக்கள் மத்தியில் இல்லாமை பெரும் வேதனைக்குரியது.

குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகள் அந்தந்த பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் ஊடாக மக்களுக்கு இந்த விடயம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

தவறான முறையில் அமைக்கப்படும் குழாய்க் கிணறுகளால் அருகில் உள்ள நூற்றுக்கணக்கான நன்னீர் கிணறுகள் உவர் நீராக மாறும் அபாய நிலையும் குடாநாட்டில் உள்ளது.

இந்த நிலை மாற வேண்டுமாயின் குழாய்க் கிணறு அமைப்போர் நீருடன் தொடர்புடைய திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

நிலத்தடி நீரின் பயன்பாடு அதிகரித்ததால் இன்னொரு மாவட்டத்திலிருந்து குடி தண்ணீர் பெற வேண்டிய நிலை குடாநாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் நூற்றுக் கணக்கான குளங்கள் உள்ளதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், மழை நீரைக் கடலுக்குச் செல்லவிடாமல் தடுத்து வைக்கக் கூடிய வருடம் முழுவதும் பயன்பெறக் கூடிய வகையில் எத்தனை குளங்கள் உள்ளன என்பது குறித்த விவரங்கள் தெரியவில்லை.

இந்த நிலையில் இரணைமடு நீரை யாழ். குடாநாட்டுக்குக் கொண்டு வரும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரணைமடுக் குளத்தில் மழைக் காலங்களில் உபரியாக வெளியேறும் தண்ணீரை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பும் செயல் திட்டமே இதுவாகும்.

இவ்வாறு வெளியேறும் தண்ணீரை வீணாக்காமல் விவசாயம் மற்றும் குடி தண்ணீர்த் தேவைகளுக்கு அந்தப் பகுதி மக்களும் பயன்படுத்தக் கூடிய திட்டங்களை உள்ளூராட்சி மன்றங்களும் செயற்படுத்த வேண்டும்.-என்றார். (ம-9)



சமாதானத்துக்கானதும் துணிச்சலுக்குமானதுமான விருதுபெற்ற யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரி சங்கம் கௌரவித்தது. (ம-7)

## கட்டாக் காலிகளால் அழியும் சிறுதானியம்

நவாலி, மார்ச் 31

நவாலிப் பகுதியில் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வந்த சிறுதானியப் பயிர்கள் கட்டாக்காலி மாடுகளால் அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்த முறை பெரும் ஆர்வத்துடன் நவாலி, இணுவில், சிங்கன் குளம், களை ஓடை அம்மன் கோயிலடி ஆகிய பகுதிகளில் விவசாயிகள் பெருமளவில் எள்ளு, பயறு, குரக்கன் மற்றும் பல தானியங்களை விதைத்து இருந்தனர்.

அவை முளைத்துப் பயிராகி வரும்வேளை கட்டாக் காலிகள் புகுந்து அழித்துள்ளன.

இதனால் விவசாயிகளுக்கு பெருமளவில் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாக்காலிகளை கட்டி வைத்து வளர்க்குமாறு இந்தப் பகுதி விவசாய சம்மேளனங்கள் பகிரங்க அறிவித்தல் செய்தும் எதுவித நன்மையும் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

எரிபொருள் விலையேற்றத்தையும் பாராது தாம் பெரிதும் ஆர்வத்துடன் இந்தப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டதாகவும் இதில் எள்ளு தட்டுப்பாடு காரணமாக எள்ளையே அதிக விலை கொடுத்து விதைத்ததாகவும் தெரிவிக்கும் விவசாயிகள் கட்டாக்காலிகளால் அவை அழிக்கப்பட்டு வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.(ம-100)

## பறிபோனது ஆசிரியையின் சங்கிலி

ஆசிரியையின் தலையை இரும்புக் கம்பியால் தாக்கிவிட்டு ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலியை அபகரித்துச்சென்ற சம்பவம் ஒன்று யாழ். வீதியில் வியாழன் நடைபெற்றுள்ளது.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் கலாவல்லி தர்மகுணசிங்கம் என்பவர் வீட்டிலிருந்து வெளியே காலைக்கடன் முடித்துவிட்டு வரும்போது இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த ஆசிரியர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-14)



மோட்டார் சைக்கிளும் டிராக்டரும் எதிரெதிரே மோதிக் கொண்டதனால் மோட்டார் சைக்கிள் நொருங்கியதுடன் 30 அடிவரை இழுத்துச் செல்லப்பட்டது. அதில் பயணித்த இளைஞர் குதித்துவிட்டதனால் சிறுகாயத்துடன் தப்பினார். இந்த விபத்து கந்தர்மடம் சந்தியை அண்மித்த பலாலி வீதியோரமாக நேற்று முன்தினம் இடம்பெற்றது. சம்பவ இடத்துச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சேதமடைந்த 'ஸ்கூட்டிபெப்' டிராக்டரில் ஏற்றப்பட்டு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. (ம-4)

## வேலணை மண் அள்ள அனுமதி பெற வேண்டும்

யாழ்ப்பாணம்,மார்ச் 31

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து மணல் மண் பெற விரும்புவோர் நாளை முதலாம் திகதிதொடக்கம் சபையின் அனுமதி பெற்ற பின்னரே பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சபையினர் ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர்.

இதற்கான படிவத்தைப் பூர்த்தி செய்து கிராம அலுவலர், உப அலுவலக பொறுப்பதிகாரி மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களது ஒப்பத்துடன் மணல் மண் மற்றும் ஊரிமண் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க முடியும் என்று பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (ம)

## போதை தலைக்கேறி ஆடியோருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

மதுபோதையில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த மூவரை பொலிஸார் கைது செய்து யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தினர். மூவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்தவர்களான சின்னராசா ஜெனிஸ்ரன், அரியம் லக்சன் மற்றும் நாவாந்துறையைச் சேர்ந்த பத்தியோன் தங்கராசா ஆகியோரே அபராதம் செலுத்தினர். (உ-4)

## அனுமதிபெறாது அமைக்கப்பட்ட விளம்பரங்களை அகற்ற முடிவு

கொழும்புத்துறை,மார்ச் 31

யாழ். மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட வீதிகள், பொது இடங்கள், வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள விளம்பரப் பதாகைகளுக்கான அனுமதி பெறப்படவேண்டும் என்று அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

விளம்பரங்களுக்கான அனுமதியை வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை யாழ். மாநகர சபை வருமான வரிப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் அனுமதியைப் பெறாது விட்டால் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும் விளம்பரங்கள் எதுவித முன் அறிவித்தலுமின்றி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள விளம்பரங்களும் புதிதாக அமைக்கப்படும் விளம்பரங்களும் இந்த நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-135)

## தூர இடங்களுக்குச் செல்லும் தனியார் பஸ்களுக்கு வீரசிங்கம் மண்டபம் அருகில் நிலையம்

### மாநகர சபை அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 31

தூர இடங்களுக்குச் செல்வதற்கான தனியார் பஸ் நிலையத்துக்கு முனீஸ்வரன் வீதிக்கும் றீகல் தியேட்டருக்கும் (முற்றவெளிக்கு எதிரே) இடைப்பட்ட காணியை - வீரசிங்கம் மண்டபம் அருகில் வழங்க யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் அனுமதி வழங்கினார்கள்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான பிரேரணை முதல்வரால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் மீது உரையாற்றிய உறுப்பினர்கள், '' இந்தத் தீர்மானத்தின்படி காணி வழங்க அனுமதிக்கப்பட்டாலும் அதனால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய சாதக பாதகங்கள், சுகாதார நிலைமைகள் குறித்து நன்கு ஆராய்ந்தே உரிய ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும். வருமானத்தை மட்டும் நோக்காகக் கொள்ளக் கூடாது'' என்று தெரிவித்தனர்.

உறுப்பினர்களால் கூறப்பட்ட அனைத்து விடயங்களும் நன்கு பரிசீலிக்கப்பட்டு அடுத்த கூட்டத்தில் இறுதிமுடிவு சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று முதல்வர் தெரிவித்தார். (ஒ-7)

# முட்டாளிடம் கல்வி பயின்றதால் வெட்கப்படுகின்றேன் நான்

## பந்துலவைக் கிண்டலடித்தார் தயாசிறி

மாதம் 7500 ரூபாவுடன் சிறப்பாக வாழலாம் என்று கல்வி அமைச்சர் கூறியுள்ளார்.

நான் இவரிடம் பயின்றவர் என்று முன்பு பெருமைப்பட்டேன். இப்போது இவருடைய கணக்கைப் பார்க்கும் போது இப்படியானதொரு முட்டாளிடமா கல்வி கற்றேன் என்று வெட்கப்படுகிறேன் என்று சாடினார் தயாசிறி.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. மிகவும் அவசரமாகவும், அத்தியாவசியமாகவும் அங்கீகரிக்கப்படவேண்டிய ஆறு சட்ட மூலங்கள் தொடர்பான அங்கீகாரத்தை பெறுவதற்காக நேற்று நாடாளுமன்றத்தில் விசேட அமர்வு இடம் பெற்றது. இந்த விசேட அமர்வின் போது வாய்மூல விடைக்கான கேள்விகள் எதுவும் இடம்பெறவில்லை.

✱பெறுமதி சேர்வரி திருத்தச் சட்டமூலம்.

✱உள்நாட்டு இறைவரி திருத்தச் சட்ட மூலம்.

✱நாட்டைக் கட்டியெழுப்பும் வரி திருத்தம்.

✱துறைமுக விமான நிலைய அபிவிருத்தி அறவீடுகள் திருத்தம்.

✱பொருளாதார சேவை விதிப்பனவு திருத்தம்.

✱நிதி சட்ட மூலம்.

ஆகியஆறு சட்டமூலங்களும் ஏககாலத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

**காணாமல் போன அமைச்சர்கள்**

இந்த ஆறு சட்டமூலங்களையும் சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம சபையில் சமர்ப்பித்து விளக்கமளித்தார். இந்த முக்கியமான திருத்தச் சட்ட மூலங்கள் கொண்டு வரப்படுவதன் நோக்கம், நாட்டின் உற்பத்தியையும் ஏற்றுமதியையும் அதிகரிப்பதற்காகவே என்றார். இந்த சட்ட மூலங்களை சமர்ப்பித்த பின் அமைச்சர் சபையில் இருந்து வெளியேறினார்.

தொடர்ந்து எதிர்க்கட்சியின் தரப்பில் ரவி கருணாநாயக்க விவாதத்தை ஆரம்பித்துப் பேசினார். அப்போது அமைச்சர்கள் எவரும் சபையில் இல்லை.

இதனைச் சுட்டிக்காட்டிய எதிர்க் கட்சித் தலைவர் மிகவும் முக்கியமான சட்டமூலங்கள் என்று அரசு கூறுகின்றது. அதைப்பற்றி நாம் பேசுகின்றோம், ஆனால் பதில் சொல்லவோ, விளக்கம் அளிக்கவோ ஒருவரும் இல்லை. சபாநாயகர் இதனை அவதானத்தில் கொள்ள வேண்டும் என்று தனது ஆட்சேபனையை தெரிவித்தார்.

**சபையில் 'கோரம்' இல்லை**

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார் தயாசிறிஜயசேகர. சபாநாயகர் அவர்களே! அமைச்சர் சட்ட மூலங்களைச் சமர்ப்பித்துவிட்டு காணாமல் போய் விட்டார். பதில் சொல்ல எவரும் இல்லை. அது மட்டுமல்ல, சபையைக் கொண்டு நடத்தப் போதுமான கோரமும் இல்லை, அமைச்சர்களும் இல்லை ஆளும் தரப்பு ஆசனங்கள் காலியாகவே இருக்கின்றன என்று சுட்டிக்காட்டினார்.

இந்த ஆட்சேபனையை ஏற்றுக் கொண்ட சபாநாயகரின் உத்தரவின் படி 'கோரம்' மணி ஒலிக்கப்பட்டது. இதனால் சபைக்கு வெளியே இருந்த சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் அவசர அவசரமாக ஓடிவந்து ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர். அதன் பின் சபைநடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெற்றன.

**கியூபாவுக்கு ஆடைகளை விற்கப் போகின்றீர்களா?**

அமைச்சர் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும் என்கிறார், மற்றுமொரு அமைச்சர் அமெரிக்கப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் என போஸ்ரர் ஒட்டுகிறார்.

நமது உற்பத்தியில் 88 வீதம் அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்கிறோம். நமது பொருள் வேண்டாம் என்று கூறினால் நமது நிலை என்னவாகும். இங்கே உற்பத்தி செய்யும் ஆடைகளை நீங்கள் கியூபாவிற்கு விற்கப் போகின்றீர்களா என்று கேட்டார். இந்தியாவின் லேலண்ட் மற்றும் பஜாஜ் என்பவற்றை வேண்டாம் என்பீர்களா? என்றும் இடித்துக் காட்டினார். அரசின் பக்கமிருந்து ஏதும் பதில் இல்லை.




**கணக்கு காட்டினார் பேராசிரியர் பீரிஸ்**

இந்த விவாதத்தின் போது பெரிதும் விமர்சிக்கப்பட்டவர் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் .பீரிஸ்.

ஜெனிவாத் தீர்மானத்தின் போது நடுநிலை வகித்த எட்டு நாடுகளும் இலங்கைக்கு ஆதரவாகவோ எதிர்த்தோ வாக்களிக்காமல் நடுநிலை வகித்தன. அப்படியானால் இலங்கைக்கு ஆதரவாக 23 நாடுகள் இருக்கின்றன என்று கணக்கு காட்டினார்.

**ஆப்பு வைத்தார் லக்ஸ்மன் கிரியெல்ல**

பாவம் பேராசிரியர் தப்பான கணக்குக் காட்டி மக்களை ஏமாற்றுகின்றார். இவர் கூறுவது போல் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்து நடுநிலை வகிக்கவில்லை. நல்லிணக்க ஆணைக்குழு சிபார்சுகளை இலங்கை நடைமுறைப்படுத்தும் என்ற நம்பிக்கையுடனேயே நடுநிலை வகிப்பதாக கூறியுள்ளன. இதைப் பேராசிரியர் மறந்து விட்டார். நடுநிலை வகித்த நாடுகள் தன் பக்கம்தான் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறினால், அவர் பக்கம் 32 ஆக அதிகரித்து விடும்தானே. பேராசிரியரின் கணக்கு தப்பானது என்று ஆப்பு வைத்து விட்டார் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினரான லக்ஸ்மன் கிரியெல்ல.

**கண்களில் தூசியை வைத்துக் கொண்டு மற்றவர்களைக் குறைகூற வேண்டாம்**

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களின் விமர்சனங்களுக்கு பதிலடி கொடுத்தார் பிரதி அமைச்சரான ரோகித அபே குணவர்த்தன.

ஐக்கிய தேசியக் கட்சியினர் எவரும் நல்லதைப் பேசுவதில்லை. அங்கே உள்வீட்டுக் குழப்பம் தலைவிரித்தாடுகின்றது . தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு பேச இடம் கொடுக்க மாட்டேன் என்கிறார். கட்சிக்குள் குத்து வெட்டு யார் உண்மையான தலைவர்? என்று கட்சியில் இருப்பவர்களுக்கே தெரியவில்லை. உள்வீட்டுப் பிரச்சினைகளை முதலில் தீர்க்கட்டும். இவர்கள் தமது கண்களில் தூசியைப் போட்டுக் கொண்டு மற்றவர்களை குறை கூறுகின்றனர் என்றார் பிரதி அமைச்சர் ரோகித்த அபே குணவர்த்தன.

**யார் இந்தப் பீரிஸ்? அவரது பொறுப்பு என்ன?**

இப்படி ஒரு கேள்வியைக் கேட்டு சபையைத் திக்குமுக்காட வைத்தார், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர சபாநாயகர் அவர்களே! இந்த அமைச்சர்களின் பேச்சு மக்களை பைத்தியம் ஆக்குகின்றது .

அமைச்சர் பீரிஸ் ஜெனிவாவில் கூடாரம் அடித்துக் கொண்டு நமக்காக அளப்பரிய சேவை செய்துள்ளார். அவருடைய பெரு முயற்சியினால் தான் இலங்கைக்கு ஆதரவாக 15 நாடுகள் வாக்களித்தன.

ஆனால் அமைச்சரவை பேச்சாளர் ஆன அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபே வர்த்தன என்ன கூறுகின்றார். அமைச்சர் பீரிஸின் கூற்றுகள் அவருடைய சொந்த கருத்துகளே அன்றி அரசாங்கத்தின் கூற்று அல்ல என்கிறார்.

அப்படியானால் இந்த ஜி. எல் பீரிஸ் யார்? அவருடைய அமைச்சுப் பொறுப்புக்கான கௌரவம் என்ன? அப்படியானால் யாருடைய பேச்சை அரசாங்கத்தின் கூற்றாக ஏற்பது என்று ஒரு குண்டை தூக்கிப் போட்டார் தயாசிறி.

இதனால் சபையில் சிறிது சல சலப்பு ஏற்பட்டது. அமைச்சர் பீரிஸ் அப்போது சபையில் இருந்தார். தயாசிறியின் இந்தக் கூற்று அமைச்சர் பீரிஸுக்கு தர்ம சங்கடமான ஒரு நிலையை ஏற்படுத்திவிட்டது. ஆனால் வழமையாக கூச்சல் இடும் ஆளும் தரப்பு உறுப்பினர்களும் வாயடைத்துப் போய் மௌனமாகி விட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**முட்டாளிடமா நானும் படித்தேன்**

நேற்று நாடாளுமன்றத்தில் எதிர்கட்சி உறுப்பினர்களால் பெரிதும் விமர்சிக்கப்பட்டவர் கணக்கு வாத்தியாரான கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன.

அதாவது மூன்று பேரைக் கொண்ட ஒரு குடும்பம் மாதம் 7500 ரூபாவுடன் சிறப்பாக வாழலாம் என்று கல்வி அமைச்சர் கூறியுள்ளார்.

நான் இவரிடம் பயின்றவர் என்று முன்பு பெருமைப்பட்டேன். இப்போது இவருடைய கணக்கைப் பார்க்கும் போது இப்படியானதொரு முட்டாளிடமா கல்வி கற்றேன் என்று வெட்கப்படுகிறேன் என்று சாடினார் தயாசிறி.

**ஜனாதிபதியின் வருகை**

தயாசிறி ஜெயசேகர இப்படிப் பேசிக் கொண்டிருந்த வேளையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சபைக்குள் வந்தார். ஆளும் கட்சி உறுப்பிணர்கள் எழுந்து நின்று மேசைகளைத் தட்டி வரவேற்றனர்.

அப்போது சபையில் பார்வையாளர் கலரியில் இருந்த பாடசாலை மாணவர்களும் எழுந்து நின்று கைதட்டி ஆரவாரம் செய்து விட்டனர். ஜனாதிபதியும் அவர்களைப் பார்த்து கை அசைத்து நன்றி தெரிவித்துக் கொண்டார்.

விவாதத்தில் சட்ட மூலங்கள் தொடர்பாக பேசப்படாத போதும் இறுதியில் 6 சட்டமூலங்களும் நிறைவேற்றப்பட்டன.

# எரிபொருள் விலை உயர்ந்தபோதும் கொடுப்பனவுகளில் மாற்றமில்லை

## அரச திணைக்களங்கள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

எரிபொருள்களின் விலை உயர்த்தப்பட்ட போதும், அரச திணைக்களங்களுக்கான கொடுப்பனவுகள் எவையும் அதிகரிக்கப்படவில்லை. முன்னர் வழங்கப்பட்ட அதே கொடுப்பனவுகள் தான் வழங்கப்படும் என்றும் அதற்கேற்ப சிக்கனமாக பயன்படுத்தும்படியும் திறைசேரியினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கடந்த பெப்ரவரி மாதம் இலங்கையில் எரிபொருள்களின் விலை பெருமளவில் உயர்த்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து மின்சாரக் கட்டணமும் உயர்த்தப்பட்டது.

அரச திணைக்களங்களுக்கு மாதாந்தம் எரிபொருள் மற்றும் மின்சாரத்துக்கு அரசினால் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. எனினும் இந்தக் கொடுப்பனவுகள் எரிபொருள் விலை உயர்வுக்குப் பின் அதிகரிக்கப்படவில்லை.

சகல அரச திணைக்களங்களுக்கும் திறைசேரியினால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில், தற்போது வழங்கப்பட்டு வரும் கொடுப்பனவுகளே வழங்கப்படும் எனவும் மேலதிகமான கொடுப்பனவுகள் எவையும் வழங்கப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவதுடன் வாகனங்களையும் அளவாகப் பயன்படுத்துமாறும் அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒரு நிகழ்வுக்கு ஒரு திணைக்களத்திலிருந்து பல வாகனங்களில் செல்ல வேண்டாம் என்றும் தேவையற்ற எரிபொருள் விரயங்களைத் தவிர்க்குமாறும் மேலும் கூறப்பட்டுள்ளது.

(த-5)

# மதுபான சாலைகளுக்கு இனி அனுமதி வழங்கக் கூடாது

## உடுவில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்து

வலி. வடக்கு, மார்ச் 31

வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்குள் எதிர் காலத்தில் எந்தவொரு மதுபான சாலைகளுக்கும் இனி அனுமதி வழங்குவதை நிறுத்திவிட வேண்டும் என பொது மக்களும் பொது அமைப்புக்களும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் உடுவில் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான முருகேசு சந்திரகுமாரிடம் வலியுறுத்தியுள்ளார்கள்.

உடுவில் பிரதேசசெயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் குழுத் தலைவர் மு.சந்திரகுமார் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் அரச திணைக்களங்களின் தலைவர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் பொலிஸ் இராணுவ உயர் அதிகாரிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

சுன்னாகம் நகரப் பகுதியில் பெருகியுள்ள முதுபான சாலைகளினால் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றார்கள். இதனை கட்டுப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

இந்த நிலையில் தலைவர் உரிய மதுபானசாலைகளின் உரிமையாளர்களுடன் தொடர்பு கொண்டு பொது மக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் மதுபான சாலைகளை நடத்து வேண்டும் என அறிவிப்பதுடன் இதனை நடைமுறைப்படுத்த மறுக்கும் மதுபானசாலைகளின் அனுமதிப்பத்திரத்தை தடைசெய்ய எதிர்காலத்தில் நடவடிக்கையெடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

(ஒ-86)

# அமைதியான வழியில் அணுசக்தியை பயன்படுத்துவது ஈரானின் உரிமை

## 'பீரிக்ஸ்' கூட்டமைப்பு நாடுகள் அங்கீகாரம்

டில்லி, மார்ச் 31

''அணுசக்தியை அமைதியான வழியில் பயன்படுத்துவதற்கான உரிமை ஈரானுக்கு உள்ளது என்பதை அங்கீகரிக்கிறோம். இதுதொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு, பேச்சுமூலம் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பீரிக்ஸ் உச்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய, 'பீரிக்ஸ்' கூட்டமைப்பு நாடுகளின் உச்சி மாநாடு, டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் பிரதமர் மன்மோகன் சிங், பிரேசில் அதிபர் டில்மா ரஸப், சீன அதிபர் ஹூ ஜிண்டாவோ, தென் ஆபிரிக்க அதிபர் ஜேக்கப் ஜுமா, ரஷ்ய அதிபர் திமித்ரி மெத்வதேவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த உச்சி மாநாட்டில் ஈரான் விவகாரம் குறித்த தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தில், ''ஈரானின் அணுசக்தி குறித்த விவகாரத்தில் பிரச்சினை எழுந்துள்ளது மிகவும் கவலை அளிக்கிறது. சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்டு அமைதியான முறையில் அணுசக்தியைப் பயன்படுத்துவதற்கான உரிமை, ஈரானுக்கு உள்ளது. இதை 'பீரிக்ஸ்' கூட்டமைப்பு அங்கீகரிக்கிறது.

ஈரான், சர்வதேச அணுசக்திக் கழகம் ஆகியவற்றுக்கு இடையே எழுந்துள்ள பிரச்சினைகள் உட்பட, இதுகுறித்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் குழுவில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பேச்சு மூலமே தீர்வு காண வேண்டும். பிரச்சினையை அதிகரிப்பதற்கு வழிவகுத்து விடக் கூடாது'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சுமுக நிலை இல்லாத நிலையில்

# அமெரிக்காவுடன் பேச்சு நடத்த பாகிஸ்தான் அரசு ஆர்வம்



இஸ்லாமாபாத், மார்ச் 31

அமெரிக்காவுடன் பகிரங்கக் கலந்துரையாடலை நடத்த பாகிஸ்தான் விரும்புகின்றது என்று அந்தநாட்டு வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அப்துல் பஷிட் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் மே மாதம் பாகிஸ்தானில் ஒசாமா பின்லேடன் அமெரிக்கப் படைகளினால் கொல்லப்பட்ட பின்னர், இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சீர்குலைந்தன. கடந்த நவம்பர் மாதம் அமெரிக்க ஆளில்லா விமானங்களின் தாக்குதலால் பாகிஸ்தான் படையினர் 28 பேர் உயிரிழந்தனர் இதனையடுத்து நிலைமை மேலும் மோசமடைந்தது.

இந்தநிலையில் தென் கொரியாவில் நடைபெறும் அணுசக்திப் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் பாகிஸ்தான் பிரதமர் யூஸுப் ரசா கிலானியும் சந்தித்துப் பேசினர்.

அத்துடன் ஆப்கானிஸ்தான் போரை மேற்பார்வை செய்யும் அமெரிக்கத் தளபதியான ஜோன் அலன் மற்றும் ஜேம்ஸ் மத்திஸ் ஆகியோர் பாகிஸ்தான் இராணுவத் தளபதி அஷ்பக் கயானியைச் சந்தித்து கலந்துரையாடினர். எனினும் இந்தச் சந்திப்பின்போதும், ஆப்கானிஸ்தானிலுள்ள நேட்டோ படைகளுக்கான விநியோகப் பாதையை பாகிஸ்தான் திறப்பதற்கான திகதி தீர்மானிக்கப்படவில்லை.

### நாடு திரும்பினார் ஜனாதிபதி சாவேஸ்

முதலாவது கதிரியக்கச் சிகிச்சைக்குப் பின்னர் வெனிசுவேலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் கியூபாவில் இருந்து நாடு திரும்பியுள்ளார்.

புற்றுநோய் என சந்தேகிக்கப்பட்ட சிதைவுகளை அகற்றுவதற்கான சத்திர சிகிச்சை வெனிசுவேலா ஜனாதிபதிக்கு கடந்த மாதம் கியூபாவில் மேற்கொள்ளப்பட்டது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஹியூகோ சாவேஸ் போட்டியிடவுள்ளார்.



ஸ்பெயினில் தொடங்கியுள்ள மக்கள் புரட்சி

# ஸ்பெயினில் தொழிற்சங்கங்கள் பகிஷ்கரிப்பில்

தொழில் மறுசீரமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஸ்பெயினின் தொழிற்சங்கங்கள் பொது பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளன.

இந்தப் பணிப்பகிஷ்கரிப்புக் காரணமாக வீதி, ரயில் மற்றும் விமானப் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மறுசீரமைப்புக்கள் வேலைவாய்ப்பற்றோர் வீதத்தை குறைப்பதற்கு உதவி புரியும் என ஸ்பெயின் அரசு குறிப்பிட்டுள்ளது.

**மரியா ராஜோய் பதவியேற்ற பின்னர், முன்னெடுக்கப்பட்ட முதலாவது பொதுப் பணிப் பகிஷ்கரிப்பு**

பில்லியன் கணக்கான யூரோக்களைக் காப்பாற்றுவது தொடர்பான மதிப்பீடுகள் குறித்து மரியானோ ராஜோய்யின் கொன்சர்வேட்ரிவ் அரசு அறிவிக்கவுள்ளது.

மரியா ராஜோய் பதவியேற்ற பின்னர், முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு அவருக்கு மிகப்பெரிய சவாலைத் தோற்றுவித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நடைமுறை வாழ்வுக்கான அறிவு பிரிட்டிஷ் மாணவருக்குக் குறைவு

## வாசிப்புப் பழக்கமும் 'பாதாளத்தில்'

லண்டன்,மார்ச்31

பிரிட்டனில் உள்ள மாணவ, மாணவியர்களில் ஐந்து பேரில் ஒருவருக்கு நடைமுறைக் கல்வி அறிவு குறைந்து காணப்படுகின்றது என்று 'வேர்ல்ட் லிட்டர்ஸி' பவுண்டேசனின் தலைமை அதிகாரி ஆண்ட்ரியூ கே அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளார்.

பிரிட்டனில் வசிக்கும் மக்களில் எட்டு மில்லியன் பேர் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் வார்த்தைகளை எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் சிரமப்படுகின்றனர் என அந்த ஆய்வில் மேலும் கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக மருந்துப் பொருள்களின் பெயர்கள் மற்றும் 'செக்' புத்தகத்தை நிரப்புவதில் சிரமப்படுகின்றனர்.

நடைமுறை வாழ்வில் பயன்படுத்தப்படும் வார்த்தைகளை படிப்பதற்கும் வாசிப்பதற்கும் சிரமப்படும் நாடுகளின் வரிசையில் இத்தாலி முதலிடத்திலும் அயர்லாந்து இரண்டாம் இடத்திலும் பிரிட்டன் மூன்றாம் இடத்திலும், அமெரிக்கா நான்காமிடத்திலும் உள்ளன .

# கியூபாவுக்கு எதிரான வர்த்தகத் தடை: அமெரிக்காவைக் கண்டிக்கும் பாப்பரசர்



கியூபாவுக்கு எதிரான 50 ஆண்டுகால அமெரிக்காவின் வர்த்தகத் தடைக்கு பாப்பரசர் 16ஆவது ஆசிர்வாதப்பர் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

கியூபாவுக்கான பயணத்தின் நிறைவில் தற்போதைய ஜனாதிபதி ராவுல் காஸ்ரோ முன்னிலையில், ஹவானா விமான நிலையத்தில் வைத்து அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

கியூபா மக்களுக்கான நியாயமற்ற இந்தச் சுமை பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவி புரியாது எனவும் பாப்பரசர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உரிமைகளுக்கான அழைப்பை விடுத்துள்ள பாப்பரசர், அடிப்படைச் சுதந்திரம் மறுக்கப்படாத சமூகம் உருவாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கியூபா புரட்சித் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான பிடெல் காஸ்ரோவையும் இதற்கு முன்னர் பாப்பரசர் 16 ஆவது ஆசிர்வாதப்பர் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

அத்துடன் தலைநகர் ஹாவானாவில் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் ஆராதனையிலும் பாப்பரசர் கலந்து கொண்டார் என்று அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

# ஒசாமாவைக் காட்டிக் கொடுத்த மருத்துவர் பதவி நீக்கம்

இஸ்லாமாபாத்,மார்ச்31

அல்குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனைக் காட்டி கொடுத்ததாகச் சந்தேகிக்கப்படும் மருத்துவரை பாகிஸ்தான் அரசு பதவி நீக்கம் செய்துள்ளது.

சர்வதேச தீவிரவாதியான ஒசாமா பின்லேடன் கடந்தாண்டு மே மாதம், பாகிஸ்தானின் அபோதாபாத்தில் அமெரிக்க அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பின்லேடன் எங்கு மறைந்திருக்கிறார் என்ற விவரம் முதலில் அமெரிக்காவுக்கு தெரியாது. அதைத் தெரிந்து கொள்வதற்காக, அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ., பாகிஸ்தானின் மருத்துவர் ஷகீல் அப்ரிடி என்பவர் தலைமையில் போலித் தடுப்பூசித் திட்டம் ஒன்று தொடக்கப்பட்டு வீடு வீடாகச் சென்று ஒசாமா அல்லது அவரது குடும்பத்தினர் இருக்கிறார்களா என, நோட்டம் விடப்பட்டது.

கைபர் பக்துன்கவா மாகாணத்தில் அரச மருத்துவராக இருந்த ஷகீல் மூலமாகத்தான் ஒசாமா, அபோதாபாத்தில் பதுங்கியிருந்த விடயம் அமெரிக்காவுக்குத் தெரிந்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

இதையடுத்து ஷகீல், பணியிலிருந்து நீக்கப்பட்டார். இவரை போலவே போலித் தடுப்பூசித் திட்டத்தில் நியமிக்கப்பட்டு பணியாற்றிய பெண் மருத்துவர் ஒருங்கிணைப்பாளர் ஒருவர் மற்றும் 17 ஊழியர்களும் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒசாமா பின்லேடன் வீட்டில்நடைபெற்ற அமெரிக்க அதிரடிப் படைத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணையில், மருத்துவர் ஷகீலையும் சேர்க்க வேண்டும். இவர் மீது தேசத் துரோகக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட வேண்டும் என்று விசாரணைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

# 'அவசர' அழைப்புச் செய்து உயிர் பிழைத்த நாய்



லண்டன், மார்ச் 31

அவசர உதவி அழைப்புச் செய்து நாய் ஒன்று உயிர் பிழைத்த சம்பவம் பிரிட்டனில் நிகழ்ந்துள்ளது. பிரிட்டன் வெஸ்ட் யார்ஷயர் பகுதியில் உள்ள ஒரு வீட்டிலிருந்து 'எமர்ஜென்சி' உதவி சேவை மையத்துக்கு ஓர் அழைப்பு வந்தது. போனை எடுத்து அங்கிருந்த ஊழியர் பேசினார். ஆனால் மறுமுனையில் இருந்து வெறும் மூச்சு சத்தம் மட்டுமே தொடர்ந்து கேட்டது. பேச முடியாத அளவுக்கு யாரோ ஆபத்தில் இருக்கிறார் என்பதை உணர்ந்த ஊழியர், உடனடியாகப் பொலிஸை அந்த வீட்டுக்கு அனுப்பிவைத்தார்.

அங்கு சென்ற பொலிஸார் வீடு பூட்டியிருந்ததை பார்த்து குழப்பம் அடைந்தனர். எனினும் வீட்டை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது அங்கு அறையொன்றில் போன் வயர்கள் கழுத்தில் சிக்கி காயத்துடன் வளர்ப்பு நாய் ஜோர்ஜ் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது. இந்த நாய்க்கு கழுத்தில் சிக்கலாக போன் வயர் சிக்கியதும், டயல் எண்களை கால்களால் தள்ளியிருக்கிறது. அதில் அதிர்ஷ்டவசமாக எமர்ஜென்சி உதவி மையத்துக்கு போன் அழைப்பு சென்றுள்ளது என்று தெரிய வந்தது.

# நீதிமன்ற உத்தரவை மீறினால் மற்றொரு அவமதிப்பு வழக்கு

## பாக்.பிரதமருக்கு எச்சரிக்கை

ஏற்கனவே நீதிமன்ற அவமதிப்பு வழக்கை கிலானி சந்தித்து வருகிறார். நீதிமன்ற உத்தரவுகளை உடனடியாக நடை முறைப்படுத்தத் தவறினால் 2ஆவது அவமதிப்பு வழக்கைச்சந்திக்க நேரிடும்.



இஸ்லாமாபாத்,மார்ச் 31

உத்தரவை மதித்து நடக்கத் தவறினால் 2ஆவது அவமதிப்பு வழக்கு விசாரணை தொடங்கப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் கிலானியை உச்ச நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

பாகிஸ்தானில் அதிபராக இருந்த முன்னாள் ராணுவத் தளபதி பர்வேஸ் முஷாரப், மறைந்த முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ இடையே ரகசிய ஒப்பந்த அடிப் படையில் தேசிய நல்லிணக்க ஆணையத்தை முஷாரப் 2007இல் வெளியிட்டார்.

அதன்பின் நடைபெற்ற பொதுத் தேர்தல் பிரசாரத்தில் பெனாஸிர் படுகொலை செய்யப்பட்டார். தேர்தலில் அவரது பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான கூட்டணி ஆட்சியைப் பிடித்தது. அதிபராக பெனாஸிரின் கணவர் ஆசிப் அலி சர்தாரி பொறுப்பேற்றார். வழக்குகளைச் சந்திக்க அஞ்சி லண்டனில் முஷாரப் தங்கினார். இந்நிலையில், முஷாரப் அறிவித்த நல்லிணக்க ஆணைய உத்தரவால் வெளிநாடுகளில் கருப்புப் பணம் மற்றும் ஹவாலா பண மோசடி ஆகியவற்றில் இருந்து சர்தாரி மற்றும் 8,000 பேர் விசாரணையின்றித் தப்பி பயன் அடைந்தனர் எனக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதுதொடர்பாக, பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. 7 நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்த வழக்கை விசாரித்து வருகிறது. அதிபர் சர்தாரி மீது ஊழல் மற்றும் கருப்புப் பண வழக்குகளை மீண்டும் விசாரிக்கவும், அது தொடர்பாக சுவிஸ் அரசுக்கு கடிதம் எழுதி விவரங்களைப் பெறவும் பிரதமர் யூசுப் ரசா கிலானிக்கு உச்ச நீதிமன்றம் பலமுறை உத்தரவிட்டது.

எனினும்,வழக்கைச் சந்திப்பதில் இருந்து அதிபருக்கு அரசியல் சட்டம் விலக்கு அளித்துள்ளது என்று கூறி, கிலானி மறுத்து வருகிறார். இதுதொடர்பாக ஏற்கனவே நீதிமன்ற அவமதிப்பு வழக்கை அவர் சந்தித்து வருகிறார். இந்தநிலையில், இந்த வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது. அப்போது நீதிமன்ற உத்தரவுகளை உடனடியாக நடைமுறைப்படுத்தத் தவறினால் 2ஆவது அவமதிப்பு வழக்கைச் சந்திக்க நேரிடும் என்று பிரதமர் கிலானியை நீதிபதிகள் எச்சரித்தனர்.

ஏற்கனவே சந்தித்து வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டால் பதவி விலகக் கிலானி திட்டமிட்டுள்ள நிலையில், அடுத்த வழக்கு விசாரணையை நீதிமன்றம் தொடங்கினால் உடனடியாக அவர் பதவி விலகக்கூடும் என்று பாகிஸ்தானில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# அனானின் சமாதானத் திட்டத்தை சிரியா எதிர்த்தரப்பு ஏற்க வேண்டும்

## வலியுறுத்துகிறது ரஷ்யா

மொஸ்கோ,மார்ச்31


ஐக்கிய நாடுகள் மற்றும் அரபு லீக்கின் இணை விசேட பிரதிநிதி கொபி அனானின் சமாதானத் திட்டத்தை சிரிய எதிர்த்தரப்பினர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

கடந்த ஒரு வருடங்களுக்கும் அதிகமாக பஷர் அல் அசாத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றுவரும் நிலையில் சிரியாவுக்கு ரஷ்யா தொடர்ந்தும் ஆதரவு வழங்கி வருகின்றது.

முரண்பாடுகளுக்குத் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளுக்கு சிரிய எதிர்த்தரப்பினர் தடையேற்படுத்துகின்றனர் என்று ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

சண்டை நிறுத்தத்தை ஏற்படுத்துவதுடன், அரசியல் பேச்சுக்களுக்கு முன்னர் நகரப் பகுதிகளில் இருந்து அரச படையினர் வெளியேற்றப்பட வேண்டுமென அனானின் சமாதானத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புகுஷிமா: கதிர்வீச்சுத் தாக்கம் அதிகரிப்பு



ரோக்கியோ,மார்ச் 31

ஜப்பானில் புகுஷிமா அணுஉலை விபத்து நடந்து ஓராண்டு கடந்து விட்ட நிலையில் தற்போதும் கதிர் வீச்சின் தாக்கம் அதிக அளவில் இருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

புகுஷிமா அணுமின் நிலையத்தில் இரண்டாவது அணு உலையை சிறிய கமரா கதிர்வீச்சை கண்டறியும் சாதனம் உள்ளிட்டவை அடங்கிய கருவி மூலம் ஆய்வு செய்த போது இந்த விவரம் தெரிய வந்துள்ளது..

அணுஉலை மிகவும் சிதிலமடைந்து இருப்பதாகவும், உயிரைக் கொல்லும் அளவை விடப் பத்து மடங்கு அதிகமாகக் கதிர்வீச்சு இருப்பதாகவும், இந்த அணு உலையைக் குளிர்விக்கப் போதிய அளவு தண்ணீர் இல்லை என்றும், அதிகாரிகள் கவலை தெரிவித்தனர்.

# ஒலிம்பிக் பார்க்க வரலாம்; ஆனால் 'கை பிடிக்க' முடியாது


பிரிட்டனில் இந்த வருடம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்காகச் செல்லும் விளையாட்டு வீரர்கள், பயிற்றுநர்கள் மற்றும் அதிகாரிகள் அங்கு திருமணம் செய்து கொள்வதை அந்த நாட்டு அதிகாரிகள் தடை செய்யவுள்ளனர்.

வெளிநாட்டவர்கள் பிரிட்டனில் வதிவிட உரிமை பெறுவதற்காக ஒலிம்பிக் போட்டிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதே இதன் நோக்கமாகும்.

ஜூலை 27 முதல் ஒகஸ்ட் 12 வரை நடைபெறவுள்ள லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின்போது ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வெளியிலுள்ள நாடுகளைச் சேர்ந்த சுமார் 20,000 பேருக்கு 6 மாத காலத்துக்கான பிரிட்டிஷ் விசா வழங்கப்படவுள்ளது.

இந்த நிலையில் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளும் தீவிரவாதிகளும் பிரிட்டனை இலக்கு வைப்பதற்கு ஒலிம்பிக்கை பயன் படுத்தலாம் என்ற கருத்துக்களின் மத்தியில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



தோற்றம்
16.06.1948

மறைவு
02.03.2012


## அமரர் தம்பிப்பிள்ளை தியாகராசா

**என்றும் எம்மை அன்பாலும் பண்பாலும் அரவணைத்து**
**இனிய வாழ்வு தந்த தெய்வமே!**
**எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக அமைந்த உங்கள்**
**சிரித்த முகம் காண்பதற்கு ஏங்கித் தவிக்கின்றோம்.**
**என்றும் இதயக் கோயிலில் இருத்திப் பூசிப்போம் அப்பா.**

கடந்த (02.03.2012) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தந்தை தம்பிப்பிள்ளை தியாகராசாவின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (01.04.2012)ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு திருநாவலூர் தெணியம்மன் மடத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அன்னார் அமரத்துவமடைந்த செய்தி கேட்டு நேரடியாக வருகை தந்து ஆறுதல் கூறி சகல வழிகளிலும் உதவியவர்கள், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் மற்றும் இறுதிக்கிரியைகளிலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

**சுப்பர் மடம், பருத்தித்துறை.** (16181) (2-6-7) **- குடும்பத்தினர்.**

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



நிஜமாக
29.09.1941

நிழலாக
15.03.2008

## அமரர் ஆறுமுகம்பிள்ளை சுப்பிரமணியம்

**(விநாயகர் ஸ்ரோர்ஸ், குகன் ஸ்ரோர்ஸ், குகன் எரிபொருள் நிரப்பு நிலையம், மீனாட்சி - அரிசி ஆலை)**

உங்கள் விழிப்பார்வையால்
மலர்ந்தோம்!!!
உணர்வினால் வளர்த்தீர்கள்
எளிமையால் கவர்ந்தீர்கள்
எளிதில் அனைவரையும் அணைத்தீர்கள்
உங்கள் ஆலமர நிழலில்
நாங்கள்
உங்கள் ஞாபகமாக!!!
இதயத்தில் வாழ்ந்து
வளர வையுங்கள்
வானமே எல்லை



**144/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.** (16207) (2-6-7) **- குடும்பத்தினர்.**

# இலங்கை கடற்படையிடம் இருந்து பாதுகாப்புக் கோரி மீனவர் வழக்கு

## மத்திய, மாநில அரசுகளுக்கு நீதிமன்று அழைப்பாணை

மதுரை,மார்ச் 31

இலங்கைக் கடற்படையிடம் இருந்து மீனவர்களைப் பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என்று கோரி மதுரை பொதுநல வழக்குகள் மைய மேலாண்மை அறங்காவலர் ரமேஷ், மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் மனுதாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை கடற் படையினரால் கடந்த 25 ஆம் திகதி நாகபட்டிணம், ராமேஸ்வரம் மீனவர் கள் தாக்கப்பட்டனர். இந்திய தேசியக் கொடி கிழிக்கப்பட்டு, அவமதிக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டிலிருந்து இது வரை 1500 இந்திய மீனவர்கள் தாக் கப்பட்டுள்ளனர். படகுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. மீனவர்களை பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தமனு, நீதிபதிகள் சித்ரா வெங்கட்ராமன், ஆர். கருப்பையா கொண்ட குழு முன்னிலையில்விசாரணைக்கு வந்தது. மத்திய, மாநில அரசுகள் 4 வாரங்களுக்குள் பதிலளிக்கும் வகையில், அழைப்பாணை அனுப்ப நீதிபதிகள் உத்தரவிட் டனர்.

# 2012 ஐ நட்புறவு ஆண்டாக இந்தியா–சீனா பிரகடனம்



இந்த வருடத்தை இந்தியா மற்றும் சீனாவின் நட்புறவு வருட மாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் சீன ஜனாதிபதி ஹூ ஜிந்தாவோ ஆகியோர் இணைந்து பிரகடனப்படுத்தியுள்ளனர்.


இந்தியாவுக்கு பயணம் மேற் கொண்டுள்ள சீன ஜனாதிபதியுடன் இந்தியப் பிரதமர் நடத்திய பேச்சின் பின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இருநாடுகளுக்கும் இடையில் எல்லை விவகாரங்கள் மற்றும் ஏனையவை பற்றி இருதலைவர் களும் கலந்துரையாடியதாகவும் எல்லைப் பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண்பதற்கு விசேட குழுவொன்றை நியமிப்பதற்கு இணக் கம் காணப்பட்டதாகவும் இந்திய அதிகாரியொருவர் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச்சந்திப்பின்போது, இந்தியாவில் சீன முதலீடுகளை, குறிப்பாக உட்கட்டமைப்பு மற்றும் உற்பத்தி துறைகளில், முதலீடு களை மேற்கொள்ளுமாறு இந்திய பிரதமர் மன்மோகன் சிங் அழைப்பு விடுத்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சென்னைத் துறைமுகத்தில் கப்பலை கடத்த முயற்சி

### துப்பாக்கி முனையில் 8 பேர் மிரட்டல் ஒத்திகை என்று பின்னர் தெரியவந்தது



சென்னை, மார்ச்.31

ஒத்திகை பற்றிய அறிவிப்பு செய்யாமல் திடீரென கப்பலைக் கடத் தியதால் சென்னை துறைமுகத்தில் பரபரப்பு ஏற்பட்டது. தமிழக கடலோர மாவட்டங்களில் தீவிரவாதிகள் ஊடுருவினால் தடுப்பது எப்படி என்பது பற்றிய பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி, கடந்த இரு நாள்களாக நடத்தப்பட்டது. சென்னையைத் தவிர ஏனைய 13 கடலோர மாவட்டங்களில், இந்த ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னையில் பாதுகாப்பு ஒத்திகை இல்லாததால், வழக்கம் போல பாதுகாப்பு பணியில் பொலி ஸார் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆனால், நேற்று முன்தினம் நண்பகல் 12 மணிக்கு திடீரென துறைமுகத்தில் நின்ற ஆராய்ச்சிக் கப்பல் ஒன்றை படகில் சென்ற 8 பேர் கும்பல் மடக்கினர். பின்னர், துப்பாக்கி முனையில் கப்பலுக்குள் ஏறி, கப்பலின் கப்டன் மற்றும் ஊழியர் களை மிரட்டினர். இந்த சம்பவம் திடீரென நடந்ததால், துறைமுக வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

ஒத்திகை நடத்துவது தொடர்பாக, துறைமுக ஊழியர்கள் யாருக் கும் முன் கூட்டியே தெரிவிக்கப்படவில்லை. இதனால் அவர்கள் பதற்றமடைந்தனர். இதற்கிடை யில், கடத்தல் கும்பலில் இருந் தவர்கள், கப்பலை விடுவிக்க வேண்டுமானால், புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சிலரை விடு விக்க வேண்டும்; 10 ஆயிரம் டொலர் தர வேண்டும் என்று தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத் தனர்.

இந்தத் தகவல் தமிழக உள் துறை மூலமாக சென்னை பொலிஸுக்குத் தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து அவர்கள் விசாரித்தபோதுதான், சென் னைக்கு ஒத்திகை நடக்காது என்று கூறி விட்டு, மத்திய உளவுத் துறையினர் தீவிரவாதிகள் வேடத்தில் திடீரென வந்து கடத்தியது தெரிய வந்தது.

# இந்திய மாணவனுக்கு வேலை வழங்குகிறது 'பேஸ்புக்'

சமூக இணையத்தளமான பேஸ் புக், உத்தரப் பிரதேச மாநிலம் அலகாபாத்தைச் சேர்ந்த பொறியியல் மாணவர் ஒருவருக்கு ரூ. 1.34 கோடி சம்பளம் வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

இதுகுறித்து, அலகாபாத்தில் உள்ள மோதிலால் நேரு தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத் தின் இயக்குநர் சக்கரவர்த்தி தெரிவித்ததாவது:-

உலகப் புகழ்பெற்ற பேஸ்புக், எங்கள் நிறுவனத்தில் பி.டெக். (சொப்வெயர்) இறுதியாண்டு படித்து வரும் மாணவர் ஒருவருக்கு தொழில் வழங்க முன்வந்துள்ளது. பாதுகாப்புக் கருதி அந்த மாணவரின் பெயர் ரகசியமாக வைக்கப்படுகிறது. பேஸ்புக் அந்த மாணவருக்கு கடந்த 27 ஆம் திகதி பணி ஆணையை அனுப்பி உள்ளது. அதில் ஆண்டுக்கு 1.34 கோடி ரூபா சம்பளம் தருவதாக ஒப்புக் கொண்டுள்ளது. படிப்பை முடித்த பின்னர் கலிபோர்னியாவில் உள்ள அலுவலகத்துக்கு வருமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'பேஸ்புக்' நிறுவனம், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் ஈ-மெயில் மூலம் ஆள்களைத் தெரிவு செய்யும் பணியை ஆரம்பித்தது. அதன்பின்னர், 9 சுற்றுகளாக தொலை பேசியில் நேர்முகத்தேர்வை நடத்தியது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம், பல்கலைக்கழக நேர்முகத்தேர்வு மூலம் அதிக சம்பளம் நிர்ணயிக்கப்பட்ட மாணவர்கள் பட்டியலில் இவரும் இணைந்துள்ளார். (வ)

# காரில் பதுக்கிக்கொண்டு சென்ற ரூ.6,29,058 ஆயிரம் பணம் சிக்கியது

ஜார்கண்ட், மார்ச்.31

ராஞ்சி அருகே வருமான வரித் துறையினர் கார் ஒன்றிலிருந்து சுமார் 2.5 கோடி ரூபா பணத்தை பறிமுதல் செய்துள்ளனர். இது குறித்து மூத்த காவல் துறை கண்காணிப்பாளர் சாகெட் குமார் சிங் தெரிவித் ததாவது:

ராஞ்சி அருகே உள்ள புறநகர் பகுதியான நம்கும் அருகே பொலிஸ் துறை மற்றும் வருமான வரித்துறையினர் கூட்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந் தனர். அப்போது அந்த வழியாக வந்த காரை சோதனை செய்தபோது கணக்கில் வராத 2.5 கோடி ரூபா கைப்பற்றபட்டது. விசாரணையில் கிடைத்த தகவலின் படி கைப்பற் றப்பட்ட காரின் உரிமையாளருக்கு ஜாம்ஷெட்பூரில் இரும்பு தொழிற் சாலை இருப்பதாகத் தெரிகிறது. மேலும் காரில் பணத்தை இருவர் எடுத்துச் சென்றனர். அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் - என்றார் அவர்.

# சேது சமுத்திரத் திட்டத்தை செயற்படுத்துமாறு சோனியா காந்தியிடம் தி.மு.க. வலியுறுத்தல்

## கோரிக்கையால் இரு அவைகளிலும் அமளி

சேது சமுத்திரத் திட்டம் தொடர்பான வழக்கை துரிதமாக நடத்தி முடித்து தற்போது இடை நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் அந்தத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கக் கோரி தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவினர் இந்திய மத்திய அரசின் கூட்டணிக்கு தலைமை வகிக்கும் சோனியா காந்தியைச் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளனர். தி.மு.க. நாடாளுமன்றக் குழுவின் தலைவர் டி.ஆர். பாலு தலைமையில் சோனியாவைச் சந்தித்த இந்த குழு தங்களின் கோரிக்கையை விளக்கும் மனு ஒன்றையும் கையளித்துள்ளனர். தங்களின் கோரிக்கைகளை கேட்டுக் கொண்ட சோனியா காந்தி, இந்த விடயத் தில் ஆவன செய்யும்படி மத்திய அரசுக்குத் தெரிவிப்பதாக தமக்கு உறுதியளித்ததாக டி. ஆர். பாலு தெரிவித்தார்.

மேலும் இதே கோரிக்கையை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய நாடாளுமன்றத்தின் நேற்று முன்தினம் கூடிய இரு அவைகளிலும் வலியுறுத்தினார்கள்.

ஆனால் அவர் களின் கோரிக்கையை மறுத்த அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சேதுக் கால்வாய் அமைக்கப் படும் இடத்தில் இருக்கும் மணல் திட்டுக்கள், ராமர் பாலம் என்று கருதப் படுவதால் அதை புராதன சின்னமாக அறிவிக்க வேண்டும் என்று கோரி கோஷங்களை எழுப்பினர். இவர்களுக்கு இடையிலான மோதலையடுத்து இரு அவைகளும் ஒத்தி வைக்கப்பட்டன.

# மக்களை முட்டாளாக்கும் ஹசாரே

### முலாயம்சிங் குற்றச்சாட்டு



இந்தியாவின் ஊழலுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதாகக் கூறும் அன்னா ஹசாரே பொதுமக்களை தன் பக்கமாக ஈர்த்து அனைவரையும் முட்டாளாக்கி வருகின்றார்.

மேலும் இவரது குழுவில், குற்றவாளிகளே நிறைந்துள்ளனர் என்று உத்தரப் பிரதேச மாநில முன்னாள் முதல்வர் முலாயம் சிங் பரபரப்பாக குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்து அன்னா குழு உறுப்பினரான அர்விந்த் கெஜ்ரிவால் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்னா குழுவுக்கு எதிராக போர்க் கொடி உயர்த்தியுள்ள நிலையில், முலாயம் சிங்கின் இந்த கருத்து அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (வ)

### முருகன், சாந்தன், பேரறிவாளனின்

# தூக்கு ரத்தாக்கும் கோரிக்கை ஜூன் 22 இற்கு ஒத்திவைப்பு

சென்னை, மார்ச்.31

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தண்டனையை ரத்து செய்ய கோரும் வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் ஜூன் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் கருணை மனுக்களை இந்திய ஜனாதிபதி 11 ஆண்டுகளுக்குப் பிறகு நிராகரித்து விட்டார். எனவே இதை எதிர்த்து 3பேரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் நாகப்பன், சத்திய நாராயணன் ஆகி யோர் 3 பேரையும் தூக்கிலிட கடந்த ஓகஸ்ட் மாதம் இடைக்காலத் தடை விதித்தனர். இந்த வழக்கு கடந்த 2 தினங்களுக்கு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது உச்சநீதிமன்றத்தில் முல்லர், பாஸ் ஆகியோர் தாக்கல் செய்த கருணை மனு மீதான விசாரணை நடைபெற்று வரும் நிலையில் வழக்கு விசாரணையை ஒத்தி வைக்க கோரப்பட்டது. இதையடுத்து நேற்றுவரை விசாரணைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. உச்சநீதிமன்றத்தில் கருணை மனுக்கள் மீதான விசாரணை இன்னும் முடிவ

# அமைச்சர் நேருவின் சகோதரன் கடத்திப் படுகொலை

தி.மு.க. முன்னாள் அமைச்சரும், திருச்சி மாவட்ட தி.மு.க. செயலாள ருமான கே.என். நேருவின் இளைய சகோதரரான ராமஜெயம் (வயது 40) கடத்தி கொலை செய்யப் பட்டுள்ளார். தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.என்.நேருவின் சகோதரன் ராமஜெயம் பொறியியல் கல்லூரி நடத்தி வருகிறார். ராமஜெயம் தினமும் காலையில் நடைப் பயிற்சி மேற் கொள்வார். நேற்றுமுன்தினமும் அதேபோல், நடைபயிற்சிக்குச் சென்றவர் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை.

இதனால் பதற்றமடைந்த அவரது மனைவி லதா, தில்லை நகர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இதற்கிடையே ஸ்ரீரங்கம் தொகுதிக் குட்பட்ட திருவானைக் காவல் அருகே உள்ள



திருவளர்ச் சோலை பகுதியில் கை, கால்கள் கட்டப்பட்டு ஒருவரின் சடலம் கிடப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

சந்தேகத்தின் அடிப்படையில் திருச்சி பொலிஸார் சம்பவ இடத் துக்கு விரைந்து சென்று பார்த்த போது அங்கு சடலமாகக் கிடந்தவர் கே.என்.நேருவின் தம்பி ராமஜெயம் என்பது உறுதியானது. (வ)

## வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்

உங்கள் வீட்டுத் திருமணத்தை

# சரவணாவின்

பட்டுச்சேலைகளால் அலங்கரியுங்கள்

சிறுவர் முதல்
பெரியவர்வரை
அனைவருக்குமான
ஆடைகளைப் புத்தம் புதிய
தெரிவில் பெற்றுக்கொள்ள....
தித்திக்கும் சித்திரைப்
புதுவருடத்தை முன்னிட்டு
சரவணா ரெக்ஸ் கிளைகளில்
வாங்கும் ஒவ்வொரு
ஆடைகளுக்கும் அதிக
விலைக்கழிவு வழங்கப்படும்.

வங்கிக்கடன் அட்டைகள் மூலமும் கொள்முதல் செய்யலாம்





# சரவணா ரெக்ஸ்

**நல்லூரில்.....**
526,529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி),
யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 1723.

**யாழ்.நகரில்.....**
770, 772, கே.கே.எஸ்.வீதி,
(தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 0421.

**வடமராச்சியில்.....**
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி,
(சம்பத் வங்கிக்கு அருகில்)
தொ.பேசி: 021 226 2992.

புதுவருடத்தை முன்னிட்டு 7 நாள்களும் காலை 8.00 மணி முதல் இரவு 9.00 மணிவரை வியாபாரம் நடை பெறும்

### வலுவிழந்தோருக்கு அடையாள அட்டைகள்

தென்மராட்சி
மார்ச் 31

தென்மராட்சி பிரதேசத்தில் வதியும் வலுவிழந்தோருக்கு நலநோன்பு அடையாள அட்டை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவால் விநியோகிக்கப் படவுள்ளது.

இதற்கான முதற்கட்ட பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் நலனோன்பு அடையாள அட்டைக்கான புகைப் படங்கள் வலுவிழந்தோரின் வீடுகளுக்கு சென்று எடுக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிகள் ஏப்ரல் 16 ஆம் திகதி தொடக்கம் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(ம-9)

## 21 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



செல்வி
**பரமலிங்கம் புஜிதா**

*21ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் புஜிதாவை பல்கலையும் பெற்று, வாண்மை மிகு பதவிகளை வகித்து பார்போற்றவும் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.*

Happy Birthday

வாழ்த்துவோர்:
பரமலிங்கம்-சுவேந்திரா (பெற்றோர்)
அன்னலிங்கம் (அம்மப்பா)
பூமாலை (அம்மம்மா)
உறவினர்கள், நண்பர்கள்.

12ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(6218)(6.9.10)





சிவமயம்

### கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கலுக்கான தண்டல் ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல்

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் 05.04.2012 வியாழக்கிழமை நடைபெற வுள்ளது. இதற்கமைவாக தண்டல் ஒழுங்குகள் (30.03.2012) வெள்ளி தொடக்கம் வட்டக்கச்சி, இராமநாதபுரம், விசுவமடு, கல்மடு, திருவையாறு, பிரமந்தனாறு, மயில்வாகனபுரம், உடையார்கட்டு சுதந்திரபுரம், தேவிபுரம் போன்ற பகுதிகளுக்கு ஆலய சின்னங்களுடன் உழவு இயந்திரங்களில் தொண்டர்கள் வருகைதரவுள்ளார்கள் என்பதை முன்கூட்டியே அறியத் தருகின்றோம்.

ஆலய பரிபாலனசபை

(C/200)(6-9-8)

## சித்திவிநாயகர் கல்வி நிலையம்
## K.K.S..றோட், மல்லாகம்

| 2014 , கலை / வர்த்தகப் பிரிவு | O/L DAY Class |
|---|---|
| ஆரம்பம்: 01. 04. 2012 | ஆரம்பம்: 02. 04. 2012 |
| காலை 8 மணி | காலை 8 மணி |

## முதலாம் ஆண்டு நினைவில்.....



**உயிராக**
**04-07-1927**

**உணர்வாக**
**31-03-2011**

திருமதி
# பவளம் நாகமணி

(இல.70/11, பழைய பூங்கா சாலை,
யாழ்ப்பாணம்)

அம்மம்மா
உங்களிடம் தான்
மனித விழுமியம் கற்றோம்
கல்வியின் அருமை பெற்றோம்
விடா முயற்சியின் உயர்வு தெரிந்தோம்
விழுதூன்றி வளர அறிந்தோம்
மலையே வந்தாலும்
தலையே சுமக்க வேண்டுமென
அடிக்கடி கூறும்
தங்களின் தாரக மந்திரம் தான்
எம்மை வழி நடத்துகின்றது.

வேதநாயகம் தபேந்திரன்.
"தேன்தமிழ்"
கைதடி,

(C/119) (6,9,10)

### ஆசிரியர் தேவை

தரம்: 5 - 11 தரத்துக்கு மாலை நேர வகுப்பிற்கு கல்வி கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. உரும்பிராயைச் சேர்ந்தவர் விரும்பத்தக்கது. தொடர்பு: 077 7065274

### வீடு வாடகைக்குண்டு

கோயில் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 3151659

### கடைக் கட்டடமும் வீடும் விற்பனைக்கு

வெலிங்டன் சந்தியில் இருந்து
ஐம்பதுயார் தூரத்தில் இரண்டு பரப்பு காணியில் மூன்று மாடி வர்த்தகக் கட்டடமும், நான்கு அறைகொண்ட வீடும் விற்பனைக்குண்டு. தரகரின்றி நேரடியாக தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 077 726 2653

### வீடு வாடகைக்கு தேவை

இணுவில், மருதனார்மடம், உடுவில், சுன்னாகப் பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.
மாத வாடகை ரூ. 10,000/= (பத்தாயிரம்) வரை தரப்படும்.
தொடர்பு: 077 044 0570

### மணமகன் தேவை

தென்மராட்சி இந்து கௌரவ குடும்பம் வயது 26, கல்வியியற் கல்லூரி ஆசிரியை. நட்சத்திரம் கார்த்திகை 4 ஆம் பாதம் கிரகபாவம் 25, உயரம் 5' 3'' பொது நிறம், சூரியன் செவ்வாய் 12 ஆம் வீட்டில். வயது வித்தியாசம் 5 வரை, சம தராதரம் அல்லது அதற்கு மேல், சீதனம் வீடுவளவு, காணி, ரொக்கம்.
மே.பா. விளம்பர இல. 4345, உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### உங்களுக்கு சுத்திகரிப்புத் தேவைகளில் பிரச்சினையா?

உங்களுக்கான எமது சேவைகள்
நிறுவனங்கள், வீடு, ஹோட்டல், Tiles, அல்ஹபோன் பார்டிஷன், ஷோ றூம், Show Room Glass, Floor Polishing / Vaccine / Carpet Shampoo போன்ற சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

**Specialized Janitorial Services**

தொடர்பு: இல. 536/1 கே.கே.எஸ். வீதி,
மனோகராச் சந்தி,யாழ்ப்பாணம்.
T.P: 021 4921108, 0777286069

### புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு

நல்லூர் செட்டித்தெருவில் அழகான புத்தம் புதிய மாடி வீடு தொழில்நுட்ப வல்லுநரால் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தியடைந்த நிலையில் விற்பனைக்குண்டு.
காணியைச் சுற்றி சுவர்களால் அமைக்கப்பட்ட இடம் சகல வசதிகளையும் உடைய புதிய வீடு முன்னுரிமை அடிப்படையில் விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு: 077 247 0590, 077 854 3106**

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பிறிமா No.1 புறொயிலர் குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

**குறிப்பு:** எம்மிடம் புறொயிலர் குஞ்சுகள் கொள்வனவு செய்பவர்களிடம் திரும்பவும் இறைச்சிக்கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

**தொடர்பு:**

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர், | நல்லூர் பாம் சென்ரர், | சுட்டி பாம் சென்ரர், |
| 19, முருகேசர் ஒழுங்கை, | கனகபுரம் வீதி, கிளிநொச்சி. | வட்டுக்கோட்டை |
| நல்லூர். 0212226944 | 0776225944 | 0778996085 |

# விகடகவி
## நூல் வெளியீடு



காலம்: நாளை (01.04.2012)
ஞாயிற்றுக்கிழமை
பி.ப 3 மணி

இடம்: சரஸ்வதி மண்டபம்
(ராஜா கிறீம் ஹவுஸ்)
இராமநாதன் வீதி, கலட்டி-யாழ்ப்பாணம்.

அனைவரும் வருக என
அன்புடன் அழைக்கின்றோம்.

தொ.பேசி:
222-2326

விகடகவி
குடும்பத்தினர்.

(C/257) (6,7,10)


## 20 பொலிஸார் லஞ்ச ஆணைக் குழுவில் இணைப்பு

கொழும்பு,மார்ச் 31

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு 20 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று இந்த ஆணைக் குழுவின் தலைவரும் முன்னாள் உயர்நீதிமன்றத்தின் நீதிபதியுமான ஜகத் பாலபட்டபெந்தி தெரிவித் துள்ளார்.

இந்த உத்தியோகத்தர்களுடன் பரீட்சகர்கள் ஏழு பேரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்றும் இந்த உத்தியோகத்தர்களுக்கு விசாரணைகள் சம்பந்தமாக பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுடன் தற்போது ஆணைக் குழுவின் விசாரணை அதிகாரிகளின் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ச-22)



தொழில்புரியும் பட்டதாரிகள் செயற்திட்ட உத்தியோகத்தர்கள் சேவை சுற்றறிக்கையை இரத்துச் செய்யக் கோரி கொழும்பிலுள்ள பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு முன்னால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அரச ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## சிலுவைப் பாதைக்கு தியானப் பேரணி

கொழும்புத்துறை,மார்ச்31

கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தவக்கால வீதிச் சிலுவைப்பாதைத் தியானப் பேரணி நாளை நடைபெற வுள்ளது.

நாளை மாலை 4.30 மணிக்கு கொழும்புத்துறை திருவுளப் பணியாளர் சபை முன்பாக ஆரம்பிக்கும் சிலுவைப் பாதை கொழும்புத்துறை வீதி இலந்தைக்குளம் வீதி, வில்வம்தெரு வீதி, ஆனந்தன் வடலி வீதி வழியாக ஆலயத்தைச் சென்றடையும்.

இந்தத் தவக்கால பக்தி முயற்சிக்கான சிந்தனைகள் மற்றும் திருப்பலியும் கிளரீசியன் சபையின் குருக்கள், துறவியரின் வழிகாட்டலில் இடம்பெற வுள்ளதாக பங்குத் தந்தை அருட்திரு மத்தாயன் அடி கள் தெரிவித்தார். (ம-135)

# நிவாரணம் வழங்காவிட்டால் மே மாதம் முதல் ஆர்ப்பாட்டம்

### கண்டியில் ரணில் அறிவிப்பு

கண்டி,மார்ச் 31

மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசு முன்வராவிட்டால் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல் அனைத்து எதிர்க்கட்சிகளும் இணைந்து ஆர்ப்பாட்டங்களை நடத்த திட்டமிட்டுள்ளோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நடத்திய ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கண்டி மத்திய சந்தைக்கு முன்னால் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜெனிவாவின் தீர்மானம் அரசின் பிரச்சினை வாழ்க்கைச் செலவு வீட்டின் பிரச்சினை.

எனவேதான் நாங்கள் வாழ்க்கைச் செலவை குறைக்கக் கோரி ஆர்ப்பாட்டம் செய்கின்றோம் என்று அவர் தெரிவித்தார்.



இந்த நிகழ்வில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்ததாவது:-

அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை நிறைவேற்றுவதாக சர்வதேசத்துக்கு வாக்குறுதியளித்துவிட்டு, நிறைவேற்ற முடியாமல் போனதுக்குக் காரணம் இன்று நாட்டில் பலர் ஜனாதிபதியாக இருப்பதாகும்.

அவர்களில் மஹிந்த ராஜபக்ஷ, விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க ஆகியோர் உள்ளடங்குவர். இதனால் உள்ளூரில் ஒன்றைச் சொல்கின்றார்கள். வெளிநாட்டில் வேறொன்றைச் சொல்கின்றார்கள்.

தொண்டமான் இன்று அமைச்சரா அல்லது நாடாளுமன்ற உறுப்பினரா என்று தெரியாமல் பெருந்தோட்டப் பகுதி மக்கள் திண்டாடுகின்றனர். - என்றார். (ச)

## சம்பளம் போதாது என்கிறார் சபாநாயகர்

கொழும்பு,மார்ச் 31

இலங்கை நாடாளுமன்றின் சபாநாயகர் சாமல் ராஜபக்ஷ தனக்கு சம்பளம் போதாது என்று கூறினார்.

மீன்பிடித் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபாநாயகர் பதவிக்காக எனக்குக் கிடைக்கும் சம்பளத்தை கொண்டு வாழ்க்கை நடத்த முடியவில்லை என்றால் அரச ஊழியர்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அரச ஊழியர்களுக்கும் போதியளவு சம்பளம் கிடைப்பதில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## சட்டத்தரணி மீது தாக்குதல் நடத்திய இருவர் கைது

கொழும்பு,மார்ச் 31

கோட்டை ரஜமகா விகாரையின் பிக்குகள் கொலை செய்யப்பட்ட வழக்கில் சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டதாக மிரிஹாண பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்கள் நுகேகொட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

சட்டத்தரணி மீது தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்யுமாறு கடந்த புதன்கிழமை சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டபோது சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க சந்தேக நபர்களை கைது செய்ய நடவ டிக்கை எடுப்பதாக உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பொலிஸாரின் கவனயீனத்தால் குற்றச் செயல்கள் அதிகரிப்பு

### சட்டமா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 31

பொலிஸாரின் கவனயீனமே நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கான பிரதான காரணம் என்று சட்டமா அதிபர் ஈவா வனசுந்தர தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் உத்தியோகத்தர்கள் குற்றவாளிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்தால் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும். பொலிஸாரின் அசமந்தப்போக்கு நாட்டின் நீதிக் கட்டமைப்பை கேள்விக் குறியாக மாற்றியுள்ளது.

குற்றச் செயல்கள் தொடர்பில் பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகள் ஆவணமொன்றில் சேகரிக்கப்படவுள்ளன. குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறும் பொலிஸாரைத் தண்டிக்கவேண்டும்.

குற்றவாளிகளைக் கைது செய்யாமை, சாட்சியங் களை சமர்ப்பிக்காமை, வழக்கு ஆவணங்களைத் தயாரிக்காமை உள்ளிட்ட பல்வேறு வழிகளில் பொலிஸார் குற்றவாளிகளுக்கு துணை போகின் றனர்.- என்றார். (ச)

# எரிபொருள் விலையேற்றம்; தேயிலை·உற்பத்தி நட்டம்

### உற்பத்தியாளர்கள் கவலை

கொழும்பு,மார்ச் 31

எரிபொருள் விலை அதிகரிப்பினால் ஏற்பட்ட மின் கட்டண உயர்வு, போக்கு வரத்துக் கட்டண உயர்வு என்பவற்றால் தாம் பெரும் நட்டத்தை எதிர்நோக்கி வருவதாக இலங்கை தேயிலை உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ கிராம் தேயிலையை உற்பத்தி செய்ய தற்போது மேலதிகமாக 5 ரூபா 50 சதத்தை செலவிட வேண்டியுள்ளது என்று இலங்கை தேயிலை வியாபாரிகள் சங்கத்தின் தலை வர் ஜயந்த கெரகல கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாவின் பெறுமதி குறைந்து செல்வதால் தமது தேயிலை உற்பத்தி நட்டத்தை எதிர் கொண்டுள்ளது.

இந்த நட்டத்தை சமாளிக்க திறமைமிக்க செயல் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் .

ஒரு நாளைக்கு 16 கிலோ கொழுந்து பறிக்கும் தொழிலாளி 19 தொடக்கம் 21 கிலோ வரை பறித்தால் நட்டத்தை ஓரளவு சமாளிக்க முடியும். சில வலய கம்பனிகள் இந்த இலக்கை எட்டியுள்ள போதும் பல கம்பனிகள் இலக்கை எட்டத் தவறியுள்ளன.- என்றார்.

கூட்டு ஒப்பந்தத்துக்கு அப்பால் 16 கிலோ கொழுந்துக்கு மேல் பறிக்க முடியாது என்று தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சட்ட விரோதமாக மரத்தடிகளை கொண்டு சென்றவர் சிக்கினார்

கொழும்பு,மார்ச் 31

சிலாபம், வட்டக்கல்லி பிரதேசத்தில் சட்டவிரேதமான முறையில் மரத்தடிகளை லொறியில் ஏற்றிச் சென்ற ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.



வனவள திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட வாகன மறிப்புச் சோதனையின் போதே, சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான மரத்தடிகளுடன் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த லொறி ஆராச்சிக்கட்டு பிரதேசத்திலிருந்து வென்னப்புவ பிரதேசத்துக்கு மரத்தடிகளை ஏற்றிச்சென்ற போதே வனவள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபம் வனவள திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

கொழும்பு,மார்ச் 31

புத்தளம், முள்ளிப்புரம் பகுதியில் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை புத்தளம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற் கொண்ட நடவடிக்கையின் போது 2 கிராம் 20 மில்லி கிராம் ஹெரோயினுடன் இந்த நபர் சிக்கிக்கொண்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## ரயில் மோதி ஒருவர் சாவு

தெற்கு களுத்துறை பிரதேசத்தில் களுத்துறை பாலத்துக்கு அண்மையில் ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

வாதுவையில் இருந்து களுத்துறை தெற்கு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ரயிலில் மோதுண்டே இவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் சூரியகொட பெருந் தோட்ட பகுதியைச் சேர்ந்த குணதிலக்க(வயது-48) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)



தந்தை செல்வா
(இன்று அவரது 114 ஆவது பிறந்தநாள்)

## தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றார் செல்வா

# தமிழ் தேசிய இனம் இனியும் அரசுகளால் ஏமாற்றப்படாதிருக்க பார்த்துக் கொள்வோம்

### ஒற்றுமையாக ஓர் அணியில் நின்றாலே சாத்தியம்

■ சி.வி.விவேகானந்தன்
(சட்டத்தரணி)

சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் மலேசியாவின் ஈப்போ நகரில் 1898 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி பிறந்தார். இன்று அவரது 114 ஆவது பிறந்த நாள். அவரைத் தமிழ் மக்கள் அன்போடு "தந்தை செல்வா" என அழைத்தனர்:

புதியதோர் அரசியலமைப்பை உருவாக்கு வதற்காக பிரித்தானிய அரசு 1944 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஒரு பிரகடனத்தை வெளியிட்டது. புதிய அரசியலமைப்பை உருவாக்க சோல்பரி ஆணைக்குழு இலங்கைக்கு அனுப்பப்படுமென்றும் அந்தக் குழுவே அரசியலமைப்பை உருவாக்குமெனவும் அறிவிக்கப்பட்டது.

சோல்பரி அரசியலமைப்பு ஒற்றையாட்சி வட்டத்துக்குள் இறுக்கமாக நின்றது. ஒற்றையாட்சித் திட்ட அடிப்படையில் இலங்கை 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி சுதந்திரம் பெற்றது. ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஒற்றையாட்சி அரசியல் திட்ட அமைப்பை ஏற்றுக் கொண்டார். அதற்கு மாற்றீடாக எதனையும் வைக்கவில்லை. தந்தை செல்வா மெல்ல மெல்ல சமஷ்டி அரசியலமைப்பை நோக்கி நகர்ந்து கொண்டார். 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி சமஷ்டிக் கட்சி உதயமாகியது. தமிழரசுக் கட்சியென தமிழில் அழைக்கப்பட்டது.

1956 ஆம் ஆண்டுத் தேர்தலில் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க பிரதமரானார். அன்னார் தனிச்சிங்களச் சட்டத்தை 1956ஆம் ஆண்டு ஜுலை மாதம் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினார். அன்று தொடக்கம் அறவழிப் போராட்டங்கள் பலவற்றை தமிழரசுக்கட்சி நடத்தியது.

**ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.**

1957 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26 ஆம் திகதி பண்டாரநாயக்கா-செல்வநாயகம் உடன்படிக்கை எழுதப்பட்டது. உடன்படிக்கை குறித்துக் கடும் எதிர்ப்பு உருவானது.

'தமிழர்களுக்கு பிரச்சினைகள் ஒன்றுமில்லை. சிங்களவருக்கே பலவித பிரச்சினைகள் உண்டு. அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வின் மூலமே எந்தத் திட்டமும் வைக்கப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங் களுக்கென, தமிழர்களுக்கென பிரத்தியேக தீர்வு வைக்கக் கூடாது. இலங்கை முழுவதற்கும் ஏற்றவிதமான தீர்வே வைக்கப்பட வேண்டும்' -என ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கர்ஜித்தார். உடன்படிக்கையை எதிர்த்தார். உடன்படிக்கைக்கு எதிராக ஆண்டவன் ஆசீர்வாதம் வேண்டி கண்டி யாத்திரை செய்தார். ஒரு சில அமைச்சர்களும் பௌத்த பிக்குகளும் பிரதமர் இல்லத்தின் முன் உண்ணாவிரதம் இருந்தனர். 1958 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி அந்த உடன்படிக்கை பிரதமரால் கிழித்தெறியப்பட்டது. 1959ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி பிரதமர் ஒரு புத்த பிக்குவால் சுடப்பட்டு இறந்தார். அதன்பின் டபிள்யு. தஹநாயக்கா பிரதமரானார்.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு சி.பி.டி.சில்வா தலைமை வகித்தார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு டட்லி சேனநாயக்கா தலைமை வகித்தார். இரு கட்சிகளும் அரசாங்கத்தை அமைப்பதற்குத் தேவையான உறுப்பினர்களைக் கொண்டிருக்கவில்லை. தமிழரசுக் கட்சியின் உதவியை இரு கட்சியினரும் நாடினர்.

**இருகட்சிகளும் மாறி மாறி அழைத்தன**

சிறிலங்கா சுதந்திரக்கட்சியைவிடக் கூடிய தொகுதிகளை வென்ற ஐக்கிய தேசியக் கட்சியை மகாதேசாதிபதி அரசாங்கம் அமைக்க அழைத்தார்.

தேர்தல் வெற்றியின் பின்னர், யாழ்ப்பாணத்திலிருந்து தந்தை செல்வா இரத்மலானை வானூர்தி நிலையத்தில் வந்து இறங்கினார். இலங்கை தொழிலாளர் காங்கிரசின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான இராமனுஜம் மலர் மாலை அணிவித்து தந்தை செல்வாவை வரவேற்றார். இலங்கை தொழிலாளர் காங்கிரசின் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு தொண்டமானும், பதியுர்தீனும் தந்தை செல்வாவை வரவேற்றனர். பண்டா-செல்வா ஒப்பந்தத்தை முழுமையாக செயல்படுத்த சம்மதம் தெரிவித்தனர். சி.பி.டி.சில்வாவை பிரதமராக்குவதற்கு தந்தை செல்வாவின் ஒத்துழைப்பைக் கேட்டு நின்றனர்.

அதன் பின் மார்ச் 23 ஆம் திகதி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தந்தை செல்வாவின் இல்லத்தில் அவரைச் சந்தித்தார். பண்டா-செல்வா உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவு தெரிவித்தார்.

மார்ச் மாதம் 26 ஆம் திகதி சேர் ஜோன் கொத்தலாவலை, சேர் அருணாசலம் மகாதேவா, சேர் எட்வேட் ஜெயத்திலகா ஆகியோர் தந்தை செல்வாவை சந்தித்தனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு கேட்டனர்.

தந்தை செல்வா நான்கு கோரிக்கைகளை முன் வைத்தார். 1.வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பிரதேச சபைகள் வழங்க வேண்டும். 2. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தமிழ் அரசகரும மொழியாக்க வேண்டும். 3. பிரஜாவுரிமைச் சட்டத்தைத் திருத்த வேண்டும். 4. ஆறு நியமன அங்கத்தவர்களில் ஒருவர் மலையகத் தமிழர்களின் பிரதிநிதியாக நியமிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். இந்தக் கோரிக்கைகளை டட்லி சேனநாயக்கா ஏற்கவில்லை.

பண்டா- செல்வா உடன்படிக்கையை முழுமையாக மீண்டும் கொண்டு வருவதற்காக, மீண்டும் மீண்டும் வற்புறுத்தி சொன்னதனால், தந்தை செல்வா சி.பி.டி.சில்வாவை பிரதமராக்க ஒத்துழைப்பு நல்க முன்வந்தார். ஆனால், மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலகா சி.பி.டி.சில்வாவை பிரதமராக்கவில்லை. அவர் கொவிகம (வேளாளர்) குலத்தைச் சேர்ந்தவரல்லர், அதனால் பிரதமராக்கவில்லையென சேர் ஒலிவர் குணத்திலகா கலாநிதி என்.எம்.பெரேராவுக்கு சில மாதங்களின் பின்னர் கூறியிருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்கள் யாவரும் ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிக்கும்படியும், பண்டா-செல்வா உடன்படிக்கை நிச்சயமாக செயற்படுத்தப்படும் என்றும் மீண்டும் மீண்டும் தந்தை செல்வாவுக்கு வாக்குறுதிகளைக் கொடுத்தனர். அவர்களது வாக்குறுதிகளை நம்பி ஐக்கிய தேசியக் கட்சியின் சிம்மாசன உரைக்கு (Throne Speech) எதிராக வாக்களித்து ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைத் தோற்கடித்தார் எஸ்.ஜே.வி.

**ஆறு கடக்கும் வரைதான் அண்ணன், தம்பி அதன் பின்னர்....**

அதன் பின்பு, சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை வகித்தார். புதிய தேர்தல் 1960 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் நடத்தப்பட்டது. தேர்தல் காலத்திலும் அதே வாக்குறுதியை சுதந்திரக்கட்சி தந்தை செல்வாவுக்கு வழங்கியது. தேர்தல் காலத்திலும் தந்தை செல்வா சிறிமாவோ பண்டாரநாயக்காவை வெளிப்படையாக ஆதரித்து நின்றார்.

தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அமோக வெற்றி பெற்றார். ஆறு கடக்கும் வரையும் அண்ணன் தம்பி, ஆறு கடந்த பின் நீயார்? நான் யார்? என்றானது. தந்தை செல்வாவுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் எவரும் கதைக்கவும் முன் வரவில்லை.

ஏரிக்கரை பத்திரிகைகள் யாவும் அரசாங்க உடைமையாக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. சி.பி.டி.சில்வாவும் 12 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்தை விட்டு விலகினர். அந்த வேளையில், அரசாங்கத்தைக் காப்பாற்றும்படி தமிழரசுக் கட்சிக்குத் தூதனுப்பினார் பிரதமர் சிறி மாவோ பண்டாரநாயக்கா. பண்டா-செல்வா உடன்படிக்கையை முழுமையாக உயிர்ப் பிப்போமென வாக்குறுதி கொடுத்தனர். ஆனால், அவர்களது வாக்குறுதியை தந்தை செல்வா நம்பவில்லை. அதனால் அவர்களை ஆதரிக்கமுன்வரவில்லை. அரசாங்கம் ஒரு வாக்கினால் தோல்வியடைந்தது.

1965 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி புதிய தேர்தல் நடந்தேறியது. இரு கட்சிகளில் ஒன்றுக்கேனும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. சிறிமாவோ பண்டாரநாயக்கா மீண்டும் பண்டா-செல்வா உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்த முன் வந்தார். ஆனால் எழுத்து மூலம் கொடுக்க மறுத்துவிட்டார். டட்லி சேனநாயக்கா எழுத்து மூலம் ஓர் உடன்படிக்கை எழுத இணங்கினார்.

டட்லி சேனநாயக்கா-செல்வநாயகம் உடன்படிக்கை 1965 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி எழுதப்பட்டது. அந்த உடன்படிக்கையில் கீழ்கண்ட விடயங்கள் விவரிக்கப்பட்டன.

**மொழி**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழியாக உபயோகப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். தமிழ் மொழி விசேட சட்டம் கொண்டுவரப்படும். தமிழ் மொழிபேசும் எவரும் நாடுமுழுவதிலும் தமிழ் மொழியில் அரசாங்கத்துடன் தமது நடவடிக்கைகளை வைத்துக் கொள்ள முடியும். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நீதிமன்றங்கள் யாவும் அனைத்து நடவடிக்கைகளையும் தமிழில் செய்வதற்கு ஏற்றதாக நீதிமன்ற மொழி மாற்றியமைக்கப்படும்.

**ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவவில்லை**

**★அதிகாரப்பரவலாக்கல்**

இரு தலைவர்களுக்கிடையில் இணக்கம் காணப்பட்ட விடயங்களில் அதிகாரங்களைக் கொண்டுள்ள மாவட்ட சபைகள் இலங்கை முழுவதும் அமைக்கப்படும். தேசிய விடயங்கள் நிமிர்த்தம் மத்திய அரசினால் வெளியிடப்படும் கட்டளைகளை மாவட்டசபைகள் ஏற்று நடக்க வேண்டும்.

**★குடியேற்றம்**

இலங்கைப் பிரஜைகள் யாவரும் காணி ஒதுக்கீடுபெறும் வண்ணம் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் மாற்றி அமைக்கப்படும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியேற்றங்கள் நடைபெறும் பொழுது பின்வரும் விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்:-

1.குடியேற்றம் நடைபெறும் பிரதேசத்திலுள்ள காணியற்றோர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும்.

2.வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு இரண்டாமிடம் வழங்கப்பட வேண்டும்.

3.மூன்றாமிடம் மற்றைய மாகாணங்களில் வசிப்போருக்கு அளிக்கப்படும். மற்றைய மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

ஆனால் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, தீர்வு தமிழருக்கெனக் கூறி அதனை எதிர்த்து நின்றார். சிங்கள மக்களுக்கு ஏற்றதாக இலங்கை முழுவதற்கும் ஏற்ற தீர்வு வைக்கப்பட வேண்டுமென ஜே.ஆர்.விடாப்பிடியாக நின்றார்.

டட்லி சேனநாயக்கா- செல்வநாயகத்தின் உடன்படிக்கையை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கென, தமிழ் பேசும் மக்களுக்கான பிரத்தியேகத் தீர்வு என்று முன்வைப்பது நிறுத்தப்பட்டது. இலங்கை முழுவதற்கும் ஏற்ற தீர்வாக மாவட்ட சபைகள் உருவாக்கப்பட்டன.

தமிழ் மொழி உபயோகம், குடியேற்ற திட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. தமிழ் மொழி விசேட உபயோகச் சட்டம் 1966 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்ட மூலத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சி, இடது சாரிக் கட்சிகள், எதிர்த்து நின்றன. நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் எதிர்ப்பு இருந்தது. குறிப்பாக சிங்களத் தீவிரவாதிகளும், தொழிற் சங்கங்களும் எதிர்த்தன. அதனால், அந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தாமல் விடப்பட்டது. ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவவில்லை.

**மாவட்ட சபை சட்ட மூலம்**

1968 ஆம் ஆண்டு மாவட்ட சபைகள் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. மாவட்ட சபைகள் யாவும் மத்திய அரசின் கட்டளைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டவைகளாகும். அனேகமாக மாநகர சபை போன்றவை. மாவட்ட சபை ஒரு மாவட்டத்தை பரிபாலிப்பது. அதற்கான அதிகாரங்கள் மாநகரசபையிலும் பார்க்க அதிகமானவை ஆகும். ஆனால், மாநகர சபை போன்று மத்திய அரசுக்கும், அமைச்சருக்கும் கட்டுப்பட்டதே.

இந்த சட்ட மூலத்துக்கெதிராக பெரியதோர் ஊர்வலம் நடைபெற்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிசக் கட்சி, தொழிற் சங்கங்கள், பௌத்த பிக்குகள் கூட்டமாக எதிர்ப்பு ஊர்வலம் செய்தனர். "டட்லியின் வயிற்றில் மசால வடை" என்னும் கோஷம் எழுப்பப்பட்டது. தேரர் ஒருவர் சுடுபட்டு இறந்தார். நம்மவர்களும் "மாவட்ட சபையல்ல அது "மாவட்டம்," பெரிய வட்டமென" எதிர்ப்புத் தெரிவித்தனர்.

டட்லி-செல்வா உடன்படிக்கை கைவிடப்பட்டது. சிங்களத் தலைவர்கள் எதை எதையோ தருவதாகச் சொல்லுவார்கள். ஒரு சிறுதுரும்பு கூடக் கொடுக்கமாட்டார்கள். தங்களுக்கு ஏற்பட்ட பின்னடைவை களைவதற்காக வாக்குறுதிகளைக் கொடுப்பார்கள். சந்தர்ப்பம் வரும் பொழுது காலை வாரிவிடுவார்கள். இது அவர்களின் அரசியல் சாணக்கியம். சாணக்கியத்தில் அவர்கள் எப்பொழுதும் மேலோங்கி நிற்கின்றார்கள். இலங்கை சுதந்திரம் பெற்ற பொழுது அதிகாரம் முழுவதையும் அன்றைய தமிழ் தலைவர்கள், சிங்களத் தலைவர்களிடம் கொடுத்து விட்டார்கள். அதனால் இன்றும் அதன் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

டட்லி-செல்வா உடன்படிக்கை கைவிடப்பட்ட பொழுது தந்தை செல்வா மனவருத்தப்பட்டுப் பின்வருமாறு கூறினார்: -

"Since 1960 we experimented a new strategy of co-operation with the major Sinhala Political Parties. First, we supported the SLFP in march 1960 to defeat the UNP because the SLFP came to an agreement with us. But the SLFP failed to honour that agreement. Then in 1965, we entered into an agreement with the UNP which promised to do some thing for the Tamils. Now they too have let us down"

1960 ஆம் ஆண்டு தொடக்கம் பெரும்பான்மைச் சிங்கள அரசியல் கட்சிகளுடன் ஒரு புதிய ஒத்துழைக்கும் கோட்பாட்டை கடைபிடித்து செயல்படுத்தினோம். சிறிலங்கா சுதந்திரக்கட்சி எங்களுடன் ஓர் உடன்படிக்கைக்கு வந்த பொழுது, ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிப்பதற்காக 1960 மார்ச்சில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை முதலில் ஆதரித்தோம். ஆனால் சுதந்திரக்கட்சியினர் உடன்படிக்கை பிரகாரம் செயற்படத் தவறினர். அதன் பின், 1965 இல் ஐக்கிய தேசியக் கட்சி தமிழர்களுக்கு சிலவற்றைத் தருவதாக வாக்குறுதி கொடுத்ததனால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் உடன்படிக்கை செய்து கொண்டோம். இப்பொழுது அவர்களும் எங்களைக் கைகழுவி விட்டுவிட்டார்கள்"-என்றார்.

சிங்களத் தலைவர்கள் எவராக இருந்தாலும் காலத்துக்கு காலம் தமிழ் தலைவர்களை ஏமாற்றி வந்தனர். இந்த ஏமாற்று நாடகம் 1918 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையும் அரங்கேற்றப்படுகின்றது. அவர்களது சாணக்கியம் கதைத்துக் கதைத்து ஏமாற்றுவதுதான். ஏமாற்றப்பட்ட தந்தை செல்வா மனம் வருந்தி உதிர்த்த சொற்களைக் கண்டோம். அதனால் தான். பின்னாளில், தமிழர்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டுமெனக் கண்ணீர் விட்டார்.

இன்றும் அதே கதை. அதேபாணி. அதே மெட்டு. அதே ராகம். தந்தை செல்வாவுக்கு நடந்த கதி இன்றைய தலைவர்களுக்கு நடக்கக் கூடாது, தமிழ் தேசிய இனம் இனிமேலும் ஏமாற்றப் படக்கூடாது என் தந்தை செல்வாவின் பிறந்த நாளான இன்று திடசங்கற்பம் கொள்வோம். எமக்குஏற்பட்ட "விதி" யை ஒற்றுமை யாக ஓர் அணியில் நின்று மாற்றிக் காட்டுவோம். *

# சாதாரண தர பெறுபேற்றில் மட்டு. மத்தி வலயம் முதலிடம்

**அகில இலங்கை ரீதியில் அதிகளவான மாணவர்கள் சித்திபெற்ற வலயமாக மட்டக் களப்பு மத்தி கல்வி வலயம் கணிக்கப்பட்டு முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.**

மட்டக்களப்பு,மார்ச் 31

ஜி.சீ.ஈ சாதாரதரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் அகில இலங்கை ரீதியில் அதிகளவான மாணவர்கள் சித்திபெற்ற வலயமாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் கணிக்கப்பட்டு முதலிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்த வலயத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 80 சதவீதமானோர் சித்தி பெற்றுள்ளனர். இரண்டாம் இடத்தை கண்டி கல்வி வலயம் பெற்றுள்ளது. இவ்வலய சித்திவீதம் 76. மூன்றாம் இடத்தைக் கொழும்பு வலயம் பெற்றுக்கொண்டுள்ளது. சித்தி வீதம் 75.

மட்டு.மத்தி கல்வி வலயம் சித்தி வீதத்தில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றுக்கொண்டமை குறித்து இந்த வலயத்தை உருவாக்கிய ஸ்தாபகர் முன்னாள் அமைச்சர் எம்.எஸ். எஸ். அமீர் அலியுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது; ''நிரந்தரமான சொந்தக் கட்டடமின்றி பெறப்பட்ட சாதனை'' எனக் குறிப்பிட்டார்.

இந்த வலயத்துக்குள் அங்குள்ள 23 தமிழ்ப் பாடசாலைகளையும், இணைத்துக்கொள்ள நான் முயற்சித்தபோதும் அது வெற்றியளிக்கவில்லை.

மேற்படி 23 தமிழ்ப் பாடசாலைகளும் இவ் வலயத்துக்குள் வந்திருக்குமாயின், தமிழ் மாணவர்களும் சிறப்புப் பெற்றிருப்பர் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

## மருத்துவக் கண்காட்சி நாளை வரை நீடிப்பு

எருவில்,மார்ச் 30

கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீடம் நடத்தி வரும் கிழக்கு மாகாணத்தின் முதலாவது மருத்துவக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக் கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி கே.கருணாகரன் தெரிவித்தார். பார்வையிடவரும் பாடசாலை மாணவர்களின் சன நெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே ஒரு நாள் கண்காட்சியை நீடித் திருப்பதாக அவர் தெரிவித் தார்.

கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமான இந்தக் கண்காட்சி இன்று சனிக்கிழமை நிறைவடையவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-31-21)



*கல்முனை மாநகர சபைக்காக கொள்வனவு செய்யப்பட்ட 'பிக்கப்' வாகனத்தை கல்முனை முதல்வர் சிராஸ் மீராசாஹிப் மாநகர ஆணையாளர் ஜே.லியாகத் அலியிடம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். (31)*

காத்தான்குடியில் நிர்மாணிக்கப்பட்ட

## காதி நீதிமன்றக் கட்டடம் இதுவரை திறக்கவில்லை

காத்தான்குடியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள காதி நீதிமன்றக் கட்டடம்இதுவரை திறக்கப்படாமல் பல மாதங்களாக மூடப்பட்ட நிலையிலேயே உள்ளது.

காத்தான்குடி காதி நீதிமன்றத்துக்கென காத்தான்குடி, டீன் வீதியில் ஒரு கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு பல மாதங்களாகியும் இந்தக் கட்டடம் திறக்கப்படாமல் உள்ளது. காத்தான்குடி காதி நீதிமன்றம் தற்போது காத்தான்குடி ஆறாம் குறிச்சியிலுள்ள பல நோக்கு மண்டபத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

காதி நீதிமன்றத்துக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தை திறப்பதன் மூலம் காழி நீதிமன்ற நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ள முடியும் என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ச)

## மட்டக்களப்புக்கு புதிய ரயில் பாதை

மட்டக்களப்பு,மார்ச் 31

மொனராகலை - அம்பாறை ஊடாக எம்பிலிபிட்டியவில் இருந்து மட்டக்களப்புக்கு புதிய ரயில் பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம செயற்திட்டம் ஒன்றை அமைச்சரவைக்கு சமர்பித்தபோது அதற்கு அனுமதி கிடைத்துள்ளது. (ச)

பரிசோதனைக்கு வந்தவர்கள் ஏமாற்றம்

## மட்டு. வைத்தியசாலையில் அவலம்

மட்டக்களப்பு, மார்ச் 31

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடந்த புதன்கிழமை குடற் பரிசோதனைக்கென (என்டஸ்கோப்) அனுமதிக்கப்பட்டவர்கள் சிலர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் நோயாளர்கள் தெரிவித்ததாவது:

குடற் பரிசோதனைக்காக ஏற்கனவே திகதியிடப்பட்டு கடந்த செவ்வாய்க்கிழமை வைத்தியசாலையில் அனுமதிபெற்று விடுதியில் இரவு முழுவதும் உணவின்றி தங்கியிருந்து காலையில் சோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்டபோது குறித்து பரிசோதனை அறை திறந்திருக்கவில்லை.

இந்த அறைக்கு அன்றைய தினம் பொறுப்பாக ஒதுக்கப்பட்ட தாதி உத்தியோகத்தர் குறித்த நேரத்துக்கு வேலைக்கு வராமையால் திறந்திருக்கவில்லை.

அதன் காரணமாக சோதனைக்காக வருகை தந்த மருத்துவ நிபுணர் நோயாளிகளுக்கான திகதியை அடுத்த வாரத்துக்குப் பிற்போட்டுச் சென்றுள்ளார் - என்றனர்.

இந்தப் பரிசோதனைக்குரிய அறை தேவை ஏற்படும் வேளைகளில் மாத்திரம் திறக்கப்படுவது வழமை என்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார். (ச)

union assurance
Trust in your tomorrow, today.

# வெளிநாட்டுச் சுற்றுலா

யூனியன் அஸ்சூரன்ஸ் அகில இலங்கையில் நடத்திய போட்டியில் வெற்றியீட்டி ''Hong Kong'' செல்லும் யாழ். பிராந்திய உத்தியோகத்தர்கள்.



S. வைஷ்ணவி
காப்புறுதி ஆலோசகர்,
அகில இலங்கையில் முதலாம் இடம்,
யாழ். பிராந்தியம்



N. டெனிஸ்ரா
காப்புறுதி ஆலோசகர்,
யாழ். பிராந்தியம்.



S. பிரவீனா
காப்புறுதி ஆலோசகர்,
யாழ். பிராந்தியம்.



V. துவாரகன்
காப்புறுதி ஆலோசகர்,
பருத்தித்துறைக் கிளை.



R. கலைச்செல்வி
காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
யாழ். பிராந்தியம்.



P. ஞானவேல்
காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
யாழ். பிராந்தியம்.



N. பிரகாஸ்
காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
யாழ். பிராந்தியம்.

வாழ்த்துவோர்:
பிராந்திய முகாமையாளர், விற்பனை முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள்.

(C253) (6,9,10)

# சலுகைகளுக்காக மு.கா.வுக்கு மக்கள் வாக்களிக்கவேயில்லை

## முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் கூறுகிறார்

அட்டாளைச்சேனை, மார்ச்31

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அரசில் அங்கம் வகிப்பதால், எல்லாவற்றுக்கும் தலையை ஆட்டிக் கொண்டிருக்க முடியாது. அமைச்சர் பதவிக்காகவோ வேறு சலுகைகளைப் பெறுவதற்காகவோ முஸ்லிம் காங்கிரஸுக்கு மக்கள் வாக்களிக்கவில்லை.

இவ்வாறு கூறினார் முஸ்லிம் காங்கிரஸின் பிரமுகரும் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவித் தவிசாளருமான எம்.ஏ.அன்ஸில்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அட்டாளைச்சேனை 75 வீதம் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்களைக் கொண்டதொரு பிரதேசமாகும். ஆனால், இந்தப் பிரதேசத்துக்கான அபிவிருத்திக் குழுத் தலைவராக முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமிக்க இதுவரை முடியவில்லை.

இந்த அரசில் அங்கம் வகிப்பதனூடாக தமக்கு வாக்களித்த மக்களுக்கு நன்மைகள் எதனையும் செய்ய முடியவில்லை என்றால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையும், அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உடனடியாக அரசிலிருந்து வெளியேற வேண்டும்.

பொருளாதார அமைச்சினூடாக ஒரு கிராமத்துக்கு ஒரு வேலை எனும் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கமைய பிரதேச சபை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு வேலைத் திட்டத்தினை மேற்கொள்வதற்கான அனுமதி கிடைத்ததோடு, அதற்குரிய நிதியாக 10 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கும்போது அது தொடர்பான ஒரு பதாகையை மக்களின் பார்வைக்குக் காட் சிப்படுத்துமாறு கூறப்பட் டுள்ளது. நாம் - முஸ்லிம் காங் கிரஸைப் பிரதிநிதித் துவப்படுத்தும் உறுப்பினர்கள் எனும் வகையில் அந்தப் பதாகையில் எமது கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச். எம். அஷ்ரப்பினதும் தற் போதைய தலைவர் ரவூப் ஹக்கீமினதும் படங்களையும் சேர்த்துக் காட்சிப்படுத்தியுள்ளோம்.

ஆனால், அந்தப் பதாகையில் அமைச்சர் அதாவுல்லாவின் படத்தை உள்ள டக்க வேண்டும். அவ்வாறில்லாவிடின் எமக்கு வழங்கப்பட்ட செயற்றிட்டத்துக்கான 10 லட்சம் ரூபா நிதி நிறுத்தப்பட்டுவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் எதிராளி ஒருவரின் படத்தை சேர்த்துக் கொண்டால் மட்டுமே உங் களுக்கான நிதியை வழங்கு வோம் என்று இந்த அரசால் கூறப்படுகிறது. நமது கட்சி யின் தலைவரும் இந்த அரசில் தான் அமைச்சராக உள்ளார்.

இந்தப் பதாகைகளில் அமைச்சர் அதாவுல்லாவின் புகைப்படத்தை இணைத்தால்தான் எமக்கான நிதி வழங்கப்படும் என்கிறதொரு நிலை ஏற்படுமானால், அந்த நிதி எமக்குத் தேவையில்லை.

எனவே இவ்வாறான சம்பவங்களைப் பொறுத்துக் கொண்டு இந்த அரசியலில் அங்கம் வகித்துக் கொண்டிருப்பதில் எந்த விதப் பயனும் இல்லை.- என்றார். (ச)

## டெங்கு சோதனை; 60 வீடுகளில் திடீர் பாய்ச்சல்

எருவில்,மார்ச் 31

மட்டக்களப்பு மாநகரசபை பிரதேசத்துக்கு உட்பட்ட நாவற்குடாவில் நேற்று வெள்ளிக்கிழமை சுகாதார பகுதியினர் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கைகளின்போது 60 வீடுகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன என்று கல்லடி பிரதேச பொது சுகாதார பரிசோதகர் கே.ராஜ்குமார் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளின்போது டெங்கு பரவக்கூடிய இடங்களாக சூழலை வைத்திருந்ததுடன் டெங்கு குடம்பிகளும் கண்டுபிடிக்கப்பட்டு 3 வீட்டு உரிமையாளர்களின் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச-31-21)

## எரிபொருள் மானியம்; 652 குடும்பங்கள் தகுதி

எரிபொருள் விலையேற்றத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் எரிபொருள் மானிய உதவித் திட்டத்தின் கீழ் இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் 652 குடும்பங்கள் தகுதி பெற்றுள்ளன. (ச)

# தொழில் சந்தைக்கு ஏற்ப பாடத்திட்டங்கள்

## கிழக்குப் பல்கலை துணைவேந்தர் கூறுகிறார்

> **பட்டதாரிகள் வேலையற்று இருப்பதால், தற்போது கல்வி கற்கும் மாணவர்களின் பாடத்திட்டம் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ள கூடிய வகையில் மறு சீரமைக்கப்படவுள்ளது.**

எருவில்,மார்ச் 31

தொழில் சந்தைக்கு ஏற்ப சிறந்த திட்டத்தை பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களை ஒன்றிணைத்து மேற்கொள்ள உள்ளேன்.

அந்தவகையில் தான் வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து உடனடி வேலைவாய்ப்பை பெறக்கூடிய வகையில் புதிய கற்கை நெறிகளையும், பாடங்களையும் மாணவர்களுக்கு வழங்க ஏற்பாடாகியுள்ளது. இந்தத் திட்டம் குறித்து நேற்றுமுன்தினம் உயர் கல்வி அமைச்சருடனும் விவாதித்துள்ளேன்.

இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கி.கோவிந்தராஜா கூறி னார்.

கிழக்குப் பல்கலைக்கழகம் நீண்டகாலம் பதில் துணைவேந்தரின் கீழும் சிறிது காலம் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் கீழும் நிர்வகிக்கப்பட்டுவந்த நிலையில், துணைவேந்தர் கி. கோவிந்தராஜா கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு நியமிக்கப்பட்டார்.

தனது கடமையைப் பொறுப்பேற்ற பின்னர் முதல் தடவையாக உயர்கல்வி அமைச்சரை நாடாளுமன்றத்தில் சந்தித்து கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின்போது, தற்போது கிழக்குப் பல்கலைக்கழகம் சீராக இயங்குகின்ற காரணத்தால் தன்னாலான அனைத்து உதவிகளையும் வழங்க தயாராக உள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க உறுதியளித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் கூடுதலான பட்டதாரிகள் வேலையற்று இருப்பதால், தற்போது கல்வி கற்கும் மாணவர்களின் பாடத்திட்டத்தை வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள கூடிய வகையிலும், தொழில் சந்தைக்கு ஏற்ற வகையில் மறு சீரமைக்க வேண்டும் என்று உயர் கல்வி அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கைக்கமைய அதற்கான சிறந்த திட்டத்தை பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களை ஒன்றிணைத்து மேற் கொள்ள உள்ளேன் என்று துணைவேந்தர் கி. கோவிந்தராஜா உறுதி அளித்துள்ளார். (ச-31)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை நாகேஸ்வரி (பேபி)



மீசாலையைப் பிறப்பிடமாகவும், இராமநாதபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகேஸ்வரி கடந்த (26.03.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா வேலுப்பிள்ளையின் (இளைப்பாறிய இ.போ.ச. சாலை பரிசோதகர்) - கிளிநொச்சி) அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - -மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர் களான கந்தையா - மீனாட்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், கலைவாணி (இராமநாதபுரம்), கலைச்செல்வன் (கனடா), கலைவாணன் (கனடா), கலைறங்கன் (பிரான்ஸ்), கலைமதி (கனடா), கலைறூபி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும், சிவசுப்பிரமணியம் (இராமநாதபுரம்), விஜயலட்சுமி (கனடா), சுதா (கனடா), நளினி (பிரான்ஸ்), முரளிதரன் (கனடா), ஜீவாதரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், இரத்தினசிங்கம், தங்கேஸ்வரி (பிரான்ஸ்), ஸ்ரீஸ்கந்தராசா, வரதராஜா, காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசையா, நாகராசா மற்றும் சோமசுந்தரம் (இளைப்பாறிய கிளை மேற்பார்வையாளர் - சாவகச்சேரி M.P.C.S), கனகசபை (உத்தரவுபெற்ற நில அளவையாளர் - பகுதிநேர விரிவுரையாளர் தொழில்நுட்ப கல்லூரி, யாழ்ப்பாணம்). கந்தசாமி (இளைப்பாறிய சாலைப் பரிசோதகர் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், தனுஜன், தனுசிகா (இராமநாதபுரம் ம.வி. மாணவி), நுபிஷனா (கனடா), லகீஷ், லபீஸ், நிஷானா, சபீனா, அபீனா, லிஷானா, லக்ஷனா (அனைவரும் கனடா), சுவேத்தன், சுவேதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 316/5, பழைய கண்டி வீதி, இராமநாதபுரம் அவரின் இல்லத்தில் நாளை (01.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மம்மில் குளம் இராமநாதபுரம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

316/5, பழைய கண்டி வீதி,
இராமநாதபுரம், கிளிநொச்சி.

தகவல்:
அன்புக் கணவர் - **வேலுப்பிள்ளை,**
**குடும்பத்தினர்.**

(16240) (45-9-6)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# உரிமையாளரற்ற மாடுகள் புங்குடுதீவில் ஏராளம்

## ஆனால் இறைச்சிக்கு வெட்ட அனுமதி அவசியம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

புங்குடுதீவுப் பிரதேசத்தில் பெரும் பாலான மாடுகள் உரிமையாளர் அற்ற கட்டாக்காலி மாடுகளாகவே காணப்படுகின்றன.எனவே இறைச்சிக்காக அவற்றை பிடித்து விற்பனைக்கு அனுமதிக்கும்போது கிராம அலுவலர்கள் உரிய விசாரணை மேற்கொண்ட பின்னரே அனுமதிப்பர். இவ்வாறு வேலணை பிரதேச செயலர் கே. பிரபாகரமூர்த்தி அறிவித்துள்ளார்.

இறைச்சிக்காக புங்குடுதீவில் வெட்டப்படும் மாடுகள் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புங்குடுதீவில் பெருந் தொகையான மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன.

அந்த மாடுகளில் பெரும் பாலனவை உரிமையாளர் அற்ற கட்டாக்காலி மாடுகளாகக் காணப்படுகின்றன.

மாட்டிறைச்சிக் கடைக்கென அவற்றைப் பிடித்து விற்பனைக்கு அனுமதிக்கும்போது குறித்த மாட்டின் அடையாளத்தை கூறுவதுடன் குறித்த அடையாளத்துடன் பலருக்குச் சொந்தமான மாடுகள் காணப்படுவதனால் மாடுகளை விற்பதற்கு அனுமதி வழங்கும் போது கிராம அலுவலர்கள் உரிய முறையில் விசாரணை மேற்கொண்ட பின்பே அனு மதி வழங்க வேண்டியுள்ளது. இதனால் காலதாமதம் ஏற்படும். எனவே உரிமையாளர்களைச் சரியாக இனங்கண்டு குறுகிய காலத்துக்குள் செய்து கொடுப்பது என்பது கடினமான தாகும்.

எனவே கிராம அலுவலர்கள் சான்றுப்படுத்தும் வரை காத்திருக்க வேண்டும். அத்துடன், ஒரே குறியுடைய மாடுகள் பலரால் உரிமை கோரப்பட்ட சம்பவங்கள் ஏற்கனவே பலமுறை இடம் பெற்றுள்ளதால் அனுமதி நடைமுறையில் கவனமாக இருக்க வேண்டும் என்று பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

# ஒழுக்கநெறிப் பிறழ்வுப் போருக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும்

இன்று விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வளர்ச்சி பெற்றுள்ளது என்பது உண்மைதான். ஆனால் இத்தகைய முன்னேற்றங்கள் மனித வாழ்வை மேம்படுத்தியுள்ளதோ என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். மனிதனுக்கு வசதிகளைப் பெருக்கி, இலகுவான முறையில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள உதவுகின்றது. நுகர்வுக் கலாசாரத்தின் தாக்கங்கள், சமூகத் தொடர்புச் சாதனங்களின் ஆக்கிரமிப்பு மனிதனை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும் கருவிகளாகவும் மாறிவிட்டன. குறிப்பாக கணினித் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட வளர்ச்சி இன்றைய இளையோரைச் சீரழித்து தவறான வழிகளில் சுய இன்பம் தேடத் தூண்டுகிறது. இதன்மூலம் ஆரோக்கியமற்ற உறவுகள், தீயநடத்தைகள் உருவாக வழி சமைகின்றது. நேரிய வழியில் தொடர்பு சாதனங்களைத் கையாளத் தவறுமிடத்து நன்மையை விடத் தீமையையே அது மனிதனுக்கு விளைவிக்கின்றது. முப்பது வருடப் போரின் பின்னர் போர்வடுக்களைத் தாங்கி வாழும் எமது சமூகம் இன்னொரு ஒழுக்கநெறிப்பிறழ்வு போருக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இது போரின் பின் விளைவுகளா இல்லை திட்டமிடப்பட்டு புறச் சக்திகளால் முன்னெடுக்கப்படும் செயற்திட்டமா என்பது புரியவில்லை. கட்டுப்பாடற்ற, கடிவாளமில்லாத வாழ்க்கை முறையை இளையோர் பின்பற்றுவதன் மூலம் அழிவையே தங்களுக் கும் தாங்கள்வாழும் சமூகத்துக்கும் தேடுகிறார்கள் என்பதை உணர மறுக்கின்றனர்.




ஆன்மிகம் இல்லாத, உலகியல் இன்பம் சார்ந்த மனநிலையினால் உந்தப்பட்டு வாழ்வதனால்தம் மனதில் தோன்றும் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப வாழுகின்றனர். இதனால் குடிபோதை, போதை வஸ்து, தகாத உறவுகள், வன்புணர்வு போன்ற தீய பழக்கங்களால் ஆள்கொள்ளப்பட்டு அலைக்கழிக்கப்பட்டு அவல வாழ்வு வாழ்கின்றனர். குடும்பத்தின் ஆன்மிகம் கட்டியெழுப்பப்படும் போதுதான் ஓரளவு இத்தகைய ஒழுக்கக் கேடான கலாசாரச் சீரழிவுகளைத் தடுக்க முடியும். இன்று ஆலயங்களும் கோயில்களும் புதுப் பொலிவோடு அழகு படுத்தப்பட்டு காட்சியளிக்கின்றன. ஆனால் ஆண்டவன் வாழுகின்ற கோயிலாகிய இதயங்களை அறநெறியில் கட்டியெழுப்ப உதவும் மறைசார்ந்த கல்விக்கு அல்லது அறநெறிக் கல்விக்கு எவ்வளவு பணம் செலவிடப்படுகின்றது? என்பது கேள்விக் குறியே. ஒழுக்க நெறிப் பிறழ்வுப் போரை எதிர்கொள்ளப் பெற்றோர்கள், பெரியோர்கள் சமூக விழிப்புணர்வு- ஆன்மிக பரப்புரைகளை சிறுவர், இளையோர் மத்தியில் பரப்பவேண்டும். இறைவனை மையப்படுத்திய ஆன்மிகச் சூழலை ஏற்படுத்த முதன்மை அளிக்க வேண்டும். இதுவே தவக்காலத்தின் புனித முயற்சியாக அமைதல் வேண்டும்.

அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி,
விரிவுரையாளர்.

# இயற்கைப் பசளை பொதி விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

நல்லூர் பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்ட இயற்கைப் பசளைப் பொதிகள் விவசாயிகளுக்காக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இயற்கைக் கழிவுகளை உக்க வைத்து தரமான உரமாக குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதால் விவசாயிகள், மரக்கறிப் பயிர்ச்செய்கையாளர்கள் இவற்றைப் பெற்றுப் பயன்பெறலாம்என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-14)

# ஸ்ரீராம நவமி வழிபாடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். சீரடி ஸ்ரீசாயி சங்கரா ஆலயத்தின் ஸ்ரீராம நவமி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கணபதி ஓமம், மூலமூர்த்தி அபிஷேகம், பாதபூசையுடன் கூடிய ஆராத்தி நடைபெறவுள்ளன.

(ந-14)

* * *

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை ராம நவமி நடைபெறவுள்ளது.

இன்று காலை 108 சங்காபிஷேகமும் விசேட பூசையும் அதனைத் தொடர்ந்து இராமர் தாலாட்டுப் பாடல்கள் பாடப்பட்டு சுவாமி வீதியுலா நிகழ்வும் இடம்பெறும்.

இரவு கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸின் சிறப்புச் சொற்பொழிவும், பண்டிதர் பொன் சுகந்தன் தலைமையில் 'வாழ்க்கைக்குச் சிறந்தது இராமாயணமா மகாபாரதமா? என்னும் தலைப்பில் பட்டிமன்றமும் அதனைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (ந-8)

* * *

மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் ராம நவமி பஞ்சராட்டண கீர்த்தனை இன்று இடம்பெறவுள்ளன. (ந)

# கண்ணீர் அஞ்சலி

எமது சிறுவர் இல்லத்தினை நடத்துவதற்குப் பெரும் பங்களிப்புச் செய்துவரும் திரு.தேவா (பிரான்ஸ்) அவர்களின் நெருங்கிய உறவினரான கோயிலாக்கண்டி - யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட

**நமசிவாயம் சதாசிவம்**

*25.03.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.*
*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் திரு.தேவா அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினை எமது இல்லத்தின் குழந்தைகள் சார்பில் தெரிவித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி!...சாந்தி... சாந்தி!.....*

தலைவர், பணியாளர்கள்,
இல்லக்குழந்தைகள்
மகாதேவா ஆச்சிரமச்
சைவச் சிறுவர் இல்லம்.

ஜெயந்திநகர்,
கிளிநொச்சி. (14087) (2-6-7)

# வெள்ளோட்டம்

வடமராட்சி,மார்ச் 31

கரவெட்டி கிழக்கு, யார்க்கரு சித்தி விநாயகர் கோயிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

உள்ளூர், புலம்பெயர் மக்களின் பேருதவியுடன் சுமார் 50 லட்சம் ரூபா செலவில், திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தைச் சேர்ந்த சிற்பாசாரியார் ஜி. ஜெயப்பிரகாஷ் தலைமையிலான குழுவினர் இந்தப் புதிய சித்திரத்தேரை நிர்மாணித்துள்ளனர். ( ந-8)

# பரிசுத்த வார வழிபாடுகள்

வடமராட்சி, மார்ச் 31

பருத்தித்துறை- கட்டைவேலி சேகரப் பிரிவிலுள்ள தேவாலயங்களில் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை பரிசுத்த வார வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

இந்த வழிபாடுகளை சேகர முகாமைக் குரு அருட்திரு எஸ். டபிள்யூ.தேவகுமார் நடத்துவார். (ந-8)

# வேலிப் பிரச்சினைகளை அதிகாரிகள் தீர்க்க வேண்டும்

யாழ்ப்பாணம்,மார்ச் 31

புதிய வருமானங்களை இனம் காணவும் நிலுவைகளை அறவிடவும் வருமான மேற்பார்வையாளர் முன்வரவேண்டும்.

வருமான மேற்பார்வையாளர் என்ற பதவி உள்ளூராட்சி சபையின் முதுகெலும்பு போன்றது இவ்வாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ. பிரணவநாதன் தெரிவித்தார்.

வருமான பரிசோதகர்- வருமான மேற்பார்வையாளர்களுக்கான அபிவிருத்திக்குழுக்கூட்டம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் அண்மையில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரணவநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வருமான மேற்பார்வையாளர் நலன்கள், பதவி உயர்வுகள் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளர் ஆராய்ந்து வருகின்றார். வருமான மேற்பார்வையாளர்கள் வருமானத்தையும், வரிகளையும் உரிய காலத்தில் அறவிட வேண்டும்- என்றார்.

வலி. மேற்கு பிரதேச சபையின் சிரேஷ்ட வருமான அதிகாரி ரி.எஸ். சிறிகாந்தன். ''வேலிப்பிரச்சினை, ஒழுங்கைப் பிரச்சினை மற்றும் பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வருமானவரி அதிகாரிகள் பிரதேசத்துக்கு உதவவேண்டும். தற்போது எமது அலுவலர்களை அழைத்துக் கலந்துரையாடி பல பிரச்சினைகளுக்குத்தீர்வு காணப்பட்டுள்ளது.

எனவே வருமான மேற்பார்வையாளர்களின் பதவி உயர்வு, சப்பாத்து, உடை, அங்கிகள் போன்றவற்றையும் உரிய காலத்தில் வழங்கி உதவுங்கள்'' - என்றார். (எ)

# மரண அறிவித்தல்



**கணேசமூர்த்தி சந்திரசேகரம்**

கம்பஹாவை பிறப்பிடமாகவும், கட்டைக்காடு, தர்மபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட லொக்கா என அழைக்கப்படும் கணேசமூர்த்தி சந்திரசேகரம் (29.03.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி - மெனிக்கா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லையா - மகேஷ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், பேபி என அழைக்கப்படும் சறோஜினிதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற வாசுகி மற்றும் அனுசுகி (அம்பன்) வசந்தகேசன் (தர்மபுரம்), கிருஷாந் ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசசிறி, யசிந்தினி, துசான்தன் ஆகியோரின் மாமனும், ததுர்சன், ததுர்சனா, பபிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.03.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தர்மபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 112, தர்மபுரம்,
பரந்தன். (சி/261)(45..)

# மோ. சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டு சிறுமி காயம்

தென்மராட்சி, மார்ச் 31

மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆறு வயதுச் சிறுமி, திடீர் பிரேக் பிடித்தபோது தூக்கி வீசப்பட்டதில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இடம்பெற்றது. ஏ-9 வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிளில் வீதியின் குறுக்கே சைக்கிளில் வந்த சிறுவர்களைக் காப்பாற்ற திடீர் பிரேக் போட்டபோது மோட்டார் சைக்கிளில் அமர்ந்திருந்த சிறுமி தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த வைத்தியநாத சர்மா யாகினி (வயது- 6) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டார். (ம-9)

# 5 ஆம் நாள் நினைவையொட்டி மதிய போசன அழைப்பு

**அந்தோனிப்பிள்ளை**
**றெனோல்ட் எல்ரன்**
(பல்கலைக்கழக மாணவன்)



அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 01.04.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறுகின்ற பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.
கட்டைக்காடு, முள்ளியான். (14086) (2-6-7)

# மாற்றுத் திறனாளர்களின் திறன் வெளிப்பாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 31

மாணவர்கள் மாற்றுத் திறனாளர்களாக இருந்தால் தமது திறன்களை எவ்வாறு வெளிப்படுத்த முடியும் எனும் நோக்குடனான சமூக விழிப்புணர்வு நிகழ்வுகளை கொக்குவில் பொது நூலகமும் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கமும் இணைந்து நடத்தின.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் பயனாளிகளாகவும் உறுப்பினர்களாகவும் உள்ள மாற்றுத் திறனாளர்கள் மாணவர்கள் மத்தியில் இந்த விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தினர்.

கொக்குவில் பொது நூலகர் திருமதி. பி.பாலபாஸ்கரன் தலைமையில் இந்த நிகழ்வு கொக்குவில் நாமகள் வித்தியாலயம், கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் இடம்பெற்றது.

மாற்றுத்திறனாளர்கள் சமூகத்தில் ஒதுக்கப்படுவதால் அவர்கள் எதிர்கொள்ளும் உளத்தாக்கங்கள் மற்றும் சமூகப் பிரச்சினைகள், மாணவர்கள் மாற்றுத்திறனாளர்களாக இருந்தால் சக மாணவர்கள் அவர்களை எவ்வாறு ஊக்குவிப்புச் செய்ய வேண்டும் போன்றவை தொடர்பான விளக்கவுரைகளும் வழங்கப்பட்டன. (வ-14)



## சகலகலா வித்தியில் கணினிகள் திருட்டு

தென்மராட்சி, மார்ச். 31

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் மாணவர் பயிற்சிக்கென வைக்கப்பட்டிருந்த நான்கு கணினிகள் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

வித்தியாலய கணினி அறை ஜன்னல்களை உடைத்து உட்சென்ற திருடர்கள் அங்கிருந்த கணினி மற்றும் அதனுடன் இணைந்த உபகரணங்களை திருடிச் சென்றுள்ளனர்.

நேற்றுக் காலை வித்தியாலயத்தைச் திறந்த போது கணினி அறை உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்த அதிபர் தென்மராட்சி கல்வி வலயத்திலும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினால் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட பாடசாலை கடந்த ஜனவரி தொடக்கம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

பெற்றோர், பொதுமக்கள் தமது பகுதியில் உள்ள பாடசாலைகளைப் பாதுகாக்கத் தவறின் பெறுமதி மிக்க பொருள்களை மாணவர்களின் நலன் கருதி வழங்குவதில் அர்த்தமில்லை எனத் தெரிவித்தனர். (ம-9)

### தேவாலயங்களில் தவக்கால வழிபாடு

வடமராட்சி, மார்ச் 31

பருத்தித்துறை கட்டைவேலி சேகரப்பிரிவில் தவக்காலத்தை ஒட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அனைத்துத் தேவாலயங்களிலும் குருத்தோலைப் பவனியும், வழிபாடும் நடைபெறவுள்ளதாக சேகர முகாமைத்துவ அருட்திரு எஸ்.டபிள்யூ. தேவகுமார் தெரிவித்துள்ளார். (வ-8)

### யோகா பயிற்சி அறிமுக உரை

சுழிபுரம், மார்ச் 31

அருட்தந்தை தத்துவ ஞானி வேதாந்திரி மகரிஷினால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்விற்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள் இலவச அறிமுக உரை நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும் பயிற்சிகள் நாளை மறுதினம் தொடக்கம் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும். (வ-28)

### விளையாட்டு விழா

கைதடி பராசக்தி பாலர் பகல் இல்லத்தின் வருடாந்த விளையாட்டு விழா இன்று காலை 9 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இல்லத்தின் வளர்ச்சிக் குழுத் தலைவி திருமதி பொ. ஸ்ரீரஞ்சனாதேவி தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக் கைதடி முத்துக் குமாரசுவாமி வித்தியாலய அதிபர் சி. பவளகுமார் கலந்து கொள்வார். (ம-14)

## குறிகாட்டுவானில் தவம் கிடக்கும் கடற்பாதையைத் திருத்தித் தருக

### வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 31

குறிகாட்டுவான் இறங்குதுறைப் பகுதியில் இரண்டு வருடத்துக்கு மேலாகத் தவம் கிடக்கும் கடற்பாதையை புனர்நிர்மாணம் செய்து சேவையில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நயினாதீவு இறங்கு துறைக்கும் குறிகாட்டுவான் இறங்கு துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்துவதற்கான இந்த கடற்பாதை கடந்த இரண்டு வருடத்துக்கு முன்னர் திருகோணமலையில் இருந்து எடுத்துவரப்பட்டது.

இந்தப் பாதைக்குரிய உபகரணங்கள் யாவும் வெட்ட வெளியில் போடப்பட்டதால் கவனிப்பாரின்றி மழையில் நனைந்தும் துருப்பிடித்தும் காணப்படுகிறது.

இந்தப் பாதையின் முழுப் பாகமும் துருப்பிடித்து ள்ளதால் அதனை சேவைக்கு பயன்படுத்த முடியாது என முதலில் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இந்த உபகரணங்களைப் பொருத்தி அமைத்து திருத்தம் செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில் கடற்பாதையை புனரமைத்தாலும் கூட அதை உடனடியாக சேவைக்கு அமர்த்த முடியாது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிகாட்டுவான் இறங்குதுறை கடற்பாதைக்கு ஏற்றவாறு புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டும்.

குறிப்பாக இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கு குறைந்தது இன்னும் ஆறு மாதங்கள் தேவை.

குறிகாட்டுவான் மற்றும் நயினாதீவு இறங்குதுறைகள் கடற்பாதையை கரைக்கு கொண்டு செல்லக் கூடியதாக புனர்நிர்மாணம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.- என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இந்த ஆண்டுக்கான வருடாந்த திருவிழா அரம்பமாவதற்கு முன்னர் இந்த கடற்பாதைச் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-17)

## ஓய்வூதியத் திட்டத்தில் மேலும் 11 பேர் இணைவு

யாழ்ப்பாணம்,மார்ச் 31

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பதினொரு பேர் இந்தவருடம் சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறவுள்ளதாக யாழ்.மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இவர்களது ஓய்வூதிய தினத்துக்கு முன்னர் கடிதங்கள் யாழ்.மாவட்ட செயலகத்தினால் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியப் பிரிவால் தென்மராட்சிப் பிரதேச சமூக சேவைகள் பிரிவுக்கு விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஓய்வூதியம் கிடைக்கவுள்ளோரின் விவரம் வருமாறு:

சிவசுப்பிரமணியம் நாகம்மா - கரம்பைக் குறிச்சி, சிதம்பரநாதன் வேதாரணியம் - மந்துவில் கிழக்கு, சுப்பிரமணியம் த்வராசா - கச்சாய், செல்லத்துரை கனகலிங்கம் - நுணாவில் மேற்கு, சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியம் -கிராம்புவில் , சிவசுப்பிரமணியம் ஜெயராணி - உசன், நாகேஸ்வரன் தேவகாந்தம் - சரசாலை தெற்கு, நமசிவாயம் சிவஞானசுந்தரம் - அல்லாரை தெற்கு, சுப்பையா பாக்கியரத்தினம்- சரசாலை தெற்கு, சின்னத்தம்பி இராசரத்தினம் - சரசாலைதெற்கு, செல்வன்தேவநாயகி - சரசாலை தெற்கு. (ம-9)

## குருத்தோலை ஞாயிறு சிறப்பு வழிபாடு நாளை

கொழும்புத்துறை,மார்ச்31

தவக்காலத்தில் கிறிஸ்தவ மக்களால் முன்னெடுக்கப்படும் குருத்தோலை ஞாயிறு சிறப்பு வழிபாடு நாளை காலை அனைத்து கிறிஸ்தவ, கத்தோலிக்க தேவாலயங்களிலும் இடம் பெறவுள்ளது.

இயேசுபாடுகளை ஏற்பதற்கு முன் ஒலிவ் கிளைகளைத் தாங்கியபடி ஓசான்னா கீதத்துடன் மக்கள் ஜெருசலேம் தேவாலயத்துக்கு அழைத்துச் சென்றதை நினைவுபடுத்தும் முகமாக இந்த குருத்தோலை ஞாயிறு அனுசரிக்கப்படுகிறது.

**அனைத்து கிறிஸ்தவ, கத்தோலிக்க தேவாலயங்களிலும் இடம் பெறும்.**

ஆசீர்வதிக்கப்பட்ட குருத்தோலைகளை ஏந்திச் சென்று ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியுடன் தவக்காலத்தின் புனிதவாரம் ஆரம்பமாகி உயிர்ப்பு ஞாயிறுடன் நிறைவுபெறும். (ம-135)

## எச்சரிக்கையின் பின்னர் இளைஞனுக்கு விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 31

பொலிஸாரைத் தாக்க முயன்றார் என்று கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த இளைஞன் யாழ். நீதிமன்றால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கு நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பிரஸ்தாப சந்தேக நபர் மூன்று தடவைக்கு மேல் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார். எனினும் பொலிஸார் குற்றப்பத்திரம் தாக்கல் செய்திருக்கவில்லை. இது பெரிய குற்றச்சாட்டு இல்லை என பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். அதையடுத்து அவர் நீதிமன்றால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த மாதம் யாழ். பெரியகோயிலை அண்மித்து பாடசாலை சென்று வந்த தனது தங்கையுடன் வீதியில் நிற்கும் இளைஞர்கள் சிலர் அநாகரிகமாக நடந்து கொள்கிறார்கள் என்று சந்தேக நபர் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

எனினும் பொலிஸார் வீதியில் நிற்கும் சம்பந்தப்பட்ட இளைஞர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால்மீண்டும்பொலிஸ்நிலையத்துக்குச் சென்று அது சம்பந்தமாக பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்த நிலையில் அவர் பொலிஸாரைத் தாக்க முயன்றார் என்று கூறி குறித்த நபரைப் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த அவர் மீதான வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதே அவர் எச்சரிக்கை செய்து விடுதலை செய்யப்பட்டார். சந்தேக நபர் சார்பாக சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் ஆஜராகியிருந்தார். இந்த நிலையில் பாடசாலை சென்று வந்த மாணவியுடன் அநாகரிகமாக நடந்து கொண்டமை தொடர்பாக வழக்கு நடைபெற்று வருகிறது. (ம-4)

## பெண் தலைமைக் குடும்பங்களுக்கு சுயதொழிலுக்கான கொடுப்பனவுகள்

வடமராட்சி, மார்ச் 31

யாழ். உதயதாரகை மகளிர் சம்மேளனம் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் 16 குடும்பங்களுக்கும் சுயதொழில்களுக்கான உபகரணங்களை வழங்கியுள்ளது.

இந்தச் சம்மேளனம் யாழ். குடாநாட்டில் மேற்கொண்டு வரும் சுயதொழில் உதவித் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டது 16 குடும்பங்களை வடமராட்சி வடக்குப் பிரிவில் தெரிவு செய்தது.

தெரிவு செய்யப்பட்ட குடும்பங்கள் சுய தொழில்களை மேற்கொள்ள வசதியாகத் தையல் இயந்திரங்கள், கடற்றொழில் உபகரணங்கள், கோழி, ஆடு வளர்ப்புக்கான உதவிகள் என்பன வழங்கப்பட்டன.

சுயதொழில் உதவிக்குத் தெரிவான பயனாளிகளில் இ.பரமேஸ்வரா, பு.ஆர். கயற்கண்ணி, சு.நிர்மலாதேவி ஆகிய மூவருக்கும் தையல் இயந்திரங்களும் கு.இரத்தினம்மா, கெ.ஜெகதீஸ்வரி, ப.கனகாம்பிகை, மு.விமலாதேவி, சோ.மங்கையர்க்கரசி, கு.ஜீவராணி, கு.கலாதேவி, ச.ஜெட்தா ஆகிய எட்டுப் பேருக்கும் கடற்றொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

ஏனையோரில் சீ.பராசக்தி, பா.லலிதாமணி, பொ.விஜயலட்சுமி, க.சல்பேற்றம்மா ஆகிய நான்கு பேருக்கு ஆடு வளர்ப்பதற்காக நல்லின ஆடுகளும் ச.தனுசியாவுக்கு கோழி வளர்ப்பதற்கான கோழிகளும் வழங்கப்பட்டுள்ளன. வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக உதயதாரகை மகளிர் சம்மேளனம் தொடர்ந்தும் மக்களுக்கு உதவி வழங்கி வருகின்றது. (ம-8)

### ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

தெல்லிப்பழை, பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயத்தில் 157 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

ஆண்டு விழாவில் கதிர்காமத்தம்பி மண்டபம், புனரமைக்கப்பட்ட பொன்னையா கலையரங்கு, கணினிக்கூடம், மைதான பார்வையாளர் கூடம் என்பன திறந்து வைக்கப்படும். தொடர்ந்து 'கனகதாரா' மலர் வெளியீடு நடைபெற்று பரிசளிப்புடன் நிகழ்வுகள் நிறைவுறும். (ஒ)

## சுன்னாகத்தில் கஞ்சாவுடன் தென்பகுதி வாசி கைது

வலி. வடக்கு, மார்ச் 31

சுன்னாகம் பொலிஸாரினால் சுன்னாகம் பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றில் இருந்து நேற்று சுமார் 700 கிராம் கஞ்சா, கைப்பற்றப்பட்டுள்ளது. பொது மக்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.கங்காநாத் தலைமையில் சென்ற குழுவினரால் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

புதிய கட்டடம் கட்டப்படும் இடத்தில் இருந்து நேற்று பொலிஸார் கஞ்சாவைக் கைப்பற்றியதுடன் தென்பகுதியைச் சேர்ந்த ஒருவரையும் கைது செய்துள்ளார்கள். (ஏ-86)

# புலம்பெயர் தமிழர்களுக்கு சுவிஸில் கொலை அச்சுறுத்தல்

## இலங்கை அரச சார்பு குழுக்களே பின்னணியில்

சூரிச், மார்ச். 31

சுவிட்சர்லாந்தின் பல நகரங்களில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் சிலருக்கு இலங்கை அரசுக்கு எதிரான கருத்துக் கொண்டவர்கள் எனக் கூறி உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. சுவிஸ் பத்திரிகையான ''20 மினுட்டன்'' இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

**நாட்டை பாதுகாப்பதற்கான கூட்டமைப்பு என்ற பெயரில் அறியப்படும் ஒரு தமிழர் குழுவினாலேயே இந்த அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளது.**


கடிதங்கள் மற்றும் சீடிகள் மூலமாகத் தங்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக சுவிட்சர்லாந்தில் வாழ்ந்துவரும் புலம்பெயர் தமிழர்களில் பலர் சுவிட்சர்லாந்து சமஷ்டி புலனாய்வுத்துறைக்கு முறைப்பாடு செய்துள்ளனர். இலங்கை அரசுக்கெதிரான போக்கைக் கடைப்பிடித்தால் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று இந்த எச்சரிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அப்பத்திரிகை கூறியுள்ளது.

நாட்டை பாதுகாப்பதற்கான கூட்டமைப்பு என்ற பெயரில் அறியப்படும் ஒரு தமிழர் குழுவினாலேயே இந்த அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்தின் சூரிச்,பேர்ண் மற்றும் பல நகரங்களில் வாழ்கின்ற புலம்பெயர் தமிழ் மக்களுக்கு இந்த அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன என்பது ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காலப்பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்ட புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு இலங்கை அரசுக்கு ஆதரவான குழு ஒன்றினால் விடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை அரசை அவதூறு செய்து டுவிட்டர் மற்றும் பேஸ்புக் இணையத் தளங்களில் வரும் விடயங்களும் மிகக் கவனமாகக் கண்காணிக்கப்பட்டு கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும்அந்த அறிவித்தல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதிரியான அச்சுறுத்தல் அறிவித்தல்கள் ஆஸ்திரேலியா, கனடா, லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் அனுப்பப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. (ப)

# மாட்டினார் மேர்வின் சில்வா



கொழும்பு,மார்ச் 31

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருக்கும்போது எவராலும் தன்னை ஒன்றும் செய்யமுடியாதென அமைச்சர் மேர்வின் சில்வா கூறிய கருத்து தொடர்பில் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் கருத்துத் தொடர்பில் அவரிடமிருந்து விளக்கம் கோருமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.'

அலரிமாளிகையில் நேற்று முன் தினம் ஒன்றுகூடிய மத்திய குழு, அமைச்சர் மேர்வின் சில்வாவின் விவகாரம் தொடர்பில் ஆழமாகக் கலந்துரையாடினர். அமைச்சர் மேர்வின் சில்வாவின் கருத்தால் கட்சிப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதாக ஜனாதிபதி ஆத்திரத்துடன் கூறியதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் கூறின.

சிகிரியாவுக்கு சுனாமி வந்தாலும் கூட, 'ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருக்கும்வரை எனக்கு எதிரான எந்த சுனாமியும் விலகிச் செல்லுமென நான் உறுதிபடக் கூறுகின்றேன்' என ஆர்ப்பாட்டமொன்றில் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-

தான் தவறு எதுவும் செய்யாத நிலையில், எந்த விசாரணைக்கும் முகம்கொடுக்கத் தயார் என அமைச்சர் மேர்வின் சில்வா கூறினார்.

'நான் தவறு எதுவும் செய்யவில்லை. அதனால், எந்த விசாரணைக்கும் முகம்கொடுக்க நான் தயார். அநீதியான எந்தத் தீர்மானத்தையும் ஜனாதிபதி மேற்கொள்ளமாட்டார் என நம்புகிறேன் என்பதையே நான் கூறினேன். அது உண்மை. அவர் அநீதியான எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ளமாட்டார். அவரை நான் நம்புகிறேன்' என அமைச்சர் மேர்வின் சில்வா கூறினார். (த)

# ஆஸியிலிருந்து பசுக்கள்



2015ஆம் ஆண்டுக்கு முன்னர் பால் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டத்துக்காக ஆஸ்திரேலியாவிலிருந்து 501 கறவை இன மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் ஆலோசனைக்கு அமைய இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி கறவை மாடுகள் கொழும்பு துறைமுகத்தில் வந்திறங்கின.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, கால்நடை வள அபிவிருத்தி அமைச்சின் பிரதி அமைச்சர் மித்திரபால, பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம், ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான், கால்நடை வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் டி.எம்.கேந்திரகம, கால்நடை அபிவிருத்தி அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்த மாடுகளை இறக்குமதி செய்யும் நிகழ்வில் கலந்துகொண் டனர்.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட ஆஸ்திரேலியாவின் 501 கறவை இன மாடுகளும் போபத்தலாவ பண்ணைக்கு கொண்டு செல்லப்பட்டன. (த)

# பொலிஸாரின் கவனயீனமே குற்றம் அதிகரிக்கக் காரணம்

பொலிஸாரின் கவனயீனமே நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கான பிரதான காரணம் என சட்டமா அதிபர் ஈவா வனசுந்தர குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலிஸ் உத்தியோகத்தர்கள் குற்றவாளிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுத்தால் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியும். பொலிஸாரின் அசமந்தப் போக்கு நாட்டின் நீதிக் கட்டமைப்பை கேள்விக் குறியாக மாற்றியுள்ளது.

குற்றச் செயல்கள் தொடர்பில் பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகள் ஆவணமொண்றில் சேகரிக்கப்பட உள்ளது. குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறும் பொலிஸாரை கடுமையாகத் தண்டிக்க வேண்டும்.

குற்றவாளிகளை கைது செய்யாமை, சாட்சியங்களை சமர்ப்பிக்காமை, வழக்கு ஆவணங்களை தயாரிக்காமை உள்ளிட்ட பல்வேறு வழிகளில் பொலிஸார் குற்றவாளிகளுக்கு துணை போகின்றனர்-என்றார். (த)

# ஜெனிவா தீர்மானத்தால் எமக்கு நெருக்கடியில்லை

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 31

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட வாய்ப்பில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

**தற்போதோ அல்லது எதிர்காலத்திலோ பொருளாதார தடைகள் விதிக்கப்படக் கூடிய சாத்தியமில்லை.**

தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காரணத்தினால், தற்போதோ அல்லது எதிர்காலத்திலோ பொருளாதார தடைகள் விதிக்கப்படக் கூடிய சாத்தியமில்லை. இது தொடர்பில் எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பல நாடுகளுக்கு எதிராக மனித உரிமைகள் சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 91 இல் 39 தீர்மானங்கள் இஸ்ரேலுக்கு எதிரானவை.

எனினும், இதுவரையில் இஸ்ரேலுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படவில்லை. இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சொற்பளவிலான வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

எனவே, பலர் அச்சுறுத்தல் விடுப்பதனைப் போன்று பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படக் கூடிய அபாயம் கிடையாது எனவும் அவர் கூறினார். (த)

# கணக்காய்வாளர் தரம் – 3 வயதெல்லை 30ஆக உயர்வு

கொழும்பு, மார்ச். 31

பல்கலைக்கழகங்களில் இருந்து வெளிவரும் பட்டதாரிகளுக்கு அரச சேவையில் வாய்ப்பளிக்கும் வகையில் இலங்கை கணக்காய்வாளர் (தரம் மூன்று) பதவிக்கு விண்ணப்பிக்கும் ஆகக் கூடிய வயதெல்லை 30 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தடன் ஏப்ரல் முதல் வாரத்தில் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும் என சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜே.வி.பி. உறுப்பினரான அனுர குமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

அண்மையில் நடத்தப்பட்ட கணக்காய்வாளர் சேவை தரம் மூன்றுக்கு ஆள் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகளின் ஆகக் கூடிய வயதெல்லை 28 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதில் அளித்த சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம, நமது பல்கலைக் கழகங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வசதிகளினால் ஒரு மாணவர் 23 வயதில் பட்டதாரியாக வெளிவர முடியும். இதற்கான வாய்ப்புகளும் உண்டு.

கணக்காய்வாளர் சேவைக்கு மட்டுமன்றி ஏனைய அரச துறை பதவிகளுக்குமான ஆகக் கூடிய வயதெல்லை 28 என அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன்படியே கணக்காய்வாளர் சேவைக்கான போட்டிப் பரீட்சைக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

எனினும் பல்கலைக் கழகங்களில் இருந்து வெளிவரும் புத்திஜீவிகளுக்கு வாய்ப்புகளை வழங்கும் வகையில் விசேடமாக இப்பதவிக்கான ஆள் சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கான ஆகக் கூடிய வயதெல்லை 30 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் தொடர்பான உத்தியோக பூர்வ அறிவித்தல் ஏப்ரல் மாத முதல் வாரத்தில் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும் என்றார். (த-2)

# பட்டம் வழங்கும் அதிகாரம் மாலபே மருத்துவக் கல்லூரிக்கு

## உயர்கல்வி அமைச்சு வழங்கியது

கொழும்பு, மார்ச் 31

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது. 2011 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதல் பட்டமளிக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளின் பட்டங்களுக்கான கட்டணங்கள் பெருமளவு அதிகரித்துள்ள போதும் இங்கு தனியார் பல்கலைக்கழங்கள் பட்டத்தை வழங்க 75 லட்சம் ரூபா மட்டுமே பெறுகின்றன என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

கடந்த அமர்வின்போது ஜே.வி.பி உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க மாலபே தனியார் மருத்துவக்கல்லூரியை அரசுடமை ஆக்க வேண்டும் என்று கோரி இருந்தார்.

இதற்குப் பதில் அளித்த உயர் கல்வி அமைச்சர்,

இலங்கையில் 29 தனியார் பல்கலைக்கழகங்கள் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை எமது நாட்டுப் பல்கலைக்கழகங்கள் சர்வதேச ரீதியில் தரமுயர்ந்து வருகின்றன. கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ரஜரட்ட, மற்றும் கிழக்கு பல்கலைக் கழகங்கள் துரித வளர்ச்சியடைந்துள்ளன.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தனியார் பல்லைக்கழகங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக மிகவும் அவதானமாக கண்காணித்து வருகின்றது.

பல்கலைக்கழக சட்டத் திற்கமைய கல்வி நிறுவனம் ஒன்றுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் உயர் கல்வி அமைச்சுக்கு உண்டு.

சவுத் ஏசியன் இன்ஸ்ரிடியூட் ஒப் மெடிசின் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எமது நாட்டு புத்தி ஜீவிகள் குழு வெளிநாடு சென்று இந்த நிறுவனம் தொடர்பாக ஆராய்ந்து அதன் பின்னரே இதற்கான அங்கீகாரம் அளிக்கப்பட்டது என்றும் உயர்கல்வி அமைச்சர் கூறினார். (த-02)

# சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின.

இதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்த மாணவரின் பரீட்சை பெறுபேறுகள் வருமாறு.

**வேலாயுதம் ம.வி.**

மு.புருசோத்தமன் 7ஏபிசி, கு.வைகுந்தா 6ஏ2பிசி, ஸ்ரீ.நதிஸ் 2ஏ4பி2சி, அ.பைந்தமிழன் 2ஏ2பி4சிஎஸ், சு.பிரசாத் 2ஏ3பி3சி, யோ.நியூட்டன் 2ஏ2பி3சிஎஸ், த.சுவர்ணராஜ் 2ஏ2பி3சி2எஸ்

**பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை.**

**தமிழ்மொழி மூலம்**

ச.அபிநயா 9ஏ, சி.வாகினி 9ஏ, சு.சுதீனா 9ஏ, த.கார்த்திகா 9ஏ, த.வேனுஜா 9ஏ, வை.அகல்யா 9ஏ, ச.சர்மிளா 7ஏபிசி, த.நிவேதினி 6ஏ2பிசி, ச.ஜஸ்வர்யா 6ஏ3பிசி, எ.மேரி பவுஸ்ரீனா 6ஏபி2சி, ர.ஹர்சிகா 5ஏ4பி, கு.சுஜிதா 5ஏ3பிஎஸ், ம.மதுஷா 5ஏ3சிஎஸ்

**ஆங்கில மொழி மூலம்**

அ.அனோஜா 9ஏ, செ.சுஜிதா 9ஏ, க.ஆர்த்திகா 8ஏபி, ச.யசிதா 7ஏ2பி, க.லினோஜா 7ஏபிசி, இ.பிரியங்கா 6ஏ3பி, ம.மாதுரி 5ஏ4பி,

த.விதுஷனா 5ஏ3பிசி, பி.தர்ஷிகா 5ஏ2பிசிஎஸ், சி.கௌசிகா 5ஏபிசி2எஸ்

**கனகரத்தினம் மத்திய ம.வி**

யு.ஆரூரன் 6ஏ2பிசி, ஜெ.டமினியா 3ஏ2பி4சி, கே.பிரியதர்சினி 3ஏபி 3சி 2எஸ், எம்.நியூசிகா 3ஏபி4சி, எஸ்.கீர்த்தனா 3ஏபி2சி3எஸ், பி.கவிப்பிரியா 3ஏ2சி3எஸ், வீ.கஜந்தினி 3ஏபிசி3எஸ், எல்.உலோசினி 3ஏபி சி 3எஸ், எஸ்.கவுசலா 3ஏபி2சி 2எஸ், என்.சாம்பவி 2ஏ2பி 3சி2எஸ், பி.தட்சாயினி 2ஏ2பிசி3எஸ், என்.சர்மிகா 2ஏ4சி3எஸ், பி.கீர்த்தனீ 2ஏ2சி4எஸ், வி.தாட்சாயினி ஏ2பி3சி2எஸ், என்.பீரவீனா ஏ2பி4சி2எஸ், என்.தர்சனா ஏ3பி3சி2எஸ், எஸ்.அபிராமி ஏபி4சி3எஸ், என்.தட்சயன் ஏபி7சி

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

சி.தேனுஜா 4ஏபி4சி, ப.குணசீலன் 3ஏ4பி2சி, ஜெ.ஜெயஸ் ரிகா 3ஏ2பி2சி2எஸ், இ.ஜெயப்பிரியா 3ஏபி2சி, இ.கோமதன் 2ஏ2பி2சிஎஸ், ச.லயூர்தன் 2ஏ6சி, ஞா.லிதியா 2ஏ5பி2சி, யோ.லக்சன் 2ஏபி3சி2எஸ், த.லௌசிகன் 2ஏசி5எஸ், செ.ஜெயலட்சுமி ஏ2பி4சி, து.சபேசன் ஏ2பி3சி2எஸ், செ.சுஜிகரன் ஏபி5சி2எஸ், இ.அஜீபா ஏபி4சி3எஸ், இ.லிவினிமா ஏ5சி2எஸ், நா.ஜீவந்திகா ஏ3சி3எஸ், க.பிரியங்கா ஏபி2சி4எஸ், சு.சுகன்யா ஏபி2சி 4எஸ்

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**

இ.துவாரகன் 8ஏபி, ஏ.நிசாந்தன் 7ஏபிசி, ரி.துவாரகன் 7ஏபிஎஸ், ஏ.நிதுர்ஷன் 7ஏ2சி, ஆர்.நிருபன் 5ஏ3பிசி, எஸ்.தனுஷன் 5ஏ3பிஎஸ், பி.பானுசன் 5ஏ2பி2சி, ஜே.கௌதமன் 4ஏ4பிஎஸ், பி.துஷ்யந் தன் 4ஏ3பிசிஎஸ், ஏ.தேனுஜன் 4ஏ2பி2சிஎஸ், கே.எக்ஸ்ஜன் 4ஏபி3சி, ஆர்.கஜன் 3ஏ6பி, எஸ்.குற்றாலீசன் 3ஏ4பிசிஎஸ், ஆர்.சஞ்ஜீபன் 3ஏ4பிசிஎஸ், ஆர்.சரத்பாபு 3ஏ4பிசி, ஆர்.நிவ்சோன்ராஜ் 3ஏ3பி3சி, பி.ரிஷிதன் 3ஏ2 பி3சிஎஸ், கே.தானுஷன் 3ஏ2பி3சி எஸ், மெ.மரியா டிசான் 3ஏ2பி2சி2எஸ், யூ.மிதுஷன் 3ஏபி4சிஎஸ், ஜே.செந்தூரன் 3ஏபி4சிஎஸ்.

**வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்**

**9ஏ**

ஜெராசா நிசாந், கிருஸ்ணபெருமாள் திசாந், ரமேஸ் கிரோஸ்குமார், கேசவன் கணநாதன், மங்களகுமார் மார்வினோசந்தன்.

சிவசுப்பிரமணியம் மேகவரதரன் 8ஏ சி, திருச்செல்வம் தரணிபன் 8ஏ சி, ராஜசிங்கம் கஜாணன் 8ஏ பி, பத்மநாதன் வைர்ணவன் 8ஏ பி, செல்வகுமாரன் ரகுமேனன் 8ஏ பி, மகேந்திரராசா விபிசன் 8ஏ பி, ஜெயசிங்கம் கவிந்தன் 8ஏ சி, கோபாலசிங்கம் சௌமியன் 8ஏ எஸ், சாரண்ஜாதிகளெளிபவன் 8ஏ சி, தர்மிகா புவனேஸ்வரன் 8ஏ பி, விமச்சந்திரன் அரியகன் 7ஏ பி எஸ், செபஸ்ரியாம்பிள்ளை யோசயந் 7ஏ 2பி, யோகநாதன் றுசாந் 7ஏ பி சி, ஜெயக்குமார் நிதர்சன் 7ஏ பி சி (ஆங்கில மொழி மூலம்), பிரகலாதன் சிந்துரத்மன் 6ஏ பி 2சி, குணரத்தினம் தனுசன் 6ஏ 2பி எஸ், தனபாலசிங்கம் நிரோசன் 6ஏ 2பி சி, நாகேந்திரராசா விபுசன் 6ஏ 2பி சி, காம்ப சிவம் கேசவன் 6ஏ பி சி, பார்ராஜா கபில்சாந் 6ஏ பி 2சி, மதிவண்ணன் சந்துசன் 6ஏ 2பி சி, மகேந்திரன் துவாகரன் 6ஏ சி 2எஸ், பிருந்தவி சிவகுமார் 6ஏ 2பி எஸ், பிலிப் காசேதிரகுமார் பிறீசன் 6ஏ பி சி எஸ்.

**ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை**

பீ.பிரியதர்சினி 7ஏபிசி, சு.அமலசீலி 5ஏ 3பி சி, ர.குணேஸ் 5ஏ 2பி சி, ம.வதனி 3ஏ 5சி எஸ், நி.நிதர்சினி 2ஏ 2பி 5சி, ம.தயானி 2ஏ 2பி சி 4எஸ், சு.வினோ ஜினி 2ஏ 5சி எஸ், ந.நிலானி 2ஏ பி சி 4எஸ், சி.துருஷன் ஏ பி 4சி 2எஸ்.

ஜெ.மரிஸ் ரெலா ஏ 2பி சி 5எஸ், ம.சுரேன் ஏ பி 4சி எஸ், கே.கோபிகா ஏ 4சி 3எஸ், ஸ்ரீ.கஜீபன் ஏ 3சி 4எஸ், ந.காண்டீபன் பி 3சி 3எஸ், ம.சுபரேகா 3சி 4எஸ், தி.டன்சிகா 2ஏ 4சி எஸ், ஜெ.ஜென்சா ஏ 4சி 2எஸ், ச.சுஜீவா ஏ 3சி 2எஸ், டெதுஷ்யந்தி ஏ 2பி 2சி 2எஸ்.

## சமய சந்நிதிகளில்

நயினாதீவு- செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயிலின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 நாள்கள் வரை இடம்பெறும் திருவிழாவில் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும், வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (வ-13)

* * *

சுழிபுரம், மார்ச் 31

சுழிபுரம் கிழக்கு கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத்திருவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தினமும் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று சுவாமி வீதியுலா வருதல் நடைபெறும். தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெறும். (வ-28)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 31

மானிப்பாய் வேலக்கைப்பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 16 அந்தணர்களால் நடத்தப்படும் இந்தக் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு எதிர்வரும் எட்டாம் திகதி முற்பகல் 11 மணி முதல் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பதினைந்து நாள்கள் மண்டலாபிசேகம் நடைபெறவுள்ளது.

மயிலணி சிவஸ்ரீ சோ.ரஜதகிரீசக் குருக்கள் பிரதிஷ்டா குருவாகக் கொண்டு மகா கும்பாபிசேகத்தை ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ ந.சுப்பிரமணியக் குருக்கள் ஆகியோருடன் 16 குருக்கள் நடத்தவுள்ளனர். (வ-14)

* * *

சுன்னாகம் தாளையடி ஐயனார் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 13 நாள்கள் இடம்பெறும் திருவிழாவில் எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத்திருவிழாவும், எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்ததிருவிழாவும் இடம்பெறும். (வ-13)

* * *

வவுனியா வைரவப்புளியங்குளம் ஸ்ரீ ஆதிவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 நாள்கள் இடம்பெறும் திருவிழாவில் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத்திருவிழாவும் வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (வ-13)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** தடை, தாமதங்களை முறியடித்து எதிலும் முத்தான வெற்றி பெறும் நாள். பண விடயத்தில் எதிர்பாராத சில விடயங்கள் நடக்கலாம். நண்பர்கள் சிலர் உங்களிடம் யோசனை கேட்டு செயற்படலாம். குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரியாமல் சில காரியங்களைச் செய்வீர்கள். பிடித்தமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும்.

**இடபம்:** சிலரின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கலாம். பல வேலைகளைச் செய்யத் திட்டமிட்டு முழுமையாக முடிக்க முடியாமல் போகலாம். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். அண்மையில் நடந்த சம்பவம் ஒன்றை நினைத்துப் பார்த்து கவலை அடைவீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம்.

**மிதுனம்:** கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம். நீண்ட நாள் நண்பர்கள் சிலர், மற்றவர்களுக்காக உங்களிடம் உதவி கேட்கலாம். கலைஞர்கள் எதிர்பார்த்தது நடப்பதன் மூலம் மகிழ்ச்சி, உற்சாகம் அடைவர். கடன் பாக்கிகள் வசூலாகும். இனிய அனுபவம் பெறலாம்.

**கடகம்:** சோர்வு, சோம்பல் அதிகரிக்கும். உறவினர்கள் சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு அடி பணிய நேரிடலாம். வீடு, தொழில் ரீதியான விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பங்களைச் சந்திக்கலாம். கடன் விவகாரங்களை சாக்குப்போக்குச் சொல்லிச் சமாளிப்பீர்கள். வீண் பழிகளைத் தவிர்க்க விழிப்புணர்வு அவசியம்.

**சிங்கம்:** நிதி நிலைமையில் மேம்பாடு காணப்படும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை நிலவும். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தம் போட மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். நண்பர்கள் வட்டம் விரிவடையும். நீங்கள் செய்த உதவிக்கு நன்றிக் கடனாக, சிலர் பரிசு, பாராட்டுக்களைப் பெறலாம்.

**கன்னி:** எடுத்த காரியங்கள் தடையின்றி நடந்து சந்தோஷம் அடைவீர்கள். வங்கி நிதியுதவி, கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். புதிய சொத்துக்கள் வாங்கும் விவகாரங்களில் நன்கு யோசித்து முடிவெடுப்பது நல்லது. மலைபோல் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். நல்லது நடக்கும் நாள்.

**நாளை**

பங்குனி 19 ஞாயிற்றுக்கிழமை 01.04.2012
திதி: நவமி மு.ப 09.46 வரை
நட்சத்திரம்: பூசம் பி.இ 05.35 வரை
சுபநேரம்:09.11-10.41 வரை
ராகு காலம்: 04.41- 06.11 வரை

**துலாம்:** புதிதாக அறிமுகமான சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். சிலரைச் சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம். பாதகமாக அமைந்து விடுமோ என்று பயந்த விடயம் ஒன்று சாதகமாக அமையலாம். ஏமாற்றங்களைத் தவிர்க்க எச்சரிக்கை அவசியம். வயிறு, வாயு உபாதைகளால் அவதிகளுக்கு ஆளாகலாம். வீண் பழிகளைச் சந்திக்கலாம்.

**விருச்சிகம்:** குடும்பப் பெரியவர்கள் அல்லது நண்பர்கள், உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் சபலங்களைத் தவிர்க்க வேண்டும். அவசரப்பட்டு எந்த வேலைகளையும் செய்ய வேண்டாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து கவலை அடைவீர்கள். எதிர்பாராத திடீர் செலவுகளால் பிறரிடம் கடன் வாங்கலாம்.

**தனுசு:** சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். பிள்ளைகள் செயல்பாடு ஒன்றைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். வழக்கமான சில வேலைகளை விட்டு விட்டு வேறு வேலைகளைச் செய்ய நேரிடலாம். வியாபாரிகள் அலைச்சல் இல்லாமல் சில வேலைகளை முடிப்பர். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம்.

**மகரம்:** பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கலாம். பணிபுரிவோர் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். நேற்று தடைபட்ட காரியம் ஒன்று இன்று விறுவிறுப்பாக நடக்கும். கணிசமான பணவரவுகளைப் பெற நேரிடலாம். தந்தையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு விலகிப் பாசம் அதிகரிக்கும். நல்லவர்களின் நட்பைப் பெறும் நாள்

**கும்பம்:** எதிலும் முன்யோசனை, எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய நாள். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பயம் கொள்வீர்கள். கடந்த காலங்களில் உங்களுக்கு ஆதரவு தந்த ஒருவரே இன்று எதிர்ப்புத் தெரிவிக்கலாம். நீங்களாக அடுத்தவர் விவகாரங்களில் தலையிட வேண்டாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். மறதியால் அவதியுண்டு.

**மீனம்:** வேண்டாத வேலைகளைச் செய்து உறவினர்கள் சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம். குடும்பத்திற்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். நடக்காத ஒரு விடயத்தைப் பற்றி பெரிய அளவில் கற்பனை செய்வீர்கள். பணிபுரிவோர் அதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாகலாம். சிலருடன் பொறாமை பிரச்சினைகள் உருவாகலாம்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | | | 8 | | | 3 |
| | 1 | | 5 | 3 | | 2 | 4 | |
| 3 | 8 | | 7 | 4 | 6 | | 1 | |
| 9 | | | | | | | | |
| 6 | | 8 | 9 | | 2 | 1 | | 7 |
| | | | | | | | | 5 |
| | 3 | | 4 | 9 | 5 | | 7 | 2 |
| | 9 | 7 | | 1 | 3 | | 5 | |
| 5 | | | 2 | | | 3 | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 8 | 7 | 3 | 6 | 4 | 5 | 2 |
| 6 | 3 | 7 | 4 | 2 | 5 | 9 | 1 | 8 |
| 5 | 2 | 4 | 9 | 1 | 8 | 7 | 3 | 6 |
| 4 | 6 | 9 | 2 | 5 | 7 | 1 | 8 | 3 |
| 2 | 7 | 1 | 3 | 8 | 9 | 6 | 4 | 5 |
| 3 | 8 | 5 | 1 | 6 | 4 | 2 | 7 | 9 |
| 7 | 4 | 3 | 5 | 9 | 2 | 8 | 6 | 1 |
| 8 | 5 | 2 | 6 | 4 | 1 | 3 | 9 | 7 |
| 1 | 9 | 6 | 8 | 7 | 3 | 5 | 2 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் சாவகச்சேரி நகரசபையின்
முகாமைத்துவ உதவியாளருமாகிய
திருமதி இக்னேஷியஸ் வசந்தி வலன்ரீனா
அவர்களின் பாசமிகு தந்தை

**சுவானி அந்தோனிப்பிள்ளை** (திருகோணமலை)

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

ஊழியர் நலன்புரிச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி



யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர் தெய்வேந்திரன் பராபரன் அவர்களின் பாசமிகு தந்தை

**கார்த்திகேசு தெய்வேந்திரன்**

அவர்கள் மறைவினால் துயருற்றிருக்கும் ஆசிரியர் பராபரன் அவர்களுக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் துயரில் நாமும் பங்குகொண்டு ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்.

## கண்ணீர் அஞ்சலி



யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசிரியை திருமதி தனுசியா மகாதேவன் அவர்களின் அன்புத் தாய்

**கந்தசாமி வசந்தமலர்**

அவர்கள் இறைபதமெய்தியமையால் துயருற்றிருக்கும் ஆசிரியர் தனுசியா அவர்களுக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் துயரில் நாமும் பங்குகொண்டு ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சந்திரவதி இராசகுலசிங்கம்

ஆழியவளையைப் பிறப்பிடமாகவும், மாமுனையை வதிவிடமாகவும், பருத்தித்துறையை தற்காலிக முகவரியாக வும் கொண்ட சந்திரவதி இராசகுலசிங்கம் நேற்று (30.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசகுலசிங்கத்தின் அன்பு மனைவியும், சுமதா (கனடா), சசிதா, காலஞ்சென்ற விஜிதா மற்றும் கவிதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெயச்சந்திரன் (கனடா), அம்பிக்குமார் (ஆசிரியர், யாழ். அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை) ஆகியோரின் மாமியும், நிருஷன், அஷ்வினி, அனுசன், அன்பரசன், அஷ்மிகா, அக்ஷயா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.03.2012) வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''தங்கவிலா'',
(ஞானசம்பந்தர் கலா மன்றம் அருகில்),
தும்பளை மேற்கு, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தையா பாலசிங்கம்



கலட்டியைப் பிறப்பிடமாகவும், வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசிங்கம் நேற்று (30.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அருணகிரி, நவரட்ணம், தங்கச்சியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியதேவி (கனடா), சுகன்யாதேவி (பிரான்ஸ்), சண்முகானந்தன் (ஆசிரியர், கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்), சுகுமார் (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கண்ணதாசன் (கனடா), திருக்கேதீஸ்வரன் (பிரான்ஸ்), யாமினி (ஆசிரியை, காரைநகர் தியாகராசா ம.ம.வி.), சூரியகலா ஆகியோரின் மாமனும், லக்சிகன், பிரியங்கா, அனித்தா, வனித்தா, ஜெனுஷா, ராகவி, தரணியா, கவிஷன், கவினி ஆகி யோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

53/4, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஹெரோயின் வைத்திருந்த மூவருக்கு மறியல்

யாழ்ப்பாணம் மார்ச் 31

யாழ். கொட்டடி மீனாட்சியம்மன் கோயிலடியில் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் மூவரும் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அதன்போது நாவாந்துறையைச்சேர்ந்த சந்தேக நபரை எதிர்வரும் 5ஆம் திகதி வரையும் அச்சுவேலி மற்றும் கொட்டடியைச் சேர்ந்த இருவரையும் எதிர்வரும் 11 ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

## '21 ஆம் நூற்றாண்டில் ஊடகம்' மாணவர்களுக்கான கருத்தரங்கு

### முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் இன்று

முஸ்லிம் மீடியா போரம், மாணவர்களுக்காக நடத்திவரும் தொடர் கருத்தரங்கின் 40 ஆவது கருத்தரங்கு இன்று காலை கொழும்பு-09, சாஹிரா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. உயர் வகுப்பு மாணவிகளுக்கு மாத்திரம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள '21 ஆம் நூற்றாண்டில் ஊடகம்'என்ற தலைப்பிலான கருத்தரங்கை சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் நடத்துவர்.

அத்துடன், மாலை நடைபெறும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும் நவமணி பத்திரிகையின் ஆசிரியருமான என்.எம்.அமீன் தலைமையில் இடம்பெறும்.பங்களாதேஷின் இலங்கைக்கான தூதுவர் மஹ்பூப் சமாம் இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.


**வாகனம் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள பாவனைக்கு உகந்த டஸ்க்கர் லொறி - 2, மற்றும் டீசல் கார் என்பன உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு: 0779530929

**பணிப்பெண் தேவை**

மூன்று பேர் கொண்ட குடும்பத்தில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 0776333133

**மாணவர் கணிப்பீட்டு அறிக்கை**

அதிபர்கட்கு, பாடசாலைகளுக்குத் தேவையான தரம் 1 முதல் 11 வரையான கணிப்பீட்டு அறிக்கைப் புத்தகம் வெளிவந்துவிட்டது. உடன் பெற்றுக்கொள்ளலாம்.

தயா அச்சகம், 138, நாவலர் வீதி,
575, கே.கே.எஸ். வீதி,
(நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்) தொ.பே. 0773965214

**தரம் 5** மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை

**புலமைச் சிட்டு**
(நாவலர் வெளியீடு)

முற்றிலும் புதிய பாடத்துக்கு அமைவான மாதிரி வினாத்தாள் - ஞாயிறு தோறும்
பரீட்சை நடைபெறும் இடம்:
**புதிய நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

பரீட்சை விரும்பிய 6 நேரங்களில்
காலை 8.00, 9.00, 10.00 - மாலை 2.00, 3.00, 4.00
1ஆவது பரீட்சை - 01.04.2012 (ஞாயிறு)

வினாத்தாள் தேவைப்படும் பாடசாலைகள், கல்வி நிலையங்கள், பெற்றோர்கள் நேரடியாக / தபால் மூலமாக பெறலாம்.

மேலதிக விவரங்களுக்கு:
பரீட்சைப் பகுதி, புதிய நாவலர் கல்வி நிலையம்,
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0774598440

**தவறிவிட்டது**

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் நேற்று (30.03.2012) வெள்ளிக்கிழமை மாலை முக்கிய ஆவணங்கள் அடங்கிய சிறிய பொதி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு : 0779458901

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி, சிவன் கோவில் தெற்கு வீதியில் 1¼ பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொ.பே. 0772363537


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அபூர்வசிங்கம் பவளகாந்தி (கிளி)



உடுப்பிட்டி, சந்தை வீதியையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அபூர்வசிங்கம் பவளகாந்தி நேற்று (30.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அபூர்வசிங்கத்தின் அன்புமனைவியும், அனுஸ்காந்தின் பாசமிகு தாயும், சுபத்திராவின் உறுதுணை மாமியும், வைஸ்ணவி, வைசாளினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தர்மலிங்கம், தர்மராசா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

தகவல்:
அபூர்வசிங்கம்,
அனுஸ்காந் (குகன், மகன்)

### திருமதி பாக்கியம் கணபதிப்பிள்ளை



சுதுமலை மேற்கைச் சேர்ந்த பாக்கியம் கணபதிப்பிள்ளை 27.03.2012 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், வாரிவளவு காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதுமலை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத் தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை (ஆசிரியர்), மனோன்மணி, இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் மற்றும் தபோதினி, நந்தினி, நளாயினி (நிர்வாக உத்தியோகத்தர் M.D.T.D. வடமாகாணம், கோண்டாவில்), பானுமதி, திரு ஆகியோரின் அன்புத் தாயும், ரவீந்திரசிங்கம், பாக்கியநாதன், பரமநாதன், திலீபன், ரஜனி ஆகியோரின் அன்பு மாமியும், கீர்த்தனா, சஞ்சயன், வினோபா, துஷ்யந்தன், ரிஷிகேசன், சர்மிளன், சுனாதனி, வருண், துஷானா, அசாறி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் யாழ். வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

120, யாழ். வீதி, மானிப்பாய்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

### திருமதி விமலாதேவி இராமநாதன்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி இராமநாதன் நேற்று (30.03.2012) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (மலாயன் தபால் அதிபர்) - திருமதி வேலுப்பிள்ளை இரத்தினம் (முன்னைனாள் ஆசிரியை, நாவலர் வித்தியாலயம், கோப்பாய்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நமசிவாயம் இராமநாதனின் (நீர்வேலி) அன்பு மனைவியும், சங்கரின் பாசமிகு தாயும், கனடா வாழ். திருமதி சரஸ்வதி நவரத்தினம், காலஞ்சென்ற இ. வி. இராமநாதன் (கல்வி அதிகாரி, மல்லாகம்) ஆகியோரின் சகோதரியும், ந. ரவீந்திரன் (கனடா), காலஞ்சென்ற ந. முரளிகிருஷ்ணன் (கனடா) மற்றும் திருமதி ஸ்ரீ ரஞ்சினி யோகேந்திரன் (கனடா), திருமதி ஸ்ரீ சாந்தினி கதிரமலைநாதன் (கனடா), திருமதி ஸ்ரீ ரட்ணாம்பிகை சபேசன் (கனடா), ந.நமசிவாயம் (அமெரிக்கா) ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி.

தகவல்:
த.ந. பஞ்சாட்சரம்.

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRILANKA.

**University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.**

**FACULTY OF ARTS**

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Tamil**

**Temporary Lecturer/Temporary Instructor in Music (Vocal/Violin)**

**VAVUNIYA CAMPUS OF THE UNIVERSITY OF JAFFNA**

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in English Language Teaching**

**CAREER GUIDANCE UNIT**

**Career Guidance Counselor**

**Qualifications**

**Graduate of a recognized University with four years experience in the field of Students Affairs. (Applicants with postgraduate qualifications in the area of Counselling and/ or experience in Career Guidance activities will be given preference)**

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Lecturer Grade I | Rs. 42,650 – 7x800 – 48,250/-p.m. |
| Senior Lecturer Grade II | Rs. 37,650 – 11x700 – 45,350/-p.m. |
| Lecturer (Probationary) | Rs. 26,900 – 10x585 – 32,750/-p.m. |
| Career Guidance Counselor | Rs. 26,020-3x645-27,955 (EB) 28,600-14x645 -37,630 p.m. |
| Temporary Lecturer | Rs. 26,020/- (fixed) p.m. |
| Temporary Instructor | Rs. 21,370/- (fixed) p.m. |

**Note:**

**In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.**

**Contd. (2)**

**Statutory benefits:**

(i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr. II and above.

(ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.

(iii) Gratuity payments

(iv) Employees' Trust Fund benefits.

(v) Free Medical Services.

**Closing date:**

Temporary post - 16.04.2012

Other posts - 15.05.2012

Application forms and scheme of recruitment for each position may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the applications forms drawn in favour of the Bursar, University of Jaffna.

Those who wish to apply for more than one post should apply in separate forms.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
30.03.2012

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள (19-XXX) இலக்கம் உடைய Ford-Laser கார் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0777173920

## கடைகள் வாடகைக்கு

சாவகச்சேரி சங்கத்தானை உப தபால் கந்தோர் வளவிலுள்ள கடைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0770712459

## வாடகைக்கு

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் திருமண மண்டபங்கள் பெரிது, சிறிது, முகப்பில் கடையும் உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
077-8033575 / 077-7110281

## விற்பனைக்கு

1 வயது நிரம்பிய ஜேமன் சப்பேட் ஆண், பெண் நாயும், காலிக் குயின் பெண் நாயும், ரொட்விலர் ஆண் நாயும், 8 மாதம் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் நாயும், 3 மாதம் பூர்த்தியான அல்சேசன் ஆண், பெண் குட்டிகளும், வான்கோழி, மணித்தாரா, இறைச்சிக்கோழி, நல்ல இன ஒரு வருட பசுக்கன்றும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: வி. மயூரன்
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயாக்கடவை,
பிள்ளையார் கோயில் முன்பாக,
பூதராயர் கோயிலடி (டயலொக் அன்ரனா அருகில்)

# மரண அறிவித்தல்கள்



## திருமதி M.A. லோகநாதன் இராஜேஸ்வதி (ராசு)

அச்செழு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், மஞ்சத்தடி இணுவில் கிழக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி M.A.லோகநாதன்-இராஜேஸ்வதி (ராசு) 30.03.2012 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற M.A.லோகநாதன் (வட்டவன அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம்-பரிமளம் தம்பதியரின் அன்பு மருமகளும், அச்செழு நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையா-தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், பத்மநாதன் (லண்டன்), கலைவாணி (பிரதேச செயலகம்-வவுனியா தெற்கு) ஆகியோரின் அன்புத் தாயும், ரவிச்சந்திரன் (விவசாயக் கல்லூரி-வவுனியா), துளசி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற மயில்வாகனம் (சிறாப்பர்) நாகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வரதலட்சுமி, கனகம்மா, இராசலட்சுமி, பரஞ்சோதி, மகேஸ்வரி, செல்வராணி மற்றும் நடராசா, பாலசுப்பிரமணியம், ராமநாதன், வேலாயுதம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாகித்தியன், நாதங்கி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 01.04.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது தற்போதைய வதிவிடமான மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு, இணுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு,
இணுவில்.

(16255) (6,9,10)

தகவல்:
நாகையா-ரவிச்சந்திரன்
(மருமகன்)

## கார்த்திகேசு தெய்வேந்திரன்

(இளைப்பாறிய பிரதம லிகிதர்)



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு தெய்வேந்திரன் 27.03.2012 இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-சொர்ணம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-தனலட்சுமி தம்பதியரின் மருமகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், செழியன் (Canada), பராபரன் (ஆசிரியர், கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம்), ஹரிராம், மோகன்ராம் (B.Sc. Engineer, Australia), Dr.பாலமயூரன் (America) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஷிதா (Canada), கௌரி (Dental Therapist), நிரஞ்சனா (Australia), Dr.காயத்திரி (America) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற ஞானமணி மற்றும் பரிபூரணம், பரம்சோதி, யோகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை), Dr. திலகவதி (London) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், மயில்வாகனம், குமாரசாமி மற்றும் நாகேந்திரராஜா (இளைப்பாறிய அதிபர், Driberg College), Dr. குகதாசன் (London), விவேகானந்தன் (Canada), நித்தியானந்தன் (Canada), கிருஷ்ணானந்தன் (London), திலகவதி (London, இளைப்பாறிய ஆசிரியை), சாரதாதேவி (இளைப்பாறிய மருந்தாளர்), காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், Dr. காசிநாதன் (London), Dr. ஆறுமுகம் (வறணி, அரசினர் வைத்தியசாலை), நரேந்திரசிங்கம் (Germany), ஞானேந்திரன் (இளைப்பாறிய பிரதம களஞ்சிய பொறுப்பாளர், Masions Ltd) ஆகியோரின் சகலனும், கவினா, கஜானா, நிருஷன், கபிஷன், சீதாராம், ராம் மோகனன், ஆஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2012) ஞாயிற்றுக்கிழமை ஆலடி, உடுவிலில் உள்ள அவரின் இல்லத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி, உடுவில்,
சுன்னாகம்.

(16270) (6,14,10)

தகவல்:
தெ.பராபரன் (மகன்)

# மாணவர் இடைவிலகல் அதிகரிப்பு கிளிநொச்சியில் வறுமை காரணம்

கிளிநொச்சி, மார்ச் 31

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை செல்லாத மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு சுமார் ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை என்ற தகவல் அரச அதிகாரிகளால் தெரிவிக்கப் பட்டிருந்தது. இந்தத் தொகை இந்த ஆண்டு மேலும் அதிகரித்திருப்பதாகப் பல பாடசாலை அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

குடும்பங்களில் நிலவுகின்ற வறுமையே இதற்கு முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது. அதேசமயம் போக்குவரத்து வசதியின்மை மற்றும் குடும்பங்களிடையே ஏற்படுகின்ற வன்முறைகள் போன்ற ஏனைய காரணங்களாலும் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்துகின்ற மாணவர் தொகை அதிகரித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த கால யுத்தம் காரணமாகக் கணவன்மாரை இழந்த பல குடும்பங்கள் பெண்கள் தலைமை தாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

சிறு வயதிலுள்ள பிள்ளைகளின் உழைப்பை நம்பி வாழ வேண்டிய நிலைமையிலும் பல குடும்பங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையிலுள்ள குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் கல்வியைத் தொடர முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. அதை விடப் பின்தங்கிய பிரதேசங்களின் போக்குவரத்து வசதிகள் சீராக இல்லாத காரணத்தினால் பல மாணவர்கள் ஆரம்பக் கல்வியை தமது பகுதிப் பாடசாலைகளில் கற்று விட்டு உயர்தரக் கல்வியைத் தூர இடங்களில் உள்ள பாடசாலைகளில் சென்று கற்கக் கூடிய வசதியில்லாத நிலையும் காணப்படுகின்றது.

அத்துடன் இங்குள்ள பல குடும்பங்கள் வறுமை காரணமாகச் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றன. அதன் விளைவாகக் குடும்பங்களிடையே ஏற்படுகின்ற வன்முறைகள் குடும்ப பிரிவுகள் என்பனவும் பிள்ளைகளிடையே பாதிப்புகளையும் தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றன. இதனால் அவர்களது எதிர்காலக் கல்வி பாதிப்படை கின்றது.

இவ்வாறு பாடசாலை மாணவர்களின் இடைவிலகும் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று பாடசாலை அதிபர்கள் மற்றும் கல்வியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்படி பாடசாலை மாணவர்களின் இடைவிலகும் தொகை அதிகரிப்புத் தொடர்பாகக் கருத்துக் கூறும் போது இடைவிலகும் தொகை அதிகளவில் இல்லையெனவும் மாணவர்களின் ஒழுங்கற்ற வரவுகளே அதிகளவில் காணப்படுகின்றன எனவும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விடயத்தில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அதிக அக்கறை காட்ட வேண்டும் எனப் பல கல்வி மான்களும், கல்வி சார் உத்தியோகத்தர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க-6)

# இலங்கை சாரணர் சங்க நூற்றாண்டு விழா நாளை

தென்மராட்சி, மார்ச் 31

இலங்கை சாரணர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவும் ஆசிய பசுபிக் நாடுகளின் சாரணர்களின் 25 ஆவது ஆண்டு விழாவும் நாளை தொடக்கம் 7 ஆம் திகதிவரை தம்புள்ள சேனநாயக்கா மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. அத்துடன் உலக சாரணர்களின் மாபெரும் ஜம்போறியும் நடைபெறவுள்ளன.

இலங்கை உட்பட 24 நாடுகளின் சாரணர்கள் இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய சாரணர் சங்கங்களைச் சேர்ந்த 500 சாரணர்கள், சாரணத் தலைவர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள், மாவட்ட ஆணையாளர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஒவ்வொரு சாரணர் மாவட்ட குழுக்களுக்கும் அந்தந்த மாவட்ட உதவி ஆணையாளர்கள் தலைமை தாங்கிச் செல்லவுள்ளனர். ஜம்போறி சர்வதேச சேவைச் சாரணர் குழுவின் இணைப்பாளர் வீ.அஜித்குமார் தலைமையில் 54 பேர் கொண்ட சாரணர்களும் சாரண தலைவர்களும் தம்புள்ள சென்றுள்ளனர். (ம-9)

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

# மன்னாரில் சீக்கிய சாரதிக்கு 4 ஆம் திகதிவரை விளக்கமறியல்

மன்னார், மார்ச் 31

விபத்துச் சம்பவம் ஒன்று தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சீக்கிய இனத்தைச் சேர்ந்த வாகன சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

தற்போது மதவாச்சி தொடக்கம் தலைமன்னார் வரையிலான ரயில் பாதைகளை அமைக்கும் பணிகளில் இந்திய நிறுவனமொன்று ஈடுபட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் தொழிலாளர்கள் தற்போது வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் மன்னார்ச் சாலைக்குப் பின்புறமாக அமைந்துள்ள ரயில் பாதைகளைப் புனரமைத்து வருகின்றனர்.

இந்த வேலைகளுக்குத் தேவையான நீரை உழவு இயந்திரத்தில் இணைக்கப்பட்ட பவுசர் மூலம் செல்வ நகர்ப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கடந்த புதன்கிழமை எடுத்து வந்திருந்தார். அவர் உழவு இயந்திரத்தை வேலைப் பகுதியில் நிறுத்திவிட்டு உறங்கியுள்ளார்.

இதன்போது மண் ஏற்றி வந்த கனரக வாகனம் உழவு இயந்திரத்துடன் மோதியது. உழவு இயந்திரம் தூங்கிக் கொண்டிருந்தவரின் மீது ஏறியதால் அந்த நபர் உயிரிழந்துள்ளார்.

மன்னார் செல்வ நகர்ப் பகுதியைச் சேர்ந்த 40 வயதான எம்.பாலகிருஷ்ணன் என்பவரே உயிரிழந்தவராவார்.

மன்னார்ப் பொலிஸார் கனரக வாகனத்தைச் செலுத்தி வந்த இந்தியா மும்பையைச் சேர்ந்த சீக்கிய இனத்தவரான 54 வயதான குரத்சிங் என்பவரைக் கைது செய்து அடுத்தநாள் மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இவரை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் திருமதி கே.ஜீவராணி உத்தரவிட்டார். (க-12)

## வெளியேறுகிறது நோர்வே செஞ்சிலுவை

மட்டக்களப்பு, மார்ச் 31

சுனாமியால் முற்றாக அழிந்த காத்தான்குடி மாவட்ட வைத்திசாலையை 670 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணித்த நோர்வே செஞ்சிலுவை சங்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை தமது பணிகளை முடித்துக்கொண்டு நாட்டிலிருந்து வெளியேறுகிறது.

இலங்கையின் பல பாகங்களிலும் இடர் காலங்களில் பல்வேறு தொண்டு நடவடிக்கைகளில் நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டுவந்துள்ளது.

ஆழிப்பேரலை மற்றும் போரினால் ஏற்பட்ட இடர்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார மற்றும் மீள்கட்டுமானப் பணிகளில் இந்தச் சங்கம் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.



அட்டாளைச்சேனை பிரதேச சபை நிதியின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட சின்னப்பாலமுனை, கடற்கரை உப வீதியை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எல்.எம்.நசீர் நேற்றுமுன்தினம் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் உப தவிசாளர் எம்.ஏ.அன்சில், பிரதேச சபை உறுப்பினர்களான எஸ்.எல்.முனாஸ், ஏ.எல்.அமானுல்லா உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

# கிழக்கு மாகாணத்தின் வீழ்ச்சிக்கு அரசியல் தலைமைகளே காரணம்

## பிள்ளையான் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச் 31

கிழக்கு மாகாணம் பல விதங்களிலும் பின்னடைவுகளைச் சந்தித்திருப்பதற்கு கடந்தகால அரசியல் தலைமைகளே காரணம் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, ஈரலைக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று கிழக்கு மாகாணத்தில் கல்வித்துறை உட்பட சகல துறைகளும் துரிதமாக வளர்ச்சி கண்டு வருகின்றன.

அண்மையில் வெளி வந்த சாதாரண தர பரீட்சை பெறுபேறு கூட மாற்றத்தையும் கல்வித்துறையின் துரித வளர்ச்சியையும் காட்டியிருக்கின்றது.

இவ்வாறான துரித வளர்ச்சியையே சகல துறைகளிலும் எதிர்பார்க்கின்றோம். அதற்கிணங்கவே நாமும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறான துரித வளர்ச்சி தொடர்ந்து இடம்பெற வேண்டுமானால் மக்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு இன்றியமையாதது.

இன்று நாம் ஒரு பக்கத்தில் எமது உரிமைகளைப் பெறுவதில் பல விடயங்களை செயற்படுத்தி வருகின்றோம் மறு புறத்தில் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றோம்.

நாம் மாகாண சபையை கையேற்றதன் பின்னர் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் கல்வித் தரம் துரிதமாக உயர்ந்திருக்கின்றன.

அதே போன்று ஏனைய துறைகளும் வளர்ச்சியைக் கண்டு வருகின்றது.

போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதெற்கென ஐந்து ஆண்டுத் திட்டம் ஒன்றை நாம் வகுத்திருக்கின்றோம்.

இந்தத் திட்டத்தினூடாக பாதை, நீர்ப்பாசனம் மற்றும் போக்குவரத்துத் துறைகளை துரிதமாக விரிவுபடுத்தி ஏனைய பிரதேசங்களின் நிலைக்கு இந்தப் பிரதேசங்களைக் கொண்டு வருவதற்கு திட்டமிட்டிருக்கின்றோம்.- என்றார். (ச)

# கிண்ணியாவில் நீர்வெட்டு: மக்கள் பாதிப்பு

திருகோணமலை,மார்ச் 31

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது நிலவும் கடும் வரட்சியான கால நிலை, மற்றும் தொடர்ச்சியான மின் தடங்கல் காரணமாக கிண்ணியா பிரதேசத்தில் நீர்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதனால் மக்கள் பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றனர்.

மாஞ்சோலை, மஹ்ரூப் நகர், பைசல் நகர், ஆலங்கேணி, குட்டிக்கராஜ், இடிமண், உப்பாறு, தாமரைவில் பகுதிகளில் தினமும் அதிகாலை 5 மணி தொடக்கம் காலை 8 மணி வரையும், கிண்ணியாவின் ஏனைய பகுதிகளில் தினமும் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் இந்த நீர்வெட்டு நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-40)

# கிழக்கின் அபிவிருத்திக்கு ரூ.200 மில்லியன் ஒதுக்கீடு

## கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தகவல்

திருகோணமலை,மார்ச் 31

இந்த ஆண்டு கிழக்கின் அபிவிருத்திக்கு 200 மில்லியன் ரூபா அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.உதயகுமார் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் நெல்சிப் எனும் பெயரில் 2011ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வந்த திட்டம் தற்போது புறநெகும எனும் புதிய பெயரால் அழைக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்துக்கென மூன்று வருடத்துக்குமான நிதியாக உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்கு மாத்திரம் 4555 மில்லியன் நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் கடந்த ஆண்டு எம்மால் 142 வேலைத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு, இதற்கான நிதியாக 1541 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு நடை முறைப்படுத்தி வருகின்றோம்.

**அபிவிருத்தித் திட்டங்களை சிறப்பாக மேற்கொள்வதற்கு உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகளுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றது.**

இந்தத்திட்டத்தை வெளிப்படைத் தன்மையாகவும் பொறுப்புக் கூறும் அளவில் சிறப்பாக செயற்படுத்துவதற்கென உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளுக்கு விசேட ஆளுமை விருத்திப் பயிற்சிகளை வழங்கி வருகின்றோம்- என்றார். (ச-40)

அழைக்கப்பட்ட அணிகளிடையிலான கிரிக்கெட்:

# கே.ஸி.ஸி.ஸி. வெற்றி



யாழ்ப்பாணம்,மார்ச் 31

அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான போட்டியில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி 10 ஓட்டங்களால் யாழ்.பல்கலைக் கழக அணியை வெற்றி கொண்டது.

யாழ்.பல்கலைக் கழக விளையாட்டு அவை நடத்துகின்ற அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் 9ஆவது தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி. அணியினர் 40 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 175 ஓட்டங்கள் பெற்றது.

இதில் சிலோஷன் 41 ஓட்டங்களையும், கிருபாகரன் 29 ஓட்டங்களையும், துசியந்தன் 21 ஓட்டங்களையும், உமாநாத் 19 ஓட்டங்களையும் பெற்றனர் .

பந்து வீச்சில் யாழ்.பல்கலைக்கழக அணி வீரர்களான ஜனார்த்தன் 8 ஓவர்கள் பந்து வீசி 2 இலக்கினையும், வதுஷன் 9 ஓவர்கள் பந்துவீசி 2 இலக்கினையும் கிரி 7 ஓவர்கள் பந்து வீசி 2 இலக்கினையும் லவன் 6 ஓவர்கள் பந்து வீசி ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

176 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 46 ஓவர்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 165 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் ஜனார்த்தன் 38 ஓட்டங்களையும் தனஞ்சேயகுமார ஆட்டம் இழக்காமல் 35 ஓட்டங்களையும் லவன் 17 ஓட்டங்களையும் தஷிரிதன் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம் சார்பாக பந்து வீச்சில் உமாநாத் 10 ஓவர்கள் பந்து வீசி 3 இலக்குகளையும் பிரதீஸ் பந்து வீசி 2 இலக்குகளையும் சாம்பவன் 10 ஓவர்கள் பந்து வீசி 2 இலக்கினையும் வீழ்த்தினர்.

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இன்று சனிக்கிழமை இடம் பெறும் ஆட்டத்தில் பங்குகொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு,

மாலை 4 மணி றேஞ்சஸ் விளையாட்டுக்கழகம் எதிர் இமையாணன் விளையாட்டுக்கழகம் . (23)

* * *

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படுகின்ற அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஒருநாள்துடுப்பாட்டச் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது.

# மெய்வன்மைப் போட்டிகள்

வலி.வடக்கு, மார்ச்31

வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை மதியம் 2 மணியளவில் வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் கனகராசா ஸ்ரீமோகன் தலைமையில் மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமல்டா சுகுமாரும் சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திருமதி பி.எவ்.ஜே.ரூபசிங்கவும் வலி. வடக்கு பிரதேச சபை முன்னாள் தலைவர் பா.பாஸ்கரனும் கௌரவ விருந்தினர்களாகச் சுன்னாகம் சிங்கர் நிறுவன முகாமையாளர் பி. கோபிகிருஸ்ணாவும் கலந்து கொள்கின்றனர். (86)

யாழ்ப்பாணம், மார்ச் 31

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேச செயலாளரும், விளையாட்டு அவைத் தலைவருமான பா.செந்தில்நந்தன் தலைமையில் யாழ். இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி எ.எவ்.ஜே.ரூபசிங்கமும், கௌரவ விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (86)

## முல்லை. வலய பெருவிளையாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 31

முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலை இடையிலான வலய மட்ட பெரு விளையாட்டு சனிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றது. இன்று காலை 8.30 மணிக்கு வித்தியானந்தா கல்லூரியில் ஆரம்பமாகவுள்ள கரம், சதுரங்க போட்டிகளில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு

**சதுரங்கம்**

**15 பிரிவு ஆண்கள்**

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, வற்றாப்பளை மகா வித்தியாலயம், சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம்.

**19 வயது பிரிவு ஆண்கள்**

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, விசுவமடு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி, சிலாவந்தை தமிழ் வித்தியாலயம், உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம்

**15 வயது பிரிவு பெண்கள்**

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, இலவந்தை தமிழ் வித்தியாலயம், செம்மலை மகாவித்தியாலயம், முல்லைத் தீவு வித்தியானந்தாக் கல்லூரி

**19 வயது பிரிவு பெண்கள்**

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, உடையார் கட்டு மகாவித்தியாலயம், செம்மலை மகாவித்தியாலயம், முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி, சிலாவத்தை தமிழ் வித்தியாலயம் என்பனவும்

**கரம் போட்டி**

**15வயது பிரிவு ஆண்கள்**

முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, விசுவமடுமகாவித்தியாலயம்

**19 வயதுப் பிரிவு ஆண்கள்**

விசுவமடு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, உடையார் கட்டு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி.

**15 வயது பிரிவு பெண்கள்**

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி

**19 வயதுப் பிரிவு பெண்கள்**

உடையார் கட்டு மகாவித்தியாலயம், அலம்பில் றோ.க. த.க. பாடசாலை, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி ஆகிய அணிகள் பங்கு பற்றவுள்ளன முல்லைத்தீவு கல்வி உதவி கல்வி பணிப்பாளன் மைக்கல் திலகராஜ தெரிவித்துள்ளார். (23-400)

பெண்கள் உதைபந்தாட்டம்

## ஸ்கந்தாவுக்கு மூன்றாமிடம்

வலி.வடக்கு, மார்ச் 31

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான உதைந்தாட்டப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான போட்டியில் மல்லாகம் குளமங்கால் றோமன் தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலையும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்ட நிலையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னனி வீராங்கனைகள் தமக்கு கிடைத்த பந்தை உரிய முறையில் உதைந்து ஒரு கோலை பெற்றுக் கொண்டனர்.

இரண்டாம் ஆட்டத்தில் களம் புகுந்த இரு அணிகளும் கோல்கள் பெற எடுத்த முயற்சிகள் கைகூடாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் குளமங்கல் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் மாவட்டப் போட்டியில் விளையாடவும் தகுதி பெற்றுள்ளது.

உடுவில் பிரதேச செயலக வலைப்பந்தாட்டம்

# கடுமையான போராட்டத்தின் பின் வென்றது இராமநாதன் கழகம்

வலி.வடக்கு மார்ச் 31

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் பலத்த போராட்டத்தின் பின்னர் மருதனார்மடம் இராமநாதன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

மருதனார் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சுன்னாகம் காந்திய மன்றம் விளையாட்டுக் கழகமும் மருதனார்மடம் இராமநாதன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் மிகவும் கடுமையாக மோதின.



இரு பாதி ஆட்டங்களிலும் இரு அணிகளும் சளைக்காமல் மோதி ரசிகர்களுக்கு விருந்து படைந்தன. மிகக் கடுமையான பலப்பரீட்சையாக இருந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் 10:8 புள்ளிகள் என்ற அடிப்படையில் இராமநாதன் கழகம் முன்னிலையில் நின்ற வேளையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தமது பலத்தை நிரூபித்து வெற்றியைத் தனதாக்குவது என்ற முடிவுடனும் களமிறங்கியது

இரு அணிகளும் ஆட்டம் நிறைவடையும் வரை மாறிமாறிப் புள்ளிகளைப்பெற்ற நிலையில் இறுதி நிமிடத்தில் இராமநாதன் கழகம் ஒரு புள்ளியைக் (9:8) கூடுதலாகப் பெற்றது.

ஆட்ட நிறைவில் மருதனார்மடம் இராமநாதன் கழகம் 19:16 புள்ளிகள் அடிப்படையில் சுன்னாகம் காந்திய மன்றம் விளையாட்டுக் கழகத்தை வென்றது.

# கராத்தே போட்டி



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு மற்றும் யாழ். மாவட்டக் கராத்தே சங்கம் நடத்திய மாவட்ட மட்டக் கராத்தேப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக வீர, வீராங்கனைகள் பங்குகொண்டனர்.

இதில் ஆண்களுக்கான திறந்த காட்டா போட்டியில் த.தனுசன் முதலாவது இடத்தையும், செ.புஸ்பராசா, கு.விஜிகரன் ஆகியோர் 3 ஆம் இடத்தை பெற்றுக் கொண்டனர். பெண்களுக்கான திறந்த காட்டா போட்டியில் தி.நிரோஜினி 2 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

ஆண்களுக்கான 67 கிலோ உட்பட்ட பிரிவில் குமித்தே போட்டியில் சி.கஜேந்திரன் 3 ஆம் இடத்தையும் பெண்களுக்கான 50 கிலோ உட்பட்ட பிரிவில் குமித்தே போட்டியில் தி.நிரோஜினி முதலாம் இடத்தையும் வி.வித்தியாதரணி 3ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர். (23)



யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டம்

# ராணுவ பொறியியல் அணிக்கு மூன்றாமிடம்

வலி.வடக்கு மார்ச் 31

யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட கழகங்களுக்கு இடையே நடத்திய கூடைப்பந்தாட்டப் போட்டியில் சிலிம் இலங்கை இராணுவ பொறியியல் பிரிவு மூன்றாம் இடைத்தைப் பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கூடைப்பந்தாட்ட அணியும் இலங்கை இராணுவ பொறியியல் பிரிவு அணியும் மோதின.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிய போதும் இலங்கை இராணுவ பொறியியல் பிரிவைச் சேர்ந்த திவாகரின் அதிரடியான விளையாட்டின் மூலம் இலங்கை இராணுவ பொறியில் பிரிவு வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

நான்கு கால்பாதி ஆட்டத்தைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் கால் பாதி ஆட்டத்தில் இலங்கை இராணுவ பொறியியல் பிரிவு அணி 30:14 புள்ளிகள் என்ற அடிப்படையில் நிறுத்தப் பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்ற போதும் இலங்கை இராணுவ பொறியியல் பிரிவு 18:14 புள்ளிகள் பெற்ற நிலையில் முடிவடைந்தது.

மூன்றாம் பாதி ஆட்டத்தில் அதிகம் சூடு காணப்பட்ட போதிலும் இலங்கை இராணுவ பொறியியல் பிரிவு 15:09 புள்ளிகள் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

இறுதிப் பாதி ஆட்டத்தில் மீண்டும் இலங்கை இராணுவ பொறியியல் பிரிவு அணி போட்டியை விரைவு படுத்திய நிலையில் 19:14 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்டநிறைவில் இராணுவ பொறியியல் பிரிவு அணி 82:51 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை இராணுவ பொறியியல் பிரிவைச் சேர்ந்த திவாகர் 38, யோகானந்தா 15, சமீரா 08, பிரகாஷ் 07, இராட்சகன் 04 புள்ளிகளை தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தனர்.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிரசன்னா, அர்ச்சுனா, ஐங்கரன் தலா 12, வாகிசன் 06, ஞானரூபன் 04, சுஜீந்தன் 03, தினேஸ் 02 புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தார்கள். (86)

# 2011 உலகக் கிண்ண ரிக்கெட் விற்பனை சர்ச்சை




கடந்த ஆண்டு இந்தியாவில் இடம்பெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்துக்கான அனைத்து நுழைவுச்சீட்டுக்களும் விற்கப்பட்டிருக்கவில்லை என்று அறிக்கையொன்று தெரிவித்துள்ளது. மும்பை வன்கெடே மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்துக்கான நுழைவுச்சீட்டுக்கள் அனைத்தும் விற்றுத் தீர்ந்திருந்ததாக முன்னர் கருதப்பட்டு வந்தபோதிலும், தற்போது இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

மொத்தமாக 405 நுழைவுச்சீட்டுக்கள் விற்கப்பட்டிருக்கவில்லை என்று அறிக்கை தெரிவிக்கிறது. அந்த 405 நுழைவுச்சீட்டுக்களில் 96 நுழைவுச்சீட்டுக்கள் 30 டொலர் பெறுமதியான கீழ்வரிசை நுழைவுச்சீட்டுக்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. மொத்தமாக விற்கப்பட்டு முடிக்கப்படாத நுழைவுச்சீட்டுக்களின் பெறுமதி 144,000 ஐக்கிய அமெரிக்க டொலர் எனக் கருதப்படுகிறது.

உலகக்கிண்ண இறுதி ஆட்டத்துக்கான நுழைவுச்சீட்டுக்களுக்கு பெரும் கேள்வி இருந்த நிலையில் இந்த நுழைவுச்சீட்டுக்கள் விற்கப்பட்டு முடிக்கப்படாமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

உலகக் கிண்ண இறுதி ஆட்டத்துக்கான ஒரு நுழைவுச்சீட்டு 10,000 ஐக்கிய அமெரிக்க டொலர் அளவுக்கு கறுப்புச் சந்தையில் விற்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் எதன் காரணமாக இந்த 405 நுழைவுச்சீட்டுக்களும் விற்கப்பட்டிருக்கவில்லை என்பது குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

31,118 இருக்கைகள் கொண்ட மும்பை வன்கெடே மைதானத்தில் இறுதி ஆட்டத்துக்காக 4,000 நுழைவுச்சீட்டுக்கள் மாத்திரமே பொதுமக்களுக்காக விற்பனை செய்யப்பட்டன. ஏனையவை சர்வதேச கிரிக்கெட் சபை, ஏனைய நாடுகள், அனுசரணையாளர்கள் ஆகியோரிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டது.

ஆகவே 4,000 நுழைவுச்சீட்டுக்களில் 405 நுழைவுச்சீட்டுக்கள் விற்கப்பட்டிருக்கவில்லை என்பது சர்ச்சைக்குரியதாகக் கருதப்படுகிறது. (5)

## மன்னிப்புக்கேட்டார் சச்சின்



நூறாவது சதம் அடிப்பதற்கு மிக நீண்ட காலம் எடுத்துக் கொண்டதற்காக ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டார் சச்சின்.

இந்திய அணியின் 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின். சர்வதேச அளவில் 99 சதங்களை கடந்த இவர், சதத்தில் சதம் காணத் திணறினார். இதற்காக ஒரு ஆண்டுக்கும் மேலாக காத்திருந்தார். ஒருவழியாக ஆசிய கிண்ணத் தொடரில் பங்களாதேஷுக்கு எதிரான ஒரு நாள் ஆட்டத்தில் 100 ஆவது சதம் அடித்து சாதித்தார். இதனைக் கௌரவிக்கும் வகையில் மும்பையில், சச்சினுக்கு பாராட்டு விழா நடந்தது. இதில், கிரிக்கெட் பிரபலங்கள், பொலிவுட் நட்சத்திரங்கள் உள்ளிட்ட பல வி.ஐ.பி.,க்கள் கலந்து கொண்டனர். அப்போது, 100 சத சாதனையை முறியடிக்கப் போவது யார் என்று சச்சினிடம் நடிகர் சல்மான் கான் கேட்டார். இதற்கு பதில் அளித்த சச்சின் கூறியதாவது:

இளம் வீரர்களான விராத் ஹோக்லி, ரோகித் சர்மா ஆகியோர் எனது 100 சத சாதனையை முறியடிக்க வாய்ப்பு உண்டு. எனது சாதனையை ஒரு இந்தியர் முறியடிக்கும் பட்சத்தில், எவ்வித பிரச்சினையும் இல்லை.

நூறாவது சதத்தை எட்டுவது கடினமான அனுபவமாக இருந்தது. 99 இல் இருந்து 100 ஆவது சதத்தை எட்ட மிக நீண்ட காலம் எடுத்துக் கொண்டேன். இதற்காக ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மைல்கல்லை எட்டுவது எனது கட்டுப்பாட்டில் இருக்கவில்லை.

இவ்வாறு சச்சின் கூறினார்.

**இது சரியா பிரியங்கா ?**

பாராட்டு விழாவில் பங்கேற்ற நடிகை பிரியங்கா சோப்ரா, 'சச்சின் சார்' என்று அழைத்தார். இதனால் நொந்து போன சச்சின் கூறுகையில், சச்சின் சார் என்று அழைத்து விட்டீர்களே. இளமையாக தோற்றம் அளிக்க வேண்டும் என்பதற்காக முடியழகை எல்லாம் மாற்றினேன். இதற்கு பலன் கிடைக்காமல் போய் விட்டதே, என்றார்.

**யுவராஜுடன் சந்திப்பு**

புற்றுநோய்ப் பாதிப்பில் இருந்து மீண்டு வரும் இந்திய வீரர் யுவராஜை, லண்டனில் சந்தித்தார் சச்சின். நண்பர் ஒருவரின் விடுதியில் இருவரும் ஒரு மணி நேரம் செலவிட்டனர். அப்போது யுவராஜ் முழுமையாக குணமடைந்து, மீண்டும் ஆட்டங்களில் பங்கேற்க வேண்டுமென சச்சின் கேட்டுக் கொண்டார்.

## நட்சத்திரங்கள் இணைகின்றன

இந்திய அணியின் முன்னாள் நட்சத்திரச் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளேயுடன் இணைந்து செயற்படுவது குறித்து மகிழ்ச்சியடைவதாக இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரும், உலக சாதனையாளருமான முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இடம்பெறவுள்ள ஐ.பி.எல். தொடரில் முத்தையா முரளிதரன் - ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சார்பாக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

அனில் கும்ளேயும் தானும் இணைந்து 2000 இற்கு மேற்பட்ட டெஸ்ட் மற்றும் ஒரு நாள் சர்வதேச இலக்குகளைக் கைப்பற்றியிருப்பதாகத் தெரிவித்த முரளிதரன், கும்ளேயுடன் இணைந்து செயற்படுவது மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்தார். ரோயல் சலஞ்சர்ஸ் அணியினை நிர்வகிப்பவர்களில் ஒருவராக கும்ளே செயற்படும் நிலையில், இது சிறந்த சந்தர்ப்பம் எனவும் தெரிவித்தார்.

சர்வதேசப் போட்டியில் ஓய்வுபெற்றதன் பின் கொச்சி அணி சார்பாக சிறிது விளையாடியதாவும், பின்னர் இங்கிலாந்துப் பிராந்திய அணியான குளொசெஸ்ரெஸ்செயார் அணிக்காக 'ரி-20' போட்டியில் பங்குபற்றியதாகவும் தெரிவித்த முரளிதரன், நியூசிலாந்தில் 'ரி-20' போட்டியில் பங்குபற்றிய பின்னர் பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றியதாகவும் தெரிவித்தார்.

பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் உபாதையைச் சந்தித்ததன் காரணமாக ஏராளமான போட்டியில் பங்குபற்றியிருக்க முடியவில்லை என்று அவர் தெரிவித்தார். (5)



பிரான்ஸில் நடைபெற்ற சாம்பியன்ஷிப் லீக் கால்பந்து போட்டியின் காலிறுதி சுற்றின் முதல் லீச் ஆட்டத்தில் பேயர்ன் முனிச் அணி வெற்றி பெற்றது.

## இறுதிச் சுற்றுக்கு ஷரபோவா

அமெரிக்காவில் நடைபெற்று வரும் மியாமி சாம்பியன்ஷிப் டென்னிஸ் போட்டியில் மரியா ஷரபோவா அரையிறுதியில் அபாரமாக விளையாடி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.


நேற்றுமுன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் அரையிறுதிப் போட்டியில் ரஷ்யா வீராங்கனை மரியா ஷரபோவா, டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கியுடன் மோதினார்.

ஆரம்பத்தில் சுமாராக விளையாடிய ஷரபோவா பின்னர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 4-6, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் கரோலினை தோற்கடித்து இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு மகளிர் ஒற்றையர் அரையிறுதிப் போட்டியில் ரஷ்யாவின் ரட்வன்ஸ்கா, பிரான்ஸின் மரியோன் பர்டோலியுடன் மோதினார்.

சிறப்பாக விளையாடிய ரட்வன்ஸ்கா 6-4, 6-2 என்ற நேர் செட்களில் பர்டோலியை தோற்கடித்து இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

பர்டோலி காலிறுதி சுற்றில் தரவரிசையில் நம்பர் 1 வீராங்கனையான அசரென்காவை வீழ்த்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் : ட்ராவிட்



இந்திய அணி மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும், தற்போதைய அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களில் அதிக அனுபவம் வாய்ந்த வீரர்கள் அணியின் சிரேஷ்ட வீரர்களாகச் செயற்பட ஆரம்பிக்க வேண்டும் எனவும் அண்மையில் ஓய்வுபெற்ற இந்திய அணியின் நட்சத்திர வீரர் ராகுல் ட்ராவிட் தெரிவித்துள்ளார்.

டோனி, விரேந்தர் சேவாக், கம்பீர், ஹர்பஜன் சிங், சகீர்கான் ஆகிய வீரர்கள் நீண்டகாலம் இந்திய அணிக்காக விளையாடியுள்ள நிலையில் இந்திய அணியின் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் காலப்பகுதியில் சிரேஷ்ட வீரர்களாகச் செயற்பட்டு அணியை வழிநடத்த வேண்டும் என்று ராகுல் ட்ராவிட் தெரிவித்துள்ளார். இவர்கள் அனைவரும் சிறப்பாகச் செயற்பட்டு இளைய வீரர்களுக்கு சரியான பாதையை வழங்க வேண்டும் எனவும் ட்ராவிட் தெரிவித்துள்ளார்.

அவர் தனது நேர்காணலில், மேற்குறிப்பிட்ட வீரர்கள் வீரர்களாக மாத்திரமன்றி, அணியின் பேச்சாளர்களாக, இளைய வீரர்களின் நடத்தையை தீர்மானிக்கும் பொதுமகனாக நடந்து கொள்ள வேண்டும் என்று ட்ராவிட் தெரிவித்துள்ளார். அணியின் விம்பத்தை தீர்மானிப்பவர்களாக மேற்படி வீரர்கள் நடந்துகொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் பெற்றுக் கொண்ட 0-4 என்ற இரண்டு டெஸ்ட் தொடர் தோல்விகளை அடுத்து 'இந்திய அணி சிறந்த ஒரு நாள் சர்வதேச அணி, ஆனால் மோசமான டெஸ்ட் அணி' என்ற பெயரைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பது முக்கியமானது எனத் தெரிவித்த ட்ராவிட், அதனை இளைய வீரர்கள் அனைவரும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

எனினும் இந்திய அணி இந்தத் தோல்விகளின் பின்னர் சந்திக்கும் சவால்கள் புதியன அல்ல எனத் தெரிவித்த ட்ராவிட், இவ்வாறான சவால்கள் எப்போதும் இந்திய அணி மீது காணப்பட்டதாகத் தெரிவித்தார். (5)



# பறிபோனது முதலிடம்

வெளியிடப்பட்டுள்ளடெஸ்ட் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இலங்கை அணியின் குமார் சங்ககார டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் முதலிடத்தை இழந்துள்ளார். நடைபெற்று முடிந்த இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் சிறப்பாகப் பிரகாசிக்காததன் காரணமாகவே அவர் முதலிடத்தை இழந்துள்ளார். டெஸ்ட் வீரர்களுக்கான துடுப்பாட்ட முதலிடத்தை ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க்கும், ஏபி.டி. வில்லியர்ஸூம் இணைந்து கைப்பற்றியுள்ளனர்.

37 புள்ளிகளை இழந்து 813 புள்ளிகளைப் பெற்றுள்ள குமார் சங்கக்கார நான்காவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார். முதலிடத்தைப் பெற்றுள்ள ஏபி.டி.வில்லியர்ஸ், மைக்கல் கிளார்க் இருவரும் 821 புள்ளிகளோடு முதலிடத்தில் காணப்படுகின்றனர். ஆகவே இங்கிலாந்திற்கெதிரான இரண்டாவது ஆட்டத்தில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடும் பட்சத்தில் முதலிடத்தை குமார் சங்ககாரவால் மீண்டும் கைப்பற்றக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

எனினும் ஆஸ்திரேலிய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் அந்தத் தொடரில் மைக்கல் கிளார்க் சிறப்பாக ஆடுவாராயின் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கான சாத்தியங்கள் மைக்கல் கிளார்க்கிற்கு காணப்படுகின்றன.

அறிவிக்கப்பட்டுள்ள புதிய தரப்படுத்தலில் மூன்றாமிடத்தை தென்னாபிரிக்காவின் ஜக்ஸ் கலிஸூம், நான்காமிடத்தை குமார் சங்ககாரவும், பாகிஸ்தானின் யுனிஸ்கான், மேற்கிந்தியத் தீவுகளின் சந்தர்போல் ஆகியோர் ஐந்தாம் ஆறாம் இடங்களிலும் காணப்படுகின்றனர்.

இங்கிலாந்துக்கெதிரான ஆட்டத்தில் சிறப்பாக ஆடாத நிலையில் புள்ளிகளை இழந்துள்ள போதிலும் இலங்கையின் திலான் சமரவீர தொடர்ந்தும் ஏழாம் இடத்தில் காணப்படுகிறார். எட்டாவது இடத்தில் தென்னாபிரிக்காவின் ஹசிம் அம்லாவும், ஒன்பதாவது இடத்தில் இங்கிலாந்தின் ஜொனதன் ரொட்டும் காணப்படுகின்றனர். இதில் ஜொனதன் ரொட் 6 இடங்கள் முன்னேறி ஒன்பதாவது இடத்



தைக் கைப்பற்றியுள்ளார். பத்தாவது இடத்தில் நியூசிலாந்தின் ரோஸ் ரெய்லர் காணப்படுகின்றார்.

இங்கிலாந்து, இலங்கை வீரர்களைப் பொறுத்தவரையில், அலஸ்ரெயர் குக் 8 இடங்களை இழந்து 14 ஆவது இடத்திலும், இயன் பெல் புள்ளிகளை இழந்த போதிலும் அதே 18 ஆவது இடத்திலும், மஹேல ஜெயவர்தன 7 இடங்கள் முன்னேறி 20 ஆவது இடத்திலும், கெவின் பீற்றர்சன் இரண்டு இடங்களை இழந்து 22 ஆவது இடத்திலும், பிரையர் இரண்டு இடங்களை இழந்து 24 ஆவது இடத்திலும், அன்ட்ரூ ஸ்ரோரஸ் புள்ளிகளை இழந்துள்ள போதிலும் அதே 28 ஆவது இடத்திலும், திலகரட்ண டில்ஷான் 4 இடங்களை இழந்து 35 ஆவது இடத்திலும், பிரசன்ன ஜெயவர்தன 7 இடங்கள் முன்னேறி 47 ஆவது இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் தென்னாபிரிக்காவின் ஸ்ரெய்ன், பாகிஸ்தானின் சயிட் அஜ்மல், இங்கிலாந்தின் ஜேம்ஸ் அண்டர்சன் ஆகியோர் தொடர்ந்தும் முதல் மூன்று இடங்களில் காணப்படுகின்றனர். நான்காம் இடத்தில் காணப்பட்ட புரோட் இரண்டு இடங்களை இழந்து ஆறாமிடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார். நான்காவது இடத்தில் பீற்றர் சிடிலும், ஐந்தாவது இடத்தில் தென்னாபிரிக்காவின் வேர்ணன் பிலாந்தரும் காணப்படுகின்றனர்.

13 ஆம் இடத்தில் காணப்பட்ட ரங்கன ஹேரத் ஆறு இடங்கள் முன்னேறி ஏழாவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
adyt@uthayan.com
0215671111

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்.
O/L DAY CLASS
எமது Super Grade ஆசிரியர் குழு
(சகல பாடங்களும்)
ஆரம்பம் : 02.04.2012 திங்கள் காலை 8.00
(விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்)

நேற்று இன்று அல்ல என்றென்றும்
வலி. மேற்கில் தனக்கென்று தனித்துவமான கல்வி நிறுவனம்
2014 A/L SUBRA - 14
சித்தன்கேணி, வட்டுக்கோட்டை
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்
01.04.2012 ஞாயிறு ஒரு மணி (சுபவேளையில்) தரமானதும்
தகுதியானதுமான ஆசிரியரின் வழிகாட்டலில்

| கலைபிரிவு | | |
|---|---|---|
| பாடம் | சித்தன்கேணி | வட்டுக்கோட்டை |
| தமிழ் | யசிந்தன் | காந்தன் |
| அளவையியல் | E.S.பவன் | E.S.பவன் |
| நாடகம் | கணேஷ் | வினோ |
| இந்து நாகரிகம் | சந்திரன், சிறிஸ் | சிறில் |
| அரசியல் | சுகாஷ் | இளங்கோ |
| வரலாறு | ஆனந்தன் | பத்மன் |
| புவியியல் | ஐங்கரன் | பாபு |
| மனைப்பொருளியல் | பஜீபன் | பஜீபன் |
| விவசாயம் | சசி | சசி |
| GIT | சசிகரன் | அம்பி |
| வர்த்தக பிரிவு | | |
| வணிகக்கல்வி | நந்தீஸ் | உங்கள் ஆசிரியர் |
| கணக்கீடு | சபேசன் | D. Sam |
| பொருளியல் | ஜெயக்குமார் | S.S. சிறி |
| கணித / விஞ்ஞான பிரிவு | | |
| இணைந்த கணிதம் | சிவகரன் | தவசேகர் |
| பௌதிகவியல் | மதி | தில்லை |
| இரசாயனவியல் | வர்ணன் | கு. பெனோ |
| உயிரியல் | ஜெல்கா | தயாபரன் |

இந்தியாவில் மேலதிகக் கற்கையை முடித்த.. 9 வருட அனுபவம் மிக்க ஆசிரியர் S.T.Sivanesan (DAE) அவர்களால்....
Maya
Learning & Professional Training
3D Animation & VFX
MAYA DOT VFX
03, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
0773903123

C.C.A
சுன்னாகம்
A/L - 2014
கலை, வர்த்தகம்
புதிய பிரிவு
ஆரம்பம்
01.04.2012
8.00 am

வேலையாள் தேவை
கணனி ரைப்பிங் (தமிழ், ஆங்கிலம்)
தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.
தொடர்புகளுக்கு : 0774301048
யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

A/L - 2014
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்
ஏப்ரல் 7
சனி - காலை
9 மணி
DMI
Jaffna

Personal & Group
வங்கியியல் கற்கை நெறி
CBF
Structure of Accounts (74)
DBF
Accounting Analysis & Planning (90)
K. ஸ்ரீபரன் BBA (Fm spl)
0774598430

பிரத்தியேக வகுப்புகள்
A/L - ICT 2014
தகவல் தொடர்பாடல்
தொழில்நுட்ப அடிப்படைகள்
ஆரம்பம்: 01.04.2012 ஞாயிறு காலை 7 - 8
தொடர்புகளுக்கு: 0776109441

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
2014 A/L கணித, உயிரியல் வகுப்புகள்

| | |
|---|---|
| CHEMISTRY<br>Sat, Sun 9.30 - 10.30<br>BY - ராஜா | PHYSICS<br>I / Sat, sun 10.30 - 11.30<br>II / Tue, Wed 4.00 - 5.00<br>BY - செல்வன் |
| BIOLOGY<br>Sat, Sun 11.30 - 12.30<br>பொன்திவாகரன் | C. MATHS<br>Sat, sun 11.30 - 12.30<br>சிவகரன் |
| CHEMISTRY<br>Wen, Thu 5.00 - 6.00<br>BY - அன்பு | தமிழ் ஆங்கில மொழி<br>மூல புதிய பிரிவுகள்<br>ஆரம்பம். |

சதாபொன்ஸ்
கல்வி நிலையம், அல்வாய்.
O/L DAY CLASS
ஆரம்பம் - 04.04.2012
புதன் காலை 7.00 மணி

lca வடமராட்சியில்
London of Achievers
பிரான்ஸ், கனடா, ஜேர்மனி மற்றும் சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு திருமணமாகியோ அல்லது Sponsor மூலமோ செல்வதற்கு தூதர பரீட்சைக்கு ஏற்ற வகையில் CD, Book மூலம் மொழித்திறன் வாய்ந்த ஆசிரியர்களால்.
பிரெஞ்சு மொழி - French
ஜேர்மன் மொழி - Deutch
கற்பிக்கப்படுகின்றது.
05.04.2012 இற்கு முன் பதிவு செய்பவர்களுக்கு விசேட கட்டணக் கழிவு உண்டு.
தொடர்புகளுக்கு:
திருமகள் சோதி வீதி, நெல்லியடி.
தொ.பே. 021 226 4206, Mobile : 0777224994

அறிவித்தல்
க.பொ.த உயர்தரப் பாடத்தேர்வு.
க.பொ.த உயர்தரப்பாடத்தினை தேர்வு செய்யும் போது ICT பாடத்தை தேர்வு செய்வதன் மூலம் தற்போது உயர் வேலைவாய்ப்புக்களை உடைய தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிகளுக்கு பல்கலைக்கழக அனுமதியை பெறமுடியும். சென்ற ஆண்டு இப்பாடத்தை தேர்வு செய்த மாணவர்கள் ஏனைய பாடமாணவர்களுடன் ஒப்பிடும் பொழுது உயர்ந்த Z புள்ளியை பெற்றுள்ளனர்.
எமது நிறுவனத்தில் கடந்த வருடத்தில் பயின்ற மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினை வெளிக்காட்டி வருகின்றனர்.ICT பாடத்தை ஆழமாகவும் தெளிவாகவும் கற்பதன் மூலம் A/L உயர்ந்த பெறுபேற்றினை பெறுவது மட்டுமல்லாது தற்போது தொழிற்சந்தைக்குத்தேவையான தகவல்தொழில்நுட்பப்பாடத்தில் பூரணமான அறிவினை பெறமுடியும்.உங்களின் சிறந்த பெறுபேற்றுக்கு நாங்கள் உத்தரவாதமளிக்கின்றோம்.
-MCS, 324 Palaly road, Parameswara junction Jaffna.
SMS Your name & ICT to 772395895 & Get Schol.
BIT சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக்கொண்ட நிறுவனம்.
Supported by United Nation Development Programme / Jaffna Rehabilitation & Resettlement Projects.

காணி விற்பனைக்கு
கோண்டாவில் பழனியாண்டவர் கோயிலுக்கு எதிரே பம் நிலையத்துக்கு அருகில் பிரதான வீதியில் இருந்து 75 மீற்றர் தூரத்தில் 12 அடி பாதையுடன் சுற்றுமதில், பங்கு கிணறு, 600 சதுர அடி கட்டடம் என்பவற்றுடன் கூடிய 14 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : 0778449890

கார் விற்பனைக்கு
Lancer 13Sri xxxx MMC - Model (Alloy wheel, p/s) மிக நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0779056303

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
2014 A/L PHYSICS
ஆரம்பம் 01.04.2012 ஞாயிறு முதல்
Batch I Sat, Sun 8.30 - 9.30 am
Batch II Sat, Sun 5.00 - 6.00 pm
By: செந்தில் குமரன் BSc

உடன் தேவை
உணவகத்தில் வேலை செய்வதற்கு உபசரிப்பாளர் தேவை. இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.
தொடர்பு: 267, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0772444172

இலங்கை திட்டமிடல் (மட்டு) வகுப்பு
எதிர்வரும் மாதங்களில் இடம்பெறவுள்ள இலங்கை திட்டமிடல் சேவை (மட்டுப்படுத்தப்பட்ட) போட்டிப் பரீட்சைக்கான வகுப்பு நாளை (01.04.2012) ஞாயிற்றுக்கிழமை முதல் பி.ப. 01.00 மணி - 04.00 மணி வரை சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் யாழ்ப்பாணம் DMI நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது. இவ்வகுப்புகள் அனுபவம், திறமை வாய்ந்த திட்டமிடலாளர்களால் நடத்தப்படவுள்ளது. இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த ஆர்வமுள்ளோர் மட்டும் கலந்து பயன்பெறவும்.
DMI

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உனது
விடுதலைக்கு வழி
பிறர் வசமன்று.
அது உன்வசமே
உள்ளது.
-புத்தர்-

வார வசந்தம் 01

உதயன் 31 மார்ச் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

# இந்தியா கைவிடும் என்று கனவிலும் நினைக்கவில்லை

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளுக்கு வழங்கிய செவ்வி.**



ஜெனிவாவில் இலங்கைமீதான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கும் என்று இலங்கை கனவிலும் நினைத்திருக்கவில்லை என்று அமைச்சர் பஸில் கூறுகிறார். எனினும் இருநாடுகளும் இந்த விடயத்தை முன்னிட்டு பகைத்துக் கொள்ளக்கூடாது என்றும் கூறுகிறார். அவரது செவ்வி வருமாறு:-

***ஜெனிவா கூட்டத்துக்குப் பின்னர் இலங்கையில் அமெரிக்க எதிர்ப்பு வலுத்து வருவது ஏன்? இது மோசமான விளைவுகளைத் தரக்கூடுமல்லவா?***

நாட்டில் அமெரிக்க எதிர்ப்புக் கிடையாது. அமெரிக்கா எடுத்த நடவடிக்கைகள் தொடர்பாகவே எதிர்ப்பு இருக்கிறது. சர்வதேச ரீதியில் எமக்கு அமெரிக்கா அநீதி இழைத்துவிட்டது என்ற கருத்தில்தான் மக்கள் உள்ளனர். போர் முடிந்து அமைதி திரும்பி இருக்கையில், அனைவரும் அமைதியாகத் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்கின்ற பின்னணியில் அமெரிக்காவின் தீர்மானத்தை அவர்கள் எதிர்க்கின்றனர்.

இதுவரை எமது நட்பு நாடாக இருந்த இந்தியாவையும் சிக்கலுக்குள் தள்ளி, இந்தத் தீர்மானத்தின் மூலம் அவர்களுக்கும் எமக்கும் இடையில் ஒரு விரிசலையும் ஏற்படுத்திவிட்டது அமெரிக்கா.

அமெரிக்கா இப்படியான விடயங்களில் தலையிடுவது இது முதல் தடவையல்ல. கொரியப் போரின் போதும் அமெரிக்கா இப்படிச் செய்தது. பின்னர் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் எரிபொருள் விநியோகத்தை மக்கள் மயப்படுத்தும் திட்டத்தை முன்வைத்தபோது பால் மா இறக்குமதியில் இடையூறுகளை ஏற்படுத்த அமெரிக்கா முயற்சித்தது. எமது நாட்டு எரிபொருள் சந்தையில் வெளிநாட்டுத் தலையீடுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் அமெரிக்கா இப்படித் தலையிட்டது. இப்படிப் பல சந்தர்ப்பங்களில் அமெரிக்கா எங்கள் விவகாரங்களில் தலையீடுகளைச் செய்தது. ஆனாலும், அணிசேரா கொள்கையின் அடிப்படையில் நாம் மிகவும் சுமுகமான முறையிலும், நட்புறவான முறையிலும் எல்லா நாடுகளுடனும் உறவுகளைப் பேணுகிறோம்.

***அப்படியெனில் ஜெனிவாவில் இந்தியா எடுத்த தீர்மானம் தவறு என்று நினைக்கிறீர்களா?***

இந்தியாவின் தீர்மானம் சரியா தவறா என்று நான் கூறமாட்டேன். அதைக் கூறுவதற்கான உரிமை எனக்கு இல்லை. இந்தியா ஓர் இறைமையுள்ள நாடு. எப்படிச் செயற்படுவது என்பதைத் தீர்மானிப்பது அவர்களது உரிமை. ஆனாலும், இந்தியாவை தர்மசங்கடமான ஒரு நிலைக்குள் அமெரிக்கா தள்ளிவிட்டிருக்கிறது.

இந்தியா எமது மிக நீண்டகால நண்பன். பயங்கரவாதத்துக்கு எதிராகச் செயற்பட்ட ஒரு நாடு. உண்மையில் புலிகளினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் முக்கியமானது இந்தியா. அதன் தலைவர், ஜனரஞ்சகமிக்க ஒரு தலைவர்; படுகொலை செய்யப்பட்டார். அதேபோல் இந்திய அமைதிகாக்கும் படையினர் ஏராளமானோர் எமது நாட்டில் உயிர் நீத்தனர்.

அதுமட்டுமல்ல, எமது நாட்டின் மீள்குடியமர்வு, வடக்கு அபிவிருத்தி என்பவற்றுக்காக இந்தியா பெரிதும் உதவிகளைச் செய்து வருகிறது. எமது மதம் குறிப்பிடும் ஒரு முக்கிய விடயத்தை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ''பாவங்களிலேயே பெரிய பாவம் நல்ல நண்பர்களுக்கிடையில் சண்டையை மூட்டிவிடுவது'' என்று எமது மதம் குறிப்பிடுகின்றது. அமெரிக்கா இதனைத்தான் செய்ய முயற்சிக்கிறது. அதற்குள் சிக்கிவிடாமல் இரு தரப்பினரும் முன்னர் போன்று நட்புறவுடன் செயற்பட முயற்சிக்க வேண்டும்.

***இந்தியா, தீர்மானத்தை எதிர்க்கும் என்று இலங்கை அரசு நினைத்திருந்தது; எதிர்பார்த்திருந்தது. அந்த நிலையில், இந்தியா எடுத்த முடிவு இலங்கைக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் அல்லவா?***

ஆம். உண்மையில் சொல்லப்போனால், இந்தியா இப்படிச் செய்யும் என்று நாம் கனவிலும் நினைக்கவில்லை. பெரியண்ணன் ஒருவர் இப்படிச் செய்வார் என்று யாரும் எதிர்பார்ப்பதில்லையே? குடும்பத்தில் இளவயது தம்பி ஒரு வழக்கில் சிக்கி இருக்கும் போது பெரியண்ணன் எதிரியின் பக்கம் போய் அவர்களுக்கு சார்பாக சாட்சி சொல்வார் என்று யார் நினைப்பார்? இலங்கை என்ற தம்பி வழக்கொன்றில் சிக்கினார். அண்ணன் இந்தியா மறுபக்கம் நின்றார். இது எதிர்பார்க்காதது.

***இந்தியாவின் முடிவுக்கு தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளின் அழுத்தங்கள் காரணமாக இருந்திருக்கலாம் அல்லவா?***

அப்படியும் நடந்திருக்கலாம். உள்நாட்டில் அவர்களுக்குப் பல சிக்கல்கள் இருக்கக்கூடும். வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளுதல் உட்பட்ட பல விடயங்களை முன்வைத்து மத்திய அரசுக்கு மாநிலக் கட்சிகள் அழுத்தங்களை கொடுத்திருக்கலாம். இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தால் ஒருவேளை அவர்களின் வரவு - செலவுத் திட்டம் தோல்வியடைந்திருக்கலாம். அமெரிக்கா இந்தியாவுக்கு செய்த மிகப் பெரும் அநீதி இதுவென நான் நினைக்கிறேன்.

***அப்படி அமெரிக்கா சொல்வதைக் கேட்க வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு ஏன் வந்தது? இறைமை உள்ள நாடாக இந்தியா தனித்தே முடிவெடுத்திருக்கலாம் தானே?***

அதைத்தான் எம்மாலும் நம்பமுடியாமலிருக்கின்றது. கச்சதீவுப் பிரச்சினை, மீனவர் பிரச்சினை, இந்திய வம்சாவளி மக்கள் தொடர்பான பிரச்சினை என பல முக்கிய விவகாரங்களைத் தீர்க்க இந்தியாவுடன் நாம் இணங்கிச் செயற்பட்டு வருகிறோம். இந்திய அமைதிப்படை இங்கே வந்தமை, வெளியேறியமை போன்றவற்றை எவ்வளவு லாவகமாகக் கையாண்டோம்.

ஜனாதிபதி மஹிந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் இந்தியா எமக்கு எப்போதுமில்லாத வகையில் நட்புமிக்க நாடாக மாறியது. பயங்கரவாதத்தை ஒழிக்கும் செயற்பாடுகளில் அவர்கள் மிகவும் நேர்மையாக எதுவித எதிர்பார்ப்புகளும் இன்றி உதவி செய்தனர். எனவே, ஜெனிவா விவகாரம் குறித்துக் கவலை கொள்ளாமல் இருதரப்பினருமே நட்புறவுடன் முன்னோக்கிச் செல்லவேண்டும். நடந்தவற்றுக்கான காரணங்களை நாம் ஆராயத்தேவையில்லை.

***இறுதி நேரத்தில் அமெரிக்காவின் பிரேரணையில் திருத்தங்களை இந்தியா செய்திருக்கின்றது. அது ஒரு வகையில் இலங்கைக்குச் செய்த உதவிதானே?***

எம்மிடம் ஒரு சொலவடை இருக்கிறது. ''நரகத்துச் சித்திரவதைகளில் எது நல்லது?'' என்பதுதான் அந்தச் சொலவடை. அமெரிக்கா கொண்டு வந்து ஐ.நா. நிறைவேற்றிய தீர்மானமே தவறு என்று நாங்கள் கூறுகையில் அதில் இடம்பெற்ற வசனங்கள் பற்றி எமக்கென்ன கவலை. இந்த தீர்மானத்தில் சொற்பதங்கள் அப்படி இப்படி மாற்றப்பட்டிருப்பதாக கூறப்படுவதை ஏற்கமுடியாது.

இந்தத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் என்ன என்பதற்கு அப்பால் நாடொன்றை இலக்கு வைத்து ஐ.நாவில் தீர்மானம் கொண்டு வரப்பட்டதை நாங்கள் முழுமையாக எதிர்க்கிறோம்.

பல நாடுகள் இதற்கு எதிர்ப்பைத் தெரிவித்தன. எனவே, இந்தியா செய்த மாற்றம் என்பது விஷத்தின் செறிவைக் குறைப்பது போன்றமை மட்டுமே. வதைகளில் எது சிறந்தது என்பதைபோல் தான் இந்தியாவின் மாற்றம் இருந்தது.

அமெரிக்கா தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது. அதில் 24 பேர் ஆதரவளித்தனர். சரியாக நூற்றுக்கு 51 சதவீதம். இந்தியா குறைந்த பட்சம் நடுநிலையாவது வகித்திருந்தால் அமெரிக்காவுக்கு ஆதரவு கிடைத்திருக்காது. 23 நாடுகள் தீர்மானத்தை எதிர்த்தன அல்லது அதனை விரும்பவில்லை என்றே கருதவேண்டியுள்ளது. இந்தியாவின் ஆதரவை பெறுவதற்காக திருத்தம் என்ற பெயரில் அமெரிக்கா ஏதாவது செய்திருக்கக் கூடும். இந்தியா இதில்நிதானமாக செயற்பட்டிருந்தால் நாம் மிகவும் வரவேற்றிருப்போம்.

***அமெரிக்கத் தீர்மானத்தின் பின்னர் இலங்கை ஜனாதிபதி மஹிந்தவிற்கு கடிதமொன்றை அனுப்பி இந்தியப் பிரதமர், தீர்மானத்தில் நடுநிலையைப் பேண இந்தியா பெரிதும் பாடுபட்டதாக கூறியிருக்கிறாரே?***

அப்படி நடந்திருக்குமாயின் அதை நாம் வரவேற்றிருப்போம். நான் முன்னரே கூறியபடி அமெரிக்கா 50 வீத ஆதரவை பெறுவதற்காக இந்தியாவின் திருத்தத்தை ஏற்றது அவ்வளவே. திருத்தங்களைச் செய்யாமல் விட்டிருந்தால் இந்தியா அமெரிக்காவுக்கு ஆதரவளித்திருக்காது. அப்படி நடந்திருந்தால் மேலும் பல நாடுகள் அமெரிக்காவுக்குச் சார்பாக நின்றிருக்காது.

***ஜெனிவா தீர்மானத்துக்கு ஆதரவளித்ததன் மூலம் ஆசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதிக்கம் தொடர்பில் கேள்வி எழுந்திருக்கின்றதா?***

இந்தப் பிராந்தியத்தில் இந்தியா மட்டும்தான் தீர்மானத்தை ஆதரித்தது. பங்களாதேஷ், இலங்கை, மாலைதீவு, பாகிஸ்தான் ஆகியன எதிர்த்தன. அப்படியாயின் தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியா ஒரு பக்கத்திலும் அதன் அண்டை நாடுகள் மறுபக்கத்திலும் இருந்தன. இதற்கு அப்பால் சென்று பாருங்கள்... பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, தாய்லாந்து ஜப்பான், சீனா, மலேஷியா போன்ற நாடுகள்....

சார்க் நாடுகள் மட்டுமல்ல ஆசிய வலயத்தில் உள்ள நாடுகளும் இந்தியாவின் எதிர்ப்பக்கம்தான் நிற்கின்றன. பாகிஸ்தான், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு அங்கத்துவம் இல்லாவிட்டாலும் அவை எமக்கு வெளியிலிருந்து ஆதரவளித்தன.

இதன்மூலம், இந்தியா பிராந்தியத்தில் தனியான முடிவை எடுத்திருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தைப் பாருங்கள் அங்கு நாடுகள் வெவ்வேறாகச் செயற்பட்டாலும் இறுதியில் ஒன்றாகின்றன. இதனால்தான் அவை பலமாக இருக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளில் பல அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்த்தன. ஆனாலும், ஐரோப்பிய ஒன்றிய சட்டத்திட்டங்களின்படி வாக்கெடுப்பின்போதும் ஒன்றியத்தின் முடிவுக்கு ஏற்பவே செயற்பட்டன. அதுபோன்று சார்க் பிராந்திய நாடுகளும் ஒன்றாகச் செயற்படவேண்டும். அதற்கான பொறுப்பையும் தலைமைத்துவத்தையும் எடுக்கும் தகுதி இந்தியாவுக்கே உண்டு. தலைமையை ஏற்று பிராந்திய நாடுகளை பாதுகாக்க இந்தியா கடமைப்பட்டுள்ளது.

**( வாரவசந்தம்6 ஆம் பக்கம் பார்க்க)**

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (40)

## பெயர் வசியம்

சரியான இடத்தில் சரியான வசியச் சேர்க்கையுடன் எழுத்துக்களை அமைப்பதும், தவறான முரண்பட்ட துரதிர்ஷ்ட எழுத்துக்களை நீக்குவதும் பெயரை வசியமாக்கும் வழிமுறையாகும். பெயர் மற்றும் தொழில் வசியம் என்பது ஒவ்வொரு எண்காரர்களுக்கும் வித்தியாசப்படும். தனிப்பட்ட சில எழுத்துக்கள் தங்கள் சேர்க்கையால் உருவாக்கும் ஒலி (சப்த அலைகள்) ஒவ்வொரு எண்காரர்களிலும் வித்தியாசமான பலன்களை உருவாக்கும். தனிப்பட்ட எழுத்துக்கள், இரு கூட்டு, முக்கூட்டு வசியங்கள், இரு பெயர் வசியங்கள் முப்பெயர் வசியங்கள் என்று பல விதமான வசிய முறைகள் உள்ளன. எண் எழுத்துக்கள் அதிக வசியமுடைய பெயர்கள் தடைகளைத் தாண்டி வெற்றிகளைப் பெற்றுத்தரும்.

**1 ஆம் எண்காரர்களின் வசிய எழுத்துக்கள் 1**
எண்கள் 1,6,3 சம்பந்தப்பட்ட எழுத்துக்கள் (A,I,J,Q,Y.... U,V,W....C,G,L,S)

1 ஆம் எண் எழுத்துக்களுடன் முன்பின் சேரும் 6 மற்றும் 3 எண்கள் சம்பந்தப்பட்ட எழுத்துக்கள் வசியமாகி பிரபலஸ்தராக்கும்.

**2 ஆம் எண்காரர்களின் வசிய எழுத்துக்கள் 2**
எண்கள் 2,1,6,7 சம்பந்தப்பட்ட எழுத்துக்கள் (B,K,R... A,I,J,O,Y.... U,V,W... O,Z)

2 ஆம் எண் எழுத்துக்களுடன் முன்பின் சேரும் 1,6 மற்றும் 7 எண்கள் சம்பந்தப்பட்ட எழுத்துக்கள் வசியமாகி மேன்மையான வாழ்க்கையைத் தரும்.

**3 ஆம் எண்காரர்களின் வசிய எழுத்துக்கள் 3**
எண்கள் 3, 1,9 சம்பந்தப்பட்ட எழுத்துக்கள் (A,I,J,O,Y....C,G,L,S.........MARS)

3 ஆம் எண் எழுத்துக்களுடன் முன்பின் சேரும் 1 மற்றும் 9 எண் மதிப்புடைய எழுத்துக்கள் வசியமாகி வளமான வாழ்க்கையைத் தரும்.

**4 ஆம் எண்காரர்களின் வசிய எழுத்துக்கள் 4**
எண் 4, 1, 6 சம்பந்தப்பட்ட எழுத்துக்கள் (D,M,T...A,I,J,Q,Y.... MARS)

4 ஆம் எண் எழுத்துக்களுடன் முன்பின் சேரும் 1 மற்றும் 6 எண் சம்பந்தப்பட்ட எழுத்துக்கள் வசியமாகி புகழ்மிக்க வாழ்க்கையைத் தரும்.

**5 ஆம் எண்காரர்களின் வசிய எழுத்துக்கள்**
எண்கள் 5,1,9 சம்பந்தப்பட்ட எழுத்துக்கள் (E,H,N,X...A,I,J,Q,Y.... U,V,W)

5 ஆம் எண் எழுத்துக்களுடன் முன்பின் சேரும் 1 மற்றும் 9 எண் மதிப்புடைய எழுத்துக்கள் வசியமாகி வசதியான வாழ்க்கையைத் தரும்.

**6 ஆம் எண்காரர்களின் வசிய எழுத்துக்கள் 6**
எண்கள் 6, 1,9 சம்பந்தப்பட்ட எழுத்துக்கள் (A,I,J,Q,Y.... U,V,W....MARS)



6 ஆம் எண் எழுத்துக்களுடன் முன்பின் சேரும் 1 மற்றும் 9 எண் மதிப்புடைய எழுத்துக்கள் வசியமாகி சுகமான வாழ்க்கையைத் தரும்.

**7 ஆம் எண்காரர்களின் வசிய எழுத்துக்கள் 7**
எண்கள் 7,2, 1,6 சம்பந்தப்பட்ட எழுத்துக்கள் (O,Z... B,K,R..A,I,J,Q,Y.... U,V,W)

7 ஆம் எண் எழுத்துக்களுடன் முன்பின் சேரும் 2,1 மற்றும் 6 எண் மதிப்புடைய எழுத்துக்கள் வசியமாகி பெருந்தனத்துடன் மக்களை வழிநடத்தும் ஆற்றலுடன் வாழச் செய்யும்.

**8 ஆம் எண்காரர்களின் வசிய எழுத்துக்கள் 8**
எண்கள் 8,5,1,6 சம்பந்தப்பட்ட எழுத்துக்கள் (P,F... E,H,N,X...A,I,J,Q,Y.... U,V,W)

8 ஆம் எண் எழுத்துக்களுடன் முன்பின் சேரும் 1,5,6 எண்களின் மதிப்புடைய எழுத்துக்கள் வசியமாகி பெரும் நிர்வாகத்துக்குத் தலைவனாக வாழ்வாங்கு வாழ வைக்கும்.

**9 ஆம் எண் காரர்களின் வசிய எழுத்துக்கள் 9**
எண்கள் 9,5,1,3,6 சம்பந்தப்பட்ட எழுத்துக்கள் (MARS.... C,G,L,S... E,H,N,X..A,I,J,Q,Y.... U,V,W)

9ஆம் எண் எழுத்துக்களுடன் முன்பின் சேரும் 5,3,6,1 எண்கள் மதிப்புடைய எழுத்துக்கள் வசியமாகி செல்வாக்கும், சாதனையும் மிகுந்த வாழ்க்கை வாழச் செய்யும்.

**வசியத்தைக் கண்டறியும் முறைகள்**

**உதாரணம்:1**
பெயர்: I N D H I R A G A N D H I
1 5 4 5 1 2 1 3 1 5 4 5 1
பிறப்பு: 19.11.1917 தே 1 மா 2 வ 9 விதி 3

முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி , அகில உலகமே பார்த்து வியக்கும் அளவு பாரத தேசத்தின் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து நீண்ட காலம் பிரதமராக இருந்த பெண்மணி ஆவார். இவரின் பிறப்பில் காணப்படும் 1 ஆம் எண்ணைப் பெயரில் உள்ள சூரிய ஆதிக்க எழுத்துக்கள் வசியமாகியுள்ளதைக் கவனியுங்கள் சூரிய ஆதிக்கம் வசிய எழுத்துக்கள் மிகுந்து காணப்படுகின்றது. பெயரின் இரண்டு பகுதியுமே சூரிய ஆதிக்கத்துடன் தனித்தனியாக அமைந்துள்ளது. திகதி, மாத, வருட, விதி எண்களின் வசியங்களாக 1,3,5,9 எழுத்துக்களின் ஆதிக்கம் நிறைந்து வசியமாக்கி இராஜ வாழ்க்கை வாழச் செய்தது.

**உதாரணம் 2**
பெயர்: A P J A B D U L K A L A M
1 8 1 1 2 4 6 3 2 1 3 1 4
பிறப்பு: 15.10.1931

சுக்கிரன் ஆதிக்கத்தில் பிறந்தவர். சுக்கிரன், சூரியன், செவ்வாய் ஆதிக்க எழுத்துக்கள் நிறைந்து காணப்படுவதால் மிகப்பெரிய உயரிய பதவிகளில் சிறப்பாக பணியாற்றினார். அவருடைய பிறப்பு எண் 5 விதி எண் 3 இரண்டும் ஒன்றுக்கொன்று எதிர்மறையான குணங்களைக் கொண்டது. அவருடைய பெயரில் குரு ஆதிக்க விதி எண் வசிய எழுத்துக்களில் பெயர் ஆரம்பமாகின்றது. பெயரின் தொடக்கம் சூரிய ஆதிக்க வசியத்துடன் காணப்படுகின்றது. பெயரின் முதல் எழுத்தில் செவ்வாய் ஆதிக்க வசியம் காணப்படுகின்றது. இவரின் பெயரில் 3 ஆம் எண் எழுத்தும் 6 ஆம் எண் எழுத்தும் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்வதால் திருமணப் பந்தத்தில் ஈடுபடவில்லை. ஒரு பெயரை அமைக்கும் போது திகதி, மாத, வருட, விதி எண்களின் அமைப்பைச் சார்ந்து எழுத்துக்களைச் சேர்க்க வேண்டும். முதல் எழுத்தில் 10 ஆம் பெயரில் 27 ஆம் ஆக சேர்ந்து பெயரெண் 37 ஆக ஆட்சி வசியமிக்க எண்ணாக அமைந்துள்ளதால் சிறந்த நிர்வாகத்திறனும்,நேர்மைக்குணமும் கொண்டு பாரத மக்களின் மனதில் இடம்பிடித்த உன்னத தலைவரானார்.

**(தொடரும்)**

# பகல் கனவில் வண்ணத்துப் பூச்சி இங்கே சிறகை உலர்த்துகிறது

■ செல்வா

சிவப்புச் சூரியன் பிறைபோல் அவளின் நெற்றிப் பரப்பில் என்னை மொத்தமாக காய வைக்கப்போகிறது. வரப்போகின்ற திருமண நாளில் மூன்று முடிச்சும் இறுக்கப்படுமா? எதிர்பார்ப்புகள்... அன்றைய நாள் முதன் முதலாக புதிய முகம் என்னை எதிர் பார்த்திருக்கிறபோது எப்படிப்பட்டவளாக நிச்சயதார்த்தத்தில் மட்டும் அறிந்துகொள்ளமுடியும்?

வானவில்லைப்போல் மனசில் பல நிறங்களில் கீறல்கள். நட்சத்திரமாக கொட்டிக் கிடக்கும் வானம் போல் கனவு அடிக்கடி வரும். அந்த வானத்தில் உள்ள நட்சத்திரங்களை எண்ணிக்கொண்டிருக்கையில் விடிந்தது போல ஒவ்வொருநாளும் இருக்கிறது. வாழ்க்கையின் முதற்பக்க வெள்ளைத்தாளில் உனது வரவு ஆரம்பிக்கவுள்ள தடங்கள் ஒவ்வொன்றையும் அழகாக வரைகிறேன். அதற்குள் உனது விரல் பற்றிக்கொண்ட மருதாணி கொஞ்சம் கூடச் சிவந்து கொள்கிறது. உனது கடைசி விரல் நகம் வளர்ந்து கீறல் மட்டும் வேதனையில்லாமல் சிவந்து கொண்டிருக்கிறது. கண் தீட்டிய இமை கருமையிலும் பூப்பறித்த கூந்தலையும் சேர்த்துக் கட்டிக்கொண்டு அவிழ்க்கப்பட்டிருக்கிறது. எனக்கும் உனக்கும் தெரிந்த ஒருவருடைய திருமணத்தில் கூட்டமாக நின்று நீயும் நானும் எடுத்த புகைப் படத்தினை நாள்குறிப்பின் நடுப்பக்கத்தின் ஒரு மூலையில் சின்னதாக ஒட்டி. காயவிட்ட பசைக்கு ஈரலிப்பு இல்லாமல் அடிக்கடி கழன்று விடுகின்றபோது எந்தப் பக்கத்தில் உன்னை வைத்தேன் என்று தெரியாமல் உள்ளது. உன்னை நினைக்கும் ஒவ்வொரு தடவையும் பார்ப்பதற்காக பக்கத்தைப் புரட்டும்போது தேட வேண்டியுள்ளது. ஒரே இடத்தில் நீ இல்லாததுபோல் கண், மனசு மறைக்கப்பட்டு இருப்பதால் தான் பல பக்கங்களாகத் தெரிகின்றாய். மடிப்புக்குள் கசங்கும் சேலைத் தலைப்பில் கட்டிக் கொண்ட சுற்றளவுக்குள்மனசு ஒழிந்து கொள்ளப்போகின்றது.

ஆசைகள் ஒவ்வொன்றும் தூறல் மழை நனைந்தது போல் ஏற்படுகின்ற பிரமைக்குள் நீயும் நானும் விலகிக்கொள்ள முடியாது. இந்த வானம் ஏற்படுத்திய பிரமைக்குள் கடைசித் துளியில் கூட உணர்ந்து கொள்கின்ற எனது உடலில் என்ன வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் உன்னைத் தவிர, மாலை நேரச் சூரியன் மனசாரப் பரவும் அதனுடன் கலந்துகொண்டு சூடும் இல்லாமல் குளிரும் இல்லாமல் மஞ்சள் பூசி சிவக்கிறாள். தலையாட்டி அவள் பக்கம் சாய்ந்து கொள்ளவா முடியும். இங்கே பகல் கனவில் வண்ணத்துப் பூச்சி சிறகினைத்தேட ஆரம்பிக்கிறது.

எப்பொழுதும் எந்த நேரமும் உனது முகத்தில் பூக்கும் புன்னகையில் நேசம் கொண்டு உதிர்ந்து கொள்ள முடியாத நிலவுக்குள் இந்த வானம் பிரகாசம் கொள்கிறது. புள்ளியில் தொடங்கி கோலம் போடும் வீட்டுவாசலும் செடியாக நட்டு வளர்த்து வந்த பூங்கன்றுகளும், அழகுபடுத்தி இருக்கும் அறைச் சுவர்களும் இடம்மாறப்போகின்ற உன்னை அறியுமா? இந்த வீட்டு முற்றம் சின்னப்பாதம் பட்டு பெரிய பாதம் வரை வளர்ந்து நடந்த சுவடுகளை அழிக்குமா? ஒரு வட்டத்துக்குள் ஒருவனைப் பலர் பிடிக்கும் குழுவில் எல்லோரும் ஒருவரிடம் பிடிபடும் திறமை அந்தக் கோட்டைத்தாண்டிவிட முடிகிறது. ஆனாலும் இந்தக் கோட்டுக்குள் ஒருவரை ஒருவர் மாறிமாறி பிடித்தும் வெளியே வராத ஆட்டத்துக்குள் இருவரும்



தனித்தனி வெற்றிபெற முடியாத போது சேர்ந்து தான் வாழ்வின் கடைசிவரை இருக்கவேண்டி இருக்கின்றது. என்னை ஆனந்தப்படுத்தப் போகிறதா, இல்லை ஆரவாரப்படுத்தப்போகிறதா இருந்து பார்க்க நாள்கள் ஒரு நிமிடமானது, வாரங்கள் அரை நாள் ஆனது. மாதங்கள் முக்கால்நாள் ஆனது. வருடங்கள் ஒருநாள் ஆனது. எப்படிக் கழிந்தது. உன்னோடு சேரப் போகும் அன்றைய நாளில் எதனைக் கழித்துக் கொள். நூல்கொண்டு பறக்கும் பட்டம் செய்து வால் கட்டிப் பறக்கவிட்டு அறுந்து விடுவது போல் மனசு இருக்கப்போகிறதா... வாசல் வரை வந்த உறவுகள் வீட்டுக்குள் அடைத்து விட்டுப் போகப் போகின்றார்களா. இனிமேல் நான் உன்னோடுதான் ஆனாலும் சின்ன சந்தேகத்தில் என்னைப் பிடிக்குமா என்று கேட்டால் ஒரே தெருவில் இருக்கின்ற ஒன்றாகப் படித்த நண்பியைப் பிடிக்கும் என்றாய் மறுபடியும் என்னைப் பிடிக்குமா என்று கேட்டால் அவள் சிரித்து சிரித்துப் பேசும் அழகு பிடிக்கும் என்றாய் . மறுபடியும் என்னைப் பிடிக்குமா என்று கேட்டால் இதுவரையில் அவள் ஒருத்தி யைத்தான் பிடித்தது என்று சொல்ல வந்தேன் என்றாய். திருப்பித் திருப்பி நான் ஒன்றைக் கேட்க, நீ ஒன்றினைச் சொல்ல குழம்பிக் கொள்கிறது. கடைசியில் அவளுக்கு என்னைப் பிடிக்கும் என்று தெளிவாக மனதுக்கு அவமானப்பட்டும் நிற்கத்தெரிகிறது. என் பிள்ளை நாங்கள் சொன்ன சொல்லைத் தட்டமாட்டான் என்று எனது அப்பா அம்மா நிச்சயதார்த்தத்தில் உன்னுடைய அப்பா அம்மாவுக்கு சொன்ன போதுநீ என்னை வெறுப்புடன் பார்த்தாய், உனது அப்பா அம்மா எனது அப்பா அம்மாவிடம் அக்கம் பக்கம் போனதில்லை வீட்டுக்குள்ளேயே வளர்ந்தபிள்ளை என்று சொன்னபோது உன்னை நான் வெறுப்புடன் பார்த்தேன். இரண்டு பேரின் வெறுப்பும் நிச்சயதார்த்தத்தை குழப்பமுடியாமல் போனது. பல வருடங்கள் தாண்டிய வாழ்விது ஆனாலும் உன்னுடன் சேர்ந்து கொள்ளப்போகும் அன்றிலிருந்து வாழ்வு தொடக்கமாகிறது. இதற்குள் தாமரையும் பூக்கும் தொடர்ந்து நடக்கவிட்டு தாமரைக் கொடியும் காலினை சுற்றி இழுக்கும். ஆனாலும் பூப்பறிக்க வேண்டும். பூவே உனக்கு அலங்காரம் நடக்கிறது. யோசியரின் வாக்கில் திருமணம் நடக்கப்போகிறது. இனிமேல் போகும் இடமெல்லாம் காத்து இருக்கப்போகிறது.

# தங்க வாத்தும் பாதி அப்பமும்...!

வெகு காலத்துக்கு முன்பு, ஸ்கொட்லாந்தில் ஒரு விவசாயி இருந்தான். அவன் பெயர் வில்ஃப்ரெட். வாத்துகளை வளர்ப்பது அவனது தொழில். வாத்துகளையும் முட்டைகளையும் விற்பனை செய்வான். ஒரு முறை, ஒரு வாத்து அடைகாத்த முட்டை ஒன்று உடைந்து, வாத்துக் குஞ்சு வெளியே வந்தது. அதைப் பார்த்து வியப்படைந்தான் வில்ஃப்ரெட். அந்த வாத்துக் குஞ்சு தகதகக்கும் தங்க நிறத்தில் இருந்தது.

ஆ! இந்த வாத்துக் குஞ்சு அதிசயமான பிராணிதான்! என்று உறுதியாக நம்பினான் வில்ஃப்ரெட். அதனால், அதை மிகவும் கவனமாக வளர்த்தான். அவனது நம்பிக்கை வீணாகவில்லை. வாத்துக் குஞ்சு வளர்ந்து, பெரிய தங்க வாத்து ஆனது. அது, தங்க முட்டை இட்டது. அப்போது நண்பன் பீட்டர் அங்கே வந்தான். எல்லாம் உன் அதிர்ஷ்டம்தான் வில்ஃப்ரெட்! என்ற பீட்டர், சிறப்பான இத்தகைய அரிய பிராணிகளும், பொருள்களும் ராஜாவுக்கு உரிமையானவை. அதனால், நீ இந்த வாத்தை ராஜாவிடம் கொடுத்து விடுவதுதான் நல்லது. அவர் உனக்குப் பரிசுகள் தருவார்! என்றான்.



பீட்டர் சொல்வது சரிதான் என்று வில்ஃப்ரெட்டுக்குத் தோன்றியது. அவன், வாத்தை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குப் புறப்பட்டான்


ஒரு பெரிய காட்டைக் கடந்துதான் அரண்மனைக்குச் செல்ல வேண்டும். படை வீரர்களால் தேடப்பட்டு வரும் ஒரு கொள்ளைக்காரன் அந்தக் காட்டில்தான் இருந்தான். பாங்கோ என்று அவன் பெயரைச் சொன்னாலே, எல்லோரும் பயந்து நடுங்குவார்கள். எனவே, வில்ஃப்ரெட் பயந்து பயந்து காட்டு வழியே சென்றான். அப்போது அவன் முன்னால் பாய்ந்து வந்து நின்றான் பாங்கோ.

அடேய்! உன்னிடம் இருக்கும் பணத்தை எடு! என்று இரட்டைக் குழல் துப்பாக்கியை நீட்டினான்.

என்னிடம் பணம் இல்லை. ஒரே ஒரு வாத்துதான் இருக்கிறது. இதை ராஜாவிடம் கொடுப்பதற்காக எடுத்துச்செல்கிறேன். வாத்தை என்னிடம் இருந்து பறித்துக் கொண்டால், ராஜா உன்னைத் தண்டிப்பார்! என்றான் வில்ஃப்ரெட்.

(தொடரும்)

# டேபிள் டென்னிஸ்



★டேபிள் டென்னிஸ் விளையாட்டு தமிழில் மேசைப்பந்து விளையாட்டு என்று அழைக்கப்படுகிறது.

★இந்த விளையாட்டு 1800ஆம் ஆண்டு இங்கிலாந்தில் தோன்றியது. ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்ட விளையாட்டான இது தற்போது ஆசியாவில் குறிப்பாக சீனா, ஜப்பான், கொரியா ஆகிய நாடுகளில் பெருமளவில் விளையாடப்படுகிறது.

★சர்வதேச டேபிள் டென்னிஸ் பெடரேஷன் (ஐ.டி.டி. எப்) 1926ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1988ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் டேபிள் டென்னிஸ் சேர்த்துக் கொள் ளப்பட்டது.

★டேபிள் டென்னிஸ் விளையாட்டில் முடிசூடா மன்னனாக சீன நாடு திகழ்கிறது.

★ டென்னிஸ் ஆட்டத்தில் 'சேர்விஸ்' போடும்போது பந்து எதிரணி வீரரின் ஆடுகளத்தில் பட்டுச்செல்ல வேண்டும். ஆனால் டேபிள் டென்னிஸ் ஆட்டத்தில் சர்வீஸ் போடும் போது பந்து அடிப்பவரின் ஆடுகளத்தில் பட்டு செல்ல வேண்டும்.

★ முதலில் எந்த வீரர் (அல்லது அணி) 11 புள்ளிகள் எட்டுகிறாரோ அவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.

★ டேபிள் டென்னிஸ் மட்டையின் இரு புறங்களில் எதை வேண்டுமானாலும் பயன்படுத்தி பந்தை அடிக்கலாம்.

# மனிதன் இன்னும் குடியேறாத இடங்கள்


வடமேற்கு சைபீரியா



பாலைவனங்கள்



குகைகள்



அந்தாட்டிக்கா



புது குனியா மலைத்தொடர்கள்



மரியானா அகழி ஆழ்கடல்கள்



உறைபனிக்கட்டி, கிரீன்லாந்து



அமேசன் மழைக்காடுகள்



# உலகின் மிகப்பெரிய பல்கலைக்கழகம்

உலகத்தில் மிகப்பெரிய பெண்கள் பல்கலைக்கழகம் சவுதி அரேபியாவின் ரியாத் தலைநகரில் உள்ளது.


ஒரே நேரத்தில் ஐம்பது ஆயிரம் பெண்கள் பயிலும் அளவில் இந்த பிரமாண்ட பல்கலைக்கழகத்தை வடிவமைத்து இருக்கிறார்கள். அது மட்டுமல்லாது இதுவரை உலகத்தில் எங்கும் இல்லாத அளவில் ஒரு பல்கலைக் கழகத்துக்குள் ஆராய்ச்சிக்காகவும், நூலகத்துக்காகவும் கிட்டத்தட்ட ஐந்து மில்லியன் புத்தகங்கள் கொண்ட நூலகம் அமைக்கப்பட்டிருப்பதும் இதுவே முதல் முறையாகும்.

மாணவிகள் ஒரே நேரத்தில் தங்கிப் படிப்பதற்காக 12,000 அறைகள் கொண்ட தங்கும் விடுதிகளும் அருகில் ஏற்படுத்தி இருக்கிறார்கள். உலகத்தில் முதன் முறையாக



பல்கலைக் கழகத்தை முழுவதும் சுற்றி வருவதற்கு மெட்ரோ ரயில் அமைத்திருக்கும் ஒரே பல் கலைக் கழகம் இதுதான் என்று சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு பல்கலைக் கழ கத்தின் பரப்பளவு விரிந்து கிடக்கிறது.

கால நிலையை மாற்றி அமைப்பதற்காக செயற்கையான முறையில் பல புதுமைகளை ஏற்படுத்தி இருக்கிறது சவூதி அரேபியா. 40,000 சதுர மீட்டரில் சூரியஒளியின் மூலம் மின் சாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் விதமாக கட்டடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மின்சார செலவுகளையும் ஓரளவு மிச்சப்படுத்தலாம். அதிக குளிரும் இல்லாமல், அதிக வெப்பமும் இல்லாமல் பல்கலைக் கழகத்தின் வெப்பநிலையை



சீராக வைக்க சூரியஒளி பயன்படுத்தப்படுகிறது. இதுமட்டு மல்லாது தேவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் அமைக்கும் பொருட்டு 700 படுக்கை அறைகள் கொண்ட வைத்திய சாலை கேட்போர் கூடம், பரிசோதனைக் கூடம், சம்பந்தமான ஆராய்ச்சிப் பிரிவு, தகவல் தொழில் நுட்பம், உயிரியல் போன்றவற்றிற்காக தனித்தனி துறைகள் உள்ளன. இத்தனை சிறப்பு மிக்க இந்தப் பல்கலைக் கழகத்தின் பெயர் 'நூரா பன்த் அப்துல் ரஹ்மான் பல்கலைக்கழகம்' இதன் மதிப்பு 20 பில்லியன் ரியால் தாண்டும் என்கின்றன தகவல்கள்.



# முதலித்தம்பி...சிதம்பரநாதபிள்ளை ஜசிகா...

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

எனது பிள்ளைகளுக்கு ''பெயர்'' வைக்கும் நிலையில், நான் அவர்களை அழைக்கும் பெயர்களை முன்மொழிந்த போது எல்லோரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். சிலருக்கு வாயில் வேப்பெண்ணெய் தடவி விட்டது போன்ற நிலை. இன்னும் சிலருக்கு, முன்னாள் ''தமிழக முதல்வர் இப்போதும் இலங்கைத் தமிழருக்காக அழுது கொண்டு இருக்கிறேன் என்று சொல்லும் அறிக்கையைக் கேட்டு கொதிப்படைந்த நிலை. நான்கு, ஐந்து சொல்லுக்குள் நீளமாக இல்லாமல் அடக்கமாக ''பெயர்'' வைக்கத் தொடங்கியிருக்கும் இந்தக் காலத்தில் அதுவும் எண்களின் அடிப்படையில் பெயர் மாற்றம் அடைந்து கொண்டிருக்கும் இந்த நிலையில் நான் பிள்ளைகளுக்கு வைத்த பெயர் அவர்களை சங்கடப்படுத்தாமல் என்ன செய்யும்.

நமது நாட்டில் அடிக்கடி தோன்றும் விசாரணைக் குழு அறிக்கை போல், வைத்த பெயர் நீண்டிருந்தால் யாரால் பொறுத்துக் கொள்ள முடியும். பாவம் என் உறவினர்கள் விமல் வீரவன்ச போல் ''அமெரிக்க பொருள்களை வாங்காமல் புறக்கணிப்போம்'' என ஆர்ப்பாட்டம் பண்ணாமல் அமைதி காத்தார்கள், நானும் அவர்களுக்கு பெற்றோல்,டீசல் விலையேற்றங்களுக்கு அமைச்சர் சொல்லும் தகுந்த காரணங்கள் போல் பேர் வைத்தமைக்கான காரணங்களைச் சொன்னேன்.

அப்படி என்னதான் ''பெயர்'' வைத்திருப்பேன் என்று நீங்கள் யோசிக்கலாம். பயப்பட வேண்டாம் நான் வைத்தது தமிழ் பெயர் தான். அதுவும் ''சுத்தமான, கலப்படமில்லாத சாப்பாட்டுக்கு பயன்படும். நல்லெண்ணெய் போல் தமிழில் வடித்தெடுத்த பெயர்கள் சிதம்பரபாணன், சிதம்பரபாலினி அவ்வளவுதான். நீங்கள் ஏதோ முணு முணுப்பது போல் கேட்கின்றது. பயப்படாமல் கூறலாம். தேவை கருதி படிவங்களை நிரப்பும் போது, குறிப்பாக எனது பேரோடு மகனின் பெயரைச் சேர்த்து எழுதும் போது இடப்பற்றாக்குறை ஏற்படுகின்றது. தந்த அளவுக்குள் எழுதும் போது சிரமப்பட வேண்டி இருந்தது.

பிள்ளைகள் கூட ''பெரிய பெயராய் வைச்சுப் போட்டியள் எழுதக் கஸ்ரமாய் கிடக்கு என்றனர். இந்த ''பெயர்'' வைக்கும் வழிமுறை அண்ணர் தான் தொடக்கி வைத்தார். அவர் தனது பேரோடு, அப்பாவின் பேரை இணைத்துத்தான் கதை, கட்

> நமது நாட்டில் அடிக்கடி தோன்றும் ''விசாரணைக் குழு அறிக்கை'' போல், வைத்த பெயர் நீண்டிருந்தால் யாரால் பொறுத்துக் கொள்ள முடியும். பாவம் என் உறவினர்கள் விமல் வீரவன்ச போல் ''அமெரிக்க பொருள்களை வாங்காமல் புறக்கணிப்போம்'' என ஆர்ப்பாட்டம் பண்ணாமல் அமைதி காத்தார்கள்,

டுரை மூலம் மக்களுக்கு அறிமுகமாகி இருந்தார். இவற்றோடு தனது சொந்த ஊரினையும் (இணுவையூர்) சேர்த்துக் கொண்டதால் எல்லாம் ''நீண்டதாக அமைந்து விட்டது. கொழும்பில் இருந்து வெளியாகும் மல்லிகை சஞ்சிகை கூட ''நீண்ட பெயரைக் கொண்ட படைப்பாளி என்று அட்டைப் படத்துடன் அவரை கௌரவித்து செய்திக் கட்டுரை வெளியிட்டு இருந்தது. அவர் தனது பிள்ளைகளுக்கும் நீண்ட ''பெயர்களை'' வைத்துக் கொண்டார். அந்தப் பெயர்கள் மூலம் அப்பாவின் சந்ததி வழிமுறை இனங்காணப்பட்டது.

தெரிந்தவர்கள், நண்பர்கள் எல்லாம் இந்தப் பெயர்களைப் படித்து ''அட இன்னாற்ற மகனே, பேரனே என்பதை இனங்கண்டு கொண்டனர். இந்த வகையில் நானும், தந்தையின் பேரும் அமைய' பிள்ளைகளுக்கு பேரை வைத்துக் கொண்டேன். அவர்களும் இப்போது இசைவாக்கம் அடைந்து விட்டார்கள். நாட்டில் அழிந்து கொண்டிருப்பது பல விடயங்கள், கந்தசாமி, சுப்பிரமணியம், அருளம்பலம், மகேந்திரராசா, அரியரத்தினம், மயில்வாகனம், புண்ணியமூர்த்தி, திருநாவுக்கரசு, செம்பியன் செல்வன், செங்கைஆழியான், சோம சுந்தரம், சிவயோகன், சிவகாமி, ராஜேஸ்வரி, புனிதவதி, பராசக்தி, மங்கையர்கரசி, செல்லம்மா, பாக்கியம் என்ற பெயர்கள் இப்போது பிறந்த பிள்ளைகளுக்கு யாரேனும் வைத்திருப்பார்களா?

பல ''பேர்களை'' நாம் மறக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கிவிட்டோம். இந்தப் பெயர்களை கூப்பிடும் காலம் இனிமேல் வருமா. எல்லா மொழிகளிலும் இந்தப் பெயர் மாற்றங்கள் நடைபெறத் தொடங்கிவிட்டதா? மிகவும் சுருக்கமான நளினமாக அல்லவோ ''பெயர்கள் வைக்கின்றார்கள் பிறந்தவரின் கால பலன்களோடு'' எண்களின் அடிப்படையில் பெயர்கள் அமைய வேண்டும். இப்போது பிள்ளைகளுக்கு எப்படியான பெயர்களை வைத்துக் கொள்கிறார்கள் சசி,சொய்னா,யவிஷா, கிஷோர்,தக்சன்,ஜசிகா என்ற முறையில் பெயர்கள் போகின்றது. வாழுகின்ற காலத்தில் பெயர்கள் என்ன முக்கியம் வாழ்ந்து விட்டுப் போவது தானே, நல்ல பெயர்களை வைத்தமைக்காக வாழ்நாள் சாதனையாளர் விருது ஏதாவது வழங்கப் போகிறார்களா? பிறந்து வளர்ந்த மண்ணைவிட்டு ஓடி பல வருஷங்கள் ஆகிவிட்டன. அப்பா, அம்மா, ''தமிழில் பேசும் போதுதான் நாங்கள் தமிழர் என்ற நினைப்பு வருகின்றது. மற்றப்படி எது தாய் மொழி? பிரெஞ்சா, ஜேர்மனா, டொச்சா? என்னதான் அழகு தமிழில் பெயர் வைத்தாலும் வெள்ளைக்காரன் தனது மொழியில் என்னமோ அழைக்கின்றான்.

கடவுளே விட்டுவிடுங்கள். வைக்கும் பெயர்களெல்லாம் தமிழை தாங்கியா நிற்கின்றது? எல்லாம் ஆசைதான் படப் பாடல் போல் கடவுள் பாதி, மிருகம் பாதி கலந்து செய்த கலவை நான். என்ற நிலைதான். பிள்ளைகளின் பெயர்கள் மட்டுமா மாற்றம் பெறுகின்றது? பரம்பரை பரம்பரையாக ஓடி, விளையாடிய ஊர்கள் கூட பெயர் மாற்றம் பெறுகின்றனவே? யாரால் மாற்றங்களைத் தடுக்க முடியும்? கொஞ்சக் காலத்துக்கு முன்னர் கடைகளில் பெயர்கள் கூட அழகு தமிழில் பெரிதாக ஜொலித்துக் கொண்டு இருந்தன. தமிழில் எழுதுவதற்காக ''புதுப் புது சொற்களைக் கண்டுபிடித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது.....

தந்தையாரை நினைவுகூரும் வகையில் ''ஆட்டுத்திவசம் சென்ற கிழமை வந்தது. படைப்புக்கான மதிய உணவு வகைகளோடு குருக்கள் வந்து சமயச் சடங்கினை ஆரம்பித்தார். அவர் கேள்வி கேட்க தொடங்கினார் அப்பாவின் பெயர்? ''சிதம்பரநாதபிள்ளை'' அப்பாவின் அப்பாவின் பெயர்? ''தம்பையா'' அவரின் அப்பாவின் பேர்? ''முதலித்தம்பி'' இந்தப் பரம்பரைப் பெயர்கள் இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தொடரப் போகின்றது. எனது மகன், மகள் தமது பிள்ளைகளுக்கு என்ன பெயர்கள் வைப்பார்கள்? முதலித்தம்பி அவர்களின் அப்பா யார்? எங்கிருந்து இங்கு வந்தார்? அறிய வேண்டுமல்லவா?

# சைவத்தின் "திருமுறைப்



பிடித்து எதிர்கால இளம் சந்ததிகளை உருவாக்
இருத்தல் போற்றுதற்குரிய செயற்பாடு ஆகும்.
திருமுறைகள் இறை இன்பத்தை அளித்து சி
மெருகூட்ட வல்லன. ஒவ்வொரு வரும் சைவ

# அறிவென்பது அனைத்திலும் உண்டு!

## அறிதல்



அறிதலினார்வம் அனைவரிடமும்
உண்டு, ஆர்வமாயறியுமெவையும்
மனதினாழத்தில் பதியும்.
அறிதலின் நோக்கும் தேவைகளும்
பல்வேறுவகை அறிவின் அறிவைப்
பூரணமாய் அறிந்தவர் எவருமில்லை.
அறியாமையும் அறிவின் மயக்கமுமே
உலக இயக்கம்; அழிவுகளும் கூட
இருக்கத்தான் செய்யும், மாற்றங்கள்
என்பதே அதன் போக்கும் நியதியும்!

## கிரகித்தல்




புலன்கள் வழி, பெறுபவற்றை புகட்டல்களால்
அறிபவற்றை, அனுபவங்களை, ஏனைய
எல்லாவற்றையும், கைகொடுக்கம் ஞாபக
மூட்டல்களுடன், மூளையின் அறைகள்
அனைத்தையும், இணைத்துக் கூட்டிக்
கழித்துப் பெருக்கிப் பகுத்து, தொகுத்து
விளங்கிக் கொள்ளல், வெளிப்படுத்தல்,
பிறரறிந்து கொள்ள ஊடகம் வாயிலாக!

இ.ஜெயபாலன், தொட்டிலடி.

## உணர்தல்

மண்ணிலூன்றி, நீரையுறிஞ்சி,
காற்றைச்சுவாசித்து சூரியனை (நெருப்பு)
பார்க்கும் உணர்வு (ஆகாயம்) பஞ்ச பூத அறிவு
தாவரங்களிலிருப்பது போல்,பல்வேறு வடிவில்
பல்வேறு வகையில் எல்லா உயிரினத்திடமும்
அடங்கியிருப்பது போல், படைத்த இறைவன்
அருள் மனிதருள்ளும் ஆழ்மனப்பதிவுடன்
இணைந்து இயங்கும் ஆற்றல்களாய்
வெளிப்பட்டாலும்,காலக்கிரகங்கள் (தெய்வங்கள்)
விதியின் வலைப்பின்னலால் இன்பதுன்பங்களுடன்!

## ஆற்றல்

நீரில் நீந்தும் உயிரினம், காற்றில்
பறக்கும் பறவையினம், கல்லினுள்
வாழும் தேரையினம் உடலில் வாழும் கிருமிகள்
கொண்டிங்கு வாழும் ஆற்றல்கள் போல்
மணத்தைக் கொண்டு இலக்கையறிபவை (நாய்)
ஓசையைக் கொண்டு வழியை அறியும் வௌவால்
தூர இலக்கைத் துல்லியமாய் அறியும் பார்வையின்
கூர்மை, உயிரினத்திலிருக்கும் விசேட ஆற்றல்கள்!



## புரிதல்



அறியாமலிருக்கும் போது புரிந்து
கொள்ளல் (புதிய கருத்துக்கள்)
இலகுவாய் நடக்கிறது. அறிந்து
கொண்டவை கூட மனதில் மறைந்து
இருக்கும் போது, அல்லது மறந்தே விடும்
போது, தவிர மனதை விட்டுக் கொடுத்து
புரிந்து கொள்ளத் தயாராக இருக்கும்
போதும், புரிதல் நடைபெறுகிறது!

# ...தின் கண்கள் ...றப் பண்களே"



ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் ஈடேற்றும் சாதனமாக இறைவழிபாடு அமைகின்றது. இறைவனை இசைபாடி வழிபடுவதே சிறந்த வழிமுறையாகும். நாம் ஒவ்வொருவரும் எம் ஐம்புலன்களை அடக்கி மனதை ஒரு நிலைப்படுத்தும் இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன. இன்று எமது சைவக் குழந்தைகள் ஆலயங்களில் நடைபெறும் பண்ணிசை வகுப்புகளுக்குச் சென்று பண்பாட்டுடனும், பண்களை மரபு ரீதியாகவும் கடைப்

...ள உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டு
...டு ஆகும்.
... அளித்து சிந்தனையை, தூய்மையாக்கி பக்தியை
...ரும் சைவர்களாக வையத்தில் வாழ்வாங்கு வாழ

வேண்டுமாயின் பன்னிரு திருமுறைகளிலும் பதின்நான்கு மெய்கண்ட சாஸ்திரங்களிலும் ஆழ்ந்த அனுபவத்தைக் கொண்டு இருப்பதோடு, பாசுரங்களைப் பொருள் விளங்கும் வண்ணமும், தெய்வீகத்தன்மை உடனும், பண்களுக்குரிய ராகங்களுடனும் பாடுவதே இசையின் நோக்கமாகும்.

இவ்வாறு இறைவனைப் புகழ்ந்து பாடுவதால் ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும் அமைதி, சந்தோஷம் போன்ற நற்பண்புகள் உண்டாகும். சைவத்தின் கண்மணிகள் எனச் சிறப்பிக்கப்படும் திருமுறைப் பண்களை அழியாது பாதுகாப்பது ஒவ்வொரு சைவ சமயிகளின் தலையாய கடமை ஆகும்.

**சி.கங்காவந்தி (சங்கீதம்)**
**பெல்வூட் இசைக் கல்லூரி,**
**மருதனார்மடம்.**

...ம்



...கள்)
...டன்!

# மீன்பாடும் தேன் நாட்டின்

## பண்பாட்டு அம்சங்கள் பற்றிய ஒரு நோக்கு!

■ அருணா தருமலிங்கம், வந்தாறுமூலை.



மலைநாடுகள் சூழ அமைந்துள்ள செழிப்பான பிரதேசமாகும்.நீளம் சுமார் 203 கிலோ மீற்றராகவும் அகலம் சுமார் 75 கிலோமீற்றராகவும் கணிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு புவியமைப்பு இயற்கையாகவே மூன்று பிரிவுகளாக வகுக்கப் பட்டுள்ளன. முதலாவது பிரிவு கடற்கரையோரமாக நீண்டு கொண்டே செல்லும் மணற்காடும் ஆகும். இந்த நிலம் தென்னை மரங்கள் செழித்து வளர உகந்தது. இதன் பிரகாரம் கரையோரத் தென்னந் தோட்டங்களிலிருந்து தேங்காய் மற்றும் தெங்கு உற்பத்திப் பொருள்கள் போன்ற வற்றை மக்கள் இலகுவாகப் பெறமுடிந்தது.

ஆனால் 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உண்டாகிய சூறாவளி (CYL ONE) மற்றும் 2004 டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி சுனாமி பேரழிவு (TSUNAM DISASTER) என்பன செழித்து வளர்ந்து நின்ற தென்னை மரங்களை வேரோடு சாய்த்துவிட்டன. தெங்கு அபிவிருத்திச் சபையினர் மேற்கொண்ட மீள்நடுகை செயற்றிட்டத்தின் பயனாக தென்னந்தோட்டங்கள் மீண்டும் உருவாகியுள்ளன.

இரண்டாம் பிரிவு வடக்கு தெற்காக பரவி இருக்கும் வயல் நிலங்களாகும். மூன்றா நிலப்பரப்பாக மேற்கு திசை நோக்கி படிப்படியாக உயர்ந்து கொண்டே செல்லும் பகுதியைக் குறிப்பிடலாம். இங்கு பற்றைக் காடுகளும் சோலைகளும் அதிகளவில் காணப்படுகின்றன. மருத நிலத்துக்கு அண்டிய பிரதேசத்தில் குளங்களும், புற் தரைகளும் தென்படுவதனால் கால்நடைவளர்ப்புக்கு உகந்த இடமாகவுள்ளது.

கிழக்குத்திசை கடலோரத்தில் சில குடாக்கள் உள்ளன. இவை சிறிய கப்பல்கள், தோணிகள், படகுகள் என்பவற்றை நங்கூரமிடுவதற்கு பயன்படுத்தப்படுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இனி மட்டக்களப்பு பிரதேசத்தை வளமூட்டும் ஆறுகள், நீரோடைகள் என்பவற்றை சற்று நோக்குவோம். இலங்கையின் மகாநதி என்று அழைக்கப்படுகின்ற மகாவலி கங்கை வடமேல் பிரதேசங்களைச் செழிப்புறச் செய்கின்றது. பதுளை குன்றுகளிலிருந்து வழிந்தோடிவருகின்ற மாதுறு ஓயா, முத்தானை ஆறு, பட்டிப்பளை ஆறு, குமுக்கன் ஆறு என்பவற்றையும் அவற்றிலிருந்து நீரோடைகளாகப் பிரிந்து செல்லும் கிளைகளும் மட்டக்களப்பு மாவட்டத்தை செழிப்பூட்டிய வண்ணமே உள்ளன என்பது கண்கூடு.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிழக்கு கரையோரமாக அமைந்துள்ள கடலேரிகளில் பிரதானமாகத் திகழ்வது மட்டக்களப்பு வாவி (BATTIKALOA LAKE) என்பதாகும். இதுவே இந்த மாவட்டத்துக்கு மட்டக்களப்பு என்னும் பெயர்வரக் காரணமாகவும் அமைந்தது எனவும் கொள்ளலாம்.

சமுத்திரம் கடலாக உருமாறி நிலத்தை ஊடறுத்துச் செல்வதால் உப்பு நீர் நிலைகளை அவற்றின் பரிணாமத்தை வைத்து 'களப்பு' 'ஓடை' என நாமமிட்டு வருகின்றனர். மட்டக்களப்பு என்னும் வாவியின் பெயரே அதனை அண்டியுள்ள பிரதேசத்தின் பெயராக வெகுகாலத்துக்கு முன்பிருந்தே நிலைத்து விட்டது.

மட்டக்களப்பு வாவியின் கிழக்கு கரை எழுவான் கரையென்றும் மேற்குக் கரைபடுவான் கரை என்றும் அழைக்கப்படுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. எழுவான் படுவான் என்பன சூரியன் உதிப்பதையும் மறைவதையும் கருத்திற் கொண்டு கிழக்கு மேற்கு வானம் என்பவற்றை தெளிவுபடுத்தி மட்டக் களப்பு நாட்டார் வழங்கிய அழகிய தமிழ் சொற்கள் என்று கூறினாலும் மிகையாகாது.

இலங்கையின் மிகச் செழிப்பான பகுதிகளாக தென்மேல் சமவெளியும் இங்கு அமைந்துள்ளது. ஆறுகளும், நீரோடைகளும் தன்னிச்சையாகவே கொண்டுவந்து தள்ளும் வண்டங்களினால் படிப்படியாக நிரப்பப்பட்டு மட்டக்களப்பு வாவி பரிணாமத்தில் சுருங்கிவிட்டதாகவும் நிரப்பப்பட்ட நிலங்கள் நாளடைவில் செழிப்பான வயலாய் மாறியதாம் என்பது பூகற்பவியலாளரது கூற்றாகும்.

**(தொடரும்)**

# செய்தித்தாளின் தோற்றமும் பத்திரிகைச் சுதந்திரமும்

■ தர்மா



ஐரோப்பாவைப்(EUROPE) பொறுத்தவரை கிறிஸ்தவ மக்களின் புனித நகரங்களில் ஒன்றாக விளங்குகின்ற ரோமாபுரியை (ROME) வதிவிடமாகக் கொண்ட எழுத்தாளர், நிருபர், கவிஞர் போன்றவர்கள் தமது ஆக்கங்களை இந்தப் பத்திரிகையிலேதான் பிரசுரித்து வந்தனர். தொடர்கதைகள், கேலிச்சித்திரங்கள் கூட வெகு ரம்மியமான முறையில் வெளிவந்தன.வர்த்தகர்களின் நலன் கருதி விளம்பரப் பக்கமும் (ADVERT ISMENT PAGE) பிரத்தியேகமாக வெளிவந்ததாம். இங்கிலாந்தில் முதன் முதல் தோன்றிய தினசரிப் பத்திரிகை வைக்கப்பட்டது. நீண்ட நாள்களாக பிரசித்தி பெறறு விளங்குகின்ற லண்டன் டைம்ஸ் (LON DON TIMES) என்ற பத்திரிகை ஆயிரத்து எழுணூற்று எண்பத்தைந்தில் ஜோன் போஸ்டர் என்பவரால் உலக ரெஜிஸ்தார் என்னும் நாமத்துடன் தொடக்கப்பட்டது.

அமெரிக்காவில் முதலில் தோன்றி பத்திரிகை. பொது நிகழ்ச்சி, நிரல் என்பதாகும். இந்த நிறுவனத்தை முதலில் போஸ்டன் நகரில் பெஞ்சமின் மாரிஸ் நிறுவினார். அந்த நேரம் பத்திரிகைச் சுதந்திரத்தை மீறும் வகையில் நடந்து கொண்டமையினால் அமெரிக்க காங்கிரஸ் அரசு இந்தப் பத்திரிகையை அதன் முதல் இதழிலிலேயே தடைசெய்துவிட்டதாம். அதன் பின்னர் வெளிவந்த நாளிதழ்கள் அனைத்தும் பத்திரிகைச் சுதந்திரத்தை முற்றுமுழுதாகப் பேணி செய்திகளைப் பிரசுரிக்கலாயின. ஆனால் அதன் விலை அதிகமாக இருந்தமையினால் கணிசமானவர்கள் வாங்கிப் படிக்க முடியவில்லை. 1833இல் மிகவும் குறைந்த விலைக்கு பத்திரிகை ஒன்று பிரசுரமாகி வெளிவரத் தொடங் கியது. இதற்கு சன் (SUN)என நாமம் சூட்டப்பட்டது. அதன் பின்னரே பத்திரிகை வாசகர்களின் எண்ணிக்கை பலமடங்காகியது.

இலங்கையிலும் பத்திரிகைச் சுதந்திரம் நீண்ட நாள்களாக அமுலில் இருந்த போதிலும் பத்திரிகைகள் வெளிவராமல் தடை செய்த நிகழ்வு இடம்பெறத்தான் செய்தத. நம் நாட்டில் சுமார் ஐந்து தசாப்த காலங்களுக்கு முன்னர் எம்.டி.குணசேனா நிறுவனத்தினர் மும்மொழிகளிலும் பத்திரிகைகள் வெளியிட்டனர். ஆங்கிலத்தில் சன்னும் தமிழில் தினபதியும் வார மற்றும் சகோதர ஏடான 'சிந்தாமணி, தந்தி' என்பன பிரசுரமாகின. தினசரி மாலை வேளையில் வெளியாகின. தந்தியின் விலை ஐந்து சதம் மட்டுமே என்பது விசேட அம்சமாகும்.

அக்கால கட்டத்தில் அமெரிக்காவில் ஒருவரே பல பத்திரிகைகளை அனேகமான ஊர்களில் வெளியிடும் வழக்கம் உள்ளது. இவற்றைச் சங்கிலிப் பத்திரிகைகள் என்பர். அதேவேளை ஒரு ஊரில் பிரசுரமாகும் பத்திரிகையை வானொலி மூலம் வேறு நகரங்களுக்கும் அதே செய்திகளோடு அச்சிடும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

மிலேனியம் ஆண்டாக மிளிரும் இன்றைய நாட்களில் அந்த நடைமுறையை இணையம் தம்வசப்படுத்திக் கொண்டது. தற்போது இலங்கையிலும் மாகாணத் தலைநகரங்கள் சிலவற்றில் இன்டர்நெற்றின் பங்களிப்புடன் ஏககாலத்தில் அதே பத்திரிகை வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**(தொடரும்)**

## புத்தகசாலை

## தமிழருவி



'தமிழருவி' என்னும் கலை இலக்கிய சமூக விஞ்ஞான சஞ்சிகை தனது ஒரு வருட நிறைவில் ஒரு சாதனையின் ஆதாரமாக ஆறாவது இதழை வெளிக்கொணர்ந்துள்ளது. வாசகர்கள், எழுத்தாளர்கள் அருகிவிட்ட நிலையில் ஒரு சஞ்சிகையின் பயணம் எத்துணை துயரங்களைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது என்பதையும் அதன் நிலைப்புக்கு உதவுவோருக்கு நன்றி சொல்லும் கடமை உள்ளதென்பதையும் ஆசிரியரின் வார்த்தைகள் தெளிவுபடுத்துகின்றன. கவிதைகள், கட்டுரைகள் என்பவற்றுடன் தொடர் ஆக்கங்கள் பலவும் இவ்விதழில் நிறையவே இடம்பெற்றுள்ளன.

வளரும் இளம் எழுத்தாளர்கள் பலரையும் அவர்களின் ஆக்கங்களையும் வெளியிட்டு வாசிப்பையும் எழுத்தையும் ஊக்குவிக்கும் பணி உயர்வானது. மாணவர்கள் இன்றைய மொழி இலக்கிய மேம்பாட்டுக்குத் தமிழருவி களம் அமைத்துக் கொடுத்துள்ளமையானது எதிர்காலத்தில் வாசகர்களை அதிகரிக்கச் செய்யும் முயற்சிக்கான அடிப்படையாகலாம்.

எனினும் எமது பாடசாலைக் கல்வி பாடப் புத்தகங்களுக்கு வெளியே தேடலையும் புதிய ஆக்கங்கையும் நோக்கிப் பெயராதவரை பரீட்சைக்கான கற்றலாகவே சிறு எல்லைக்கு உட்பட்ட அழிவுறும் என்ற நிலைக்குள்ளே இருந்து மீண்டெழத் தமிழருவி மாணவர்களுக்கும் அவர்தம் ஆக்கங்களுக்கும் மேலும் ஊக்கம் தரும் என நம்பலாம். மூத்த எழுத்தாளர்களின் கருத்துக்களுக்கும் அவர்தம் ஆய்வு நிலை அனுபவங்களுக்கும் தமிழருவி தந்துள்ள முதன்மையைப் பாராட்டலாம். வாசகர்களுடன் எழுத்தாளர்களையும் தமிழ் இலக்கியப் பரப்புக்குள் அதிகரிக்க எடுக்கும் முயற்சிக்கும் இந்த இதழின் முழுமை நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

## மண் மறவா மனிதர்கள்



இலக்கிய ஆக்க முயற்சிகளில் 40 ஆண்டுகளுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் உழைத்து வருகின்ற படைப்பாளிதான் வி.ரி.இளங்கோவன். "மண் மறவா மனிதர்கள்' என்ற நூலினை எழுதி வெளியிட்டுள்ளார். இந்த நூலில் அரசியல் தத்துவ வாதிகள், தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள், சமூகத் தொண்டர்கள், கவிஞர்கள் எனப் பல தரப்பட்ட 17 பண்பாளர்களை அறிமுகப்படுத்துகின்றார். இவர்களைப்பற்றி மக்கள் அறிந்திடும் வாய்ப்பை நல்கியுள்ளார். வருங்கால சந்ததிகள் இவர்களின் பணிகளை அறிந்திட இத்தகைய நூல்கள் காலத்தின் தேவையாக உள்ளன. நூலின் உள்ளே சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற சண், அற்புதமான மனிதன் டானியல், பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராசன், சீனத்துச் சின்னத் தம்பி, அறிவுப் பசிக்கு உதவிய ஆர்.ஆர்.பூபாலசிங்கம் ஈழத் துத் தமிழ்ச் சுருக்கெழுத்துத் தந்தை சி.இராமலிங்கம், எல்லோருக்கும் இனிய மனிதன் ஆர்.சிவ குருநாதன், அச்சக வித்தகர் செம்மல் ஆ.சுப்பிரமணியம், மருத்துவக்கலையில் இலக்கியத் தமிழ் கண்ட வித்தகன் விஸ்பபாரதி, தொண்டுக்கு ஒரு திருத்தொண்டர் க.திருநாவுக்கரசு, மக்கள் மனம் நிறைந்த தலைசிறந்த நிர்வாகி சி.சடாட்சரசண்முகதாஸ். நாடு போற்றும் எங்களூர் ( புங்குடுதீவு) தமிழறிஞர்கள் (வித்துவான் சி.ஆறுமுகம், வித்துவான் பொன்.அ.கனகசபை, பண்டிதர் வீ.வ.நல்ல தம்பி, கலாநிதி க.சிவராமலிங்கம்) பெண்கள் உரிமைகளுக்காகப் பாடுபட்ட வேதவல்லி கந்தையா ) போன்ற பெரியார்களின் சமூகத்துடனான தொடர்பு சம்பந்தமாக அவர்களின் வாழ் நாள்களின் பதிவு செய்து விட்டுப் போனவைகளை நூலாகக் கொண்டுவந்துள்ளார். மூத்த பெரியார்களைப் பற்றி நினைவுபடுத்தும். இந்த நூல் காலத்தின் தேவையாகும். அவர்கள் வாழ்ந்த நற்பண்புகளையும் சமூகத்தின் நல்ல சிந்தனைகளையும் அறியக் கூடியதாகவும் அதனைப் பின்பற்றக் கூடியதாகவும் வழிகாட்டியாக இந்த நூல் அமைந்துள்ளது.

## இசையும் சாரீரத் திறமையும் கொண்டவர் துரைராஜா



சிற்றம்பலம் துரைராஜா தமது ஆரம்பக் கல்வியைத் தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியிலும் கற்றார்.

சாரீரத் திறமையும் இசை ஆர்வமும் மிக்கவர். இவரது ஆசிரியர்கள், உறவினர்கள் முதலானோரின் ஆலோசனைக்கிணங்க 1955 ஆம் ஆண்டு பெற்றோரின் ஆசியுடன் தமிழகம் சென்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இணைந்து இசை பயிலத் தொடங்கினார். அத்துடன் நில்லாது தமிழுலகம் போற்றிப் புகழும் டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்களிடமும் ஆறுமாத காலம் "குருகுலவாசம்" முறைப்படி இசை பயின்று தமது இசை ஞானத்தை வளர்த்துக் கொண்டு 'சங்கீத பூஷணம்' என்னும் பட்டத்துடன் தாயகம் மீண்டார்.

தாயகம் திரும்பியவர் யாழ்.நகரில் ''வீனஸ்புகைப்படக் கலையகம்'' என்னும் பெயரிலோர் நிறுவனத்தை அமைத்துச் சில ஆண்டுகள் சிறப்புடன் நடத்தி வந்தார்.

**நீத்தார் நயப்புரை**

அதன்பின்பு தொண்டமானாற்றில் 'ஸ்ரார் கல்வி நிலையம்'' என்னுமோர் கல்வி நிலையத்தைத் தொடங்கிப் பன்னிரண்டு ஆண்டுகள் திறம்பட நடத்தி வந்தார். இந்தக் கல்வி நிலையத்தின் ஆங்கில மொழி போதிக்கும், ஆசானாக இவரே பணியாற்றி வந்தார். இவற்றினிடையே மன் றங்கள், சபைகள், கழகங்கள், பாடசாலைகள் போன்றவைகள் விடுக்கின்ற அழைப்பை ஏற்றுச் சென்று தமது இன்னிசையால் ரசிகப் பெருமக்களை மகிழ்வித்தும் வந்தார்.

தொண்டமானாறு அருள்மிகு செல்வச்சந்நிதி முருகன் மீது கொண்டிருந்த அதீத பக்தி காரணமாக அவ்வாலய வருடாந்த மகோற்சவத்தின் 12 ஆவது திருவிழாவின் இரவுத் திருவிழாவின் போது பக்கவாத்தியங்களுடன் நீண்டதோர் இசைக் கச்சேரியை நிகழ்த்துவதனைப் வழக்கமாகக் கொண்டிருந்தார். இவ்வண்ணம் சிறப்பானதோர் இசை நிகழ்ச்சியை எவ்வித இடையீடுமின்றித் தொடர்ந்து பதினைந்து ஆண்டுகாலம் நிகழ்த்தி வந்தார்.

வடமராட்சி சிதம்பராக் கல்லூரியிலே 2001 ஆம் ஆண்டு முதல் எட்டு ஆண்டுகள் ஆங்கில ஆசிரியர் தொழிலிலும் உழவுத் தொழிலிலும் சிறந்து விளங்கினார்.

பருத்தித்துறைப் பிரதேச சபை 2008 ஆம் ஆண்டில் நடத்திய உள்ளூராட்சி வார விழாவின்போது இவரது இசைப் பணியைப் போற்றிப் பாராட்டிச் சான்றிதழும் வழங்கிக் கௌரவித்தது.

பருத்தித்துறைப் பிரதேசச் செயலக கலாசாரப் பேரவை இவரது இசைப் பணியைப் பாராட்டி, 2011 ஆம்ஆண்டு இவருக்கு ''கலைப் பரிதி விருது'' என்னும் உயர் விருதை வழங்கிக் கௌரவித்தது.

மேலும் இவருக்கு ''இசைமணி'' - ''இசை செல்வன்'' என்னும் பட்டங்கள் சூட்டப்பட்டன.

15.03.2011 ஆம் ஆண்டு திங்கட்கிழமை காலை 10 மணியளவில் திருநெல்வேலி அருள்மிகு நீலாயதாட்சி அம்பாளுடனுறை காயோரேகணப் பெருமானின் பொன்னார் திருவடிகளைப் பற்றிக் கொண்டு பேரானந்தப் பெருவாழ்வு பெற்றார்.

**ந.பரமேஸ்வரன்**



ஏழாலையில் அண்மையில் நடைபெற்ற முத்தமிழ் மன்ற ஆண்டு விழாவில் பண்டிதர் வ.பேரின்பநாயகம் 'சைவநெறித் தேசிகர்' என்னும் விருதைப் பெற்று மன்றத்தின் சார்பில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் முருகேசு கௌரி காந்தனால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுகின்றார்.ஏழாலை மகாவித்தியாலயத்தின் நடன ஆசிரியை திருமதி ஜெயந்தி சுகிர்தனுக்கு கிளிநொச்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் ''யுககலா பாரதி'' என்னும் விருதுகளையும் வழங்கிக் கௌரவிப்பதனை படங்களில் காணலாம். (எ)

## இந்தியா கைவிடும் என்று கனவிலும் நினைக்கவில்லை ...

(வாரவசந்தம் முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாக ஒரு விமர்சனம் உள்ளது. அந்த அடிப்படையில் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்தியா ஜெனிவாவில் செயற்பட்டிருக்கலாம் அல்லவா?*

அந்த தர்க்கம் தவறு. புலிகளை ஒழிக்கும் செயற் பாடுகளில் இந்தியாதான் எம்முடன் முழுமையாகச் செயற்பட்டது. அதேபோல் சாதாரண மக்களுக்கு வசதிகளைச் செய்துகொடுப்பதில் உதாரணமாக, மருந்து, உணவுப் பொருள்கள், மீள் குடியேற்றம், நிலக்கண்ணிவெடி அகற்றல், விவ சாய உதவி, வீதி அபிவிருத்தி, உட்கட்டமைப்பு மேம்பாடு உட்பட்ட பல விடயங்களில் இந்தியாதான் எம்முடன் கூட இருந்து பணியாற்றுகிறது. அதேபோல் கூடுதலான உல்லாசப் பயணிகள் இந்தியாவிலிருந்தே வருகின்றனர். இந்திய நிறுவனங்களே கூடுதலாக முதலிடுகின்றன. சீனாவை விட இந்தியாதான் எம்முடன் கூடுதலாகத் தொடர்புபட்டுள்ளது. அது ஒரு பிணைப்பு. எம்மிடம் அணிசேராக் கொள்கை இருந்தாலும் பிராந்தியத்தில் இந்தியாவுடன் நெருக்கமாகவே செயற்படுகிறோம். பாகிஸ் தானுடன் எமக்கு வர்த்தக உறவுகள் இருக்கின்றன. ஆனாலும், அது எமக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவை பாதிக்கவில்லையே!

*ஜெனிவா தீர்மானத்தின் பின்னணியில் தமிழ் கூட்டமைப்பு இருப்பதாக பலராலும் குற்றஞ் சாட்டப்படுகிறது. உங்களின் கருத்து என்ன?*

இது விடயத்தில் அவர்கள் ஒரு தெளிவான கொள்கையை எடுத்திருக்க வேண்டும். நாட்டுக்காகச் செயற்பட்டிருக்க வேண்டும். அப்படி இருந்திருந்தால் தேசியப் பிரச்சினை தீர்வில் அவர்கள் நல்ல நிலையில் உள்வாங்கப்பட்டிருக்கலாம். இப்போது அவர்கள் அந்த நிலைமையை இல்லாமலாக்கிக் கொண்டனர்.

இது முதற்தடவையல்ல முன்னர் அவர்கள் எடுத்த நிலைப்பாடுகள் பிழைத்துப் போயிருக்கின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் எடுத்த நிலைப்பாடு பின்னர் எடுத்த பல கொள்கைகள் என் பன தவறாகவே அமைந்தன. இப்போது ஐ.தே.க வுடன் மேதினக் கூட்டம் நடத்தப் பார்க்கின்றனர். இவை தமிழ் மக்களின் அபிலாஷைகள் அல்ல. இதிலும் தமிழர்களை அவர்கள் கைவிட்டுள்ளனர். எந்தவொரு நாடும் கூட்டமைப்பின் பேச்சைக் கேட்டு ஐ.நாவில் வாக்களிக்கவில்லை. கூட்டமைப்பு எந்த அழுத்தத்தையும் கொடுக்கவில்லை. ★

# உயிர் வாழ்க்கை

வயதான ஒருத்தர் புத்தருடன் வந்து சிறிது காலம் தங்கி இருந்தார். சிலநாள்களுக்குப் பின் அந்த சீடரும் உண்மையான துறவியாகவே ஆகிவிட்டார். ஒருநாள் புத்தர் அவரைக் கூப்பிட்டு, ''துறவியாரே! உங்களுக்கு இப்போது வயது என்ன?'' என்று கேட்டார். அதற்கு அந்தச் சீடர் ''ஐந்து வயது'' என்று பதில் கூறினார். இதனைக் கேட்டதும் புத்தருக்கு ஆச்சரியம். ''உங்களுக்கு எழுபது வயதுக்கு மேல் இருக்குமே; ஆனால் ஐந்து வயதுதான் ஆகின்றது என்று கூறுகிறீர்களே. என்ன காரணம்?'' என்று கேட்டார். அதற்கு அந்தச் சீடர் உண்மையான ஞானம் எனக்கு கிடைத்து ஐந்து வருடங்கள் தான் ஆகின்றன. அன்பு உள்ளத்தில் தோன்றியிருப்பதும் இந்த ஐந்து வருடங்களாகத்தான். இதற்கு முன்னால் நான் வாழ்ந்திருக்கின்ற வாழ்க்கை ஒரு கனவு போன்று எனக்குத் தோன்றுகிறது. அந்த வாழ்க்கையினாலே எந்தப் பயனும் இல்லை என்றுதான் எண்ணுகிறேன். அதனால்தான் எனக்கு வயது ஐந்து என்று கூறினேன்'' என்றார்.

அவர் ஐந்து வருடங்கள்தான் இந்த உலகத்தில் வாழ்ந்ததாக நினைக்கிறார். அது உண்மைதான். இந்த உலகத்தில் உயிரோடு வாழ்பவர்களை எல்லாம் உயிர் வாழ்பவர்கள் என்று ஏற்றுக்கொள்ள முடியாது. வள்ளுவரே இதை ஏற்றுக்கொள்ளவில்லை. ''வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசை ஒழிய வாழ்வாரே வாழா தவர்'' என்கிறார் அவர்.

பழி உண்டாகாமல் வாழவேண்டும். அதுதான் வாழ்க்கை. அடுத்தவர்களுக்கு உதவி செய்து, அதனால் வரும் புகழோடு வாழவேண்டும். அடுத்தவர்களுக்குக் கேடு செய்தால் பழிவரும். அந்தப் பழியோடு வாழ்பவர்களை வாழ்பவர்களாகவே சேர்த்துக் கொள்ள முடியாது.

கெட்ட எண்ணங்கள், அறவே இல்லாமல் போகவேண்டும். அதன்பின்தான் ஒரு தெளிவு வரும்; ஞானம் வரும்.

ஒரு குருவைப் பார்த்து ஆசீர்வாதம் வாங்கிவிட்டு வரலாம் என்று ஒரு சீடர் போனார். போய்க் கொண்டிருக்கும் வழியில் யோகி ஒருத்தர் ''எங்கே போகிறீர் சீடரே?'' என்று கேட்டார். ''குருவைப் பார்க்கப் போகிறேன்'' என்றார் சீடர். அந்தக் குரு மீது யோகிக்கு ஏற்கனவே பொறாமை. அதனால் அந்தச் சீடரைப் பார்த்து ''உன்னுடைய குருவுக்கு எதுவுமே தெரியாது; அவர் ஒரு முட்டாள். நீ அவரைவிடப் பெரிய முட்டாள். அதனால்தான் அவருக்குப் போய் சீடனாக இருக்கிறாய். உன்னுடைய குருவால் ஏதாவது அற்புதம் செய்து காட்ட முடியுமா? என்னைப் போன்று அவரால் தண்ணீர் மேல் நடக்க முடியுமா? ஆகாயத்தில் பறக்க முடியுமா? அல்லது பூமியில் தான் புதைந்து கிடக்க முடியுமா? அவரால் எதுவுமே முடியாது. அப்படிப்பட்ட குருவிடம் போய் ஏன் நேரத்தை வீணாக்குகிறாய்?'' என்று தற்பெருமையோடு கேட்டார் அந்த யோகி.

அதற்கு சீடன் ''நான் ஏன் அவரைக் குருவாக ஏற்றுக்கொண்டு வணங்குகின்றேன், என்றால், அவர் எப்போதும் கோபமடையமாட்டார். பிறரைக் குறைகூற மாட்டார். இதைத்தான் அற்புதத்திலும் பெரிய அற்புதம் என்று நான் நினைக்கிறேன்'' என்றான்.

இதைக் கேட்டதும் அந்த யோகி தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு போய்விட்டார்.

குளத்துக்கு மேல் நடக்கின்ற அதிசயத்தைவிட கோபப்படாமல் நடக்கின்ற அதிசயம்தான் பெரியது. அப்படி நடக்கப் பழக்கப்படுத்திக் கொள்வதுதான் மனிதர்களுக்கும் சிறந்தது.

கவலை எப்படி வரும் என்று ஒருத்தர் காரணம் கூறினார். முதலில் கோபம் வருமாம். அதைக் காட்டுவதற்கு எதிரில் யாரும் இல்லை என்றால் அந்தக் கோபம் தன் மேலேயே திரும்புமாம். அந்தச் சூழலில் தான் அதைக் கவலை என்கிறோம். கவலை வருவதற்கு ஒரு வழி. மனதில் சாந்தி இல்லாமல் வாழ்தல். அது என்ன வாழ்க்கை?

சர்வாதிகாரி ஒருத்தன் படுக்கையில் கிடந்தான். வைத்தியர்களும் கைவிட்டு விட்டார்கள். அவருக்கு வைத்தியம் பார்க்க பெரியவர் ஒருத்தர் வந்தார். ''இறந்து கொண்டிருப்பவன் மனச்சாந்தியோடாவது பரலோகம் போய்ச் சேரட்டும்'' என்று நினைத்த அவர்,

''மேன்மை தாங்கிய அரசே! தங்கள் எதிரிகளை மன்னித்து விடுவீர்களா?'' என்று கேட்டார் சர்வாதிகாரி. ''நான் மன்னித்து விடுவதற்குத் தயாராகத்தான் இருக்கிறேன். ஆனால் இப்போது எனக்கு விரோதிகள் யாருமே இல்லை; ஏனென்றால் அவர்களை எல்லாம் நான் சுட்டுத் தள்ளிவிட்டேன்'' என்றார்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## கொள்ளையடிக்கிறார்களா?

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொதுச் சந்தைகளில் கரைச்சிப் பிரதேச சபையினரால் நிர்வகிக்கப்பட்டுவரும் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் இயங்குகின்றன. அங்கு ஒரு சைக்கிளுக்கு ஐந்து ரூபா அறவிடப்படுகின்றது. சந்தைக்குள் சென்று தனது அலுவல்களை முடித்துத் திரும்பும் ஒருவர், சைக்கிள் பாதுகாப்புக் கட்டணம் ஐந்து ரூபாவுக்குப் பதிலாக பத்து ரூபாவைக் கொடுத்தால் மீதி ஐந்து ரூபா வழங்கப்படாது ஒருசில பாதுகாப்பு நிலையங்களில் இழுத்தடிக்கப்படுகிறது.

''சில்லறை இல்லை'' என்று ஒரே வார்த்தையில் கூறி தமது வேலையைப் பார்க்கின்றனர் கடமையில் இருப்பவர்கள். அதையும் மீறி மீண்டும் மீதியைக் கேட்டால் ''நாளைக்கு வாங்க தருகிறேன்'' என்று அடுத்த பதிலையும் கொடுத்து விடுகின்றனர்.

ஐந்து ரூபாவுக்காக மறுநாள் ஆறு கிலோ மீற்றரோ ஏழு கிலோ மீற்றரோ அந்த நபர் சைக்கிள் ஓடி வந்தால் சைக்கிள் ஓடிய களைப்புக்காக வழியில் ஒரு பிளேன் ரீ குடித்தால் பதினைந்து ரூபா போய்விடும். இதனால் பலர் இதற்காக வருவதில்லை. ஆக சைக்கிள் பாதுகாப்புக் கட்டணம் 10 ரூபா ஆகி விடுகிறது.

இதையெல்லாம் சற்றும் கவனத்தில் கொள்ளாது கிடைக்கிற வரைக்கும் லாபம் என்ற நோக்கில் நடந்து கொள்பவர்கள் குறித்து சைக்கிள் பாதுகாப்பு நிலையத்துக்கு அனுமதி வழங்கும் பிரதேசசபையின் நிர்வாகத்தினரும் கொஞ்சம் கவனத்தில் எடுத்தால் நல்லது.

''சில்லறை இல்லாவிட்டால் எங்காவது பெற்றுத் தரும்படி பிரதே சபை நிர்வாகத்தை கேட்கவேண்டியது தானே எங்களிடம் இப்படிக் கொள்ளையடிக்கின்றார்களே ....இது....... நியாயமா?'' என அண்மையில் ஐந்து ரூபாவைப் பறிகொடுத்த முதியவர் ஒருவர் தனது ஆதங்கத்தைப் பகிரங்கமாகவே கூறிக் கொண்டு சென்றார். அவரது பேச்சிலும் ஒரு நியாயம் இருக்கத்தானே செய்கிறது.

தராசு

## கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துவீர்களா?

மன்னார் நகரசபைக்கு உட்பட்ட நிர்வாகத்துள் அமைந்திருப்பதுவே மன்னார்ப் பட்டணம். இங்கு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் காலத்துக்கு முன்பிருந்தே கழுதைகள், மாடுகள், நாய்கள் என்பனவற்றை ஆங்காங்கே காணக்கூடியதாக இருக்கின்றது. நகர் சுத்தமாக்கப்பட்ட பின்பும் இவற்றின் எச்சங்களால் மீண்டும் நகர் அசுத்தம் அடைய வாய்ப்பு உண்டு. அதுமட்டுமன்றிக் கழுதை வளர்ப்புத் திட்டம் போல ஏராளமான கழுதைகளும் காணப்படுகின்றன. இவை ஓடுவதை ரசித்துப் பார்ப்பதற்கு ஒரு கூட்டம் இருப்பதையும் காணலாம்.

ஆனால் குதிரை வேகத்தில் வந்த கழுதைகளினால் மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் நடந்தமையையும் நினைவு கூறவேண்டும். அத்துடன் முறிவு நெறிவு வைத்தியப் பகுதியையும் மக்கள் நாடவேண்டியுள்ளது . எனவே மேற்படி சம்பந்தப்பட்ட நிர்வாகமும் இவற்றைக் கண்டும் காணாமல் இருப்பது ஏன்? பல நூற்றாண்டு காலம் வளர்க்கப்பட்ட கழுதைகள் மன்னார் மாவட்டத்தின் தேசிய விலங்கு எனப் பாதுகாக்கப்படுகின்றனவா? அல்லது தென்பகுதியில் இருந்து வரும் சுற்றுலாவினருக்குக் கொக்கு, காட்டுக்காகம், கழுதை, மாடு என்பன காட்சிப்பொருள்களாக (மிருகக் காட்சிச்சாலை) நகரப்பகுதியில் நீண்ட நாள்கள் குடியேறியுள்ளனவா? அப்படியாயின் இவற்றை நல்ல வருமானம் ஈட்டும் ஒரு சாதனமாகவும் பயன்படுத்த முடியும். இவற்றுக்கு ஒரு புறத்தில் இட ஒதுக்கீடு செய்தால் வருமானம் பெற முடியும் . மஹிந்த சிந்தனை மூலம் நாய்களுக்கான(கட்டாக்காலி) கருத்தடை, ஊசிமூலம் இனப் பெருக்கத்தை நிறுத்துவது போல கழுதை இனத்தை ஓரிரு வருடங்களில் குறைக்கலாம் அல்லது பெரும் நிலப்பகுதியில் உள்ள அவற்றின் இனத்துடன் சேர்த்து விடலாம் என மக்கள் கருதுகின்றனர் .

பொதுமக்கள்கூட தங்களின் கால் நடைகளை வீட்டில் கட்டி வைத்து, கழிவுப் பொருள்களை சேர்த்துக் கொம்போஸ் பசளை ஆக்கலாம். இதனால் மாடுகள் தெருவில் கழிவு போடுவதையும் தடுக்கலாம் எனமக்கள் ஆலோசனை கூறுகின்றனர். தகுந்த வழியை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து நிவர்த்தி காணமுயல்வார்களா?

தோ.கிரிஸ்ரியான்

## சித்திரக்கலைத்துறை ஏன் நிறுத்தப்பட்டது

யாழ். மாவட்டத்தில் மட்டுமின்றி குறிப்பாக நாடு முழுவதுமுள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் சித்திரக் கலைத்துறை வீழ்ச்சியடைந்திருக்கிறதென்பதை கடந்த காலப் பரீட்சைப் பெறுபேறுகளும் புள்ளி விவரங்களும் வெளிப்படுத்துகின்றன. நவீன கல்விச் செல்நெறிகளில் கலைகளினூடான கற்பித்தலின் முக்கியத்துவம் பற்றி அதிகமாகக் குறிப்பிடப்படுகின்ற போதும் அது பற்றிய விழிப்புணர்வின்மையும் சிலரது தான்தோன்றித் தனமான அறியாமையும் இத்துறை சார் வீழ்ச்சிக்கு அதிகம் காரணமாக அமைந்திருக்கின்றது.

தற்போது யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் பெரும்பாலானவை சித்திர ஆசிரியர்கள் வெற்றிடமாகவும் அத்துறைசார் ஊக்குவிப்புகள் குன்றியும் காணப்படுகின்றன. சுயதிறமை கொண்ட ஒரு சில மாணவர்கள் சித்திரத்தை க.பொ.த. உயர் தரத்தில் கற்று சித்தியடைந்தாலும் உயர் படிப்புக்கு இத்துறை இடை நிறுத்தமானது அவைகளுக்கு பெரிதும் ஏமாற்றம் அளித்தது. அத்துடன் க.பொ.த சாதாரண தரத்திலும் அதற்கு கீழ் உள்ள தரங்களிலும் சித்திரப்பாடத் துறையை கற்பதில் விருப்பமின்மையும் காணப்படுகின்றது.

இத்துறை வளர்ச்சிக்கு எதிர்காலத்தில் யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியினூடாக வெளியேறும் சித்திரத்துறை ஆசிரியர்கள் நிறைவான பணிகளை மேற்கொள்வார்களென எதிர்பார்த்திருந்த வேளை 2010 ஆம் ஆண்டிலிருந்து சித்திரத்துறை கல்லூரியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருப்பது வேதனைக்குரியதாகும்.

அழகியல் துறைசார் பாடங்களான சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும் போன்ற துறைகள் கல்லூரியில் இயங்குகின்ற போதிலும் கல்லூரியை கவின் நிலையாக வடிவுற அமைத்த சித்திரத்துறை மாத்திரம் ஏன் இடை நீக்கம் செய்யப்பட்டது? தற்போது 12 இற்கும் மேற்பட்ட பாடத்துறைகள் கல்லூரியில் இயங்குவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கின்ற போதும் இதற்கு மட்டும் ஏன் விதி விலக்கு?

ஒரு சமூகத்தின் வரலாற்றின் இருப்பை நிலை நிறுத்தக்கூடிய இக் கலைத்துறை செயலற்றுப் போவது நியாயமா? கல்வி, கலைத்துறை சார்ந்தவர்களும் முற்போக்கு சக்திகளும் இதை கவனத்தில் கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பார்களா....?

க.ரட்ணேஸ்வரன்.
யாழ்ப்பாணம்

# பெண்களின் இளமை கண்களில்.....



கண்களில் இருந்தே ஒரு பெண் எவ்வளவு இளமையானவள், எவ்வளவு நலம் மிக்கவள் என்பதை சொல்லி விடலாம்.

அத்தகைய அற்புதமான கண்கள் சரியான முறையில் பேணப்படாமல் போகின்ற போது நேரும் கேடுகள் அநேகம். கண்கள் கவனிக்கப்படாமல் விடப்படும்போது கண்களைச் சுற்றிலும் சிலந்தி வலைகளும், கோழிக்கால்களும் தோன்றத் தொடங்கும். இவ்வாறு தோன்றும் கோடுகளும் கருவளையங்களும் கண்களை ஒளிகுன்றச் செய்து காலத்துக்கு முந்தியே கண்களுக்குச் சோர்வையும், களைப்பையும் உண்டு பண்ணி மூப்படைந்த தோற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றன. சத்துமிக்க, ஆரோக்கியமான உணவு, போதிய உடற்பயிற்சி, மிதமான நிம்மதியான உறக்கம் இவைகளைத் தவறாமல் கடைப்பிடித்து வந்தால் கண்பாதிப்புகளை ஓரளவு தவிர்க்கலாம்.

இதோடு மட்டுமின்றி, வாரம் ஒரு முறை கண்களுக்கான மாஸ்க்சினைக் கொண்டு சுமார் 15 நிமிடங்கள் கண்களில் வைத்துப் பின்னர் குளிர்ந்த நீரால் கழுவி வரப் புத்துணர்வைப் பெற்றிடலாம். கண்களை மூடி மூச்சை நன்றாக ஐந்தாறு முறை உள்ளி முத்து வெளிவிட வேண்டும். இவ்வாறு செய்தால் கண்களுக்குச் செல்லும் ரத்தம் மிகுதியாகிறது. முகத்தில் ஏற்பட்டிருக்கும் இறுக்கம் தளர்வுறும் வரையில் மறுபடி மறுபடி மூச்சை நன்றாக உள்ளிழுத்து வெளிவிட வேண்டும். நெற்றி, கன்னம் மற்றும் தாடை போன்ற பகுதிகளுக் கும் கண்களுக்குச் செலுத்தப்படும் அதே அளவு அக்கறையையும், பாதுகாப்பையும் தர வேண்டும்.

### கருவளையங்களை தவிர்க்கும் வழி

கண்ணின் கீழ் ஏற்படும் கருவளையங்களுக்கு, ரெட்டின் - A (Retin-A) எனப்படும் ரெட்டினாயிக் அமிலம் கொண்ட புதிய மருந்து நல்ல பலன் தருகிறது. இது சூரிய ஒளியால் உண்டாகும் பாதிப்பை நீக்கி, சருமத்தின் மேற்புறமுள்ள பகுதிகளுக்கு இரத்தவோட்டத்தையும் அதிகரிக்கின்றது.

தினசரி இரவு தூங்கச் செல்லும் முன் கண்களுக்கு கீழ்புறம் சிறிதளவு ரெட்டின் - ஏ கிறீம் தடவி வந்தால் போதும். கிறீமின் அளவு அதிகமானால் முகத்தில் வீக்கத்தினையும், வறட்சியையும் ஏற்படுத்தக்கூடிய பண்பு இதற்கு உள்ளது. கூடிய வரைக்கும் வெயிலில் செல்லும் போது சருமத்தைப் பாதுகாக்கக் கூடிய (Sunscreen Ointment) கிறீம்களைப் பயன்படுத்த வேண்டும். ரெட்டின் -ஏ ஒரு சில மாதங்கள் சென்ற பின்னரே நல்ல பலனளிக்கிறது.

### கொலஜின் சிகிச்சை (Collagen Treatment)

சருமத்தை வழுவழுவென்று வைக்கக் கூடிய பண்பு கொலாஜினுக்கு உண்டு. இயற்கையில் கிடைக்கக் கூடிய இப்புரதமானது எல்லா உடல் திசுக்களிலும் காணப்படுகிறது. இச் சிகிச்சையில் கொலாஜின் ஊசி மூலமாக சுருக்கங் கள் தோன்றியுள்ள பகுதிகளில் செலுத்தப்பட்டு குழிவு ஏற்பட்டுள்ள இடங்களில் வைத்து நிரப்பப்படுகிறது.

இச்சிகிச்சைக்கான செலவு சிறிது அதிகமானாலும், அடிக்கடி தேவைப்படுவதில்லை. குறுகிய கால சிகிச்சையே நல்ல பலனைத் தருகிறது.

### வேதிச் சிகிச்சை

வயதாக ஆக, கண்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் மெல்லிய கோடுகள் ஏற்படுகின்றன. பாதிக்கப்பட்ட இடங்களின் மேற்புறங்களில் ரெட்டினாயிக் அமிலக் கரைசலைத் தடவிவரக் கண்களைச் சுற்றிலும் ஏற்படும் கருவளையங்கள் காய்ந்து புண்கள் உரிவதைப் போன்று உதிர்ந்து விடுகின்றன. அப்பகுதியை நன்று ஆறியவுடன் பார்த்தால் மென்மையாகவும், வெண்மையாகவும் இருக்கும்.

### வெயிலிலிருந்து பாதுகாப்பு

சூரிய ஒளியில் உள்ள அல்ட்ரா வயலெட் கதிரால் சருமம் எளிதாக பாதிக்கப்பட்டு விடுகிறது. அதி லும் குறிப்பாக கண்களைச் சுற்றிலும் உள்ள பகுதி மிகுதியான தாக்கத்துக்கு உட்படுகிறது. சருமத்தின் வெளிப்புறம், சூரிய ஒளியினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டால் சில நேரங்களில் தோல் புற்றினைக் (Skin Cancer) கூட ஏற்படுத்துகிறது. சூரிய ஒளி கண்களின் கீழேயுள்ள தசைகளில் இறுக்கத்தையும் கருமையையும் படரச் செய்கிறது.

இம்மாதிரியான பின் விளைவுகளையும், கற்றாக், கருவளையம் போன்ற சீர் கேடுகளையும் தவிர்த்து விட, நல்ல தரமான குளுமைக் கண்ணாடி (Cooling Glasses)களை அணிந்து கொள்ளலாம். கண்களில் வெளிச்சம் படாதவாறு பாதுகாக்கக் கூடிய வகையில் குடை மற்றும் கிரிக்கெட் குல்லா போன்றவற்றையும் பயன்படுத்தலாம்.

# வெயில் காலத்திலும் பளிச்சென்று இருக்க



வெயில் சுட்டெரிக்கையில் உடலை பேணி பாதுகாப்பது என்பது சற்று சவாலான காரியம்தான். சரியான வழிமுறைகளைக் கைக்கொண்டால் கோடையிலும் குளுமையை உணரலாம். கோடையில் கடைப்பிடிக்க வேண்டிய எளிய வழிமுறைகள்.......

* கோடை நாள்களில் கூட குளிக்கும் தண்ணீர் உடல் வெப்பநிலையில் இருப்பது நன்று. தண்ணீரில் குளியல் உப்பு, புதினா, வெள்ளரி வில்லைகள், எலுமிச்சை ரசம் என போட்டுக் குளித்தீர்களானால் நறுமணமும் புத்துணர்ச்சியும் கிட்டும்.
* உங்கள் கைப்பையில் ரிசு பேப்பர் எப்போதுமே வைத்திருங்கள். வியர்வை வழிந்தால் பேப்பரால் ஒற்றி எடுக்கவும். தூசி, அழுக்கு, வியர்வை என எல்லாம் அகன்றுவிடும்.
* வெயில் நேரத்தில் மோட்டார் சைக்கிளில் போகும் பெண்கள் தலையில் ஹெல்மட் அல்லது ஸ்கார்ஃப் அணிவது வெயிலிலிருந்தும் காப்பாற்றும்.
* வெளியில் போவதற்கு முன்னால் முகத்தில் சன்ஸ்கிரீன் கிறீம் தடவவும். மாய்சரைஸர் தடவிய பிறகே சன்ஸ்கிரீன் போடவும்.
* பருத்தி உடைகளையே அணியவும். நைலோன் ஆடைகள் வெப்பத்தைக் கடுமையாக்கும்.
* நிறைய தண்ணீர் பருகவும்.
* கோப்பி, டீ, மசாலா, எண்ணெய் உணவு வகைகளைக் கூடுதலாகத் தவிர்க்கவும். பழங்கள், சலட் வகைகள், சர்பத், தயிர், மோர் என்பவற்றை கூடுதலாக சாப்பிடவும்.
* வியர்வை வெளியேறும் என்பதால் மேக்கப்பில் கவனம் தேவை. லிக்குயிட் ஐ-லைனருக்குப் பதில் வோட்டர் ப்ரூஃப் மஸ்காரா அல்லது ஐ பென்சில் உபயோகிக்கவும்.
* வெயிலினால் கருமை படிந்தால் தயிரில் வெள்ளரி ஜூஸ், மஞ்சள் பொடி கலந்து முகம் மற்றும் கழுத்தில் தடவினால் முகம் பளிச்சென்று இருக்கும்.
* கைகள் கறுப்பாகிவிட்டதே என கவலைப்படாமல் சூரியகாந்தி எண்ணெய், சிறிதளவு எலுமிச்சை சாறு, சிறிதளவு சர்க்கரை சேர்த்துத் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால் கைகள் பளபளக்கும்.

# குழந்தைகளுக்கான சருமப் பராமரிப்பு



முன்னைய காலத்தில் நிறைய பெண்கள், குழந்தைகள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பர். அப்போது உடம்புக்கும் தேய்த்துக் குளிப்பர். அது சருமத்துக்கு வேண்டிய பளபளப்பைக் கொடுக்கும்.

கடலை மா ஒரு உயர்தர சுத்திகரிப்பான். மேலும், அது உடம்பிற்கு தேவையான எண்ணெய் பசையை உடம்பில் விட்டு விட்டு, வெறும் அழுக்குகளை மட்டும் எடுக்கும். இது நமக்கு தெரியாமலேயே இயற்கையாகவே நமது சருமத்தை பராமரித்து வந்தோம். ஆனால், இப்போது அதற்கான லோஷன்களை போடும் போது அதில் கண்டிப்பாக 'கெமிக்கல்' இருக்கும். குழந்தைகளுக்கு முடிந்தவரை நாம் இயற்கை மூலிகைகள், வழிமுறைகளைக் கொண்டே சரி செய்து கொள்ள வேண்டும்.

### குழந்தைகளுக்கு ஒலிவ் எண்ணெய் தடவலாமா? எப்படி தடவ வேண்டும்?

பிறந்த குழந்தைகளுக்கோ, பெரியவர்களுக்கோ ஒலிவ் எண்ணெய் தடவும் போது அது காலை நேரமாக இருக்க வேண்டும். காலையில் இளஞ் சூரியனில் ஒரு சில நிமிடங்கள் காட்டினால்தான் நாம் தேய்க்கும் எண்ணெய் குழந்தைகளுக்கு உடம்பில் பளபளப்பைக் கொடுக்கும்.

### பாதாம் எண்ணெய் குழந்தைகளுக்கு தடவலாமா?

இது அதிக விலையான எண்ணெய். இருந்தாலும் தடவலாம். பாதாம் எண்ணெய் மிகவும் அடர்த்தியாக இருக்கும். அதில் ஏதாவது ஒரு மரக்கறி எண்ணெய் கலந்து கொண்டு தேய்க்க வேண்டும். பிறகு ஒரு மணி நேரம் ஊறிய பிறகு கடலை மா கொண்டு குளித்து விட வேண்டும்.

### உடம்பில் நிறைய முடி இருந்தால் என்ன செய்ய வேண்டும்?

குழந்தையின் பருவம் ஒவ்வொரு சமயமும் மாறும். வயதிற்கு வந்த பிறகு பார்த்தால் முடி அதிகம் இருக்காது. அப்படியும் இருந்தால் முடியை நீக்க, கஸ்தூரி மஞ்சளை கல்லில் உரசிப் பூசி சிறிது நல்லெண்ணெய் தடவி பிறகு குளிக்க வைக்கவேண்டும். மஞ்சள் தடவியவுடன், முடி சிறிது மஞ்சள் நிறமாக தெரியும். கறுப்பாகத் தெரியாது. நாளடைவில் ஏற்படும் மாற்றங்களால் முடி கொட்டி விட வாய்ப்பு உண்டு. 'வக்சிங்' போன்றவற்றை செய்து கொள்ள, 16 வயது வரை நாம் காத்திருக்க வேண்டும்.

### குழந்தையின் தோல் மிருதுவாக இருக்க என்ன செய்ய வேண்டும்?

குழந்தைகளை குளிக்க வைக்கிற தண்ணீரில் ரோஜா இதழை போட்டு, 2 மணி நேரம் கழித்து குளிக்க வைக்கலாம். அது குழந்தைகளின் சருமத்தை மிருதுவாக வைப்பதுடன் இயற்கை மணமும், புத்துணர்ச்சியும் இருக்கும்.

### குழந்தைகளின் சரும பராமரிப்புக்காக பயன்படும் பொடி எப்படித் தயாரிப்பது?

குழந்தைகளுக்கு என்று நீங்கள் சில பொடிகள் தயாரித்துக் கொள்ளலாம். பூலாங்கிழங்கு 100 கிராம், ரோஜா இதழ் 100 கிராம், ஆவாரம் பூ 50 கிராம், கடலை மா 100 கிராம், கஸ்தூரி மஞ்சள் 50 கிராம் இவையனைத்தையும் நன்றாக சுத்தம் செய்து விட்டு வெயிலில் உலர்த்த வேண்டும். குழந்தைகளின் உடம்பில் தடவும் போது கல், மண் இருக்கக் கூடாது. இந்தப் பவுடரை தேங்காய் பாலில் குழைத்து குழந்தைகள் உடம்பில் தேய்க்கலாம். நாளாக, நாளாக சருமம் பளபளப்பாக இருக்கும்.

### குழந்தைகளின் தோல் மற்றும் தலைமுடி பராமரிப்பற்கு என்ன உணவு கொடுப்பது?

சருமத்தைப் பராமரிக்க நிறைய காய்கறிகள், கீரைகள், பழங்கள் இவைகளை ஒரு நாளில் மாற்றி மாற்றி ஒன்றோ அல்லது இரண்டு தடவையோ கொடுக்க வேண்டும். முக்கியமாக நீங்கள் சமைக்கிற சமையலில் கறிவேப்பிலை சேருங்கள். கறிவேப்பிலையை அரைத்துப் பயன்படுத்தினால், அதன் சத்து உடலுக்கு சேரும்.